என்றும் உங்களுடன்

புத்தகம்-1

மங்கையர் மலர்

ANGAYAR MALAR மார்ச் 2008 258 பக்கங்கள் ரூ.18/-



3 புத்தகங்கள்

இணைப்பு வடாம் 64!

லாபி ார்தில்...

த்தக்கும் மழுகுவத்தி சய்யலாமா?

ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினியரின்

நிஜக்கதை!



www.jfa.in
JFA வழங்கும்
ஓம் பூஜா மண்டபம்
இறைவனுக்கென்றோர் இல்லம்
ஆவாஹனம் ஸமர்பயாமி
ஓம் பூஜா மண்டபங்கள், உங்கள் பூஜை அறைக்கு மேலும் புனிதத்தன்மையை கூட்டுகிறது. தினசரி பூஜையின் பொழுது நீங்கள் இறைவனை அழைத்து, மந்திரங்களை ஜபித்து பக்தியுடன் பிரார்த்திக்கையில் தெய்வரீதியான அதிர்வுகளுடன் சேர்ந்து மன நிம்மதியை தரும் திவ்வியமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.
பல டிசைன்களில், பல அளவுகளில், மிகுந்த வேலைப்பாடுகளுடன் மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட ஓம் பூஜா மண்டபங்கள் கிரஹப்பிரவேசத்திற்கோ அல்லது திருமணத்திற்கோ உகந்த பரிசுப்பொருள்.
Chennai Showrooms Open on Sundays
JFA
Royapettah (Opp. Pilot Thetre) : Ph : 2813 1384, 2813 2403 Anna Nagar : Ph : 2622 3377, 4210 3996
Ashok Nagar : Ph : 2371 3493, 4203 3202 Adyar : Ph : 2440 5120, 4211 7857
Perambur : Ph : 2662 0552 Ambattur : Ph : 4208 6731 Nanganallur : Ph : 4358 6661
Coimbatore : Ph : 438 0333, 438 0666 Salem : Ph : 233 0259 / 69
Also Available at:
Modfurn
Royapettah : Ph : 2811 624
2811 1872, 2811 7406
JFA E 03

மங்கையர் மலர் வாசகியரே!!
திரளாக வருக!



பூஞ்சாரல்

2007 - 2008

ஆட்டம்... பாட்டம்... கொண்டாட்டம்...

சென்னையில் மெகா இறுதிப் போட்டி







விவரங்கள் பக்கம் : 145

மாணவ சமுதாயமே!!
திரண்டு வருக!







அட்டையில் : அப்சரா

வண்ணப்படம்: சங்கர் சத்யமூர்த்தி





மகளிர் மாத இதழ்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

மலர் : 28 இதழ் : 2 மார்ச் 2008

"டிபன் சாப்பிடலையா?"



சில வருடங்களுக்கு முன் என் சகோதரியின் பெண்ணுக்குத் திருமணம் நடந்தது.

மாலை மாற்றி, ஊஞ்சல் முடிந்த பின்னர், சாஸ்திரிகள், மணமக்களுக்கு, தேங்காயைச் சுற்றி கீழே போட்டு உடைத்து திருஷ்டி கழித்தார். கீழே இருந்த உடைந்த தேங்காய்ச் சில்லுகளின் மேல் ஓடுகள் யார் காலிலாவது குத்திவிடப் போகிறதே என்று உடைந்த தேங்காய்களைப் பொறுக்கினேன். அதைப் பார்த்த என் சகோதரிகள், "என்ன காலையில் டிபன் ஏதும் சாப்பிடவில்லையா?" தேங்காய் பொறுக்கிறாயே" எனக் கிண்டல் செய்தனர்!

இந்தச் சம்பவத்தை ஒவ்வொரு கல்யாணத்தில் பார்க்கும்போதும் சிரிப்பு வரும். இருந்தாலும் கேலிக்குப் பயப்படாமல் இப்பவும் தேங்காய் கொட்டாங்குச்சிகளைப் பார்த்தால் அப்புறப் படுத்துவேன். பிடி சுற்றிய மஞ்சள், சிவப்பு சாதம் உருண்டைகளை ஓரமாக எடுத்துப் போடுவேன். யாராவது வழுக்கி விழுந்தால் என்ன செய்வது!

- ஆர்.ஜானகி ரங்கநாதன், மயிலாப்பூர்

இது வாழ்க்கை!

அது ஒரு விஞ்ஞானப் பாட வகுப்பு. கூட்டுப் புழு ஒன்று எவ்வாறு பட்டாம்பூச்சியாக உருமாற்றம் அடைகிறது என்று விளக்கிக் கொண்டிருந்தார் ஆசிரியை.

மாணவர்களை அருகிலுள்ள தோட்டத்துக்கு அழைத்துச் சென்று அங்கே செம்பருத்திச் செடியில் ஒட்டிக் கொண்டிருந்த கூட்டுப் புழுவைக் காட்டினார்.

''இன்னும் சில நிமிடங்களில் இந்தக் கூட்டிலிருந்து அழகான வண்ணத்துப்பூச்சி ஒன்று வெளி வரும். அதைக் கண்டு ரசியுங்க!'' என்று சொல்லிவிட்டு, அடுத்த வகுப்புக்குப் பாடம் நடத்த சென்று விட்டார்.

மாணவர்கள் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர். முதலில் சிறு துளைகள் ஏற்பட்டு, பூச்சியின் மெல்லிய கூடு கிழிந்தது. நீண்ட கால்களையும் ஒட்டிக் கிடந்த சிறகுகளையும் மெள்ள விரித்து கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டை விட்டு வெளியே வர முயற்சி செய்தது அந்தப் பூச்சி. அந்தப் பூச்சி மிகவும் சிரமப்படவே... அதற்கு உதவுவதாக நினைத்துக் கொண்ட ஒரு மாணவன், சிறு குச்சியால் கூட்டை உடைத்து விட்டான்.

கூட்டிலிருந்து 'தொப்' என்று விழுந்த அந்தப் பூச்சி, சிறிது நேரத்தில் செத்து விட்டது. அப்போது அங்கு வந்த ஆசிரியையிடம், மாணவர்கள் நடந்ததைச் சொன்னார்கள்.

''நீ உதவி செய்யறதா நினைச்சுக்கிட்டு, அதைச் சாகடிச்சுட்டே! கூட்டிலிருக்கும் புழுவானது, இயற்கையாகவே போராடிப் போராடித்தான் அழகான வண்ணத்துப் பூச்சியாக வெளிவருகிறது. அப்படி



முட்டி மோதி, வெகு பிரயாசைப்பட்டு வருவதால்தான் அதற்கு உடனே பறக்கும் வலிமை கிடைக்கிறது'' என்று விளக்கினார் ஆசிரியை!

இன்றைய குடும்பங்களில் பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள்தாம்! அவர்களும் மிகச் செல்லமாக வளர்ந்து, எல்லாமே சுலபமாகக் கிடைத்து, ஒரு கடுஞ்சொல் கூட தாங்காத சென்சிடிவ் குழந்தைகளாக இருக்கிறார்கள்.

ப்ளஸ்டூ வரை ஓகே! பெற்றோர்கள் பொத்திப் பொத்தி வளர்த்து விடுகிறார்கள். அவனு(ளு)க்காக, குடும்பமே அட்ஜெஸ்ட் செய்து கொள்கிறது. அதற்குப் பின் கல்லூரி, காதல், வேலை என வரும்போதுதான் ப்ராக்டிகலாக நிறையப் பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி : 2225 1522,
2225 0623, 2225 1324
தொலைநகல் : 044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
மங்கையர் மலர்
இண்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யு.எஸ். டாலர்

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

அப்போது அவர்களுக்கு ஏற்படும் ஏமாற்றங்கள், சமுதாய அழுத்தங்களைத் தாங்கும் மனப்பக்குவம் இல்லாததால் அதிர்ந்து போகிறார்கள். பிறந்ததிலிருந்து எல்லாமே 'சல்' என்று சுலபமாகப் போய் விடும் என்று நம்பும் இவர்களது தக்கை இதயத் தால் வெளிப்புற அதிர்ச்சிகளைத் தாங்க முடிவதில்லை. விளைவு...?

செமெஸ்டர் தேர்வில் தோல்வியடைந்து விடுவோமோ என்ற பயத்தில் மருத்துவக் கல்லூரி மாணவி தற்கொலை! காதலி கைவிட்டதால், கல்லூரி மாணவன் விஷம் குடித்து சாவு! தனது தோழியருக்கெல்லாம் கேம்பஸ் செலக்ஷன் ஆகி, தான் மட்டும் தேர்வாகததால், இன்ஜினியரிங் மாணவி தற்கொலைக்கு முயற்சி! இது போன்ற வேதனைத் தரும் செய்திகள் சகஜமாகி விட்டன.


தேர்வுக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உங்கள் வீட்டிலும் பத்தாம் வகுப்பு முதல் உயர்கல்விப் படிப்பு வரை ஏதாவது படிக்கும் மாணவமணிகள் இருப் பார்கள். அவர்களை மனரீதியாக, வலிமையுள்ளவர்கள் ஆக்குங்கள்! வாழ்க்கையில் எதிர்படும் பிரச்னைகளை, சவால்களை, மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ள தயாராக் குங்கள்.

அன்புச் செல்வங்களுக்கும் ஒரு வார்த்தை! நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு மதிப்பெண்கள் கிடைக்காமல் போகலாம்! அல்லது தேர்தலில் தோல்வி கூட ஏற்படலாம். அதற்காக மனமுடைந்து போக வேண்டிய அவசியமில்லை. ஆப்ரகாம்லிங்கன் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஆனார். அது சூமந்திரக்காளி வித்தைபோல் கிடைத்ததா என்ன? இருபது வயதில் ஆரம்பித்த முயற் சிக்கு, ஐம்பத்திரண்டு வயதில்தான் வெற்றி கிடைத்தது... நடுவே எத்தனையெத்தனை தோல்விக் குளவிகளின் கொட்டல்கள்?

வாழ்க்கையின் நீண்ட கால ஓட்டத்தில், சாதனை யாளர்கள் பெறுகிற வெற்றிகளெல்லாம் போராட்டத் தால் கிடைத்தவையே! போராடிப் போராடி வென்ற மனிதர்களே மனவலிமை மிக்கவர்களாக மாறுகிறார்கள். அதற்குப் பின், வெற்றிகள் தாமாகவே வந்து அவரது காலடியில் மண்டியிடுகின்றன.

எனவே... பெற்றோர்களே... உங்கள் குழந்தைக்கு உதவுவதாக நினைத்து, ஸ்பூன் ஃபீடிங் செய்யாதீர்கள். அவர்களாகவே போராடி ஜெயிக்கட்டும்! பலம் பெற்ற சிறகுகளுடன் வானில் பறக்கட்டும்!

அனுஷா நடராஜன்



பாத்டப்ஸ்
க்யூபிக்கிள்ஸ்
ஷவர்ஸ் / பானெல்ஸ்
ஸானிட்டரிவேர்
ஃபிட்டிங்ஸ்
பம்புஸ்

ஆச்சரியமூட்டும் விதத்தில்
விலையற்றது

Milano
YOU DESERVE IT



வாடிக்கையாளர் பராமரிப்பு: 022- 3064 7484
கட்டணமற்ற எண் :1800-22-7484



தாய், ஒரு குழந்தைக்குச் செய்யும் அதிகபட்ச நன்மையை இந்த உலகில் வேறு எவராலும் செய்து விடமுடியாது. அவளது வெறும் இருப்பு மட்டுமே ஆச்சர்யமான பலம் தரக்கூடியது. வாசலில் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை என்ன தைரியத்தில் விளையாடு கிறது? உள்ளே அம்மா இருக்கிறாள் என்கிற தைரியத்தில் அல்லவா விளையாடுகிறது. அதனால்தான் அடிக்கடி ''அம்மா'' என்று கத்தியபடி ஓடிவந்து கட்டியணைத்துக் கொள் கிறது. இப்படிச் சொல்கிறேன். வகுப்பறையில் ஓர் சிறந்த ஆசிரியர் மாணவனை அடிக் காதபோதும் பாடம் நடத்தாதபோதும் கூட ஒரு வகை அமைதி நிலவும். காரணம் அவரது இருப்புத்தன்மை. அதுபோலவே கடவுள் எதுவும் செய்யாதபோதும் பூமி பரமாத்மாவின் இருப்புத் தன்மையில் மட்டும் ஆனந்தமாக இருக்கிறது. அப்படித்தான் ஒரு குடும்பம் அம்மாவின் இருப்புத் தன்மையில் வெகு நிம்மதியாக இருக்கிறது. ஆனால், இன்று அம்மாக்களை அல்லது அம்மா வில் அம்மாத்தன்மையைத் தொலைத்துவிட்டு, பல குடும்பங்கள் அநாதைகள் ஆகிவிட்டன. அது வேறு விஷயம்.

கோழிக் குஞ்சுகள் குப்பைமேட்டில் அங்கும் இங்கும் மேய்ந்து கொண்டிருக்கும். தாய்க் கோழி சிறிது தள்ளி மேய்ந்து கொண்டிருக்கும். திடீர் என்று எல்லாக் குஞ்சுகளும் கீச் கீச் சென்று கத்திக் கொண்டு தாயை நோக்கி ஓடிவந்து தாயிடம் அப்பிக் கொள்ளும். நாய்களிலும் இந்த நிகழ்வை நீங்கள் பார்த்திருக்கலாம். ஒரே சமயத்தில் எல்லாக் குட்டிகளும் திடீர் என்று தாயை நோக்கி



ஓடிவரும் காரணம் பற்றி யோசித்தது உண்டா? சொல்கிறேன்.

காற்று சற்று பரவலாக வீசும் போது தாயின் உடம்பிலிருந்து புறப்படும் வாசனை குட்டிகளுக்குச் சரளமாகக் கிடைக்கும். திடீரென்று ஒரு பக்கமாகக் காற்று

8



சுகிசிவம்

பெண்ணே, நீ வாழ்க!

வீசும் போது, அந்தப் பக்கமாகத் தாயின் வாசம் போய் விடும். குஞ்சுகள் அந்த வாசத்தைப் பெற முடியாமல் போய்விடும். அவ்வளவுதான் பயம் கவ்விக்கொள்கிறது. அதனால் அவை தாயை அப்பிக்கொள்ள ஓடுகின்றன. தாயின் வாசத்தில் குழவியின் பலம், நம்பிக்கை எல்லாமே குடியிருக்கின்றன. அவள் எதுவும் செய்ய வேண்டாம். அவள் இருப்பே அத்தனை அவசியமானது. பழைய காலத்தில் தாயின் புடைவையில் தொட்டில் போட்டதற்கே அதுதான் காரணம். தாயின் வாசம் தருகிற நம்பிக்கையில் குழந்தை தாயின் புடைவையில் மிக நிம்மதியாகத் தூங்குகிறது. நிம்மதியால் ஆரோக்யமாக வளருகிறது. ஒரு தாயின் தாய்மை, குழந்தைக்கு லாபம்தான். ஆனால் தாய்க்கோ எல்லையற்ற தொல்லைகள்... கணம்தோறும் கவலைகள்... கஷ்டங்கள்... கணக்கற்ற அவஸ்தைகள்.

தன்னால் தாய் படும் துயரங்களை ஒரு போதும் ஈடுசெய்ய முடியாத பிள்ளைகள், தாயின் மரணத்தின்போது சிந்துகிற கண்ணீரும் தண்ணீரும் பொன் வைக்கும் இடத்தில் பூ வைக்கும் முயற்சி. சூரியன் தூங்கப் போனதும் மாநகராட்சிகள் தெரு விளக்கு போடுகிற மாதிரி ஒரு சின்ன வேலை. ஒரு தாய் மறைந்த பிறகு அவ

ளுக்குத் தர்ப்பணம் செய்து மாத்ரு கயாவில் (குஜராத்) சிரார்த்தம் செய்யும் போது சொல் லும் மந்திரத்தில் தாயின் ஒருசில அவஸ்தைகள் விளக்கப்படுகின்றன.

ஸ்ரீ ஜெயேந்திரர் சொல்கிறார் : ''அம்மா, என்னைக் கருவில் ஏற்றபோது நீ உடம்பு வேதனைபட்டிருப்பாயே... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் கருவில் உருவாகி வளர்ந்தபோது, நீ வாந்தி எடுத்து உணவு செரிக்காமல் அவஸ்தைப்பட்டிருப் பாயே... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். அம்மா, என்னை வளர்ப் பதற்காக நீ விரும்பாத எல்லா உணவை யும் என் பொருட்டே எடுத்துக் கொண் டாயே... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். அம்மா... நான் உன் வயிற்றில் வளர்ந்து வரும் நேரத்தில் உன்னால் சுமக்க முடியாமல் பெரு மூச்சு விட்டு இங்கும் அங்கும் அலைந் தாயே... அந்த வேதனைக்காக ஜலதர்ப் பணம் செய்கிறேன். நீ போக வேண்டிய இடங்களுக்குப் போகாமல், வீட்டிற்குள் ளேயே முடங்கிக் கிடந்து எல்லா ஆசை களையும் துறந்து விட்டு, என் மீதே கவன மாக இருந்தாயே... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன்.

''நான் வெளியே உருவெடுத்து வந்த போது உன்னுடைய உதிரம் பெருக் கெடுத்து ஓடியிருக்குமே... அதற்காக நான் ஜலதர்ப் பணம் செய்கிறேன். பிரசவ வலியில் அலறி இருப்பாயே... அதற்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன். நான் வாயால் கடித்து உறிஞ்சியபோது உன் மார்புக் காம்பு கள் வலித்திருக்குமே... அதற்காக இந்த ஜலதர்ப்பணம் செய்கிறேன். என் அழுகுரல் கேட்டதும் ஓடோடி வந்து தூக்கினாயே... அதற்காக உனக்கு ஜலதர்ப்பணம் செய் கிறேன். நான் பிறந்த பிறகு எனக்கு பால் கொடுக்க வேண்டுமென்பதற்காக வேண் டாததை விலக்கி, வேண்டியதை மட்டும் உண்டாயே... அதற்காக நான் ஜலதர்ப் பணம் செய்கிறேன். நான் உன் மடியில் மல மூத்திரம் செய்தேனே... அந்த துர்



வாசனை வேதனைகளைப் பொறுத்துக் கொண்டாயே... நான் இரவிலே அழுது, மற்றவர்கள் ஏச, நீ எழுந்து என்னைச் சமாதானப்படுத்தி மற்றவர்கள் ஏச்சைப் பொறுத்துக்கொண்டாயே... இப்படியாக ஐம்பத்தைந்து விதமான அவஸ்தைகளைப் பொறுமையோடு ஏற்றுக் கொண்டாயே... அதற்காக ஜலதர்ப்பணம் செய்கிறேன்.''

மாத்ருபஞ்சகம் என்ற நூலில் பழுத்த துறவியாகிய ஆதிசங்கரர் சொல்வதைக் கேளுங்கள்.

''தாயே! என்னைக் கர்ப்பத்தில் தரித்த தும் மசக்கை ஏற்பட்டு அடிக்கடி வயிற் றைக் குமட்டி வாந்தி செய்தீர்களே, சில மாதங்களில் விழுதியிலை கஷாயத்தில் விளக்கெண்ணெயைச் சாப்பிட்டு கர்ப்பத் தைக் காத்தீர்களே, ஐந்து மாதங்களானதும் உப்பு, காரம் முதலியவற்றைக் குறைத்து ஆஹாரத்தையும் குறைத்துச் சாப்பிட்டீர் களே, ஏழு மாதங்களானதும் குழந்தை

அம்மா என்பது உலகையே ரட்சிக்கும் உன்னத உணர்ச்சி. சகல பெண்களிடமிருந்தும் ஜனிக்கிற மகாசக்தி. கருணை மழை கொட்டக் காத்திருக்கும் கார்மேகம்.. பூ மண்டலத்தையே குளிர்விக்கும் தாவர மணம்!

அசைய ஆரம்பித்ததும் படுக்கவும் முடியாமல் காப்பாற்றினீர்களே, ப்ரஸூதி வாயுவினால் குழந்தை வயிற்றைச் சூழ்ந்து வரும்பொழுது மூர்ச்சையைக் கொடுக்கும் வேதனையைப் பொறுத்தீர்களே, பிறந்த என்னைக் காப்பாற்ற இரவில் கண்விழித்து ஆஹாரம் கொடுத்து, ஜலமல துர்கந்தங்களையும் ஸஹித்து முகமலர்ச்சியுடன் என்னைக் காத்தீர்களே, கணை, மாந்தம் முதலிய வியாதிகள் வந்து நான் வாடும் பொழுது, உப்பில்லாமலும் புளியில்லாமலும் ஆஹாரம் செய்து குலதெய்வத்தைப் பிரார்த்தித்து விபூதி இட்டு சுற்றிப் போட்டுக் காத்தீர்களே, நான் பிறந்தது முதல் துறவியாகும் வரை எனக்குச் செய்த ஒவ்வொரு உபகாரத்திற்கும் என்ன கைம்மாறு செய்ய முடியும்? பதில் செய்ய பல ஜன்மங்கள் எடுத்தாலும் முடியாது. நான் கடைசி காலத்தில் செய்வது இந்த நமஸ்காரம்தான்'' என்று பழுத்த துறவியாகிய ஆதிசங்கரரே துடிக்கிறார் என்று கவனியுங்கள்.

''அம்மா என்பது எலும்பும் சதையும் கொண்ட ஓர் உடல் அல்ல. உலகையே ரட்சிக்கும் உன்னத உணர்ச்சி. சகல பெண்களிடமிருந்தும் ஜனிக்கிற மகாசக்தி. கருணை மழை கொட்டக் காத்திருக்கும் கார்மேகம். பூமண்டலத்தையே குளிர்விக்கும் தாவர மணம். சகல உயிர்களையும் தாங்கும் பூமியின் பலம்'' என்கிற மகாவாக்யத்தை விளங்கிக் கொள்ளுங்கள்.

இன்னும் எவ்வளவோ சொல்லலாம்.

அதுசரி... அம்மா மகத்துவம் போதும். அடுத்த பகுதிக்குப் போவோமா? பெண்களிடம் நான் கேட்க விரும்பும் கேள்வி ஒன்று இருக்கிறது.

வாழ்வில் நிம்மதியாக இருப்பது முக்கியமா? அல்லது நம் விருப்பப்படி எல்லாமே நடப்பது முக்கியமா? நமது இஷ்டப்படி எல்லாமே நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறவர்கள் நிம்மதியாக ஒருபோதும் இருப்பதில்லை. இது கொஞ்சம் கசப்பான உண்மை.

பொதுவாகப் பழைய காலத்தில் எத்தனையோ சிக்கல்களுக்கு மத்தியிலும் பெண்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தார்கள். அதிக வசதி இல்லாமல் இருக்கலாம். கல்வி மறுக்கப்பட்டிருக்கலாம். என்றாலும், சங்கடங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நிம்மதியாக வாழ்ந்து முடித்தார்கள்.

குடும்ப விஷயத்தில் எந்தப் பொறுப்பும் ஏற்கத் தயாராக இல்லாத, கொஞ்சம் குணக்கேடான குறைபாடுகள் மிக்க கணவனுடன்கூட சென்ற தலைமுறைப் பெண்கள் அதிக சிக்கல் இல்லாமல் வாழ்ந்து முடித்துவிட்டார்கள். ஆனால், இன்று அப்படியா? பிரசவம் முடித்த மறுநாள் முதல் பிள்ளையையும், பிள்ளை சுமக்கும் ஃபீடிங் பாட்டிலையும் சுமக்கத் தயாராக உள்ள, தன் தகப்பனை விடவும் பல மடங்கு குடும்பத்தில் அக்கறை காட்டும் கணவனோடுகூட இன்றைய படித்த சம்பாதிக்கிற பெண்களால் சந்தோஷமாகக் குடும்பம் நடத்த முடிவதில்லையே... ஏன்?

காரணம் சொல்கிறேன். காரணத்தைக் கேட்டுவிட்டு நீங்கள் யாரும் என்னோடு சண்டைக்கு வரக்கூடாது.

(தொடரும்)

அழகாய்



"ஒரு சிகை அலங்கார நிபுணருக்கு வழங்கப்படும் சம்பளம் எவ்வளவு இருக்கும்? ரொம்ப அதிகமில்லை. மாதம் ரூபாய் ஐம்பதாயிரம்தாங்க. வாயைப் பிளக்காதீங்க! ஒரு ஹேர்ஸ்டைலிஸ்ட் இன்றையக் காலகட்டத்தில் சொந்தமாக சலூன் வைத்து நடத்தி, மாதம் ரூபாய் ஒரு லட்சம் வரை சம்பாதிக்க முடியும்.

''சாஃப்ட்வேர் துறைக்கு நிகராகப் போட்டி போட முடியாவிட்டாலும் அந்த ரேஸில் இந்த அழகுத் துறைக்கும் இடம் உண்டு.

மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப, தினம் தினம் தோன்றும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் அழகுக் கலை நிபுணர்களும் தங்களை அப்-டு-டேட் ஆக மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கு. அதனால இத் துறையிலே கொட்டிக் கிடக்கும் வாய்ப்புகளும் ஏராளம், ஏராளம்.

இதையெல்லாம் யோசித்துத்தான் நேச்சுரல்ஸ''ம் தன் பங்குக்கு அனைத்துத் தரப்பினருக்கும் தரமான அழகுக் கலைப் பயிற்சி வகுப்புகளை எடுக்க ஆரம்பித்துள்ளது.

✱ வீணா



"இதை ஒரு பயனுள்ள ஹாபியாக எடுத்துப் படிக்க நினைப்பவர்களுக்கும், ஏற்கெனவே இத்துறையில் இருப்பவர்கள் நன்கு ஜொலிக்கவும், இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும்'' என்கிறார் வீணா.

சம்பாதிக்கலாமே...

தற்பொழுது ஆண், பெண் இருபாலரும் ப்யூட்டி பார்லருக்கு வருகை தருகின்றனர். அப்படியிருக்கும்பொழுது, ஒரு சிறந்த அழகுக் கலை நிபுணர் இருபாலருக்கும் உண்டான சிகிச்சை முறைகளை நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். மேலும், ஆண் ஹேர்ஸ்டைலிஸ்ட்டாக இருப்பவரைவிட 'உமன் ஹேர்ஸ்டைலிங்குக்கு' அதிக சம்பளம் வழங்கப்படுகிறதாம்.



நேச்சுரல்ஸில் த்ரெடிங், பெடிக்யூர், ஹேர் மஸாஜ், வேக்ஸிங், ஃபேஷியல்ஸ் என்று அடிப்படை பயிற்சிகளிலிருந்து ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட், ப்ரைடல் மேக்-அப் ஆர்டிஸ்ட், ரிஃப்ளக்ஸாலஜிஸ்ட், மெஹந்தி டிசைனர் என்று அட்வான்ஸ்ட் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.


''என்னதான் தெருவுக்குத் தெரு ப்யூட்டி பார்லர்கள் தோன்றினாலும் மக்கள் தரமான பார்லர்களைத்தான் தேடிச் செல்கிறார்கள். அவ்வகையில், எங்களுக்கே தமிழ்நாடு முழுவதும் கிளை துவங்க தலைசிறந்த நிபுணர்கள் தேவைப்படுகிறார்கள். அதனால் நாங்களே இந்த ட்ரையினிங் மூலம், கைதேர்ந்த நிபுணர்களை உருவாக்கி பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். இதற்காகவே வெளிநாடுகளிலிருந்து பல ஸ்பெஷலிஸ்டுகளை வரவழைத்து பயிற்சி தருகிறோம்'' என்று கூறும் வீணா, ''அழகுக் கலை படிக்க அடிப்படைக் கல்வித் தகுதி இருந்தாலே போதும்'' என்கிறார்.

ஆங்கில மொழிப் புலமையும் இருந்தால் இன்னும் சிறப்பு! அதனால் ஆங்கில மொழிக்கு நேச்சுரல்ஸே பயிற்சி அளித்து, வெளியூர்களிலிருந்து வந்து தங்கி, படிக்க விரும்புகிறவர்களுக்குத் தங்கும் வசதியும் செய்து தருகிறது.

பகுதி நேர வேலையாக இக்கலையை எடுத்துப் படிக்க விரும்புகிறவர்களுக்கும் அவர்களுக்கு வசதியான நேரங்களில் பயிற்சி கொடுக்கவும் விழைகிறது இந் நிறுவனம்.

– சுநயனா

பிப்ரவரி 2008ல் வெளியான அறிவுப் போட்டி –1 விடைகள்





1. மாயாவதி
2. இசை
3. ராவல்பிண்டி
4. மூன்றாவது முறை
5. ஆஸ்துமா
6. ஹர்பஜன்சிங்
7. அடையாள அட்டை
8. பி. வாசு
9. நாகாலாந்து
10. நீயா, நானா?

ரூ.5,000 பரிசு அறிவுப் போட்டி-1 முடிவு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்!

வழக்கம் போலவே பெட்டி நிறைய கூப்பன்கள் வந்து குவிந்து விட்டன! அதிலிருந்து, குலுக்கல் முறையில் ரூ.250/- பரிசு பெறும் இருபது அதிர்ஷ்ட சாலிகளின் பட்டியல் இதோ!

1. ஏ. ஹாஜிரா இர்ஷாத், அதிராமபட்டினம், 2. ந. அலமேலு மங்கம்மாள், திருச்செங்கோடு, 3. காமாட்சி சத்தியநாராயணன், வேலூர், 4. என். ஆர். முரளி, துடியலூர், 5. எஸ்.வான்மதி, சிவகங்கை மாவட்டம், 6. ச. உமா, வேலூர், 7. தி. ஜெயஸ்ரீ, தூத்துக்குடி-8, 8. கே. வசந்தா சுவாமிநாதன், கும்பகோணம், 9. ந. வஸந்த், புதுச்சேரி, 10. சு. ரத்னகலா, திருநெல்வேலி, 11. கே. தாமோதரன், தாழக்குடி, 12. எஸ். இசக்கி கோமதி, நயினாரகரம், 13. எஸ். அனுசுயா, நல்லிபாளையம், 14. கீதா சூரியநாராயணன், தாரமங்கலம், 15. ஆர். அனுசுயா, பெங்களூரு, 16. பி. ஜமுனா, பொன்னேரி, 17. கே. புஷ்பா, சேலம், 18. எஸ்.ஏ. கனி, குறிஞ்சிப்பாடி, 19. ஜெயலெக்ஷ்மி, பாளையங்கோட்டை, 20. வி. துர்காலட்சுமி, திருவான்மியூர்.

வெற்றிபெற்ற வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்!
கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!


நம்மிடையே புத்தகங்களைப் படிக்கும் வழக்கம் குறைந்து வருகிறது. தொலைக்காட்சி ஒரு காரணம் என்றாலும், இயந்திர உலகில் நேரமின்மையும் பிரச்னையாக உள்ளது. அதிலும், 'காத்திருத்தலில்' ஆகும் காலவிரயம் மிக அதிகம்! மருத்துவரிடம் காத்திருத்தல், பயணப் பதிவு செய்யக் காத்திருத்தல், ரயிலில் வருபவரை வரவேற்கக் காத்திருத்தல் எனக் காத்திருக்கும் காலத்தை புத்தகங்கள் படிக்கப் பயன்படுத்தலாம். எப்பொழுதும் நல்லதொரு புத்தகம் நம் கையில் இருக்கட்டும். வெற்று அரட்டை, வீணான போரடிக்கும் மோட்டுவளைப் பார்வை இவற்றைத் தவிர்க்க உதவுவதோடு பொழுதும் பயனுள்ளதாகப் போகும்!

- கல்யாணி பாலு,
திருநெல்வேலி - 11.



அடிச்சாங்க பரிசு!

ஆஹா பரிசு (பிப்ரவரி 2008) போட்டியில், "ரேஷன் கார்டில் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைப் பதிவுசெய்யும் பொழுது குழந்தைகளின் செல்லப் பெயர்களைக் கொடுத்து விடாதீர்கள். பள்ளியில் சேர்ப்பதிலிருந்து பாஸ்போர்ட் எடுப்பது வரை அனைத்திற்கும் ரேஷன் கார்டு தேவைப்படுகிறது" என்ற குறிப்பை எழுதி ரூ. 150/- பரிசு பெறுகிறார் பா. பனிமலர், மதுரை - 14. அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு பெறுகிறார் அனிதா பிரிஜேஷ், ஹைதராபாத் - 4.



ஆஹா பரிசு!

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து, எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் ரூ. 150/- பரிசு!

'மார்ச் -ஆஹா பரிசு!' என்று மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி : 15.3.2008

பெட்டிக்கதைப் போட்டி! வாசகர் விருப்பம்

பெட்டிக்கதைகளை எழுதிக் குவித்து வரும் வாசகர்களுக்கு நன்றி! இந்த இதழில் மூன்று கதைகள் பிரசுரமாகியுள்ளன.

நீங்கள் எழுதும் கதைகளிலிருந்து, இந்த மாதம் மூன்று பெட்டிக் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாகும். பிரசுரமாகும் கதைகள் தலா ரூ. 150/- பரிசு பெறும்.

சிம்பிள் கண்டிஷன்ஸ் : 100 வார்த்தைகளுக்கு மிகாமல், சொந்த கற்பனையில், பெயர், முழு விலாசம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் *இன்லாண்ட் லெட்டரில்* மட்டுமே எழுதி 'பெட்டிக்கதைப் போட்டி' என்ற குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

அறிவுப் போட்டி-2

ரூ. 5,000 பரிசு



சமீபத்தில் நடைபெற்ற செய்திகளை எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறீர்கள்? ஒவ்வொரு கேள்விக்கும் கீழே மூன்று பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து '✔' பண்ணி அனுப்புங்கள். குலுக்கல் முறையில் 20 பேருக்கு தலா ரூ. 250/- பரிசளிக்கப்படும். எங்கே.. உங்க பொது அறிவைச் சோதிச்சுப் பாருங்க!

1. இந்த ஆண்டு பத்மவிபூஷன் வழங்கப்பட்ட பின்னணிப் பாடகி யார்?

அ) பி. சுசீலா ☐ ஆ) லதா மங்கேஷ்கர் ☐

இ) ஆஷா போன்ஸ்லே ☐



2. சரத்குமார் தொடங்கியுள்ள அரசியல் கட்சியின் முதல் மாநாடு எங்கு நடைபெற்றது?

அ) மதுரை ☐ ஆ) திருநெல்வேலி ☐

இ) கோவை ☐

3. 'ஆஸ்திரேலிய ஓப்பன் பட்டத்தை வெல்லும் முதல் ரஷ்யப் பெண்' என்ற பெருமையைப் பெற்றவர் யார்?

அ) மார்ட்டினா ஹிங்கிஸ் ☐

ஆ) மோனிகா செலஸ் ☐ இ) மரியா ஷரபோவா ☐



4. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடும் ஒபாமா மற்றும் ஹில்லாரி க்ளின்டன்

அ) ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் ☐

ஆ) எதிரெதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் ☐

இ) ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ☐



5. சமீபத்தில் வெளியான உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி இந்தப் பாடத்தை தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கட்டாயமாக்கியது செல்லும். அது எந்தப் பாடம்?

அ) கணினியியல் ☐
ஆ) பாலியல் ☐
இ) தமிழ் ☐

6. பறவைக் காய்ச்சல் நோய் எதனால் ஏற்படுகிறது?

அ) பாக்டீரியா ☐ ஆ) வைரஸ் ☐ இ) மரபணு ☐

7. 'நடிகர் சிரஞ்சீவி அரசியல் அனுபவம் இல்லாதவர்' என்று கூறியதற்காக தாக்கப்பட்ட நடிகர் யார்?

அ) மோகன் பாபு ☐ ஆ) ராஜசேகர் ☐ இ) பிரபுதேவா ☐

8. சிறுநீரக மோசடிக்காக டாக்டர் அமீத்குமார் என்பவர் எங்கு கைது செய்யப்பட்டார்?

அ) ரஷ்யா ☐ ஆ) கனடா ☐ இ) நேபாளம் ☐

9. 'தாரே ஜமீன் பர்' திரைப்படத்தில் டிஸ்லெக்சியா குறைபாடு கொண்ட சிறுவனுக்குப் புத்துணர்ச்சி அளிக்கும் ஆசிரியராகத் தோன்றுபவர் யார்?

அ) அமீர்கான் ☐ ஆ) ஷாருக்கான் ☐ இ) ஹ்ருத்திக் ரோஷன் ☐

10. அனைத்து மகளிருக்கும் எந்த உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கோரி உச்சநீதிமன்றத்தை கேரள அரசு அணுகியிருக்கிறது?

அ) சபரிமலைக்குச் செல்ல ☐ ஆ) அழகு நிலையங்கள் நடத்த ☐
இ) சிறுநீரகங்களில் ஒன்றைத் தங்கள் கணவருக்கு வழங்க ☐

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

போட்டி விதிகள் :

அறிவு விடைகளை நிரப்பி இந்தப் பக்கத்தைக் கிழித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

அனுப்ப வேண்டிய முகவரி : அறிவுப் போட்டி - 2 மங்கையர் மலர்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032.

கடைசித் தேதி : 15.3.2008

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : .... ஈமெயில் : ....



ஐஸ்வர்யம் பொங்கணுமா?

இப்பொழுது வீடுகளிலும், கடைகளிலும் ஐஸ்வர்யமும், மங்களமும் உண்டாவதற்காக ஒரு பாத்திரத்தில் நீரை விட்டு பூக்களை மிதக்க விடுகிறார்கள். இந்த நீரில் சிறு துளி மஞ்சள் தூளும், குங்குமமும் போட்டால் திருஷ்டியும் கழியும்.

- ராதா விஸ்வநாதன்,
ஜாம்ஷெட்பூர்.

இவை எல்லாமே ஆஹா 50தான்!

சாலையோரக் கடைகளில் வாங்கிய துணிகளைக் கட்டாயமாக டெட்டால் கலந்த நீரில் ஊறப்போட்டு அலசிய பிறகே அணியவும். அழற்சி, தொற்று ஏற்படாமல் இருக்கும்!

- கே. விஜயலக்ஷ்மி,
சென்னை - 20.

உபயோகிக்காத இரு சக்கர வண்டி, மின்விசிறி, மிக்ஸி, கெய்ஸர், ரேடியோ இவற்றை உடனடியாக விற்று விட வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என போட்டு வைத்தால் யாருக்கும் உபயோகமின்றிப் போய்விடும்.

- பி. சூடாமணி, வடபழனி.

ரயில்வே ஸ்டேஷனில் ரிசர்வேஷன் செய்யச் செல்லும் பொழுது சில சமயங்களில் தேதிகளை மறந்து தவறாகக் குறிப்பிட்டு விடுகிறோம். ரிசர்வேஷன் கவுண்டரில் பெரிய எழுத்தில் அச்சிட்ட மாத காலண்டர் ஒன்றைச் சுவரில் மாட்டினால் சௌகரியமாக இருக்குமே!

- மு. சேக், நீலகிரி மாவட்டம்.

கோயில்களில் ரூபாய் நோட்டுகள் போட தனி உண்டியலும், சில்லறைக் காசு போட தனி உண்டியலும் வைத்தால் ரூபாய் நோட்டுகள் சில்லறைகளில் பட்டு கசங்கி கிழிந்து விடாமல் இருக்கும். ஆலய நிர்வாகிகள் செய்வார்களா?

- என்.பி. சிவகாமி செல்வம்,
குஜராத்.

பீட்ரூட்டைத் துருவி ஆவியில் வேகவைத்து கெட்டியான தயிரில் போடவும். மிளகாய், தேங்காய், சீரகம் சேர்த்து விழுதாக அரைத்து பீட்ரூட் கலவையில் கலந்தால் புதுவித பச்சடி சூப்பர் டேஸ்ட்டாக இருக்கும். உடலுக்கும் சத்தானதும் கூட.

- ஆர். மீனாட்சி, திருநெல்வேலி.

மாம்பழக் கொட்டையை மட்டும் போட்டு மோர்க் குழம்பு செய்ய மாம்பழ வாசனையுடன் அதன் ருசி அருமையாக இருக்கும்.

- க. வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி.

DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL

#1, Radial Road, Pallikaranai, Chennai - 601 302
Tel : +91- 44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

கால் நரம்பு சுற்றிக் கொள்ளும் பிரச்சினைக்கு வலியற்ற, புதிய தலைமுறை சிகிச்சை

இந்தியாவில் முதல் முறையாக சென்னையில் அறிமுகம்



டாக்டர் ஷிராஸ் கரீம்

டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை டாக்டர் ஷிராஸ் கரீம் இருதயம், ரத்தக் குழாய் மற்றும் நரம்பு மையம் (எச்வி...) கால் நரம்பு பிரச்சினைகளுக்கும் சிகிச்சை மற்றும் தலை சார்ந்த நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவர் ஆர்எஃப்ஏ எனும் ரேடியோ மின்னலை சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தி தொழில்நுட்ப ரீதியில் மிகவும் முன்னேறிய புதிய தலைமுறைக்கான சிகிச்சை முறையாகும். இத்தகைய முறை இந்தியாவில் முதல் முறையாக சென்னையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த புதிய சிகிச்சை முறையில் நோயாளிகளுக்கு சிறிதளவு அல்லது வலி கூட இருக்காது. அறுவை சிகிச்சை மற்றும் லேசர் சிகிச்சையில் ஏற்படும் தழும்புகூட இந்த சிகிச்சை முறையில் இருக்காது.

ஆர்எஃப்ஏ சிகிச்சை முறையானது புற நோயாளிகளுக்கு அளிக்கப்படுவதைப் போல ஒரு மணி நேரத்தில் முடிந்துவிடும். பாதிக்கப்பட்ட பகுதியில் மற்றும் மரத்துப் போகும் வகையில் ஊசிபோடப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும். இதன் மூலம் அறுவை சிகிச்சைக்கு மேற்கொள்ளப்படும் தீவிர முறைகள் ஏதும் இதில் இருக்காது. இதன் மூலம் ஒரே நாளில் நோயாளி குணமடைந்து வீடு திரும்ப முடியும்.

ரத்தம் செல்லும் கால் நரம்புகளில் பாதிப்பு ஏற்படுவதால் இப்பிரச்சினை ஏற்படுகிறது. இத்தகைய சிகிச்சையில் ரத்த வால்வுகளை சீரமைக்க முடியாத நிலை உள்ளது. இதனால் அப்பகுதியில் செல்லும் நரம்புகளில் மாற்று நரம்புகள் மூலம் ரத்தத்தை பாயச் செய்யும் வகையில் அறுவை சிகிச்சை செய்யப்படும். பாதிக்கப்பட்ட நரம்புகளை நீக்கிவிட்டு மாற்று நரம்புகள் மூலம் ரத்தம் பாயச் செய்வதே வழக்கமான சிகிச்சை முறையாகும்.

இத்தகைய பிரச்சினை உள்ள நோயாளிகளின் கால்களில் உள்ள நரம்புகள் நீக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும். இதனால் நோயாளி குறைந்தபட்சம் இரண்டு வார காலத்துக்கு வீட்டில் ஓய்வெடுக்க வேண்டிய சூழல் ஏற்படும். தற்போதைய ஆர்எஃப்ஏ சிகிச்சை மூலம் சிறிதளவு தழும்பு கூட ஏற்படாது. அத்துடன் வீக்கமோ அல்லது அறுவை சிகிச்சை செய்ததற்கான தழும்போ இருக்காது. அத்துடன் வழக்கமான முறையில் அளிக்கப்படும் சிகிச்சை முறையில் பிற நரம்புகள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன. அத்தகைய வாய்ப்புகள் இந்த சிகிச்சை முறையில் மிகக்குறைவு. மேலும் ஆர்எஃப்ஏ சிகிச்சை முறையால் மீண்டும் இத்தகைய பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு.

ஆர்எஃப்ஏ சிகிச்சை முறை: இந்த சிகிச்சை முறையானது மேம்பட்ட மாற்று சிகிச்சையாகும். பாதிக்கப்பட்ட நரம்புகளை அறுவை சிகிச்சை மூலம் நீக்குவதற்குப் பதிலாக, மூடிய நிலையில் இத்தகைய சிகிச்சை மேற்கொள்ளப்படும். இந்த சிகிச்சைக்குத் தேவைப்படுவதெல்லாம் மிக மெல்லிய கதீட்டர் குழாய் மட்டுமே. இந்த கதீட்டர் குழாய் பாதிக்கப்பட்ட நரம்புகளில் செலுத்தப்படும். அல்ட்ராசவுண்ட் அலை மூலம் இந்த கதீட்டர் குழாய் கண்காணிக்கப்படும். இந்த கதீட்டர் குழாயின் முனையில் ரேடியோ அலைவரிசைகளை செலுத்தி பாதிக்கப்பட்ட நரம்புகள் மற்றும் தசைகளில் ரத்தம் பாய்வதை தடுக்கும். பாதிக்கப்பட்ட நரம்புகளில் ரத்த ஓட்டம் நிறுத்தப்பட்டு அதற்கு மாற்றாக நன்றாக உள்ள நரம்புகளில் ரத்த ஓட்டம் பாயும். நல்ல நிலையில் உள்ள நரம்புகளில் ரத்தம் பாயும்போது நோயாளி குணமடைவார்.

மருத்துவத் தொழிலில் மிகவும் முன்னேறிய தொழில்நுட்பக் கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் விஎன்யூஎஸ் குளோசர் ஃபாஸ்ட் கதீட்டர் பயன்படுத்தப்படுகிறது. அல்ட்ராசவுண்ட் தொழில்நுட்பம் மூலம் ரேடியோ அலைவரிசை செலுத்தப்படுகிறது. சிகிச்சையின்போது வெளியாகும் வெப்பத்தை கதீட்டர் கவனத்தில் கொள்ளும். இதன் மூலம் மிக உயரிய சிகிச்சையை அளிக்கமுடியும். இதனால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் தழும்புகள், மருத்துவ ஆலோசனைகள் தேவையில்லை. மருந்துகள் சாப்பிடத் தேவையில்லை.

கால் நரம்பு பிரச்னை: இந்த நரம்புகள் பொதுவாக கால்களில் மட்டுமே பாதிப்புகளை ஏற்படுத்தும். இதனால் கால்களில் நரம்புகள் சுருட்டிக் கொள்வது மற்றும் வீக்கமடைவது போன்ற பிரச்சினைகள் ஏற்படும். இத்தகைய பிரச்சினைகள் உள்ள நோயாளிகள், நோயின் தீவிரத் தன்மையை வெறும் கண்களாலேயே பார்க்க முடியும். பாதிக்கப்பட்ட நரம்புகளில் மிக அதிக வேகத்தில் ரத்தம் பாய்வதால் நோயின் தன்மை தீவிரமாகும். இந்நோய் பரம்பரை வழியில் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. உடற்பயிற்சி மேற்கொள்ளாதவர்கள், உடல் எடை குறையாதது, புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் மற்றும் நீண்ட நேரம் நின்றபடி பணிபுரிவோருக்கு இப்பிரச்னை ஏற்படுகிறது. பொதுவாக ஆண்களை விட பெண்களே இந்நோய்க்கு அதிகம் ஆளாகின்றனர். பொதுவாக 30 வயது முதல் 70 வயதுடையவர்களுக்கு இந்நோய் ஏற்படுகிறது.

இந்த நோய் தீவிரமடையும்போது வலி அதிகரிக்கும். சில சமயத்தில் மயக்கம் கூட ஏற்படும். மிகவும் தீவிரமடையும்போது தோலின் நிறம் மாறும். தோலின் மேல்பகுதியில் கொப்புளம் தோன்றும். கணுக்காலில் வீக்கம் தோன்றும். நரம்புகள் புடைத்த நிலையில் காணப்படும். சில பகுதிகளில் ரத்தம் கட்டிக்கொள்ளும். இத்தகைய நிலையில் நோய் குணமாக நீண்ட காலம் பிடிக்கும். அத்துடன் நோயாளிக்கு மிகுந்த தொல்லையை ஏற்படுத்தும்.

கால் நரம்பு சுருட்டிக் கொள்ளும் பிரச்சினை சார்ந்த நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் இந்தியாவிலேயே சென்னையில் முதல் முறையாக இத்தகைய சிகிச்சை வசதியை இம்மையம் பெற்றுள்ளது. இதற்கு விஎன்யூஎஸ் குளோசர்ஃபாஸ்ட் கதீட்டர் அதாவது மூடிய சிகிச்சை முறை உதவுகிறது.

இலவச ஆலோசனைக்கு **எஸ். சுபாஷிணி : 93451 20265**

10 % Special Discount On Sunday for Master & Executive Health Check-up

தொட்டால் பூ

“ ‘தொட்டால் பூ மலரும்’ தொடர் ரொம்ப நல்லா வந்திருக்கு! ஆனா பாருங்க... இந்த எஸ்.எம். கிருஷ்ணா விஷயத்துல என்னைத் தேவையில்லாமல் இழுத்துட்டாங்க. நான் ரொம்பவே நொந்து போயிட்டேன்!'' என்று வருத்தப்பட்டார் பி. சரோஜா தேவி.



''அவர் எங்களுக்கு தூரத்து உறவுக்காரர். வீட்டுல கல்யாண வயசுல பெண் இருக்கும்போது, நம்ப இனத்துல இருக்குற வாலிபப் பிள்ளைகளைப் பற்றிப் பேச்சு வருவதும், ஜாதகம் பார்ப்பதும் எல்லா வீடுகள்லயும் நடப்பதுதானே? அதை என்னவோ பெரிய விஷயமாக்கிட்டாங்க... என் கணவர் இறந்து போய் இருபத்து இரண்டு வருஷமாச்சு. இப்பப் போய் இதுமாதிரி எல்லாம் கிசுகிசுக்கள் வெளி வருவது வேதனையா இருக்கு!



''இந்த இரண்டு வாரமா, என் மேல அன்பு கொண்ட கலை உலகத்தினரும், உலகத்தின் ஏதேதோ இடங்களிலிருக்கும் ரசிகர்களும் ஃபோன் செய்து ஆறுதல் சொல்லிக்கிட்டேயிருக்காங்க.

''சரோஜாம்மா! தைரியமா இருங்க. நாங்க உங்களுக்கு ஆதரவா இருப்போம்!''னு ஒரு சகோதரிக்கு சொல்ற மாதிரி அவ்வளவு இதமா பேசறாங்க. அவங்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவிச்சுக்கிறேன்'' என்றார் நெகிழ்ந்த குரலில்.

இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்டினார். ''நான் பேட்டி தரும்போது, சிவாஜி ஸார், பானுமதி அம்மா, கமல் தம்பின்னு பாசத்தோடும் மரியாதையோடும் குறிப்பிடறேன். நீங்களும் அதே மாதிரி எழுதினா நிறைவாக இருக்கும்!'' என்றார் பி. சரோஜாதேவி.

"இதோ இவர் இருக்காரே.. ரொம்ப கம்பீரமான ஹீரோ. அவரோட நான் நடிச்ச படங்கள் எல்லாமே சூப்பர் ஹிட்!'' என்று பி. சரோஜாதேவி காட்டியது சிவாஜி கணேசன் படத்தை!

''சிவாஜி ஸார், ரொம்ப ஸ்டைலான ஹீரோ! டாமினேடிங் பர்சனாலிடி! என்னோட இத்தனை வருஷ நடிப்பு அனுபவத்துல, இழுத்து விடுற மூச்சும், சாப்பிடுற உணவும், தூங்குற நேரமும் கூட 'சினிமா, சினிமா'ன்னே இருக்கிறது இரண்டே பேர்தான்! ஒருத்தர் நடிப்புலக இமயம் சிவாஜி ஸார்... இன்னொன்னு

மலரும்!

பி. சரோஜாதேவி

கலைஞானி, என் பிள்ளை கமல்ஹாசன்!

அதிலும் சிவாஜிக்கு வொர்க் ஈஸ் வொர்ஷிப்! காலைல ஏழு மணிக்கே மேக்-அப் போட்டுக்கிட்டு, ஸ்டுடியோவுக்கு வந்துடுவாரு. அவரோட ஷாட்ஸ் எதுவும் இல்லைன்னாலும், மத்தவங்க டயலாக் என்ன, அதை அவங்க எப்படிப் பேசறாங்கன்னு கூர்மையா கவனிப்பாரு. அப்பத்தானே சரியான டைமிங்ல, தேவையான முகபாவம் காட்டி அசத்த முடியும்?

இது எனக்கு ஆரம்பத்துல புரியலை. டைரக்டர் கூப்பிட்டு அனுப்பின பிறகு போனால் போதுமே.. இவர் ஏன் ஷூட்டிங் ஸ்பாட்டுல வெயில்ல உட்கார்ந்து இருக்காருன்னு தோணும். ஆனா அவருடன் படங்கள் பண்ண ஆரம்பிச்சதும்தான், அவர் எந்த அளவுக்கு சினிமாவைத் தீவிரமா காதலிக்கிறார்னு புரிஞ்சுக்கிட்டேன்.

''யார் எப்படி நடிச்சா நமக்கென்ன? நாம்ப ஸ்க்ரீன்ல ஸ்கோர் பண்ணினா போதுமே!''னு இருக்க மாட்டார். ஒரு காட்சி சிறப்பா வரணும்னா என்னென்ன செய்யலாம்னு சக நடிக, நடிகையருக்கு ஆலோசனை தருவார். குறைகள் இருந்தால், சுட்டிக்காட்டத் தயங்க மாட்டார். அது பெரும்பாலும் ரொம்ப அருமையான திருத்தமா அமைஞ்சுடும்!



'பாசப்பிரிவினை' படத்துல, நானும் சிவாஜி சாரும் சேர்ந்து நடிச்சோம். 1959ல் வெளியான அந்தப் படம் மாபெரும் வெற்றிச் சித்திரமா அமைஞ்சுது. அந்தப் படத்துல எனக்கொரு சவாலான காட்சி இருந்தது. கர்ப்பிணிப் பெண்ணான நான், இடியும் மின்னலுமா இருக்குற மழையில பிரசவ வேதனையில துடிக்கிற காட்சி அது! வயல்காட்டுல, மரக்கிளையைப் பிடிச்சுக் கிட்டு நடிக்கணும். எனக்கு எப்படி நடிக் கிறதுன்னு தெரியலை. திணறிக்கிட்டு இருந்தப்போ, அங்கே சிவாஜி சார் வந்தார்.

''இதோ பாரம்மா.. இப்படி நடி!'' என்று இடுப்பில் சாட்டையடி பட்டால் துடித்துப் போவோமே அது போல முக மெல்லாம் வேதனை தெரிய, வியர்வைத் துளிக்க நடித்துக் காட்டினார். நானும் அதுபோலவே செய்தேன். அந்தக் காட்சி, தத்ரூபமாக அமைந்து விட்டது.''



''சிவாஜி சாருக்கு நல்ல காஸ்ட்யூம் சென்ஸ் உண்டு. டாக்டர், தொழிலதிபர் வேஷம் போட்டார்னா அப்படியே ஹேர் ஸ்டைல், பாடிலேங்வேஜ் மாறிவிடும். வாட்ச், ஷூ முதல் கொண்டு அக்கறை யோடு அணிவார். அதுவே பட்டிக்காட் டான் வேஷம் என்றால் கண் மை முதற் கொண்டு எல்லாமே மாறிவிடும்.

நான் அவரது டிரெஸ் சென்ஸைப் புகழ் வேன். மாறாக அவர் என்னுடை உடை அழகை சிலாகிப்பார்.''

உரையாடல் நடுவே சற்றுப் புகுந்தோம்.

''ஆமாம்... நிஜம்தான்! அந்தக் காலத்து நடிகையரிலேயே கச்சிதமான, நவீன ஜாக் கெட்டுகளை அணிந்தது நீங்கதான்! இதைப்பற்றி கவிஞர் வைரமுத்து கூட ஒருமுறை பாராட்டியிருந்தார். அதிலும் 'அன்பே வா!' படத்தில் நீங்கள் மிகவும் அழகாக இருந்ததாகவும், நவீனமாக ஆடை அணிந்ததாகவும் குறிப்பிட்டிருந் தார்'' என்று நாம் சொல்ல, புன்னகை யுடன் ஏற்றுக் கொண்டார்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்! கவிப்பேரரசுக்கு நன்றி. 'பாலும் பழமும்', 'தேனும் பாலும்', 'அன்பே வா' போன்ற பெயர்களில் புடைவைகள் வெளிவந்ததும், அவற்றை பெண்கள் விரும்பி அணிந்ததும் அந்த சீஸனில்தான்!'' என்றவர், இன்னொரு சுவையான தகவலைப் பகிர்ந்து கொண்டார்.

''ஏவி.எம். தயாரிப்பில் வெளிவந்த 'அன்பே வா' படத்தில் எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்தேன். அந்தப் படம் முழுக்க வித்தியாசமான உடைகளில் வரு வேன். 'கடல் கன்னி' போன்றதொரு உடை! உடல் முழுக்க ஒட்டி, கீழே நுனியில் மட்டும் ஃப்ரில் வைக்கப் பட்டு, நேர்த்தியாக வடிவமைக் கப்பட்டிருந்தது. 'நாடோடி, போக வேண்டும் ஓடோடி' பாடலுக்குப் பயன்படுத்தப்

"சரோஜாவுக்கு என்ன? வியாதி பிடிச்ச மாதிரி இருக்காளே!" ன்னு நிறைய பேர் எங்கம்மாவை கேட்கவே ஆரம்பிச்சுட்டாங்க.



* 'பாலும் பழமும்' படத்தில்...

பட்டது. எத்தனையோ வருஷங்களுக்கு முன் வந்த அந்த உடை இப்போதும் ஃபேஷன் ஷோக்களில் லேட்டஸ்ட் மாடலாக அணியப்படுகிறது. சிம்லாவில் எடுக்கப்பட்ட காட்சிகளில் நூதன சுரிதார் அணிந்திருப்பேன். இந்த உடைகளைத் தேர்வு செய்தவர் யார் தெரியுமா? திரு. ஏவி.மெய்யப்ப செட்டியார் அவர்கள்தான்!

'' 'அன்பே வா' படம் தயாரிப்பில் இருந்த நேரத்தில், ஒரு முறை, ஏவி.மெய்யப்ப செட்டியார் அவர்கள், பெங்களூர் சென்றிருக்கிறார். அங்கே 'வக்த்' என்றொரு ஹிந்திப் படம் ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் படத்தை ஏவி.எம். அவர்கள் பார்த்த போது, அதில் அந்தப் படத்தின் கதாநாயகி அணிந்திருந்த சுரிதார் போன்ற உடை அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. உடனே 'அன்பே வா' படத்தில் அந்த உடை இடம்பெற வேண்டும்னு முடிவு செஞ்சுட்டாரு. சென்னைக்குத் திரும்பியதும், முதல் வேலையா 'அன்பே வா' படத்தோட தையல்கலை நிபுணரை, பெங்களூருக்கு விமானத்துல அனுப்பி வெச்சாரு. 'வக்த்' படத்தைப் பார்த்து, அவர் வடிவமைத்த சல்வார் பாணி ஆடைகள் அதன் பின்பு தமிழகத்திலும் பிரபலமானது!

'உள்ளம் என்றொரு கோயிலிலே... உன்னை வைத்தேன் அன்பே வா!' என்று எம்.ஜி.ஆர். பாடிக் கொண்டே வர, நான் அழுது கொண்டே ஓடுவேன். அது அந்த சல்வார்தான்!

ஏவி.எம். ஸ்டுடியோவில் எம்.ஜி.ஆருக்கு ஒன்றும் எனக்கொன்றுமாக இரண்டு மேக்-அப் அறைகளை, தனித் தனியே ஒதுக்கித் தந்திருந்தனர். அது மட்டுமல்ல. 'ரஹ்மான்' என்றொரு ஏவி.எம். நிறுவன தையல் கலைஞர். அவர் என்னுடைய உடல் அளவுக்கு ஒரு பொம்மையைத் தயார் செய்து வைத்திருந்தார். முதலில் அதற்கு உடை தைத்து அணிவித்துப் பார்த்த பிறகு, அதே அளவில் எனக்குத் தைத்துத் தருவார். அதுதான் அப்படியொரு ஃபர்ஃபெக்ட் ஃபிட்டிங்.''

''சிவாஜி ஸார் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சு, வேறு ஏதோ கிளைக்குத் தாவி விட்டது இல்லையா?

''சிவாஜி ஸார், நடிப்புலக இமயம். குடும்ப உறவுகள்னா எப்படி ஒண்ணுக்குள்ள ஒண்ணு பிணைஞ்சிருக்கணும்னு அவரோட குடும்பத்தைப் பார்த்துத் தெரிஞ்சுக்கலாம். அப்படியொரு பாசம். ஆத்மார்த்தமான பந்தம். அந்தக் கூட்டுக் குடும்பத்தையே பெரிய ஆலமரமாக இருந்து தாங்கியது கமலா அம்மாதான்! கமலா அம்மா, சமீபத்துல தவறிட்டாங்க. அதுல எனக்கு பெரிய அதிர்ச்சி. ஏன்னா, சிவாஜி ஸாரும், கமலா அம்மாவும் என் மேல அளவு கடந்த பாசம் வெச்சிருந்தாங்க. தலைநிறைய பூவும், பெரிய பொட்டுமா, ''மாமா... மாமா!''னு சிவாஜி ஸாரை சுத்திச் சுத்தி வருவாங்க...

''டிசம்பர் 31ம் தேதி பிரபு தம்பியோட



★ 'அன்பே வா' படத்தில்... சல்வார் உடை!

பிறந்த நாள். ஒருமுறை, தற்செயலா குடும்பத்தோட பெங்களூர் வந்திருந்தாங்க. நான்கு காரில் முழு குடும்பமாக வந்திருந்தாங்க. எங்க வீட்டுல பிரபுவோட பிறந்த நாளைக் கொண்டாடினோம். இரண்டு கேக் வாங்கி வரச் சொல்லி, ஒரு கேக்கை சிவாஜி ஸார் - கமலாம்மா வெட்ட, இன்னொன்றை பிரபு தம்பி - புனிதா வெட்ட, உற்சாகமாகக் கொண்டாடினோம்.

''இந்த சந்தோஷம் எப்பவும் நிலைக்குமா?'' என்று மனசுக்குள் நினைச்சேன். அதைப் படித்து விட்டவர் போல, சிவாஜி சார், ''சரோஜா.. கவலைப்படாதே! நான் போயிட்டாலும், என் பிள்ளைங்க உன்னைக் கவனிச்சுப்பாங்க!'' என்றாரே பார்க்கலாம்!

'பாலும், பழமும்' படத்துல சிவாஜி சாருக்கு டாக்டர் வேஷம். நான் காச நோயாளியா நடிச்சேன். அப்பல்லாம் ஏது ஜிம்? நிஜமாவே தூங்காமல், சாப்பிடாமல் இருந்து, குச்சியாட்டம் ஆயிட்டேன்.

''சரோஜாவுக்கு என்ன? வியாதி பிடிச்ச மாதிரி இருக்காளே!''ன்னு நிறைய பேர் எங்கம்மாவை கேட்கவே ஆரம்பிச்சுட்டாங்க.

அந்தப் படம் வெளிவந்ததும் கிடைத்த அமோக வெற்றியைப் பற்றி நான் சொல்லணுமா என்ன?

ப்ரீமியர் ஷோ பார்த்து முடிச்சதும், ''நீ என்னை விட நல்லா நடிச்சுருக்கே சரோஜா!'' என்றார் சிவாஜி ஸார்! ஏதோ 'பாரத ரத்னா' அவார்டே வாங்கி விட்டது போன்ற சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போனேன்!

சிவாஜி ஸார் ரொம்பவே வெளிப்படையானவர். எல்லோரிடமும் கிண்டலும் கேலியுமாகப் பேசுவார். ஆனால் மனசுக்குள் தும்பைப் பூதான்!

என் கல்யாணத்திற்கு சிவாஜி ஸாரால் வர முடியவில்லை. ஏதோ மலையாளப் படத்தில், 'தச்சோளி அம்பு' என்று நினைக்கிறேன். நடித்த போது, அவருக்குக் கையில் அடிபட்டு, கட்டு போட்டிருந்தார்கள். அதனால் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹைதராபாத்தில் சந்தித்தோம். அப்போது, என் கணவருடன் தேனிலவு (கோயில் கோயிலாகப் போய்) கொண்டாடிக் கொண்டிருந்தேன்.

எங்களைப் பார்த்ததும் ஓடிவந்து, ''பூலக்கிமேன்! சரோஜாவை நான் கல்யாணம் பண்ணலாம்னு இருந்தேன். என் ஹீரோயினை நீ அடிச்சுட்டுப் போயிட்டியேய்யா!'' என்றார் கண்களைச் சிமிட்டி!

எனக்கோ மூச்சே நின்று விட்டது. என் கணவர் ஏதாவது தப்பாக நினைத்துக் கொண்டு விடுவாரோ என்று பயம் பிடித்துக் கொண்டது. நல்லவேளை! இருவரும் சிரித்துக் கொண்டே, ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டனர். அப்போது தான் எனக்கு 'அப்பாடா' என்றிருந்தது.

என் கணவரை, சிவாஜி ஸார், 'ஜென்டில்மேன்' என்றுதான் கூப்பிடுவார். ஒரு ஜென்டில்மேனும், நடிப்பின் சூப்பர் மேனும் சிரித்துப் பேச, அந்த மகிழ்ச்சி எனக்கும் தொற்றிக் கொண்டது.

(மலரும்)

சந்திப்பு : அனுராதா சேகர்

படங்கள் உதவி : ஜெயபாபு

வரம் தரும் ஆராதனை!



அறுபது வயது நிறைந்து அறுபத்தி ஒன்றாவது வயது பிறக்கும் நன்னாளில் ஒருவர் செய்யும் தெய்வ ஆராதனைதான் சஷ்டியப்தபூர்த்தி!

பக்தமார்கண்டேயர் சிவனைப் பிரார்த்தித்து தன்னுடைய வயதை என்றும் பதினாறு என்று வரம் வாங்கினார். அப்போது ஸ்ரீருத்ர பகவானைத் தியானித்து வரம் கேட்டார். எந்த ஒரு மானுடன் தன்னுடைய அறுபத்து ஒன்றாவது வயதில் சஷ்டியப்தபூர்த்தி செய்து கொள்கிறானோ அவனுக்கும் வரம் அருளும்படி வேண்டினார். ஆகையால், சஷ்டியப்தபூர்த்தியில் பரமேச்வரன், பக்தமார்கண்டேயர், ஹனுமான் முதலிய சப்த சிரஞ்சீவிகள், ஸப்தரிஷிகள், இந்திராதி, அஷ்டதிக் பாலகர்கள், ஆயுர்தேவதை, நந்த்ர தேவதை, அறுபது வருஷ தேவதை இவர்களை ஆராதனை செய்து, நாம் வரம் பெறுகிறோம்.

(எனது உறவினரின் சஷ்டியப்தபூர்த்தி பத்திரிகையில் விளக்கம் தரப்பட்டது).

- என். விஜயலெட்சுமி, திருக்கோவிலூர்.

✆ கறுப்பு வெள்ளையிலும் அசத்தலாக இருந்த அபிநய சரஸ்வதியின் அட்டைப்படம் மனதைக் கொள்ளையடித்தது!

பெங்களூரு-42,

ரமணி பாலசாமி.

✆ நேச்சுரல்ஸ் வீணா வழங்கியிருந்த மேக்கப் ரகசியங்கள் நடிகையான என்னுடைய மேக்கப் கலை குறித்த அறிவை 'அப்டேட்' செய்தன!

திருச்சி - 2,

உஷாராணி.



✆ எம்.ஜி.ஆர். - சரோஜா தேவி ஜோடிதான் பொருத்தமான நம்பர் ஒன் ஜோடி. இந்த ஜோடிக்கும் இருக்கும் அழகே தனி அழகு. ஒரு குடும்ப ஜோடி போலத்தான் இருக்கும். அருமையான தொடர்.

சென்னை - 83,

எம்.எஸ். மணியன்.

✆ ''ஆடை விஷயத்தில் மகளிருக்கு ஆதரவாகத்தான் இருப்பீங்க என்று எண்ணிய எனக்கு சாட்டை அடி தந்தது ஒரு வார்த்தை. ''ஆடை ஃபேஷன் சமாச்சாரமல்ல! அது கலாசார குறியீடு'' அப்பப்பா! என்ன அருமையான வரிகள்!

திருவான்மியூர்,

ஏ. ராமன்.

✆ ஃபீனிக்ஸ் பறவையாக உயிர்த்தெழுந்து, நம்பிக்கை நட்சத்திரங்களாகப் பல குழந்தைகளுக்கு வழிகாட்டும் சூடாமணி பரமேஸ்வரன் தம்பதியர் கட்டுரை நெகிழவைத்தது!

உடுமலைப்பேட்டை, எஸ். ஜானகி.

கொள்ளை அடித்த கறுப்பு

✆ 'சாஃப்ட்வேர் பெண்ணே' கவிதை இளம்பெண்களின் நிலைமையை வரிக்கு வரி மிக மிக தத்ரூபமாக வெளிப்படுத்தி உள்ளது. சி.எஸ். சித்ராவிற்கு பாராட்டு!

சென்னை - 102,

கிரிஜா நரசிம்மன்.

✆ 'தாய்மை என்ற கோணத்தில் உலகின் எல்லாப் பெண்களுமே அழகாகி விடுகிறார்கள்' என்ற சுகிசிவத்தின் வார்த்தைகளைப் படித்தபோது மங்கையாகப் பிறந்ததை எண்ணி மகிழ்ந்தேன்!

மும்பை, இந்திராணி தங்கவேல்.

✆ சீரழிந்து வரும் நாகரிகத்தை இடித்துக் காட்டும் ஒரே ஒரு பத்திரிகை மங்கையர் மலர்தான். வியாபார யுக்தியைப் பின்பற்றாமல் நேர்மையுடன் 'ஒரு வார்த்தை'யில் விமர்சித்த உங்களுக்கு ஆண் வாசகர்கள் சார்பில் ஆயிரம் கோடி வணக்கங்கள்.

சென்னை - 102,

டி. அருணாசலம்.

✆ 'சக்தி விசேஷம்' தகவலில் காரைக்கால் அருகே உள்ள திருமலைராயன் பட்டினம் என்பதுதான் சரியான தகவல்.

திண்டிவனம், ஜி. ராஜேஸ்வரி.

© குட்டிப்புக்கைப் பார்த்ததும் 'மெஹந்தி எத்தனை மெஹந்தியடி' என்று பாடத் தோன்றியது. இக்கால இளைஞர்களின் திறமைக்குக் களம் அமைத்துக் கொடுத்த மங்கையர் மலருக்கும் பாராட்டுகள்.
பெங்களூரு, எஸ். ராஜலட்சுமி.

© 'தங்கள் மனைவியிடம் எப்படி நடந்து கொள்கிறார்கள்' என்ற தமாஷ் கற்பனை பலே பேஷ்!
கோவை-35, வெ. ஜனார்த்தனய்யர்.

© பிறந்த நாள் என்றால் மத்தவங்கதான் பரிசளிப்பாங்க. ஆனால் எங்கள் மங்கையர் மலரோ தன் பிறந்த நாளுக்கு அறிவுப் போட்டி, ஹைகூ போட்டி, ஜூஸ் 64 போட்டி என வைத்து பரிசுக்கு மேல் பரிசாகக் கொடுத்து அசத்திவிட்டது.
சூளைமேடு,
கே.எஸ். பொன்னம்மாள்.

© 'இமை மூடா சுமைதாங்கி' தொகுப்பு படித்து இமைகள் நனைந்து பொங்கின!

வெள்ளை!

திசையன்விளை,
அ. வனிதா அம்பிகைராமன்.

© எஸ். சந்திரமௌளியின் 'இமை மூடா சுமைதாங்கி' கட்டுரை 100/100 உண்மை. ஒருபுறம் பெண்கள் முன்னேற்றம் கணிசமாக உயர்ந்தாலும், மறுபுறம் செக்கு மாடுகளாய் காலந்தள்ளுகிறார்களே என நெஞ்சைப் பிசைகிறது.
சென்னை - 53, வசுமதி கண்ணன்.

© முருகனைப் பற்றிய பழமொழிகள் பழனி பஞ்சாமிர்தம் போல் இனித்தன.
பக்கமடை, எம். லெட்சுமி.

அழகான உடல்வாகு அமைய வேண்டுமா?





அனுபமாவுக்கு வயது சுமார் 30 இருக்கலாம். ஆனால், எடை சுமார் 90 கிலோ. வயதான பெற்றோர். ஏழெட்டு வருடங்களாகவே பெண்ணுக்கு வரன் தேடித் தேடி அலுத்துப் போய்விட்டார்கள். திருமணம் நடக்கிற வழியாக இல்லை. முகம் அழகாக இருந்தாலும், உடல் பருமன் தடையாக இருந்தது!

வாழ்க்கையே வெறுத்துப் போன நிலையில்தான் ரிஷிதா அவளுக்கு அறிமுகமானாள். ரிஷிதாவின் க்ளினிக்கில் வந்து சிகிச்சை எடுத்துக் கொள்ளத் தொடங்கினாள். ரிஷிதா சிகிச்சையோடு, அவளுக்கு நம்பிக்கை பிறக்கும் வகையில் பேசி ஊக்குவித்தாள். மூன்று - நான்கு சந்திப்புகளிலேயே அனுபமாவிடம் மாற்றம் தெரிந்தது. 35 கிலோ குறைந்திருந்தாள்! அனுபமாவுக்குத் திருமணம் ஆயிற்று. ரிஷிதா வரவேற்பு நிகழ்ச்சிக்குப் போன போது, அவருக்கு ராஜ உபசாரம்.

ரமாவுக்கும் சுமார் 30 வயதுதான். திருமணம் ஆகிவிட்டது. ஆனால் குழந்தை இல்லை. உடல் எடை 98 கிலோ என்பதால் மிகவும் அசௌகரியமாக இருந்தது. மனசு முழுக்க எதிர்மறை எண்ணங்கள். நமக்கு எங்கே உடம்பு சரியாகப் போகிறது?' என்ற மன அழுத்

மனச்சோர்வு அதிகமானது.

ரிஷிதாவின் க்ளினிக் பற்றிக் கேள்விப்பட்டு, ரமா வந்தபோது, அவள் மனத்தில் உள்ள 'நெகடிவ்' எண்ணங்களை முதலில் விரட்டி, பல வெற்றிக் கதைகளைச் சொல்லி, அவளுக்கு நம்பிக்கை ஊட்டி, எடை குறைப்பு வகுப்புகளில் அவளை அமரவைத்தபிறகு, 25 கிலோ குறைந்திருந்தாள் ரமா. வெளியே போகவே தயங்கிக் கொண்டிருந்த ரமாவுக்கு, விடுதலை!

டாக்டர் நிரஞ்சனாவின் கேஸ் வேறு மாதிரி. வயது 60 ப்ளஸ். உடல் பருமன் என்பதைவிட, வயிற்றுப் பகுதி பெரிதாக இருந்தது. அசௌகரியமாக மட்டுமல்ல, அவஸ்தையாகவும் இருந்தது. 'பெல்லி ரிடக்ஷன்' செய்துகொள்ள ரிஷிதாவிடம் வந்தார் டாக்டர் நிரஞ்சனா. வயிறுப் பகுதி 'சிக்' என்றாகிவிட்டது. கூடவே 'ஃபேஸ் லிஃப்ட்டிங்' என்ற முக அழகுச் சிகிச்சையும் செய்துகொண்டார்.

இந்தி பிரசார சபா தெரு, எலிகன்ட் அபார்ட்மென்டில் 'ஸ்லிம் அண்ட் கேர்' க்ளினிக்கில், எடைகுறைப்பு முறைகளில் வெற்றி கண்டிருக்கும் ரிஷிதா, ''பட்டினியாக இருந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்!'' என்கிறார்.

ஒவ்வொரு பெண்மணிக்கும் ஒவ்வொரு வகை டயட் குறித்துக் கொடுக்கிறார். ''இங்கேயே டயட்டீஷியன்கள் இருக்கிறார்கள்!'' என்கிறார் ரிஷிதா. வேலைக்குத் தகுந்தபடி உணவு முறையும் மாறுபடுகிறதல்லவா?

வாக்கிங், ஜாகிங் எதுவும் ரிஷிதாவின் சிகிச்சையில் கிடையாது. ஆனால், தரப்படும் சிகிச்சையில் பக்கவிளைவுகளும் கிடையாது என்கிறார்.

பரம்பரையாகவே உடல் பருமனாக இருப்பவர்களையும் மாற்றிவிட முடியுமாம். முகச் சுருக்கத்தை எடுத்து, இரட்டைத் தாடை (டபிள் சின்) இருந்தால் சரிப்படுத்த முடியுமாம். இவை முக அழகைக் கூட்டும். ''அப்போதே தானாக சுயநம்பிக்கையும் வந்து விடும்!'' என்கிறார் ரிஷிதா.

ரிஷிதாவிடம் நவீன கருவிகள் எல்லாம் இருக்கின்றன. ஃபிகர் கரெக்ஷன் செய்ய யு.கே.யிலிருந்து வந்த கருவி; வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 'வாக்கர்', டேப்பிங், டோனிங் என்று எல்லா சிகிச்சைகளுக்கும், இறக்குமதி செய்யப் பட்ட கருவிகள். இதனால் உடலின் எல்லாப் பாகங்களையும் அழகாகக் குறைக்க முடிகிறது.

''சக்திவாய்ந்த லேசர் கதிர் வீச்சோ, ஷாக் போன்றவையோ நான் உபயோகிப்பதில்லை. அதனாலேயே பக்கவிளைவுகள் எதுவும் என் சிகிச்சையில் கிடையாது!'' என்கிறார் ரிஷிதா.

வாசகர்களே! அழகான உடல்வாகு அமைய தொடர்பு கொள்ளுங்கள்:

ரிஷிதா - 94444 13224

சந்திப்பு : சாருகேசி



குழந்தையின் தலையணை உறையில் சிறிது யூடிகோலான் அல்லது இரண்டு, மூன்று சொட்டு லேவண்டர் ஆயிலைத் தடவினால், அதன் வாசனையில் சாந்தப்படுத்தப்பட்டு உடனே உறங்கி விடுவார்கள். தூக்கம் வராமல் தவிக்கும் பெரியவர்களும் இந்த முறையை பின்பற்றலாம்.

- நஸிஹா ஹஃபீஸ்,
கீழக்கரை.



படம் என்னாச்சு? பப்படமாச்சு!

டைரக்டர் டப்பாசெட்டியைத் தெரியுமா? அவர் எடுத்த படமெல்லாம் டப்பாவுக்குள் தஞ்சம். அது குறித்த கேள்விகளுக்கு அவர் சொல்லும் பதில்தான் சூப்பர்... பார்க்கலாமா?

'காட்டில் ஒரு மாடு' என்ற படம் என்னாச்சு?

படுத்துடுச்சு.

'அண்ணா சாலையில் அனாதைப் பிணம்' எப்படி?

ஒரே நாளில் தூக்கிட்டாங்க.

'பேதை உள்ளத்தில் பெரும்(ங்)காயம்?'

டப்பாவுக்குள்ளே போயிடுச்சு.

'வீதியில் ஒரு வியாபாரம்' என்ன ஆச்சு?

'போணியாகலை!'

'நடிகை வளர்த்த நாய்' எப்படி போச்சு?

கையைக் கடிச்சுடுச்சு.

'தாத்தா நான் பாஸாயிட் டேன்?'

ஃபெயிலியர்!

'கல்லறையில் சில்லரை' நல்ல போச்சா?

ம்...ஹூம்... ஊத்தி மூடிட்டாங்க.

'பெண்ணைப் பிடித்த பேய்' ஓடுச்சா?

எங்கே... நாங்கதான் அதை ஓட்டு ஓட்டுனு ஓட்டினோம்.

'அழகியுடன் ஆயில்பாத்' எப்படி?

தலையில் துண்டுதான்!

'கண்ணோடு கலந்த கண்?'

பார்க்கறதுக்கு ஆளே கிடையாது!

- மாலதி ரகோத்தமன், விருகம்பாக்கம்.



வயதானவர்கள் எஸ்கலேட்டர்களில் ஏறி நிற்பதற்கு வசதியாக ஒருசில வினாடிகள் நின்று இயங்கும்படியாக ஆட்டோமெடிக் சிக்னல் வசதியுடன் இயங்கும் அமைப்பை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும்.

- ஏ. கலா, சென்னை - 82.

You can

Win 75% Scholarship

on total course fee

PROVE YOUR INTELLIGENCE & WIN SCHOLARSHIP

SAT 2008 | SCHOLARSHIP APTITUDE TEST | 15

SAT 2008 — **SCHOLARSHIP APTITUDE TEST** — **FOR DESERVING STUDENTS**

அறிவுத்திறனை நிரூபித்து வெல்லுங்கள் !



SAT is conducted only once in a year Don't miss IT.

Exam Date

APRIL 6 SUNDAY

இத்தேர்வுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது!

Collect FREE admit card from your nearest CSC centre

ABOUT THE SCHOLARSHIP APTITUDE TEST

- No Entry Fee for SAT.
- SAT question paper comprises of 25 objectives type questions from Science, General Knowledge, Maths & Geography.
- SAT question paper will be in English / Tamil.
- No age bar to participate in this test
- Basic Qualification must be 9th Std.

பயிற்சிக் கட்டணத்தை தவணைமுறையிலும் செலுத்தலாம்

CSC

COMPUTER SOFTWARE COLLEGE

An ISO 9001 : 2000 Certified Institution

For more details contact nearest CSC centre or Call:

9941007206 / 9940496325 / 9444953620

கொடுமுடி, கொங்கு நாட்டின் சிவஸ் தலம். அதில் தேரோடும் வீதியில் ஈசான திசையில் மேற்கு நோக்கிய வண்ண மாக இருமுக கணபதி வேண்டிய வரமருளும் விநாயகராக அருள்பாலிக் கிறார். இவரை வழிபட, ராகு கேது தோஷங்கள் நீங்கி திருமணம், புத்ரபாக் யம் ஏற்படுகின்றது என்பது பக்தர்களின் நம்பிக்கை.

- கே.சி. சௌந்திரம் தண்டபாணி
கொடுமுடி.

நீராட்டி வழிபட்டமையால், இறைவன் கமண்டலேஸ் வரர் எனப் போற்றப்பட்டார்.

இத்தலத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட மற்றொரு ஆலயம் ககன் மோகன கேசவ ஸ்வாமி ஆலயம். சுமார் 5 அடி உயரமும் 4 கரங்களும் கொண்ட பெருமாள் சிலை மிகவும் வனப்புடையது. இதன் அருகில் தசாவதார, நாரத, ரம்பா, ஊர்வசி ஆகி யோரின் சிலைகளும் இடம்பெற்றுள்ளன. ஸ்வயம்பு மூர்த்தியான இச்சிலையின் பாதத்திலிருந்து கங்கை நதி (கோதாவரி) பெருக்கெடுத்து ஓடுகிறது. பாற்கடலி லிருந்து பெறப்பட்ட அமிர்தத்தை தேவ அசுரர்களுக் கிடையே பங்கி, திருமால் ககன் மோகினி வடிவம் எடுத்தது, இத்தலத்தில்தான் என்று கூறப்படுகிறது.

- விஜயலக்ஷ்மி சுப்ரமணியம், கோயமுத்தூர்.

பொன்னேரி அகத்தீசுவரர் கோயிலில் உள்திருச் சுற்றை ஒட்டிய கருவறைச் சுவரில் தெற்கு, மேற்கு

முருகனுக்குத்

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கிழக்கு கோதாவரி மாவட்டம் 'ரையாலி' சிவா லயத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் 'உமா கமண்ட லேஸ்வர்' என்று அழைக் கப்படுகிறார். தேவி பார் வதியிடமிருந்து பிரிந்து இத்தலத்தில் சிவபெரு மான் ஆலயம் கொண்டதாக ஐதிகம். சிவலிங்கத்தை தனது கமண்டலத்திலுள்ள நீரைக்கொண்டு பிரம்மா



கோட்டங்களுக்கு இடையே கலப்பையையே முதன்மை யாகச் செதுக்கியுள்ளனர். பொன் ஏர் செய்து, உழுத ஊர், ஆதலால் 'பொன் னேரி' என அழைக்கப் பெற்றது. உழவுத் தொழி லைச் சிறப்பிக்கக் கோயில் சுவரில் கலப் பையைச் செதுக்கினர்.

- எஸ். மேகலா,
கௌரிவாக்கம்.



பழனி கோயில் பள்ளியறையில் முருகப் பெருமானின் திருப்பாதங்கள் தொட்டில் போன்ற ஊஞ்சலில் இருக்கப் பெறும். குழந்தைகளைத் தூங்கப் பண்ணுவதுபோல் முருகனையும் தொட்டிலில் கிடத்துவதாக நம்பிக்கை. அதன்பின் ஓதுவார் தாலாட்டுப் பாட பள்ளியறைக் கதவுகள் மூடப்படும்.

- நெ. இராமன், பொழிச்சலூர்.

✱ ஸ்ரீமல்லிகார்ஜுன ஸ்வாமி



தஞ்சாவூர் கும்பகோணம் சாலையில், வலங்கைமான் அருகில் திருநல்லூர் உள்ளது. கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக் கோயில். அப்பருக்கு, இறைவன் திருவடி சூட்டியதால், இன்றளவும் இக்கோயிலில் பக்தர்களுக்கு சிவபெருமானுடைய திருவடிகள் உள்ள சடாரி வைக்கப்படுகிறது. இந்தக் கோயிலைத் தவிர, வேறு எந்த சிவன் கோயிலிலும் இந்தப் பழக்கம் கிடையாது.

தாலாட்டு!



✱ இருமுக கணபதி


இறைவன் பெயர் பஞ்சவர்ணேஸ்வரர், இறைவி பெயர் கிரி சுந்தரி. இங்குள்ள இறைவனின் சிவலிங்கத் திருமேனி ஒருநாளில் ஆறு நாழிகைக்கு ஒருமுறை - ஒருநாளில், ஐந்து முறை நிறம் மாறுகிறது. இதனால்தான் இறைவனுக்கு பஞ்சவர்ணேஸ்வரர் என்று பெயர். நான் சென்று தரிசித்த போது சிவலிங்கம் பொன் நிறமாகக் காட்சி தந்தது. மூலவர் சுயம்புமூர்த்தி. பிருங்கிமுனிவர் வண்டு வடிவமாய் வழிபட்டதால், இம்மூலவர் மீது துளைகள் உள்ளன. மிகப் பழமையான இவ்வாலயத்தை ஒவ்வொருவரும் தரிசிக்க வேண்டும்.

- பி. ராஜகுமாரி, சிதம்பரம்.

மதுரை டி. கல்லுப்பட்டியிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பேரையூர். இங்கு வட்ட வடிவமாகவும், மொட்டையாகவும் உள்ள மேலப்பரங்கிரி என்னும் பாறையில் அமைந்துள்ளது ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸ்வாமி சன்னிதி. சிறிய அளவில் அழகாக விளங்கும் லிங்கஸ்வரூபியை, அர்ஜுனன், சகாதேவன் ஆகியோர் வந்து வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால்தான் இந்த சிவபெருமான் மல்லிகார்ஜுன ஸ்வாமி என்று அழைக்கப்படுகிறார். இங்கு அற்புத சக்திவாய்ந்த மூலிகைச் செடிகளும் வற்றாத சுனையும் உள்ளன. கணக்கில் 'வீக்'கானவர்களைக் கரையேற்றுகிறார் இந்த சிவபெருமான். கம்ப்யூட்டர் படிப்பில் உயர்ந்த நிலைக்கு வரவும் இந்த இறைவனை வணங்கி வரலாம்.

- கி. பரணீதரன், சென்னை - 34.

அடேயப்பா!



பழைய குப்பைகளை கிளறிக் கொண்டு இருக்கும் போது 1992ம் வருடத்திய மளிகை லிஸ்ட் கிடைத்தது. பதினைந்து வருடங்களிலே விலைவாசி எவ்வளவு உயர்ந்து விட்டது. அதே போல வருமானமும் உயர்ந்து விட்டிருக்கிறது என்பதும் உண்மைதானே?

		6/92	12/07
பொன்னி பச்சை அரிசி	1 கிலோ	11.00	22.00
இட்லி அரிசி	1 கிலோ	7.00	14.00
கடலைப் பருப்பு	1 கிலோ	12.00	40.00
பொட்டுக்கடலை	1 கிலோ	14.00	44.00
கடலை மாவு	1 கிலோ	12.00	40.00
கோதுமை மாவு	1 கிலோ	9.00	25.00
கோதுமை ரவை	1 கிலோ	12.00	40.00
வெள்ளை ரவை	1 கிலோ	8.00	26.00
கடலை எண்ணெய்	1 லிட்டர்	30.00	60.00
நல்லெண்ணெய்	1 லிட்டர்	36.00	65.00
மிளகு	1 கிலோ	48.00	190.00
சீரகம்	1 கிலோ	110.00	170.00
வெல்லம்	1 கிலோ	6.00	15.00
அஸ்கா சர்க்கரை	1 கிலோ	9.50	16.00
சர்ஃப்	1 கிலோ	40.00	124.00
ஹார்லிக்ஸ்	1 பாட்டில்	38.50	110.00

- கே. சுப்புலக்ஷ்மி, பவானி.

ஆஹா 50!



புடைவைகளின் தலைப்புப் பகுதியில் ஜாக்கெட் பிட்டை வெட்டி எடுக்குமாறு தயாரிக்கிறார்கள். ஜாக்கெட் பிட்டை தனியாக வெட்டி எடுத்தால் சுற்றளவு போதாமல் ஆகிவிடுகிறது. 'அட்டாச்ட்' பிளவுஸை உட்பக்கமாக வைத்தால் தேவையானால் வெட்டி எடுக்கலாம், இல்லையென்றால் ஓரம் மட்டும் அடித்து பருமனாக இருப்பவர்கள் உடுத்திக் கொள்ள சௌகரியமாக இருக்கும். புடைவை தயாரிப்பாளர்கள் கவனிப்பார்களா?

- என். விஜயலெட்சுமி, தபோவனம்.

பொட்டில் அடித்தாற் போல்...

இனி உங்களைப் பற்றியும் உங்கள் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வையும் துல்லியமாக அறிந்து கொள்ள இதோ ஓர் உலகத்தரம் வாய்ந்த எளிய வழி...

நமது சரியான **பிறந்த தேதி** மற்றும் **பெயரை** மட்டும் கொடுத்தால் போதும், மிகத் துல்லியமாக **நாம் எதும் கூறாமலேயே பொட்டில் அடித்தாற் போல்** நம்மைப் பற்றியும் நாம் சந்தித்து வரும் பிரச்சனைகள் பற்றியும் AAN* விஞ்ஞான முறைப்படி நேரில் பார்த்தது போல் கூறி, நிரந்தரத் தீர்வு காண எளிய மற்றும் சிறந்த பரிகார முறைகளைப் பற்றியும், ஆலோசனை வழங்கி வருகிறார் மாமேதை Master of AAN* திரு. **'பக்ஷி' தி. வேணுகோபாலன்** அவர்கள். இவர் இந்தியாவிலேயே முதலாவதாக AAN* முறைப்படி பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே சக்தியேற்றி, செறிவூட்டப்பட்ட (Energised & Enriched) உயர்தர (imported) இரத்தினக் கற்களை வழங்கி அவர்களது வாழ்வில் அதிசயிக்கத்தக்க நிகழ்வுகளை நிகழ்த்தியும் வருகிறார். 15 வருடங்களுக்கும் மேலாக அனுபவம் மிக்க இவர் புதுதில்லியில் உள்ள Institute of Numerology (R&D)யில் சீனியர் மெம்பராகவும் உள்ளார்.

இந்த அற்புதமான கலையைப் பரிசோதிக்க விரும்பும் ஜோதிடர்கள் மற்றும் எண் கணித நிபுணர்கள் மறைமுகமாக அல்லாமல் நேரிடையாவே முன்பதிவு செய்து வரலாம் என்று சவால் விடுகிறார் திரு. **'பக்ஷி' தி. வேணுகோபாலன்.** மேலும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தையும் அமைப்பையும் உருவாக்கி எந்தத் தொழில், என்ன வியாபாரம் செய்தால், குறுகிய காலத்தில் பெரு வெற்றி பெறலாம் என்பதையும், அரசியலில் வெற்றி, **இராகு - கேது தோஷங்களால் ஏற்படும் திருமணத் தடைகளை ஏற்ற பரிகாரங்கள் மூலம் துரித நிவர்த்தி செய்வது,** குழந்தை பிறப்பு, வெளிநாட்டில் வேலை வாய்ப்பு, உங்களைச் சார்ந்த ஆண் - பெண்ணின் ஒழுக்கம் போன்ற பல்வேறு சந்தேகங்களுக்கும், அத்துடன் ஒவ்வொரு இரத்தின மணியும் எவ்விதமான Energies (either Projective + or Receptive - Measured in Electron Volts- 'eV') வெளியிடுகிறது (அ) உள்ளிழுக்கிறது என்பதையும், மேலும் இவற்றை நாம் எப்படி ஒருங்கிணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் (in order to regain the equilibrium position in our body Electro - Magnetic field - AURA) இவரது AAN* முறையில் மட்டுமே மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

(எ-கா) ஒரு செறிவூட்டப்பட்ட சுத்தமான வைரம் 5.5 'eV' Projective Wave Energy வெளியிடுகிறது.

Courtesy: Gemmological Association of Great Britain.

இவரது தொடர்பு முகவரி:(பாண்டிச்சேரி) **'AAN* - ADVANCED AURIC NUMEROLOGY'**

'பக்ஷி' தி. வேணுகோபாலன் Master of AAN* & Aura Viewer
(Senior Member, Institute of Numerology (R&D) Nangal Raya, New Delhi - 110 004)
ஆலோசனைக்காக : 6. 'பக்ஷி பவனம்' வ.உ.சி வீதி, காமராஜ் நகர், (வேல். சொக்கநாதன் திருமண மண்டபம் மற்றும் மதர் தெரசா பள்ளி அருகில்)
பாண்டிச்சேரி- 605 011. Phone: 0413 - 2211667 Cell: 94425 - 66227, 98423 - 66855
Consulting Hours : 9.00 a.m to 1.00 p.m & 3.00 p.m. to 8.00 p.m


Do you know what is NAME?

N = Natal's
A = Abstract
M = Maintained by
E = Eternal

Space Sponsored by Institute of Numerology (R&D) New Delhi


Visit our website at : www.pakszhi.com E-mail : pakszhi@gmail.com

---



Estd.:1955 ஸ்ரீ:

Founder : K.E. NAMPILLAI. Organisers : N. KULASEKARAN, N. GANGADHARAN



28.3.08	3 நாட்கள் அஹோபிலம் நவநரசிம்மர் தரிசனம் (2 x 2) வேன் மூலம் திருச்சியிலிருந்து புறப்படுகிறது. தங்குமிடம் போஜனம் உள்பட நபருக்கு ரூ.2575/-
20.3.08	4 நாட்கள் சோழ நாட்டு திவ்யதேசங்கள் 35 (2 x 2) வேன் மூலம் திருச்சியிலிருந்து புறப்படுகிறது. தங்குமிடம் போஜனம் உள்பட நபருக்கு ரூ.1745/-
09.5.08	20 நாட்கள் கோடைக்கால யாத்திரை திருச்சியிலிருந்து தனி 3 டயர் கோச் மூலம் புறப்படுகிறது. பூரி, புவனேஸ்வர், கோனார்க், கயா, காசி, ஹரித்வார், அலகாபாத், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், டில்லி, ஆக்ரா, மதுரா, திருச்சி. நபருக்கு தங்குமிடம் போஜனம் உள்பட கட்டணம் நபருக்கு ரூ.12575/- வயதானவர்களுக்கு வசதிகள் நிறைந்தது. சௌகர்யமான பர்த்துகளில் பயணம் செய்ய உடன் முன்பதிவு செய்து கொள்ளவேண்டும்.
07.06.08	12 நாட்கள் பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்யா, சென்னை. (3 டயரில் ரிசர்வேஷன் முறை) தங்குமிடம் போஜனம் உள்பட நபருக்கு கட்டணம் ரூ.6975/-
12.06.08	7 நாட்கள் திருச்சியிலிருந்து இரயில் மூலம் மந்த்ராலயம், அஹோபிலம், ஸ்ரீசைலம், மகாநந்தி, நவபிருந்தாவனம், பிக்ஷாலயா, பஞ்சமுகி, தங்குமிடம் போஜனம் நபருக்கு கட்டணம் ரூ.4250/
குறிப்பு	குழுவினர்களாக வரும் அன்பர்களுக்கு அவர்கள் விரும்பும் இடங்களுக்கும், விரும்பும் தேதிகளில் முதல் தரமான உணவுடன் யாத்திரை, சுற்றுலா நடத்தி கொடுக்கப்படும்.

ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்
(Regd)

No.34-A/2, அக்ரஹார வீதி, மேலச்சிந்தாமணி, (அண்ணாசிலை-சிதம்பரம் மஹால் சமீபம்), திருச்சி-2.

[illegible] Cell : 94431 77022, 94435 59594

குலாபி

போன இதழ்ல வந்திருந்த "ஸ்வீட் ஹார்ட் பிளவுஸ்" பிடிச்சதா? ட்ரை பண்ணி, பாராட்டு வாங்கியிருப்பீங்களே...! சரி, இப்ப 'குர்தீஸ்' பக்கம் போகலாமா?

சின்ன வயசு, பெரிய வயசு, குள்ளம், உயரம், கறுப்பு சிவப்பு... பாரபட்சமே இல்லாமல், எல்லோருக்குமே ரொம்பப் பொருத்தமா இருக்கிற உடைதான் இந்த குர்தீஸ்... ரொம்ப அழகான, எலிகண்ட் ஆன, கௌரவமான டிரஸ்...

என்ன... கொஞ்சம் பொருத்தமான டிசைன், துணி, தைக்கிற பேட்டர்ன் இதைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டு, நமக்குப் பொருந்தற மாதிரி குர்தீஸ் தைச்சுப் போட்டோம்னா, பார்க்கறவங்க நிச்சயமா 'வாவ்' சொல்வாங்க...!

பொதுவா குர்தீஸ் கொஞ்சம் குள்ளமா இருக்கறவங்களை உயரமாக்கிக் காட்டும்னு ஃபேஷன் உலகத்துல சொல்லிக்கிறாங்க...

ஒல்லியா இருக்கீங்களா... மார்பளவும் கொஞ்சம் குறைச்சல்னு ஃபீல் பண்றீங்களா... இதோ இந்த மாதிரி குர்தீஸ் ட்ரை பண்ணிப் பாருங்க...

✸ அர்ச்சனா



குர்தீஸ் 4









'மிஸ் அர்ச்சனா' அணிந்திருக்கிற டிசைனைப் பார்த்தீங்களா? கழுத்துப் பகுதியை அகலமா வைக்கிறப்போ, உங்க 'ஒல்லி' மறைஞ்சு எடுப்பாகக் காட்டும். 'யோக்'லே (அதாவது கழுத்திலிருந்து மார்பு வரை உள்ள பகுதி) பேட்ச் வேலை, அப்ளிக் வேலை, பெரிய பெரிய டிசைன்கள் எல்லாம் தைரியமா வைக்கலாம். அடுக்கடுக்கா (gathering) வைத்து மார்புப் பகுதியில தைக்கலாம். இரண்டு அடுக்கா, (panel) ஒன்றை ஒன்று ஒவர்லாப் செய்கிற மாதிரி முன்பக்கம் வைத்துத் தையுங்க.

அதில் கீழே இருக்கிற துணி கொஞ்சம் திக்கா, பெரிய டிசைன் அல்லது பிரிண்ட் செய்ததா இருக்கட்டும். மேலே உள்ள அடுக்கு மெல்லிசு துணியில,






வெட்டத் தேவையான மாதிரி அளவு



டிரான்ஸ்பரண்ட்டா காண்ட்ராஸ்ட் கலர்ல கூட இருக்கலாம். இந்த மாதிரி இரட்டை அடுக்கா முன்பக்கம் வைத்து குர்தீஸ் தைச்சுப் பாருங்க... ஒரேயடியா 'வாவ்'தான்!

இல்லே, முன்பக்கம் முழுசும் நீளவாக்கில மூணு பாகமா பிரிச்சு, நீளமா நடுவுல ஒரு டிசைனும் கலரும் வருகிற மாதிரி, ரெண்டு பக்கமும் வேற கலரும் டிசைனும் வருகிற மாதிரியும் செய்யலாம்.

இன்னொரு மாதிரி...

குறுக்கு வாக்கில பிரிச்சு, மேல் பக்கம் படுக்கை நிலை கோடுகள் வருகிற மாதிரியும் கீழ்ப்பக்கம் செங்குத்தாய்க் கோடுகள் வருகிற மாதிரியும் தைத்தாலும், உடம்பு கொஞ்சம் பூசினாற்போல, காட்டும். இல்லே, மேல்பக்கம் பெரிய டிசைன் பிரிண்டட் துணியும் கீழ்ப்பக்கம் ப்ளெயின் துணியும் வைத்து குர்தீஸ் தைக்கலாம்...

குட்டைக் கை, ஒல்லி ஆளுங்களுக்கு பஃப் (puff) கை கூட எடுப்பா இருக்கும். ஃப்ரில், ஏற்ற இறக்கமா இருக்கிற 'அடுக்குகள்' இதெல்லாம் உங்க கைப்பகுதிக்கு கொள்ளை அழகாய் இருக்கும்.


''நான் கொஞ்சம் குள்ளம், குண்டு...''ன்னு நினைக்கிறீங்களா... ட்ரான்ஸ்பரண்ட் துணியில் நீளக்கை வைத்த குர்தீஸ் அழகாய்ப் பொருந்தும். மெல்லிய சம்கி அல்லது த்ரெட்வர்க் செய்தால் உடல் பருமனைக் குறைத்துக் காட்டும்.

யாராயிருந்தாலும் ஜீன்ஸ் மேல குர்தி போடறப்ப, தொடை வரை மூடுகிறாற்போல போட்டால்தான், அழகு! டார்க் கலர் குர்தீஸுக்கு லைட் கலர் ஜீன்ஸும், லைட் கலர் குர்தீஸுக்கு டார்க் கலர் பாட்டமும் அணிவதுதான் லேட்டஸ்ட் ஃபேஷன்!

நன்றி : இன்ஸ்டிடியூட் ஆஃப் டிஸைன், சென்னை -34.


- பத்மினி பட்டாபிராமன்

படங்கள் : ஸ்ரீஹரி



ASTROLOGY
Splendor
beaded together
NARAYANA™
pearls & gems
MAIN SHOWROOMS
KASI ARCADE
Ph: 2815 5624 / 3457
127, PONDY BAZAAR
Adjacent to Andhra Bank
Ph: 4207 1987
FATHIMA PLAZA
98, Pondy Bazaar
Ph: 2815 3660
ADYAR
57, L.B.Road
Ph: 2446 2592
VADAPALANI
Raahat Plaza
Ph: 2365 0161
COIMBATORE
Singapore Plaza
Ph: 223 0758

19 புள்ளி - 10ல் நிறுத்தவும் (சந்துப் புள்ளி)
- எஸ். லலிதா, நங்கநல்லூர்.



15 புள்ளி 2 வரிசை வைக்கவும். 15-9 இடைப்புள்ளி
- ஜே.சி. ஜெரினாகாந்த், ஆலந்தூர்.



15 - 8 (இடைப்புள்ளி)
- எஸ். பத்மாவதி, தப்பையன், பாபநாசம்.




வாசல் அழகு


13 -1 (நேர்ப் புள்ளி)
- எம். அமுதா தேவி, பட்டுக்கோட்டை.



வண்ணக் கோலங்கள்



- பி. ஜெயந்தி
திருமால், சேலம்.



- ஜி.வி. சாந்தி,
பவானி.





13 - 7 (இடைப்புள்ளி)
- பி. கலாவதி,
அரக்கோணம்.



பெண்!

அனார்கலி, தஞ்சாவூர்

சுடுகாட்டில் பிணம்
எரிவதைப் பார்க்க -
நடுஇரவில் நட்சத்திரங்களை
நண்பர்களுடன் எண்ண-

பாலத்தின் மேலிருந்து ஆற்றில்
தலைகுப்புற குதிக்க -
மரத்தின் உச்சியிலேறி
புளியம்பழம் உலுக்க -

ஒத்தையடிப் பாதையில்
விசிலடித்து நடந்து போக-
கடற்கரை மணலில்
மல்லாந்து கிடக்க -

இரவுக் காட்சி சினிமா பார்த்து
விடிய விடிய விமர்சிக்க-
மாநகரப் பேருந்தின்
படிக்கட்டில் பயணம் செய்ய -

கருணையற்ற உலகம்
எதையுமே விட்டுக் கொடுக்கவில்லை
என்னைப் போன்ற
பெண்களுக்கு...!




91.9 fm
நீங்க வீட்டில்
இருந்தாலும்
aahaa! Angel CONTEST
91.9 aahaa! fm
THE CLIMAX OF ENTERTAINMENT
Press Partner : குமுதம்
Web Partner : www.kumudam.com
ஏஞ்சல் ஆகலாம்! பிரம்மாண்டமான பரிசுகளையும் வெல்லலாம்.
Aahaa Angel ஆக Fill-up பண்ணுங்க
1. இவர்களில் நீங்கள் யார்?
2. ஏன் இவர்களைப் போல் ஆக விரும்புகிறீர்கள்?
3. உங்களைப் பொறுத்தவரையில் ஏஞ்சல் என்பவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்?
4. பெயர் : வயது :
விலாசம் :
College-ல் படிப்பவர்
Office-ல் பணிபுரிபவர்
இல்லத்தரசி
AAHAA ANGEL CONTEST
AAHAA 91.9 FM Kumudam Building, 306, Purasaiwakkam High Road, Chennai-10.
aahaa! fm

படிக்க.... பயன் பெற...




தெய்வங்களின் வடிவங்கள் - சுவாமி ஹர்ஷானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை -4. விலை ரூ. 40.00

ஆங்கில மூலத்திலிருந்து திருமதி சக்தி கிருபாகரன் தமிழாக்கியுள்ளார். வேத காலம் முதல் ஏற்பட்டுள்ள அனைத்து இறை வடிவங்களைப் பற்றியும் விரிவாக விளக்கும் நூல். அற்புதமான கோட்டுப் படங்களில் தெய்வ தரிசனம்.



100 கறி வகைகள் - ராஜம் அனந்தராமன் - நர்மதா பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 40.00

மசியல் வகைகள், அவியல் வகைகள், பொடி வகைகள் உட்பட ஏராளமான சமையல் குறிப்புகள் தெளிவான செய்முறை விளக்கங்களோடு, புதுமண மக்களுக்குப் பரிசளிக்க ஏற்ற நல்ல நூல்.



ஸ்ரீ ஹரிதாஸ விஜயம் - பத்மா ஸ்ரீநிவாஸன், எண். 3, பிளாட் ஏ-3, ராமானுஜம் தெரு, சென்னை - 17. விலை ரூ. 150.00

ஸ்ரீ பேலூர் கேசவதாஸர் கன்னடத்தில் எழுதிய 'ஸ்ரீ கர்நாடக பக்த விஜயம்' நூலின் தமிழ் வடிவம். 1932ஆம் ஆண்டு எழுதப்பட்ட பக்தவிஜயம். 2004 ஆம் ஆண்டு வரை ஒன்பது முறை வெளியிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீராகவேந்திரர் உட்பட பதினேழு ஆசார்யர்களைப் பற்றிப் படிப்பது, பரமசுகமான அனுபவம். அருமையான கருவூலம்!



இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சியும் விடுதலை இயக்க வரலாறும் - டாக்டர் ஜி. பாலன், டாக்டர் டி. தட்சிணாமூர்த்தி - வானதி பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 150.00

நீதியரசர் பி. ஜோதிமணி தம் அணிந்துரையில் கூறியுள்ளது போல், போட்டித் தேர்வுகள் எழுதுவோருக்கு இந்நூல் பேருதவியாக இருக்கும். மகாத்மா இயக்கம் உட்பட ஏராளமான வரலாற்று நிகழ்வுகளை அருமையாகப் பதிவுசெய்திருக்கிறார்கள்.

ஜாலியன் வாலாபாக், சௌரி சௌரா, பகத்சிங் குழுவினர் தூக்கிலிடப்பட்டது போன்ற கொடுமையான காலங்கள் கண்முன் நடப்பதுபோல் எழுதப்பட்டுள்ளன.



கர்நாடக மாநிலக் கலைக் கோயில்கள் - ஜெயா வெங்கட்ராமன், கங்கை புத்தக நிலையம், சென்னை - 17. விலை ரூ. 80.00

'ஓம் சக்தி'யில் வெளியான 23 திருக்கோயில்களைப் பற்றி சுவையாக எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. பட்டதகல்லு, ஐஹோளே, பாதாமி போன்ற கலைவளச் சிறப்புகளையும் அறிந்துகொள்ள உதவும் நூல்.

- வாசகன்


www.sowbaghya.com
உங்கள்
சமையலறைத்
தோழி
Sakthi
6 Years Warranty
Shree
TILTING GRINDER
Swathi
ADSMITH
SOWBAGHYA®
AN ISO 9001:2000 CERTIFIED COMPANY
32A North Usman Road, T Nagar, Chennai - 600017 Tel: 044-28341760/ 28342908.
B.O.: 5 Hasthinapuram Main Road, Chrompet, Chennai Tel: 22234420
Fax: 044-42023926 grind@sowbaghya.com
314 Perundurai Road, Erode - 638 011 Ph: 0424 2260245, 2269965
1254 Mettur Road (E.V.N. Road), Erode - 638 011 Ph: 0424 2224499
SUNDAY OPEN
110V AVAILABLE FOR USA & CANADA



இதுக்குக் கூடவா?



எல்லா வேலைகளுக்கும் இயந்திரங்கள் வந்துவிட்ட இந்தக் காலத்தில், பல் தேய்க்கும் வேலைக்கும் வந்துவிட்டது மெஷின்.

டூத் பிரஷ்ஷில், ஒரு சிறிய மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. டூத் பேஸ்ட்டைத் தடவி இந்த பிரஷ்ஷை வாயில் வைத்து சுவிச்சை அழுத்த வேண்டியதுதான் நம் வேலை. பிரஷ் பாகம் 360 டிகிரியில் தானாகச் சுழலும். சுத்தம் செய்யும் வேலையை இந்த பிரஷ் செய்துவிடும். பிரஷ் பாகம் தேய்ந்துவிட்டால் அதைக் கழற்றி எறிந்துவிட்டு, புதுசாக மாட்டிக் கொள்ளலாம். இந்தத் தானியங்கி டூத் பிரஷ் இரண்டு AA சைஸ் பாட்டரியில் இயங்கக்கூடியது. சீனாவில் தயாராகும் இதன் விலை சுமார் 3 அமெரிக்க டாலராகும் (நம் ஊர் விலை சுமார் 130 ரூபாய்). பல் டாக்டர்கள் கூட இதை சிபாரிசு செய்கின்றனர். நேரே தேய்க்காமல் மேல், கீழ் திசைகளிலும் (360 டிகிரியில்) இந்த பிரஷ் பல்லை தேய்ப்பதுதான் காரணம். இதில் சிறுவர்களுக்கான மாடலும் உண்டு. இந்த வகை பிரஷ் தற்போது நம் நாட்டிலும் கிடைக்கின்றது. பல் விளக்க சோம்பல்படுவோர் இதை வாங்கி உபயோகிக்கலாமே?

- வத்சலா ஈடன்,
தஞ்சாவூர்



முருங்கை மரத்தை, அதில் உருவாகும் கம்பளிப் பூச்சிக்கு பயந்து, பலர் வளர்க்கத் தயங்குகின்றனர். கட்டை விரல் அளவு பெருங்காயத்தை, முருங்கை மரத்தின் வேர்ப்பகுதியை ஒட்டி சிறிது மண்ணைத் தோண்டி புதைத்துவிட்டால் போதும். கம்பளிப் பூச்சிகள் வராது. ஆனால், இந்த முறையை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை செய்துவரவேண்டும்.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்.

நாகலிங்கப் பூ!

சிவலிங்கத்தை நாகம் படமெடுத்துக் காப்பது போல் உள்ள பூ நாகலிங்கப் பூ. இதழ்கள் அட்டையால் செய்தது போல் சற்று உறுதியாக இருக்கும். செல்வச் செழிப்பின்



அடையாளம் தான் இந்த மலர். செல்வம் வேண்டும் என்று விரும்புபவர்கள், பொருள்வளத்தை அடைய எண்ணுபவர்கள் ஸ்ரீஅன்னைக்கு நாகலிங்கப் பூவை சமர்ப்பித்துப் பயன் அடையலாம்.

ஒரு நாள் இரவு, உறக்கத்திலிருந்து திடீரென விழிப்பு ஏற்பட்டு சாளரத்தின் வழியே வெளியே பார்த்தார் மிர்ரா. புகையால் செய்தது போன்ற ஒரு கரிய உருவம் தன் வீடு நோக்கி வருவதைக் கண்டார். அந்த உருவம் ஏதோ அபாயத்தைத் தோற்றுவிக்கவே வருகிறது என்பதை உள்ளுணர்வு அவருக்கு அறிவித்தது.

அப்படியே சலனமில்லாமல் தியானத்தில் ஆழ்ந்தார். தன்னுள்ளே சதா குரல் கொடுக்கும் இறைச்சக்தியை இறைஞ்சி அழைத்தார். தன் ஆன்மிக சக்தியையெல்லாம் ஒன்றுதிரட்டி ஒரு கவசம்போல் தன்னைச் சுற்றி அமைத்துக் கொண்டார். அந்தப் புகை உருவம் தன்னையோ, தான் இருக்கும் பகுதியையோ நெருங்க முடியாமல் தவிப்பதையும் தத்தளிப்பதையும் உணர்ந்தார். சிறிது நேரத்தில் மிர்ராவைத் தாக்கும் முயற்சியைக் கைவிட்ட அந்த உருவம் மெல்ல எதிர்த் திசையில் விலகிச் சென்றது.

மேலும் சற்று நேரம் சென்றதும், பற்பல மனிதக் குரல்கள் கூக்குரலாய்க் கேட்கத் தொடங்கின. விரைந்து வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தார். தொலைதூரத்தில் பல வீடுகள் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தன. அந்த விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தான் உரத்த குரலெடுத்துக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். மனிதர்களுக்குத் தொல்லை தரும் தீய சக்திகளை எண்ணி மிர்ரா மனம் துயரத்திலும் சிந்தனையிலும் ஆழ்ந்தது.

மிர்ராவுக்கு ஒன்று புரிந்தது. தன் தியான சக்தியால் தான் அந்த உருவம் தன்னைத் தாக்கவில்லை என்பதுதான் அது. அது மட்டுமல்ல, சற்று தூரத்தில் நிகழ்ந்த தீ விபத்தை அந்த உருவமே நிகழ்த்தியிருக்கிறது என்பதையும் அவர் தெள்ளத் தெளிவாக உணர்ந்தார்.

காற்றில் பல தீய சக்திகள் அலைகின்றன. மானுடக் கண்களுக்குப் பெரும்பாலும் அவை புலப்படுவதில்லை. அவையே உலகில் பல தீய விளைவுகளை உருவாக்குகின்றன.

தொடர்ந்த தியானத்தின் மூலமும் இறையருளைக் கவசமாய்ப் பெற்றுத் தங்களைப் பாதுகாப்பதன் மூலமும் மானிடர் அத்தகைய தீயசக்திகளின் பாதிப்பிலிருந்து தப்பிக்கலாம். இவையெல்லாம் மேலும் ஆராயப்பட வேண்டிய ஆன்மிகப் பேருண்மைகளாக மிர்ரா மனத்தில் எழுந்தன.

தான் பயணம் செய்த கப்பலை முன்னொரு நாள்

9



புயலை உருவாக்கிச் சில தீயசக்திகள் தாக்கினவே? அப்போது உடல் கூட்டைத் துறந்து, காற்றில் வெளியேறி வானில் நின்று, அந்தத் தீயசக்திகளை அதட்டினாரே மிர்ரா? அவை பதறி ஓடிய தால் கப்பல் தப்பித்ததே? அவையெல்லாம் பழைய நினைவுகளாய் மிர்ரா மனத் தில் எழுந்தன.

இதோ புகையுருவின் பாதிப்பிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொண்டார் மிர்ரா. ஆனால், அங்கே கூக் குரலிடும் மனிதர்கள் விவரம் அறியாமலே அவற்றிடம் சிக்கிக் கொண்டார்களே? அவர் மனம் அளவற்ற வருத் தத்தில் ஆழ்ந்தது.

தீயசக்திகளின் தாக்கு தலில் இருந்து முழு உலகை

அன்னை

யும் பாதுகாக்க வேண்டும் என்று அவர் மனத்தில் தீவிர வேட்கை எழுந்தது. உலகின் மேலும் மனித சமுதாயத்தின் மேலும் கொண்ட அளவற்ற கருணையால் அவர் உள்ளம் உருகிக் கசிந்தது. தாம் இந்த உலகைப் பாதுகாக்கவும் மனிதர்களின் துயரங்களி லிருந்து அவர்களை விடு விக்கவுமே படைக்கப்பட் டிருக்கிறோம் என்பதை அவர் மனம் மறுபடி உணர்ந்து கொண் டது. புதுச்சேரி செல்ல வேண்டும் என்ற எண்ணமும் அங்கேயே நிரந்தரமாய்த் தங்கி தன் குருவாகத் தம்மை இனங்காட்டிக் கொண்ட ஸ்ரீஅரவிந்தரோடு ஆன்மிகச் சாதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ண மும் அவர் மனத்தில் தீவிரமாய் எழுந்தன.

மிர்ரா தன் கணவர் ரிச்சர்டோடு மீண்டும் புதுச்சேரி செல்வதென முடிவெடுத்தார். திருமணம் நடக்கும் முன்பே நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளையைப் பறி கொடுத்த டோரதி ஹக்ஜசனும் உடன்வருவதாகக் கூறி னார். தன் தோழி டோரதியோடும் ரிச்சர்டோடும் மிர்ரா புதுச்சேரி புறப்பட்ட 1920 ஏப்ரல் 24ஆம் நாள் அவர் வாழ்விலும் உலகின் ஆன்மிக வரலாற்றிலும் முக்கிய மான நாள்.

திருப்பூர் கிருஷ்ணன்

புதுச்சேரியில் மீண்டும் கால் பதித்தபோது ஆன்மிக அலைகள் சிலுசிலு வெனச் சுற்றிலும் பரவியிருக்கும் ஒரு காந்த வட்டத்துக்குள் தாம் பிரவேசிப்பதாக உணர்ந்தார் மிர்ரா. கமகமவென்று காற்றில் ஏதோ மனோகரமான ஒரு நறுமணம். அளவற்ற பாதுகாப்புணர்வும் சொல்ல வொண்ணா நிம்மதியும் தன்னில் பிறப்பதை அவரால் உணர முடிந்தது. அங்கேயே தங்குவதென ஏற்கெனவே எடுத்த முடிவை, மனம் மறுபடியும் தன்னளவில் திடப்படுத்திக் கொண்டது. ஆனால் ரிச்சர்ட்? அவர் என்ன செய்யப் போகிறார்? மெல்லிய பிரிவின் இழை தொடங்கி விட்டதோ? மிர்ராவால் இனங்காண முடியவில்லை.

மூவருமாகச் சென்றுதான் அரவிந்தரைச் சந்தித்தார்கள். பின்னர் அடுத்தடுத்துச் சந்திக்கலானார்கள். டோரதிக்கு ஆசிரமத்தில் தத்தா என்று புதிய பெயர் சூட்டப்பட்டது. ஆர்யா இதழ் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. மிர்ரா அதன் பல பணிகளைச் செய்துகொடுத்து உதவலானார். அந்த அரவிந்த வதனம் மிர்ராவின் உள்ளத் தாமரையை மலரச் செய்து, அதில் ஆன்மிக நறுமணம் கமழச் செய்தது. அரவிந்தர் அவர்கள் வந்தபோதெல்லாம் அன்போடு விருந்துபசரித்தார். மிர்ரா, அரவிந்தரை அழைத்துத் தானும் விருந்துபசாரம் செய்தார். அரவிந்தரை அடிக்கடி சந்திக்க வேண்டும் என்பதன் பொருட்டாகவே அவர்கள் அரவிந்தர் வசித்த இடத்தின் அருகே தாங்கள் வாடகைக்கு வீடெடுத்துக் கொண்டார்கள்.

அரவிந்தரைச் சுற்றி இன்னும் பலர் இருந்தார்கள். வ.வே.சு. ஐயர், அமிர்தா போன்றோர். எல்லோருடனும் மிர்ரா இணக்கமாகப் பழகினார். அரசியல்ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் பலர் அரவிந்தரால் கவரப்பட்டுப் பல வகைகளில் உதவி வருவதை மிர்ராவால் புரிந்து கொள்ள முடிந்தது.

அரவிந்தரைப் பார்க்கப் பார்க்க ஒரு பெரும் ஆச்சரியமும் அவரே தனது ஆன்மிக குரு என்கிற பூரணத் தெளிவும் மிர்ராவிடம் மீண்டும் மீண்டும் நிலைகொண்டன. அதில் அவருக்கு ஊசலாட்டமே இல்லை. ஆனால், மிர்ராவைப் போல் அரவிந்தரிடம் தன்னையே சரணாகதி செய்து கொள்ளும் மனப்பக்குவம் ரிச்சர்டுக்கு வரவில்லை. ஏனோ அவரை குருவாக வைத்துப் போற்றுவதற்குத் தொடக்கத்திலேயே ரிச்சர்டிடம் ஒரு தயக்கம் இருந்தது. ஓர் இந்தியரைத் தன் குருவாக ஏற்பதா என்று அவரது கர்வம் கொண்ட மனம் எண்ணியிருக்கலாம். ஆனால், ஸ்ரீ அரவிந்தர் ஒரு மாமனிதர் என்பதில் ரிச்சர்டுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. என்றாலும் தாய்நாட்டை விட்டுவிட்டு ஸ்ரீஅரவிந்தரின் பொருட்டாக இந்தியாவிலேயே தங்குவதா? அவர் மனம் அந்த முடிவை ஏற்க மறுத்தது. என்றாலும் மிர்ராவின் பக்திமயமான புனித உணர்வுகளில் அவர் தலையிட விரும்பவில்லை.

மெல்லிய விரிசல் மேலும் பெருகியது. தான் இந்தியாவிலேயே புதுச்சேரியிலேயே தங்கப் போவதாக மிர்ரா அறிவித்ததும், அதே முடிவைத் தானும் எடுக்க முடியாமல் ரிச்சர்ட் தவித்தார். இறுதியில்

சக்தி தரும் ஒலி!



'ஓம்' என்ற சொல் இறைவனின் நீக்கமற நிறைந்த தன்மையை வெளியிடுவதற்காக இந்தியாவில் பயன்படுத்தப்படும் சொல். எல்லா நற்பணிகளுக்கும் பயன்படுத்தப் படும் சொல். தியானம், யோக சாதனைகள் அனைத்துடனும் இணைக்கப்படுவது அது. மற்ற

மிர்ராவிடமிருந்து விலகித் தன் நாடு திரும்ப முடிவெடுத்தார்.

கணவராக மட்டுமல்லாமல் தன் ஆன்மிக ஆராய்ச்சிகளில் தோழராகவும் இருந்த ரிச்சர்ட் வெளிநாடு திரும்பிய போது அந்தப் பிரிவு மிர்ராவைத் துன்புறுத்தத்தான் செய்தது. ஆனால் இந்தப் பிறவி உறவுகளைப் பற்றிக் கவலை கொள்வதை விட, பேரருள் சக்தியான இறைவனுடன் வாழ்வதையே அவர் உள்ளம் நாடியது. ஸ்ரீஅரவிந்தரும் மிர்ராவுமாக யோகம், தவம் என நாள் முழுதும் ஆன்மிகச் சாதனைகளில் ஈடுபடலானார்கள்.

ஸ்ரீஅரவிந்தரிடம் அன்போடும் பணிவோடும் விடை பெற்றுக் கொண்டு விலகிச் சென்ற ரிச்சர்ட் பாரதத்தின் பெருமைகளை அறிந்து கொள்ள அதன் பல பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் சென்றார். கடைசியாக இந்தியாவை விட்டு நியூயார்க் சென்றடைந்தார். ஆன்மிகத்தில் தாளாத ஆர்வம் கொண்டு அவர் ஆசியப் பயிற்சிக் கேந்திரம் என்ற ஓர் அமைப்பினை நியூயார்க்கில் நிறுவினார். சொற்பொழிவுகள், சமூக சேவைகள் ஆற்றத்தொடங்கினார். அவரது ஆழ்மனத்தின் ஆன்மிக அலை அங்கும் பலரை ஈர்த்தது. ஸ்ரீஅரவிந்தரை விட்டுத் தான் பிரிந்து வந்தது தன் பாக்கியக் குறைவால்தான் என்று குறிப்பிட்டு அரவிந்தருக்கும் கடிதங்கள் எழுதினார்.

எல்லா ஒலிகளையும்விட இந்த ஓம் என்னும் ஒலி, சாசுவதமான, மோனமான அமைதியான உணர்வை எழுப்புகிறது. பல நூற்றாண்டுகளாக அதைப் பயன்படுத்தி வந்தவர்களின் மானசிக சக்தி அந்த ஒலியுடனேயே ஊறி இணைந்துள்ளது. அந்த ஒலியின் தத்துவம் அதன் பொருட்செறிவு காலம் காலமாகப் பயன்படுத்தியதன் காரணமாக அந்தச் சொல்லில் அடர்ந்து படிந்துள்ளது.

- ஸ்ரீ அன்னை





பாண்டிச்சேரியைப் புயல் தாக்கியது. பல வீடுகள் கலகலத்தன. மிர்ரா தங்கியிருந்த வாடகை வீடு அவ்வளவு பத்திரமான வீடா என்ற ஐயம் தோன்றியது. ஸ்ரீ அரவிந்தர் அவர்கள் இருவரையும் தாம் இருக்குமிடத்திலேயே மாடியில் வந்து தங்கிக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். அவரை இன்னும் அடிக்கடிப் பார்க்கும் வாய்ப்பிருக்குமே, அவரது அமுதமொழிகளை மறுபடி மறுபடிக் கேட்கும் பாக்கியம் கிட்டுமே என்பதால் மிர்ரா அதற்குச் சம்மதித்தார். மிர்ரா, டோரதி இருவரும் அரவிந்தர் இருக்கும் இடத்திலேயே வசிக்கலானார்கள்.

இதுவரை ஆண்களே தங்கிவந்த இடத்தில் இப்போது புதிதாக இரண்டு பெண்கள். அதுவும் வெளிநாட்டுப் பெண்கள். அரவிந்தரைச் சுற்றியிருந்த சீடர்களிடையே இதனால் தொடக்கத்தில் மனச்சங்கடங்கள் இருந்தன. போகப் போக அந்தச் சங்கடங்கள் மறைந்து விட்டன. மிர்ராவின் வியக்கத்தக்க ஆன்மிகச் சாதனைகளால் பலரும் ஈர்க்கப்படலானார்கள்.

ஒருநாள் மிர்ரா தங்கியிருந்த பகுதியில், திடீரென்று ஒரு கல் வந்து விழுந்தது. எங்கிருந்து வந்து விழுகிறது இந்தக் கல்? மிர்ரா வியப்போடு வெளியே வந்து பார்த்தார்.

(அருள் பெருகும்)

"அண்மையில் குடும்பத்தோடு பேரன், பேத்தி சகிதம் சிங்கப்பூர் சென்று வந்தோம். சுமார் நாற்பது வருஷமாக தொழிலே கதி என்று இருந்து வந்த என் கணவரும், மாதம் ஒருமுறை வெளிநாடு சென்று வரும் என் மாப்பிள்ளையும் இதில் அடக்கம்...

'நியூ இயர் சிங்கப்பூரில்... ஆஹா ஆஹா ஓஹோ' என என் பெண்கள் இருவரும் ஓவர் பில்ட் அப். சரி, சிங்கப்பூருக்குப் போகிறோமே... குளிருமோ என்னவோ என்று ஒரு பக்கம் கவலை... பல கல்யாணங்களில் வைத்துக் கொடுத்து, கல்யாணங்களிலும் கட்டிக்க முடியாமல் கச்சேரியிலும் கட்டிக்க முடியாமல், வீட்டு உபயோகத்திற்கும் கட்டிக்க முடியாமல், சென்டிமெண்ட் காரணமாக யாருக்கும் கொடுக்க மனமும் இல்லாமல், எத்தனை புடவைகள்... அதில் சிலவற்றை எடுத்துச் சென்றேன்... அப்போதே ஆரம்பித்து விட்டார்கள் பெண்கள் இரண்டு பேரும்....

''ஏம்மா... இப்படியா புடவை பைத் தூக்கிக்கிட்டு வருவே... அழகா சுரிதார் கொண்டு வரக் கூடாதா...'' என்று முறைத்தார்கள்.

ம்... சரி... விஷயத்துக்கு வரலாம்... நியூ இயருக்கு 'மெரினா பே' என்ற இடத்துக்குப் போகலாம் என்று திட்டம் போடப்பட்டது... அந்த மெரினா 'பே'வில்

சொர்க்கமே

சரியாக 31ந் தேதி இரவு 12 மணிக்கு வாண வேடிக்கை ஆரம்பித்து பதினைந்து நிமிடம் நடக்கிறது... சுமார் பத்தாயிரம் மக்கள் கூடுகிறார்களாம்! ஆசை ஆசையாகப் போய் நின்றால்... 'சப்' என்று போய் விட்டது.



ரொம்ப பெரியதாகப் பேசப்பட்ட அந்த வாண வேடிக்கை ரொம்ப சாதாரணமாகவே இருந்தது...

'நைட் சஃபாரி' என்று அழைத்துச் சென்றார்கள்...

ஒரு சிறு டாய் ட்ரெயின் போல் உள்ளது. அதில் ஏறிச் சென்றால்.. நம்ம ஊர் யானையும்... காட்டு எருமையும் அவ்வளவே தான்... நம்ம ஊர் டாப்சிலிப் நினைவு வந்தது.

"இது என்ன பெரிய்...ய... நம்ம சிருங்கேரி செல்லும் வழி இதைவிட சூப்பரா இருக்கும்... இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும்..."

வாணவேடிக்கையும் அப்படித்தான்... நம் திருச்சூர் பூர விழாவில் நடத்தப்படும் வாணவேடிக்கையை விடவா...??

தீம் பார்க்... என்று எடுத்துக் கொண்டால் நம் சென்னை தீம் பார்க் அருகில் கூட வர முடியாது.

ஆனால் என்ன... எங்கு பார்த்தாலும் சுத்தம்... சுத்தம்... சுத்தம்...

ரயிலின் அமைப்பும்... ரயில்வே ஸ்டேஷன் அமைப்பும்... அந்தச் சுத்தமும்... அந்த ஒழுங்கும்...

(ம்... என்ன இருந்தாலும் ஓடிப்போய் ஃபுட்போர்டில் தொங்க முடியுமா என்று நம் மனிதர்கள் புலம்பலும் கேட்கிறது...)

பஸ்ஸில் ஏறினால் சரியான சில்லறை இருந்தால் சரி... இல்லையென்றால் பாக்கி தருவது என்பதெல்லாம் நஹி!

அங்கு பலதரப்பட்ட மக்கள்... அங்கேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்களிடம்.. டாக்ஸி மற்றும் ரயிலில் செல்லும் போது பேசினேன்... யாருக்குமே திருப்தியோ சந்தோஷமோ இல்லை.

உழைத்துக் கொண்டே இருந்தால்தான் உணவு... அரசாங்கத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது என்ற அச்சம்... போலியான ஒரு முகமூடி....

ஒருமுறை காரில் செல்லும் போது என் பேத்தி - ஐந்து வயது குழந்தை - தும்மி விட் டாள்...

பெரிய கொலைக் குற்றம் செய்தவளைப் போல அவளைச் சுட்டு எரிப்பதைப் போல பார்த்த அந்த சீன டிரைவர் பிறகு 'சிடுசிடு' என்றே காரை ஓட்டினார்.

துணிமணிகளும் அப்படித்தான். எல்லோரும் இங்குதான் ஷாப்பிங் செய்வார்கள் என்ற பெரிய ஷாப்பிங் மால் அழைத்துச் சென்றார்கள். துணிக்கடை பகுதியில் துணிகளைத் தட்டினால் தூசி பறந்தது! ம்ஹூம்... நம் ஊர் கடைகளுக்கு இணை ஆகுமா...?

பறவைகள் பூங்கா மற்றும் சயின்ஸ் மியூசியம் என பலவற்றை ரசித்தாலும்... எல்லாம் இங்கேயே இருக்கிறதே என்ற எண்ணம் என்னுள் ஓடிக்கொண்டே இருந்தது மட்டும் நிஜம்...

என்றாலும்...

விமானத்தில் ஏறி இந்தியாவுக்கு திரும்பினோம். என் அருகில் உட்கார்ந்திருந்தவர் விமானம் சென்னையைத் தொட்டதும் "ஆயிரம்தான் சொல்லுங்கள்... சிங்கப்பூரில் சுத்தம்... சுத்தம்தான்... ம். நாளைலேர்ந்து நமக்கு நரக வாழ்க்கையே தான்..." பேசிக் கொண்டே இறங்கினார். நடந்து கொண்டே, கையிலிருந்த பிஸ்கட் கவரை அப்படியே கீழே போட்டார்... இதோ இவரேதான் சிங்கப்பூரில் குப்பையை, குப்பைத் தொட்டியில் போட்டவர்...

இதோ பாருங்கள் நாங்கள் எல்லோரும் ஒரே டாக்ஸியில் ஏறி வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறோம்... சிங்கப்பூரில் முடியுமா...? பின் சீட்டில் மூன்று பேருக்கு மேல் நாலாவது குழந்தையைக் கூட ஏற்ற மாட்டார்கள்.

இதோ... போகும் வழியில் இளநீர் குடித்து மரத்தடியில் தஞ்சம்... முடியுமா சிங்கப்பூரில்...?

- லட்சுமி நடராஜன், திருப்பூர்.



விரல் பிரஷ் கிடைக்குமா?

என்னதான் வளைத்து நெளித்து வடிவமைத்து டூத்பிரஷ் தயாரித்தாலும், கைவிரலில் தேய்க்கும் போது கிடைக்கும் மசாஜும், சுத்தமும் பிரஷ்ஷில் கிடைப்பதில்லை. விரல் உறை போல தயாரித்தால் விரலில் மாட்டி பிரஷ் செய்துவிட்டு தூக்கி எறிந்துவிடலாமே!

- கிரிஜா வைத்தியநாதன்,
பெங்களூர்.

இவை எல்லாமே ஆஹா 50தான்!

முகம் பார்க்கும் கண்ணாடி மீது தூள் உப்பைத் தூவி விட்டு ஒரு சுத்தமான துணியால் துடைத்தால் பளிச்சென்று ஆகிவிடும்.

- என். ஜரினா பானு,
திருப்பட்டினம்.

மாலை வேளைகளில் அகல் விளக்கில் 4 ஸ்பூன் வேப்ப எண்ணெயை விட்டு கெட்டியாகப் பஞ்சுத் திரி போட்டு ஏற்றி வைக்க வேண்டும். கொசுவுக்கு இது நல்ல எதிரி.

- ஆ. விஜயலக்ஷ்மி,
வண்ணாரப்பேட்டை.

பீர்க்காய் அரைக்கும் போது அதனுடன் வேப்பிலையும், கடுக்காயையும் போட்டு அரைத்து வைத்துக் கொண்டு உபயோகித்தால், பேன், பொடுகுத் தொல்லை குறையும்.

- எஸ். சந்திரமுகி, ஈரோடு.

சப்பாத்தியின் மேல் சிறிது எண்ணெய் தடவி ஒரு டப்பாவில் மூடி ஃப்ரிஜ்ஜில் வைத்தால் மூன்று நாட்கள் வரை பிரஷ்ஷாக இருக்கும்.

- பாண்டியன்,
இராஜபாளையம்.

கொத்துமல்லி விதையை வறுத்து ஒன்றிரண்டாக இடித்து கஷாயம் வைத்து, காலை, மாலை சாப்பிட அஜீரணக் கோளாறுகள் விலகும்.

- க. வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி.

வீட்டிற்கு முன்னால் திருஷ்டிப் படம், திருஷ்டிப் பூசணிக்காய் என பயமுறுத்தும் பொருள்களை மாட்டி வைப்பதை விட 'நல்வரவு', 'வாழ்க வளமுடன்', 'ஹரி ஓம்' போன்ற வாசகங்கள் அடங்கிய பலகைகளை மாட்டி விருந்தினர்களையும், உறவினர்களையும் மகிழ்விக்கலாமே!

- ஆர். தங்கராஜ்,
திருப்பூர் - 8.

"ஷலோம்" DVD-யைப் பார்த்தேன்! அனைவரும் எப்போதும் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பதைப் பார்க்க மிக மிக ஆச்சரியமாக இருக்கிறது." – BSNL *ஊழியர்*



"ஷலோம்" தரும் ஐரோப்பியச் சுற்றுலாவின் தனித்தன்மையைப் பாருங்கள்!

★முதல் நாளில் ஹோட்டலில் ஓய்வுக்குப் பிறகுதான் சுற்றுலா★பாரிஸில் 3 இரவுகள், லண்டனில் 3 இரவுகள் ★ ஆங்கிலத்திலும் தமிழிலும் செய்திகள் ★ அனைத்துக்கும் நுழைவுக் கட்டணம் ★ கட்டணத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல் தலைவலி இல்லை ★ "விருப்பமானால்" என்பதே இல்லை ★ இந்திய உணவு ★ வாகனத்தில் தமிழ் பாடல்கள், தமிழ் நகைச்சுவை வீடியோ

ஐரோப்பிய ஒளிமயமான சுற்றுலா – 2008

18 நாட்கள்
9 நாடுகள்

சென்னையிலிருந்து புறப்பட்டு திரும்பி வரும் வரை எதற்கும் பணம் செலுத்தத் தேவையில்லாத

கண்ணாடி போன்ற கட்டணம்

நபருக்கு ரூ. **1,85,500/-** மட்டும்

① **26-04-2008** முதல் **13-05-2008** வரை
② **19-07-2008** முதல் **05-08-2008** வரை
③ **16-08-2008** முதல் **02-09-2008** வரை

தமிழக வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள்!!!

★ குறைந்தபட்சம் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, வாட்டிகன், சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம் ஆகிய 9 நாடுகளைக் காண்பது சிறந்ததாகும்.

★ Coach tour மூலம் இந்த நாடுகளைத் தரிசிக்க சுமார் 4000 கிலோ மீட்டர் வாகனத்தில் பயணம் செய்ய வேண்டியதிருப்பதால், கண்ணாடி வழியாகப் பார்க்கும் முறையில் தான் (Panoramic Tour) பல இடங்களை, 15 நாட்களில் காண முடியும்.

★ 12-14 மணி நேர விமானப் பிரயாணத்திற்குப் பிறகு, ஹோட்டலுக்குச் செல்லாமல், விமான தளத்திலேயே காலைக் கடன்களை முடித்து, ஓட்டம் ஓட்டமாக, பட்டணச் சுற்றுலாவை (City Tour) மேற்கொள்வது, மிகுந்த சோர்வை உண்டாக்கும்.

★ பாரீஸ் ஈபிள் கோபுரத்தின் 3-ம் நிலைக்குச் செல்லாத, வெற்றியின் வளைவில் (Arc De Triomphe) நிறுத்தாத, லண்டன் டிராபல்கர் சதுக்கத்தில் நிறுத்தாத, ஐரோப்பியச் சுற்றுலாவில் பங்கேற்பதில் பயனில்லை! சுவையுமில்லை!!

- 2006, 2007ம் ஆண்டு பங்குபெற்ற அன்பர்களின் கருத்தைக் கேளுங்கள்.
- கட்டணப்பட்டியலை ஒப்பிட்டுப் பாருங்கள்.
- ரூ.70/– செலுத்தி (தபால் செலவு ரூ.20/– தனி) 2007 ஐரோப்பிய ஒளிமயமான சுற்றுலாவின் ஒளிநாடாவை (DVD) வாங்கிப் பாருங்கள்.

ஷலோம் கொடுத்திருக்கிற புதிய பரிமாணம்!

- சுற்றுலாவை எப்படியும் நடத்தலாம் என்பதல்ல. இப்படித்தான் நடத்த வேண்டும் என்பதே "ஷலோம்" பின்பற்றுகிற உறுதியான கொள்கையாகும்.
- சுற்றுலாவின்போது, பங்கேற்பவர்களிடம் ஒரு பைசாகூட எதிர்பார்ப்பதில்லை. ஏன்? டிப்ஸ் கூட வசூல் செய்வதில்லை. (பங்கேற்ற எவரிடமும் விசாரிக்கலாம்)
- நாட்கள் பெரிதல்ல. ஓட்டம் ஓட்டமாக ஓடாத RELAXED சுற்றுலாவே முக்கியமானது.

SHALOM TOURS & TRAVELS (ஷலோம் டூர்ஸ் & டிராவல்ஸ்)
16, (Old No.91), Arunachalam Street, Chintadripet, Chennai - 600 002.
Phone & Fax : (044) 2845 3655, 2845 3764, 2845 7671, 2845 5469.
Email: shalomtravels@yahoo.com Website: www.shalomtravels.com



என். சியாமளா

காலை ஒன்பது மணிக்குள் அந்தச் செய்தி கிராமம் முழுவதும் காட்டுத் தீ போல் பரவி விட்டது.

சரவணனுக்கு வேலை போய்விட்டது. அவன் வேலை பார்த்து வந்த ஓமன் வங்கியில் வேலை நீட்டிப்புச் செய்ய மறுத்து விட்டார்கள். கடந்த ஒரு மாதமாக, விகேயார் எனப்படும் வி.கே. ராவ் தயவில் கிடைத்த ஒரு வேலையில் ஒட்டிக் கொண்டிருக்கிறான், மஸ்கட்டில்.

இனிமேல், மாதந்தோறும் நூறு ரியால், அப்பாவுக்கு அனுப்ப முடியாது. வங்கியில் பணம் ஏற ஏற, நெஞ்சில் இறுமாப்பும் ஏறிக் கொண்டிருந்த வையாபுரிக்கு ஓர் இடி என்பதோடு தாங்கமுடியாத அவமானம் வேறு.

தண்டாங்கோரை, கொக்காலடி, தோப்புத்துறையிலிருந்து, பெண் கேட்க வரும்படி சொல்லியனுப்பிய பணக்காரக் குடும்பங்களுடன் இனி சம்பந்தம் பேச முடியாது.

முந்தைய நாள் மயிலாடுதுறை ஜங்ஷனில் 'சோழ'னிலிருந்து இறங்கிய விநாடி முதலே சரவணன் முகத்தில் சோகம் கப்பியிருந்ததைக் கண்டுகொண்டான் கண்ணுசாமி. டாக்ஸியில் ஏறி உட்கார்ந்து, அரைமணி நேரமாகியும் உற்சாகமாகப் பேசவில்லை.

ஆதிச்சபுரம் இன்னும் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தபோது, காரை நிறுத்தச் சொல்லி, சாலையோரத்திலிருந்த ஓர் அய்யனார் கோயில் மேடைக்கு அழைத்துப் போனான் சரவணன்.



சிறுகதை

சங்கிலி

''கண்ணு... ஒரு அதிர்ச்சி செய்தி சொல்லப் போறேன்... நீ தாங்கிக்கணும்...''

கண்ணுசாமி எதிர்பார்த்ததுதான்.

''நான் வேலை பார்த்த ஓமன் வங்கியில், கான்டிராக்டை நீட்டிக்கவில்லை. அந்த நாட்டு மக்களுக்கே - ஓமானியர்களுக்கே - முன்னுரிமை என்ற கொள்கை அடிப்படையில், என் இடத்தில் ஓர் ஓமானியனைப் போட்டு விட்டார்கள்...'

''அப்போ ஒருவழியா மூட்டை கட்டிக்கிட்டு வந்துடறதுதானே?''

''அதுக்குத்தான்டா, மனசு இடங்கொடுக்கலே.. வேற நல்ல வேலை கிடைக்குமோன்னு நப்பாசை...''

நப்பாசைக்கு உரம் போட்டவர், தஞ்சாவூர் மராத்தா அய்யர் வி.கே.ராவ்! கால் நூற்றாண்டுக்கு முன் வளைகுடா நாட்டுக்குச் சென்ற அவர், பஹ்ரீன், துபாய் என்றெல்லாம் சுற்றிவிட்டு, ஓமன் நாட்டுத் தலைநகரமான மஸ்கட்டில் செட்டில் ஆகிவிட்டவர். நாலைந்து கம்பெனிகளுக்கு கன்ஸல்டன்ட். மன்னர் அரண்மனை வரை அவர் செல்வாக்கு பரவியிருந்தது என்று சொல்லிக் கொண்டார்கள்.



பாங்க் வேலையிலிருந்து விடுபட்டு, தற்போது அவன் இருநூறு ரியால் சம்பளத்தில், ஒரு கார் விற்பனை நிறுவனத்தில் வேலை பார்ப்பது கூட, அவர் சிபாரிசில்தானாம்.

''கண்ணு... இந்தச் சம்பளத்திலே அங்கே குடித்தனம் செய்ய முடியாது. அதனாலே, இப்போ கல்யாணம் வேண்டாம்னு எங்க அய்யாகிட்ட நாளைக்கே சொல்லிடு...''

கண்ணுசாமிக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. 'உன்னை அறையணும் போலிருக்குடா... உங்க மாமன், கண்ணம்மாளை எத்தனை நாளைக்குப் பொத்திப் பொத்தி வெச்சுக்கிட்டிருப் பாரு...'

சரவணன் அவலமாகச் சிரித்தான்.

'இப்போ என்னைக் கட்டிக்கிற பொண்ணு மஸ்கட்டிலே, ஒரு பார்ட்-டைம் வேலை பார்த்தாதான், இரண்டு வேளை சாப்பாட்டைக் கண்ணாலே பார்க்கலாம்! நம்ம ஜனங்கள், அதுக்கு ஒத்துக்குவாங்களா...?'

''சரி, கண்ணம்மாவுக்கு என்ன வழி?''



''பெரியவங்களா பார்த்துத் தீர்த்துக்க வேண்டியதுதான்..!''

''கண்ணம்மா மேல உனக்கு ஆசை இல்லையா...? பாவம், அது...''

''ஆசை இருக்குடா; பசை இல்லையே...?''

அந்தக் கிராமத்தில், வங்கித் தேர்வு எழுதி, வெற்றி பெற்று, தேசிய உடமை யாக்கப்பட்ட வங்கியில் பணியில் சேர்ந்த முதல் நபர் சரவணன்தான். இரண்டு ஆண்டுகளுக்குப் பின், யாரோ ஒரு நண்பரின் தூண்டுதலில், மஸ்கட்டுக்குப் போனான். இரண்டாண்டு கால ஒப்பந்தம்; பின்னர், வேலை நீட்டிப்பு.

நான்கு ஆண்டுகளில், அவன் அனுப் பிய பணத்தில் பணக்காரராகி விட்டார், வையாபுரி. வீட்டைச் சீரமைத்தார். தென்னை மரத்தோப்பு விலைக்கு வாங்கி னார். மாரியம்மன் திருவிழாவுக்கு, வீட் டுக்கு நூறு ரூபாய் வரி என்று வசூலித்த போது, இவர் ஆயிரம் ரூபாய் கொடுத்தார். எல்லாம் சரவணன் காசு!

''அப்போ... அடுத்த தடவை அவன் வந்துட்டுப் போறபோது, கண்ணம்மா வோடதான் போவான்னு சொல்லுங்க...''

வையாபுரியின் முகம் மாறியது.

''கல்யாணம்கிறது நம்ம கையிலே இல்லீங்க... அவன் தன்னோட கௌரவத் துக்குத் தகுந்த பொண்ணாப் பார்க் கணும்னு சொல்றான்...'' துணிச்சலுடன் ஒரு பொய்யைக் கூறினார் வையாபுரி.

சரவணன் வந்திருப்பதை மோப்பம் பிடித்த தண்டாங்கோரை, கொக்காலடி, தோப்புத் துறைப் பெண் வீட்டார்களின் இடைத்தரகர்கள், கிராமத்து எல்லை யிலேயே அவனுக்கு வங்கி வேலை போய் விட்ட செய்தியைக் கேள்விப்பட்டு, அப் படியே திரும்பிப் போய்விட்டார்கள்.

வையாபுரிக்கு வாழ்க்கையே நசுங்கிப் போய்விட்டாற்போலிருந்தது. சரவணன் 'இப்போது திருமணம் வேண்டாம்' என்று சொல்வதை ஒப்புக்கொண்டால், பக்கத்துத் தெருவிலிருக்கிற முறைப்பெண் கண்ணம் மாளின் கதி என்ன? சரி, அவர்கள் வீட் டுக்குச் சென்று பெண் கேட்கலாம் என் றால், எந்த முகத்தோடு போவது? 'வங்கி வேலையில் இருந்தபோது கொக்காலடியை தேடிக் கொண்டு போனார்கள்; வேலை போய் விட்டது என்றதும், என் மகள்தான் கிடைத்தாளா?' என்று கேட்க மாட்டாரா, தங்கமுத்து?

ஆமாம். அப்படியே கேட்டுவிட்டார், கண்ணுசாமி நோட்டம் விடப் பார்க்கப் போனபோது.

''சரவணன் லீவு முடிஞ்சு ஊருக்குப் போறதுக்குள்ளே என் மகளுக்குக் கல்யா ணம் பண்ணிக் காட்டறேன்டா...''

அதை அப்படியே வையாபுரியிடம் ஒப்புவித்தான் கண்ணுசாமி.

''அத்தனை திமிரா, அவனுக்கு? சொல்லி வை. அவன் மக கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்னாடி, என் மகன் கல்யா ணம் நடக்கும்...!''

சம்பவங்கள் திசைமாறிப் போவதைக் கண்டு மனம் பதறிப் போனான், கண்ணு சாமி. சரவணன் ரொம்பவும் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதைக் கண்டு அவ



வெங்காயம் நறுக்கும் போது வாயில் சிறு துண்டு பபிள் கம் போட்டுக் கொண்டு நறுக்கினால் கண்களில் நீர் வராது.

- ஹேமலதா சுந்தர், கோபாலபுரம்.

னுக்கு எரிச்சல்கூட வந்தது. ஒரு மாத லீவில், ஒரு வாரம் ஓடிப்போய் விட்டது.

பெரியாத்தா, படியேறி வந்தாள்.

''அட! பெரியாத்தாவா! வாங்க... வாங்க... இந்தா, புள்ளே... யார் வந்திருக் காங்க, பாரு...''

தங்கமுத்துவின் மனைவி வெளியே வந்து வரவேற்றாள்.

''உன் மகளைக் கேட்டுத்தான் வையாபுரிக்கு பதில் சொன்னியா...?'' - குறி தவறாத அம்பு போல், கேள்வி.

''என் மக நான் சொல்றதைக் கேட்கும்...''

''அதை நானே கேட்டுக்கிறேனே... அட, என் தங்கம்மா பெத்த மகளே... வெளியே வாடி, கண்ணாட்டி...''

கண்ணம்மா வந்தாள்.

''நீ என்ன சொல்றே, செல்லக் கண்ணு...''

''பெரியாத்தா... வெவரம் தெரிஞ்ச நாளி லேர்ந்து அவங்களையே என் மனசிலே சுமந்துக்கிட்டிருக்கேன். இப்ப போயி, அவங்களைத் தூக்கிப் போட்டுட்டு இன் னொரு ஆளை வச்சுக்கன்னா, எப்படி...? நீங்க பெத்த மகளா இருந்தா, சொல்வீங் களா?''

''அடி, என் சிங்கக்குட்டி! என்னமாடி பேசறே...? சரவணனைக் கட்டிக்கிட்டுப் போனா, அங்கே, பக்கத்து வீட்டிலே பாத்திரம் கழுவணும்...''

''கழுவறேன்...''

''சமையல் பண்ணி வைக்கணும்...''

''வைக்கிறேன்...''

''சரி... அவன்தான் இல்லேன்னு ஆயி டுச்சே? இனிமே என்ன பண்ணப் போறே?''

விருட்டென்று எழுந்தாள் கண்ணம் மாள்.

''செல்லக்குட்டி... பதில் சொல்லிட்டுப் போடி''

பாண்டியன் சபையில், கையில் ஒற்றைச் சிலம்புடன் நீதி கேட்டு வாதாடி நின்ற கண்ணகியின் சீற்றப் பார்வை.



இஞ்சியைத் துருவி, வெயிலில் காயவைத்துப் பொடித்து வைத்துக் கொண் டால், டீ, குருமா, பொங்கல் என்று இந்தப் பவுடரை சேர்க்க மணத்துக்கு மணம். உடம்புக்கும் நல்லது.

- தஸ்மிலா அஸ்கர்,
கீழக்கரை.

ஒற்றைக் கையால், கொல்லைப்புறத் தைக் காட்டினாள், கண்ணம்மாள். '...கெணறு...' - மெல்லிய குரலில் அழுத்த மாகச் சொல்லிவிட்டு, உள்ளே ஓடினாள்.

வேறு வழியில்லை.

சுயகௌரவம் என்று சொல்லிக் கொண்டு, பெற்ற மகளை இழந்து விடக் கூடாது.

எளிமையாக, உள்ளூர் சிவன் கோயி லில் திருமணம். அப்புறம், தத்கால் பாஸ் போர்ட், வயது, படிப்புச் சான்றிதழ், நோட் டரி பப்ளிக் கையெழுத்து என்று ஒரே அலைச்சல். மஸ்கட் பிரபலஸ்தர் வேணு தயவில், விசா கிடைத்தது.

சரவணன் - கண்ணம்மா தம்பதியை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில், 'டாடா' காட்டி விட்டு வந்தான், கண்ணு சாமி.

மஸ்கட் விமான நிலையத்தில் வழுக்குப் படிகளில் இறங்கி, சுழல்



கடலையை வறுப்பது போல் கூழ்வற்றலையும் எண்ணெய் இன்றி மணலில் வறுத்தெடுக்கலாம். பெரிதாகவே பொரியும்.

- ஜி. சந்தியா, இராஜபாளையம்.

வட்டத்தில் பெட்டிகளைத் தேடிக் கைப்பற்றி, டிராலியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வரும்போது, ''நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கா கண்ணம்மா?'' என்று கேட்டான்.

''இருக்குங்க...''

விமானத்தில் பறக்கும்போதே வேணு தம்பதியைப் பற்றி விஸ்தாரமாகக் கூறிவிட்டிருந்தான். வேணு, மஸ்கட் தமிழ்ச் சங்கத் தலைவர்; அவரே ஒரு நாடக ஆசிரியர், வசனகர்த்தா, இயக்குனர்!.. செல்வாக்கு மிக்கவர். எளிமையின் எடுத்துக்காட்டு. அவர் மனைவி நாகலட்சுமிக்கு நாக்கிலும், நெஞ்சிலும் அமிர்தம்.

வெளியே வந்ததும், 'வாங்கோ, வாங்கோ' என்று உற்சாகமாக வரவேற்றார்கள்.

அரைமணி ஓட்டத்துக்குப் பிறகு, ரூவி பகுதியில், ஃபுர்ஸான் சாலையில், இஸ்லாமியப் பள்ளியின் அருகில், ஒரு காம்பவுண்டுக்குள் கார் நுழைந்து நின்றது.

முதல் தளத்தில், ஜாகை. நாகலட்சுமி முன்னதாகச் சென்று, ஆரத்தித் தட்டுடன் வந்து, தம்பதிகளுக்குச் சுற்றி, 'வலது காலை எடுத்து வை' என்று சொல்லி, சிறிது நேரத்தில் வீட்டுக்குப் போனார்கள்.

கண் விழித்ததும், சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள் கண்ணம்மாள். ஏழு முப்பத்தைந்து. சற்று நிதானித்துக் கொண்டு, பக்கத்தில் பார்த்தாள். வெட்கத்துடன் அவன் மேல் ஒரு போர்வையைப் போர்த்தி விட்டு, பல் தேய்க்கச் சென்றாள்.

பால்கனியில் நின்று, எதிரே சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது சரவணன் வந்தான்.

''ஊர் எப்படி இருக்கு?''

''சாரி சாரியா கார் போய்க்கிட்டே இருக்குங்க...''

''வீடு?''

''ரொம்ப நல்லாயிருக்கு...''

''இங்கேயே இருந்துடுவோமா?''

''எப்படிங்க...? அட்வான்ஸ் கொடுத்தது இன்னும் ஒரு மாசம்தான் இருக்கு. அப்புறம், ஒரு ரூம் பார்த்துக்கிட்டு போகணும்னீங்க..''

சரவணன் ஆழமாகப் பார்த்தான், அவளை.

''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாமாம். வீகேயார் சொல்லிக் கொடுத்தபடி நான் ஒரே ஒரு பொய் சொன்னேன்...!''

அவள் குழப்பத்துடன் பார்த்தாள்.

''எனக்கு வேலை போகவில்லை...''


''அப்போ... கொக்காலடிப் பெண்ணை கட்டிக்கிட்டிருக்கலாமில்லே? முப்பது பவுன், அம்பதாயிரம் ரூபாய்..''

''ஆனா, நீ பெரியாத்தா கிட்ட பேசின போது, ஒரு வார்த்தை சொல்லி, என் கை-கால்-மனசு எல்லாத்தையும் சங்கிலியால கட்டிப் போட்டுட்டயே!''

அவளுக்குப் புரியவில்லை.

''நான் அனுப்பிய பெரியாத்தாகிட்ட, கொல்லைப்புறத்தைக் காட்டி...''

சட்டென்று அவன் வாயைப் பொத்திய கண்ணம்மாள் இறுகத் தழுவிக் கொண்டு விம்மினாள். ●



காது கேளாதவர்களுக்கும் ஊமைத்தன்மை உள்ளவர்களுக்கும் சிகிச்சை அளிக்கிறார்!

டாக்டர்.சாமிகிரி சித்தர்


காதில் வலியா? காதில் நரம்புத் தளர்ச்சியா?
சீழ் வடிகிறதா? சரியாக காது கேட்கவில்லையா? இரைச்சலா?


காதுக்கருவி இல்லாமல் அறுவை சிகிச்சை இல்லாமல் 3 மணி நேரத்தில் காது கேளாதவர்களை காது கேட்கச் செய்கிறார்!


ஊமைத் தன்மையுள்ள 7 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 3½ வருட சிகிச்சையில் காது கேட்கச் செய்கிறார். வாயும் பேச வைக்கிறார். பரிசோதித்த பிறகு சிகிச்சைக்கு ஏற்கப்படுவர். ஊமைத்தன்மை உள்ளவர்களுக்கு சிகிச்சை பெற்ற உடனே முன்னேற்றம் தெரியும். இதுவரை பேசாத சில வார்த்தைகளை உடனே பேசுவார்கள்.

டாக்டர் சாமிகிரி சித்தர்
காதொலி நிலைய சித்த மருத்துவமனை,
சித்த மருத்துவர்கள்: S.கிரிவாசன் S.கிரிராஜன் S.அருணகிரி
(401), 383, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோயமுத்தூர் - 641 012
போன் :0422-2234215, 0422-2473291, 98422-22007


முன்பதிவு செய்யவும்
பரிசோதனை நேரம்: மதியம் 2.00 to 4.00


S.கிரிவாசன்


S.கிரிராஜன்


S.அருணகிரி

வியாழக்கிழமைதோறும் "ராஜ் டிஜிடல் பிளஸ்" TV-யில் காலை 7.30 முதல் 8.00 மணி வரை எங்கள் நிகழ்ச்சியைக் காணத்தவறாதீர்கள்!



இந்தியன் ரயில்வேயின் தனி சிறப்பு ரயிலில்

கோடைகால சுற்றுலாக்கள்

IRCTC

ஷீரடி பாபா தரிசனம்	மந்த்ராலயம் - திரையம்பகேஸ்வர் சனிசிங்கனாப்பூர் - ஷீரடி - பண்டரிபூர்	2-4-2008 8 நாட்கள் ரூ. 4125
காசி யாத்திரை	ஜெய்ப்பூர் - டெல்லி - மதுரா - ஆக்ரா காசி - அலகாபாத் - கயா	11-4-2008 11 நாட்கள் ரூ. 5670
டார்ஜிலிங் சுற்றுலா	பூரி - கொனார்க் - புவனேஸ்வர் கல்கத்தா (காங்க்டாக் - டார்ஜிலிங்)	27-4-2008 12 நாட்கள் ரூ. 6185
பனிமலை சுற்றுலா	ஜெய்ப்பூர் - அமிர்தசரஸ் - டெல்லி மதுரா - ஆக்ரா (குலு - மணாலி)	11-5-2008 13 நாட்கள் ரூ. 6700
வட இந்திய சுற்றுலா	காசி - கயா - அலகாபாத் - ஹரித்வார் டெல்லி - மதுரா - ஆக்ரா (குலு - மணாலி)	25-5-2008 16 நாட்கள் ரூ. 8250

2ம் வகுப்பு ரயில், தங்கும் வசதி, தென்னிந்திய உணவு, சுற்றிப்பார்க்க பேருந்து வசதி சிறப்பு சேவை விரும்புபவர்களுக்கு தனி கட்டணம்

TRAVEL TIMES (INDIA) P. LTD

இந்திய அரசு சுற்றுலா துறையின் அங்கீகாரம் பெற்றது www.railtourism.com

சென்னை : 11, Club House Road, Anna Salai, Chennai - 2. ☎ 044-28461131, 28461113
மதுரை : 39, New LIG Colony East, (Opp. Kolcha Complex) Anna Nagar. ☎0452-4391228, 9443307132
கோவை: 49, 9 Street, Opp. Ganga Yamuna Theatre, Tatabad ☎0422-2496667, 9345796778



நர்ஸ் : தூங்கும் நோயாளியை எழுப்பி, தூக்க மாத்திரை கொடுக்கும் நபர்.

திருமணம் : ஆண் தன் பேச்சிலர் டிகிரியை இழக்க, பெண் தன் மாஸ்டர்ஸ் டிகிரியைப் பெறுகிறாள்.

விவாகரத்து : திருமணத்தின் எதிர்காலம்.

வகுப்பறை : ஆசிரியர், தன் நோட்டுப் புத்தகத்தில் உள்ள தகவல்களை மாணவனின் நோட்டுப் புத்தகத்தில் செலுத்தும் இடம்!

குற்றவாளி : மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்பட்டவன் இல்லை, பிடிபடும் வரை.

முதலாளி : நீ தாமதமாகப் போகும் போது முன்பாகவும், முந்திச் செல்லும்போது தாமதமாகவும் வருபவர்.

அரசியல்வாதி : தேர்தலுக்கு முன்பு உன் கையைக் குலுக்குபவர், தேர்தலுக்குப் பின் நம்பிக்கையைக் குலைப்பவர்.

புன்னகை : முகத்தில் உள்ள ஒரு வளைவு, அநேக சமாசாரங்களை நேராக்குகிறது.

அலுவலகம் : களைப்படைந்து வரும் மனிதன், ஓய்வெடுக்க நல்ல இடம்.

ஆயுள் காப்பீடு: உயிர் உள்ளவரையில் உன்னை ஏழையாக வைத்து, சாகும்போது பணக்காரனாக்கும் ஒப்பந்தம்.

- மரகதம் ராகவசிம்மன்,
ஹைதராபாத் - 73



காய்ச்சிய பாலில் தீய்ந்த வாடை வந்தால் பாலை வேறு பாத்திரத்தில் மாற்றி ஒரு ஏலக்காயை உரித்துப் போட்டு விடுங்கள். சூடு ஆறியதும் ஒருஸ்பூன் தயிரை ஊற்றிக் கலக்கி மூடிவைத்துவிட்டால் நல்ல கெட்டியான கட்டித் தயிர் ரெடி!

- பிரபா டாக்கர்,
ஹைதராபாத் - 4.




என் குடும்பத்தினர் அனைவரும் என் சித்தி வீட்டுக்குச் சென்றிருந்தோம். என் சிறிய மகள் (4 வயது) சித்தியிடம், ''நான் டாக்டரா வேன். என் அக்கா ஆஞ்சனேயர் ஆவாள் என்று தாத்தா சொன்னார்'' என்றாள். அனைவருக்கும் ஒன்றும் புரியவில்லை. என் சித்தி சட்டென்று, புரிந்துகொண்டு, ''என்ஜினீயர் ஆவாள் என்று சொன்னாரா?'' என்றார். ''ஆமாம்'' என்று தலையசைத்தாள். சிரிப்பலை அடங்க நேரமானது.

"கலைவாணிங்க"

- பி. சீதாலக்ஷ்மி, சென்னை - 87.

என் பேத்தி ஸ்ரீவைஷ்ணவி. அவள் அம்மாவின் இரண்டாவது பிரசவத்துக்கு வந்தபோது எங்கள் ஊரான வத்திராயிருப்பு ஸ்கூலில் சேர்த்தோம். ''தினமும் கலைவாணிகள் என் பென்சில், ரப்பர், ஸ்கெட்ச் எல்லாவற்றையும் எடுக்கறாங்க'' என்பாள். எங்களுக்குப் புரியவேயில்லை. கடைசியில் எங்கள் ஊர் பாஷையில் களவாணிப் பசங்க என்று மிஸ் சொல்வதைத்தான் அவள் தன் பாஷையில் கலைவாணிகள் என்றாள் என்று தெரிந்தபோது, என் சம்பந்தி உட்பட அனைவரும் வாய்விட்டுச் சிரித்தோம்.

- சீதா மூர்த்தி, வத்திராயிருப்பு.



என் அக்கா மகன் ஆதித்யா (2½ வயது) அவனுக்கு அவன் பாட்டி புத்தகத்தைக் காண்பித்து பறவைகள் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அந்த வரிசையில் 'Owl' என்று ஆந்தையைக் காண்பித்து, ''இது இரவில் விழித்துக்கொண்டு பார்க்கும்'' என்று சொன்னவுடன், 'அவல் நான் சாயங்காலம் கப்ல போட்டுச் சாப்பிடுவேனே' என்று அவன் வெகுளியாகக்

கூறியதை நினைத்தால் இப்பொழுதுகூட சிரிப்பை அடக்க முடியவில்லை.

- சுஜாதா வெங்கட்ராமன், சென்னை - 17.

சமீபத்தில் சொந்த வீடு வாங்கி புது மனைப் புகுவிழா செய்த என் மகன் வீட்டுக்கு நானும் என் கணவரும் அமெரிக்கா சென்றோம். அழகான வீட்டைச் சுற்றி வானளாவ நிற்கும் மரங்களின் கிளைகள் பால்கனியில் படர்ந்திருக்கும். தினமும் காலையும், மாலையும் என் கணவர் சந்தியாவந்தனம் அந்த 'டெக்'கில் தான் செய்வார். புதிதாக அதைப் பார்க்கும் என் பேரன் கரணிடம் சந்தியாவந்தனம் பற்றிச் சுருக்கமாக, அவனுக்குப் புரியும்படி கூறினோம்.

ஒருநாள் ஜெபம் செய்துவிட்டு கண் திறந்து பார்த்த என் கணவருக்கு ஒரே திகைப்பு. காரணம், அவர் மடி நிறைய மரங்களிலிருந்து விழுந்த ஒருவித கொட்டைகளைப் பொறுக்கி, கரண் போட்டிருக்கிறான். ஏன் என்று கேட்டதற்கு, ''கடவுள் கொடுத்த பரிசு'' என்று சொன்னவுடன், எங்களுக்கு கடவுளே குழந்தை ரூபத்தில் வந்த மாதிரி நெகிழ்ந்து விட்டோம். இப்போதும் ஒரு சிறிய கிண்ணியில் அந்தக் கொட்டைகளைப் பொக்கிஷமாக வைத்திருக்கிறோம்.

- வி. சகுந்தா, கோவை.

''மாமா, உங்க பேர் எப்படி தெரியும்?''

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த என் ஐந்து வயதுப் பேரனை அழைத்துக் கொண்டு ஆந்திராவில் உள்ள என் மகள் வீட்டுக்குச் சென்றோம். ஒரு கோயில் வாசலில் அமர்ந்திருந்த பிச்சைக்காரர்கள், ''பாபு, பாபு தர்மம் செய்யண்டி'' என்று கேட்டனர்.

இதைக் கவனித்த என் பேரன், என் மாப்பிள்ளையைப் பார்த்து ''ஐய் மாமா, உங்க பேர் எப்படி இவங்களுக்குத் தெரியும்?'' என்று வெகுளியாகக் கேட்க, நாங்கள் அனைவரும் சிரித்துவிட்டோம்.

ஆந்திராவில் பொதுவாக வயதில் குறைந்தவர்களை 'பாபு' என்று அழைப்பது சகஜம். தவிர, வீட்டிலும் ஆண் குழந்தைகளை 'பாபு' என்றே அழைப்பார்கள்.

- ஆர். ராஜலக்ஷ்மி, மேனாம்பேடு.



மனசுக்குப் பிடித்த நேரங்கள்!



பல நிமிடம் காக்கவைத்த
சிவப்பு சிக்னல்
பச்சையாக மாறும் நேரம்

நாக்கு வறண்டு போய்
தவித்த நேரத்தில்
ஜில்லென்ற பானைத் தண்ணீர்
தொண்டையில் இறங்கும் நேரம்

ஒருவரும் அறியாமல்
நான் காதலித்த பேரழகி
ஊரறிய தாலிகட்டி
மனைவியாகும் நேரம்

காதலியாய் கூச்சமின்றி
ஒட்டி உரசியவள் - நான்
மெட்டி மாட்டுகையில்
மெய்சிலிர்க்கும் நேரம்

தாயின் அலறல்
மெல்ல அடங்கி
சேயின் அழுகை
வெளிப்படும் நேரம்

சுட்டெரிக்கும் வெயில்
மேகங்கள் மூடியதால்
சுகமான சாரலாக
மாறும் நேரம்

மயக்கும் மாலைப்பொழுது
மெல்லத் தேய்ந்து
தென்றல் வீசும்
இரவாக மாறும் நேரம்

-ஆர்.மாலதி தமன், விநாயகபுரம், சென்னை-106

ஸ்ரீ ராமஜெயம்



யூரோ கைனகாலஜி என்றால் என்ன? இன்காண்டினன்ஸ் என்பது எத்தகைய இம்சை? சிறுநீர் கசிவு எந்த வயதில், எப்போது, ஏன் ஏற்படுகிறது?

"**தா**மறியாமல் சிறுநீர் வெளியாகும் பிரச்னை பற்றி பல பெண்களும், 'வேறு வழியில்லை. இதை ஆயுசு முழுக்க சமாளிச்சுத்தான் ஆகணும் போலிருக்கு' என்று காலம் தள்ள வேண்டிய அவசியமில்லை!"

"இது ஒரு சீரியஸ் பிரச்னை. ஆனால் பல்லைக் கடிச்சுட்டுப் பொறுத்துக் கொண்டு இருக்காதீங்க. இதுக்கு சிகிச்சையே இல்லேன்னு விட்டுட்டு அவதிப்படாதீங்க."

"மருத்துவத்தில் யூரோ-கைனகாலஜின்னு ஒரு பிரிவு இருக்கு. அதில் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள் இப்போ இருக்காங்க."

"இது ஒன்றும் உயிருக்கு ஆபத்தான நோய், அதாவது, லைஃப் த்ரட்டனிங் டிஸீஸ் இல்லே. ஆனா சமூக வாழ்க்கையிலே ஒரு பிரச்னையா இருக்கிற நோய்."

என்று கூறும் **டாக்டர் கார்த்திக் குணசேகரன்**, 'மங்கையர் மலர்' வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். மகளிர் வெளியே சொல்ல முடியாமல் அவதிப்படும் 'இன்கான்டினன்ஸ்' பற்றி பேட்டிகள் மூலம் உங்களைச் சந்தித்த இவர், உங்களுடன் மீண்டும் விரிவாக உரையாட வருகிறார்.


சிறுநீர்க்கசிவு குறித்தும் அதனால் ஏற்படும் உபாதைகள் குறித்தும், எழுதி அனுப்பப்படும் உங்கள் கேள்விகளுக்கும் தெளிவாக, பொறுமையாக விடையளிக்க வருகிறார்.

கேள்விகளை மங்கையர் மலர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கவும்.

டாக்டர். கார்த்திக் குணசேகரன்,
'மங்கையர் மலர்'
'கல்கி பில்டிங்ஸ்'
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

டாக்டர் சந்திப்பு, கட்டுரைத் தொகுப்பு : **சாருகேசி**

டாக்டர். கார்த்திக் குணசேகரன்



மார்ச்-08 அன்று சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 'GAURI' மையத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெறும். விவரங்களுக்கு : 98842 98666, 044 - 24341065

கண்ணுக்கு மை அழகு!

என் மகன் கைக்குழந்தையாக இருந்தபோது நெற்றியிலும், கன்னத்திலும் அரிப்புடன் கூடிய சிவப்புத் திட்டுகள் ஏற்பட்டன. கடையில் வாங்கிய கண் மைதான் இந்த அலர்ஜிக்குக் காரணம் என்று தெரிந்ததும் பொட்டு வைப்பதையே நிறுத்தி விட்டேன். குழந்தையைப் பார்க்க வந்த பெண்களும், அக்கம்பக்கத்துப் பெரியவர்களும் பொட்டு வைக்காவிட்டால் திருஷ்டியாகிவிடும் என்று கூறி வீட்டிலேயே சுலபமாகத் தயாரிக்கக்கூடிய சாந்து ரெஸிபிகள் சிலவற்றைக் கூறினார்கள்.



நந்தியாவட்டை சாந்து : அடுக்கு நந்தியாவட்டை மலர்களை இடித்து சாறு பிழிந்து ஒரு பித்தளை தாம்பாளத்தில் தடவவும். நல்லெண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் விட்டு விளக்கு ஏற்றவும். காற்று போக சிறிது இடைவெளிவிட்டு, விளக்கைச் சுற்றி செங்கற்களை வைக்கவும். விளக்கின் சூடுபடும்படி தாம்பாளத்தைக் கவிழ்க்கவும். தாம்பாளம் நன்கு சுட்டுக் கரி படிந்ததும் இத்துடன் கெட்டி வெண்ணெயைக் குழைத்து எடுத்தால் சாந்து ரெடி.



சோற்றுக்கற்றாழை சாந்து :

"அட, இதற்கெல்லாம் நேரம் எங்கே இருக்கிறது" என்பவர்கள் சோற்றுக் கற்றாழை இலையை நீளவாக்கில் நறுக்கி விளக்கெண்ணெய் தீபத்தில் காட்டினால் உள்ளே இருக்கும் சதைப்பற்று கருத்துவிடும். வழவழப்பான இந்தச் சாற்றை வழித்து வைத்துக் கொண்டு தேவையான போது உபயோகிக்கலாம்.





ஜவ்வரிசி சாந்து :

அடுக்கு நந்தியாவட்டை, சோற்றுக்கற்றாழை கிடைக்காத நகர்ப்புறங்களில் வாழும் தாய்மார்கள் சூடான வாணலியில் ஒரு பிடி ஜவ்வரிசியைப் போட்டு கறுப்பாக ஆகும்வரை வறுக்கவும். இத்துடன் சிறிதளவு நீர் விட்டுக் கொதிக்க வைத்தால் பசை போலக் குழைந்துவிடும். இதைக் காற்றுப்புகாத டப்பியில் எடுத்து வைத்து உபயோகிக்கவும். இது உலர்ந்து கெட்டியாகிவிட்டால் சிறிது நீர் விட்டுக் குழைத்துக் கொள்ளவும்.

வசம்புப் பொட்டு :

இவை எல்லாவற்றையும் விட மிகச் சுலபமான ஓர் ஆயுர்வேத இன்ஸ்டன்ட் பொட்டு இருக்கிறது. வசம்பை (பிள்ளை வளர்ப்பான்) நெருப்பில் சுட்டு வைத்துக் கொள்ளுங்கள். தேவையான போது சிறிது நீர் விட்டு இழைத்தால் சாந்து போல வரும்.

இந்த இயற்கைச் சாந்தில் இன்னும் ஒரு வசதி என்னவென்றால் தேங்காய் எண்ணெய், சோப்பு போட்டுத் தேய்த்து சுத்தப்படுத்தும் தொல்லையும் இல்லை என்பதுதான்.

- பத்மஜா ராமகோபால்,
பெங்களூரு - 54.

குளிர்ச்சி தரும் சந்தன மை!

ஓர் அகல் விளக்கில் நிறைய விளக்கெண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றவேண்டும். ஒரு தாமிரத் தம்ளரில் சந்தனக் கல்லில் அரைத்த சந்தனத்தை தம்ளரின் அடிப்பாகம் முழுவதும் தடவவும். பிறகு, சந்தனத்தின் மீது தீபம் ஏற்ற வேண்டும். இதனைக் காற்று படாமல் மூடிவிட வேண்டும். சந்தனம் முழுவதும் கருமையாக ஆனதும் இந்தத் தீயை ஒரு தட்டில் கொட்டி வெண்ணெய், விளக்கெண்ணெய் கலந்து குழைத்து மை கூட்டில் அடைத்து தினமும் கண்களுக்கு இட்டுக் கொள்ளலாம். இந்த மை கண்ணுக்கும் நல்லது. குளிர்ச்சியாகவும் இருக்கும். அல்லது, தம்ளரின் அடிப்பாகத்தில் உள்ள சந்தனத்தின் கீழ் தீபம் எரிய வேண்டும். சிறிய 3 கல் வைத்து அதன் மேல் சந்தனத் தம்ளரை வைத்து, அதன் அடியில் விளக்கெண்ணெய் தீபம் ஏற்றவும். காற்றுபடுமாறு மூங்கில் கூடையைக் கவிழ்த்து வைக்க வேண்டும்.

- ஆர். சுபா ராமகிருட்டிணன்,
ஈரோடு - 8.

"பெண்களுக்கான சில உடல் ஆரோக்கிய சிக்கல்களுக்கு சித்த வைத்தியத்தில் சிறப்பான சிகிச்சை உண்டு" என்கிறார் டாக்டர் கோலப்ப பிள்ளை.

இவை குறித்து அவர் மேலும் விளக்குகையில், "இளம் பெண்கள் பூப்படையவில்லை என்றால் பெற்றோர் பதற்றப்படுவதுண்டு. பதினைந்து வயதுவரை கூட பூப்படையலாம். ஹார்மோன் குறைபாடு காரணமாக பூப்படையவிலை என்றா ஹார்மோன் சிகிச்சை அளிப்போம். சில சமயம் கர்ப்பப்பை போதிய வளர்ச்சி அடையாதது, எலும்பில் போதிய கால்சியம் இல்லாதது, ரத்தசோகை ஆகியவற்றின் காரணமாகவும் இப்படி நேரலாம். மருந்துகள் மூலம் இவற்றை சரிசெய்து இயல்பாக மலரும் கட்டத்தை அடைய வைக்கலாம்.



சூதகவலி (dysmenorrhoea) என்பது இயல்புதான். இடுப்பெலும்பு மற்றும் இடுப்புத் தசைகள் பலவீனமாக இருந்தாலும், ஹார்மோன் குறைபாடு, சத்துக் குறைபாடு, பயம், டென்ஷன் போன்றவற்றாலும் இது ஏற்படலாம். வளர வளர சரியாகிவிடும்.

மாதச் சிக்கல்கள் மறைந்துவிடும்

வலி மிகவும் அதிகமானால் தசைகளை உறுதியாக்கவும், இடுப்பெலும்புக்கு பலம் சேர்க்கவும் மருந்துகள் உண்டு.

வெள்ளைப் படுதல் (leucorrhoea) என்பது மாதவிலக்குக்கு சற்று முன்பும் பின்பும் நடைபெறலாம். குழந்தைக்கு பாலூட்டும் காலகட்டத்திலும், கர்ப்பவதியாக இருக்கும்போதும், மிகவும் சீக்கிரமாக பெண்கள் பூப்படையும் போதும், மெனோபாஸ் சமயத்திலும் இப்படி நேரலாம். இது தானாகவே சரியாகிவிடும். ஆனால் தொடர்ந்து முப்பது நாட்களுக்கு மேல் இது இருந்து, அரிப்பு, எரிச்சல் ஏற்பட்டு, ரத்தக்கசிவுடன் துர்நாற்றமும் ஏற்பட்டால் மருத்துவரை கலந்து ஆலோசிக்க வேண்டும். உடல் காரணங்கள் போன்றவை மட்டுமல்ல, தொற்றுக் கிருமிகளும், சானிடரி நாப் கின் காரணமாக ஏற்படும் ஒவ்வாமையும் கூடக் காரணமாக அமையலாம். வெள்ளைப்படுதலை நீர்க் கசிவு என்போம்.



குழந்தைப் பேறின்மை கணிசமானவர்களை வாட்டுகிறது. கருப்பைக் கோளாறு, சினைப்பை சிக்கல்கள், பிட்டியூடரி மற்றும் தைராய்டு ஹார்மோன் கோளாறு, உடல் அமைப்பு (முக்கியமாக இடுப்பு எலும்பு), சீரின்றி வரும் மாதவிலக்கு போன்றவை இதற்குக் காரணமாக இருக்கலாம். கரு முட்டை உருவாகவும் மாதவிலக்கு சீராக வருவதற்கும் சித்த வைத்தியத்தில் சிறப்பான மருந்துகள் உண்டு

பெண்களுக்கு நாற்பது வயதுக்கு மேல் மெனோபாஸ் ஏற்படலாம். அப்படி ஆனவுடனே "எலும்பு தேய்மானம்" அடைந்துவிடும் என்று பலரும் பதறுகிறார்கள். ஈஸ்ட்ரஜன் ஹார்மோன் சுரப்பது நின்று விடுவதால் மனநிலையில் குழப்பம் ஏற்படலாம் (இது மனநோய் அல்ல). நல்ல மருந்துகளும், உரிய பயிற்சிகளும் மேற்படி அறிகுறிகளை சரிசெய்து விடும்" என்கிறார் டாக்டர் கோலப்ப பிள்ளை.

டாக்டர். M. கோலப்ப பிள்ளை, தாம்பரம், சென்னை.
போன்: 044-2239 4384, 2226 4384


நாஞ்சில் நாட்டுச்
சமையல்
ருசியோ ருசி 3
நெய் அப்பத்துக்கு கருப்பட்டி வேணும்... விருதுநகர் பரோட்டாவுக்கு வீச்சுத் தெரியணும்... பலே பருப்பு ரசத்துக்கும், கொத்துக் கடலைக் குழம்புக்கும் என்ன தெரியணும்...? புரட்டிப் பாருங்க! புரிஞ்சுப்பீங்க!
நளபாகச் சக்ரவர்த்தி
ஜேக்கப்



நெய் அப்பம்

– சீதா

தேவையான பொருள்கள் :

கருப்பட்டிப் பாகு - 1 கப்,
அரிசி மாவு - ½ கப்,
மைதா - ½ கப்,
ஏலக்காய் - 5,
தேங்காய் (துருவியது) - ½ கப்,
சோடா உப்பு - ½ டீஸ்பூன்,
எண்ணெய் - 1 லிட்டர்.

செய்முறை :

★ கருப்பட்டி முதல் சோடா உப்பு வரை உள்ள அனைத்துப் பொருள் களையும் சேர்த்துக் கலக்கவும்.

★ சற்று தளர்வாக, தோசை மாவு பதத்துக்குக் கலக்கி 1 மணி நேரம் ஊறவைத்துக் கொள்ளவும்.





★ பின்னர் வாணலியில் எண்ணெ யைச் சூடாக்கவும். எண்ணெய் நன்றாகக் காய்ந்ததும், கலக்கி வைத்துள்ள மாவை குழிக்கரண்டியில் எடுத்து ஒவ்வொரு கரண்டியாக ஊற்றிப் பொரிக்கவும்.

★ மிதமான தணலில் வைத்துப் பொன்னிறமாகப் பொரிக்கவும்.

★ மறுபக்கமும் திருப்பி விட்டு வேகவிடவும். சுற்றிலும் ப்ரவுன் கலரில் பொரிந்ததும், சூடாக எடுத்துப் பரிமாற வும்.

★ கருப்பட்டி கிடைக்காதவர்கள், பனை வெல்லம், பனங்கற்கண்டு போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.





விருதுநகர் பரோட்டா

– இளவேனில் வில்சன்

தேவையான பொருள்கள் :
மைதா - ½ கிலோ,
உப்பு - தேவைக்கேற்ப,
சர்க்கரை - 2 டீஸ்பூன்,
எண்ணெய் -
பொரித்தெடுக்க தேவையான அளவு.

செய்முறை :

★ மைதா, உப்பு, சர்க்கரை சேர்த்து பரோட்டா பதத்துக்கு மாவு பிசைந்து கொள்ளவும். (மைதா மாவை எத்தனை முறை சலிக்கிறீர்களோ அந்த அளவுக்கு பரோட்டாவும் மென்மையாக இருக்கும்).

★ ஒரு மணி நேரம் நன்கு ஊற விடவும். பின்னர் சிறு சிறு உருண்டை யாக ஆக்கி பின்னர் பரோட்டா போல வீசிக் கொள்ளவும்.

★ ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றிச் சூடான பின்னர், வீசி வைத்த பரோட்டாவைத் தட்டிப் போட்டுப் பொரித்து எடுத்துக்கொள்ளவும்.

★ சூடான சுவையான விருதுநகர் பரோட்டா தயார்.

★ 'பரோட்டா'வை பனியன் துணி போல இலேசாக வீசி வீசி, மடிக்க சிறிது பயிற்சி தேவை. பொறுமை யுடன் முயன்றால் அருமையான, மடிப்பு மடிப்பான பரோட்டா தயாரிக்க லாம்!





கொத்துக்கடலை குழம்பு

—இந்திரா கிருஷ்ணமூர்த்தி

தேவையான பொருள்கள் :


கொண்டைக்கடலை - ¼ கிலோ,
எண்ணெய் - 3 டேபிள் ஸ்பூன்,
கடுகு - 1 டீஸ்பூன்,
வரமிளகாய் - 4 - 5,
கறிவேப்பிலை - சிறிது,
வெங்காயம் - 2,

பலே பருப்புரசம்

—வரலட்சுமி

தேவையான பொருள்கள் :

எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்,
கடுகு - 1 டீஸ்பூன்,
வரமிளகாய் - 4 - 5,
கறிவேப்பிலை - சிறிது,
கொத்துமல்லி - 1 கட்டு,
மிளகு, சீரகம் - 1 டேபிள் ஸ்பூன்,
பூண்டு - 5 பல்,





மஞ்சள் தூள் - சிறிது,
மிளகாய்த் தூள், மல்லித் தூள் - 1 டேபிள் ஸ்பூன்,
பெருங்காயம் - 1 டீஸ்பூன்,
வெல்லம் - சிறிது,
கடலை பருப்பு - 100 கிராம்,
கொள்ளு, துவரம் பருப்பு - 50 கிராம்,
புளி - எலுமிச்சை அளவு (கரைசல்)
தக்காளி - 4 - 5 (பொடியாக நறுக்கியது)
உப்பு - தேவையான அளவு.

தக்காளி - 3 ,
சீரகம் - 1 டீஸ்பூன்,
மிளகு - 2 டீஸ்பூன்,
கொத்துமல்லி விதை - 2 டீஸ்பூன்,
தேங்காய் - 1,
பூண்டு - 3, புளி - சிறிது, உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை :

★ தேங்காயை உடைத்து பூவாகத் துருவிக் கொள்ளவும்.

★ தக்காளியை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

★ வாணலியில் அரை டீஸ்பூன் எண்ணெய் விட்டு சீரகம், மிளகு, மல்லி, பூண்டு, காய்ந்த மிளகாய் சேர்த்து வதக்கவும்.

★ அதிலேயே தேங்காய்த் துருவல், கறிவேப்பிலை சேர்த்து வதக்கி அரைத்துக் கொள்ளவும்.

★ கொண்டைக்கடலையை முதல் நாள் இரவே ஊறவைத்து நன்றாக வேகவைத்துக் கொள்ளவும்.





செய்முறை :

★ சீரகம், மிளகு, பூண்டு இவற்றைச் சேர்த்து அரைத்துக்கொள்ளவும்.


★ மூன்று பருப்பு வகைகளையும் சேர்த்து மசிய வேகவைத்துக் கொள்ளவும்.

★ ஒரு பாத்திரத்தில் எண்ணெய் சேர்த்து அதில் கடுகு, கறிவேப்பிலை, வரமிளகாய் சேர்க்கவும்.

★ கடுகு பொரிந்தவுடன் அரைத்து வைத்த கலவை, நறுக்கிய தக்காளி மற்றும் பொடி சேர்த்து வதக்கவும்.

★ இத்துடன் வேகவைத்த பருப்பு மற்றும் பெருங்காயம், உப்பு, வெல்லம் சேர்த்து, தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவும்.

★ ரசம் நுரைத்து வரும்பொழுது கொத்துமல்லித் தழையைச் சேர்த்துப் பரிமாறவும்.



★ புளியை வெதுவெதுப்பான நீரில் ஊறவைத்து, சாறு எடுத்துக் கொள்ளவும்.

★ ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டுச் சூடாக்கவும். அதில் கடுகு, கறிவேப்பிலை, மிளகாய் சேர்த்து அத்துடன் பொடியாக நறுக்கிய வெங்காயத்தைச் சேர்த்து வதக்கவும்.

★ பின்னர் இத்துடன் தக்காளி, புளிக் கரைசல் மற்றும் அரைத்த மசாலாவைச் சேர்த்து தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விடவும்.

★ குழம்பு நன்றாகக் கொதித்தவுடன், வேகவைத்த கடலை மற்றும் உப்பு சேர்க்கவும்.

★ எல்லாம் சேர்ந்து குழம்புப் பதம் வந்ததும், ருசி பார்த்து இறக்கவும். கொத்துமல்லி சேர்த்துப் பரிமாறவும்.

நளபாகப் போட்டி–14 (முடிவு)

பிப்ரவரி 2008ல் இடம்பெற்ற போட்டியின் விடை

விடைகள் :

1. பிஸ்தா, 2. வெனிலா, 3. ஃபலூடா, 4. மேங்கோ, 5. சேமியா, 6. உப்புமா, 7. பொங்கல், 8. பாவ்பாஜி, 9. பேல்பூரி, 10. கிச்சடி

வந்து குவிந்த கூப்பன்களில் ரூ. 150/- பரிசு பெறும்
20 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு வாழ்த்துகள்!

1. சு. மைதிலி, திருவனந்தபுரம், 2. கு. கலைவாணி, புதுச்சேரி, 3. கிரிஜா, செகந்திராபாத், 4. எஸ். மீனாக்ஷி, கல்பாக்கம், 5. எஸ். உமா பார்வதி, திருச்சி - 18, 6. சாவித்ரி, மும்பை - 83, 7. சந்திரா சேஷாத்ரி, கேரளா, 8. சந்திரிகா ரவிச்சந்திரன், இராசிபுரம், 9. மலர்மதன், தூத்துக்குடி, 10. எம். கிருஷ்ணவேணி, மதுரை - 14, 11. எஸ். சூர்யகுமாரி ஏகநாதன், பெங்களூர், 12. பிரேமா பிரகாஷ், சேலம் - 7, 13. கு. ஸ்ரீவித்யா, தருமபுரி - 1, 14. லலிதா, ஹைதராபாத் - 16, 15. கீதா சுந்தர்ராஜ், பாலக்காடு, 16. எம்.ராதா, மடிப்பாக்கம், 17. ர. லட்சுமி, ஹோசூர், 18. மங்களம் ஜெயராமன், ஈரோடு - 9. 19. பி. நந்தினி, கரூர், 20. பி.லல்லிபாய், திருநின்றவூர்.



ஒவ்வொரு வாக்கியத்திலும் ஓர் இனிப்பின் பெயர் ஒளிந்திருக்கிறது. பத்து இனிப்புகளையும் கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்!

1. சீன மன்னர் ஜிங் ஜாங் கிரிவலம் சென்றார்! ....
2. ஏன்தான் இப்படி அலட்டுகிறாயோ? ....
3. அரச குல்லா அணிவது ஒரு தனிகம்தான். ....
4. அங்கே சரி என்று கூறிவிட்டு, இங்கே தப்பு என்றால் எப்படி? ....
5. ''அட போப்பா சந்தியா என் தங்கை மாதிரி'' என்றான் சுந்தரம். ....
6. ''அடடா, உங்க வீட்டுக்குள்ளே தேள் பூந்திருச்சா'' என்று பதறினாள் சின்னம்மை. ....
7. அக்பர் பாதுஷா அனைத்து மதங்களிடமும் மரியாதை செலுத்தினார். ....
8. கோபால் கோவாவில் பத்து நாள் தங்கிவிட்டு வந்தான். ....
9. ''உன்னை அன்பால் பேணி வைத்ததற்கு நல்ல வெகுமதி தந்தாய்'' என வெடித்தாள் சந்திரமதி. ....
10. ''உன் அச்சம் சம்பளம் குறைவாக இருக்குமோ என்பதுதானே?'' ....

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

இங்குள்ள புதிரைச் சரியாக நிரப்பி வெட்டி மங்கையர் மலருக்கு அனுப்புங்க. குலுக்கல் முறையில் 20 பேருக்கு 150 ரூபாய் பரிசு! ஜெராக்ஸ் அனுப்பக் கூடாது!

கடைசித் தேதி : 15.3.2008

உறையின் மீது நளபாகப் போட்டி - 15 என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....

டூர் 64!

மே மாத 'குட்டி புக்'

அன்பு வாசகியரே... மங்கையர் மலர் மே மாத இதழுடன் இணைப்பாகத் தரப்படவிருக்கும் உங்கள் பிரியத்துக்குரிய குட்டிபுக்கில் பயணம் சம்பந்தமான பயனுள்ள யோசனைகள் இடம்பெறவிருக்கின்றன.

டிக்கெட் ரிசர்வேஷன் செய்வதிலிருந்து, சுற்றுலா புகைப்படங்களை ஆல்பத்தில் போட்டு வைப்பது வரை... எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றனவே!


பஸ்ஸில் முட்டுக்காடு வரை போய் வரும் சிற்றுலாவோ, ரயிலில் தடதடக்கும் வடஇந்திய சுற்றுலாவோ, ஃப்ளைட் ஏறும் வெளிநாட்டு உல்லாசப் பேருலாவோ... பிரயாணத்துக்கு உதவும் முக்கியமான டிப்ஸ்களை உடனடியாக எழுதி அனுப்புங்க. ஒருவரே எத்தனை குறிப்புகள் வேண்டுமானாலும் எழுதலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் பயனுள்ள யோசனைகள் 'டூர் 64!'-ல் இடம்பெறுவதோடு, சன்மானமும் பெறும். அஞ்சலட்டையின் மீது 'டூர் 64' என்று மறக்காமல் குறிப்பிடவும்.

கடைசித் தேதி 15.3.2008







ஸ்ரீஅவ்வை ஹோம்

(Registered as a Public Chartitable Trust)

4/252, ஸ்ரீதேவி நகர், புளியம்பேடு,
சென்னை-600 077. போன்: 044-3200 4200



ஆதரவற்ற அன்னையருக்கு புகலிடம் அளிக்கும் ஓர் அன்பாலயம்!



பேரன்புடையீர் வணக்கம்! வேதமாதா காயத்ரி தேவியின் பேரருளாலும் அவ்வையாரின் திருவருளாலும் சமுதாயத்தினரால் நிராகரிக்கப்பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். ஆதரவின்றித் தவிக்கும் வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் இலவசமாகப் பூர்த்தி செய்து, தினசரி இறைவழிபாடு, தியானம், கூட்டு பிரார்த்தனை செய்து பராமரித்து வருகிறோம். அன்னையர்களின் கூட்டுப் பிரார்த்தனையால் தங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். ஆதரவற்ற அன்னையரின் வாழ்வில் மகிழ்ச்சி, மலர்ச்சி, வாழ்க்கையில் பிடிப்பு ஆகியன ஏற்படுத்தித் தர உங்கள் அன்பளிப்புகளையும் நன்கொடைகளையும் பொருளாகவோ தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். வயதான அன்னையருக்கு தாங்கள் செய்யும் சிறு உதவியும் நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தை குளிரச் செய்வதற்கு இணையாகும்.

ஒரு நாள் காலை உணவுக்கு ரூ.400/- அனுப்பும் அன்பர்களுக்கு துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் மதிய உணவுக்கு ரூ.450/- அனுப்பும் அன்பர்களுக்கு ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் இரவு உணவுக்கு ரூ.350/- அனுப்பும் அன்பர்களுக்கு நவரத்தின மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் உணவுக்கு ரூ.1100/- அனுப்பும் அன்பர்களுக்கு ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்

10 நாட்கள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு பவள மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்

அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1300/- அனுப்பும் அன்பர்களுக்கு சந்தன மாலை அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்பும் அன்பர்களுக்கு முத்துமணி மாலை அனுப்பி வைக்கப்படும்

தங்களின் திருமண நாள், பிறந்த நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், பண்டிகை நாட்கள், அமாவாசை மற்றும் பௌர்ணமி, கிருத்திகையில் வயதான அன்னையர்களுக்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எதுவாயினும் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅவ்வை ஹோமில் அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ.300/-

காயத்ரி வழிபாடு உலக வழிபாடு: அது ஆன்மாவுக்கு புத்துயிர் அளிக்க வல்லது. மேலும், காயத்ரி வழிபாடு நமக்கு நீண்ட ஆயுளையும் ஆற்றலையும், புகழ், செல்வத்தையும் அளிக்கிறது. காயத்ரி மூல மந்திரம் பாவங்களை அழித்து, புண்ணியத்தை வளர்ப்பதற்கு தோன்றிய மந்திரமாகும். நோய் நொடிகளை தவிடுபொடியாக்கும் சக்தி இதற்கு உண்டு. குடும்ப பிரச்சனைகள், தோஷங்கள், வியாபார தடைகளை போக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இந்த காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணமாக ரூ.300/- அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் தெளிவாக எழுதி அனுப்பினால், தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனியாக சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம், ஸ்ரீ காயத்ரி மகா மந்திரம், மகா மிருத்யுஞ்சய மந்திரம் மற்றும் ஜெப மாலா அடங்கிய சிடியும், காயத்ரி வண்ணப்படமும், காயத்ரி தேவி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும். காயத்ரிதேவியின் மகா மந்திரம் அனைத்து இல்லங்களிலும் ஒளித்து ஐஸ்வர்யம் பெற வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.



வயதான அன்னையரை பாதுகாக்கவும் ஸ்ரீகாயத்ரி ஹோமத்தில் பங்கு பெறவும் தங்கள் நன்கொடையை மேற்கண்ட முகவரிக்கு **Cheque/DD/MO** மூலமாக **SRI AVVAI HOME, CHENNAI** என்ற பெயருக்கு அனுப்பி காயத்ரி தேவியின் திருவருளால் பூரண ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று, துன்பங்கள் நீங்கி, புகழ் மிகுந்த வாழ்க்கை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

துணை

தனலட்சுமி கருப்பையா

மனத்தில் கலவரம் குடி கொண்டது. கேவலம் ஒரு நாய், சாதாரண ஒரு தெரு நாய் என்னை ஒரு வழி பண்ணாமல் விடாது போலிருக்கிறதே! பால்கனியில் நின்று, மெதுவாக எட்டிப் பார்த்தேன். அந்தக் கறுப்பு நாய் அதே சமயம், சொல்லி வைத்தாற்போல், கேட்டுக்கு வெளியே நின்றவாறு என்னை ஏறிட்டுப் பார்த்தது. அந்தப் பார்வை! 'உனக்கு இரக்கமே இல்லையா?' என்று கெஞ்சுவது போல் ஒருகணம், 'நான் உள்ளே வந்தால் உனக்கென்ன?' என்று முறைப்பதுபோல் ஒருகணம், 'எப்படியும் நான் உள்ளே வந்துவிடுவேன் பார்!' என்று மிரட்டுவது போல் ஒருகணம், எனக்கு மாறி மாறித் தோன்றியது. ''சூ'' என்று விரட்டினால், நாயானது ஓடித்தான் பார்த்திருக்கிறோம். இதுவானால், மாலை நாலு மணியிலிருந்து, இப்படி அழிச்சாட்டியம் பண்ணிக் கொண்டிருக்கிறதே!


முதலிலேயே இதை காம்பவுண்டுக்குள், விட்டுப் பழக்கியது தப்பு. விரட்டியடித்திருக்க வேண்டும். ஆனால் கீழ்ப் போர்ஷனில் குடியிருக்கும் மீனாட்சிக்கு இரக்க சுபாவம் அதிகம் என்பதைவிட, தன் சின்னஞ்சிறு குழந்தைகள் வைத்து விடும், மிச்சம் மீதியைத் தின்ன ஒரு ஆள் வேண்டும் என்ற எண்ணம் அதிகம். இடுப்பிலிருக்கும் குழந்தைக்கு, நாயை வேடிக்கை காட்டி ஊட்டியது போக, மீதியிருக்கும் பால் சோற்றை அப்படியே கவிழ்த்து விட்டுப் போய் விடுவாள்.

கறுப்பு நாய்க்கும், எங்கள் வீட்டுக்குமுள்ள உறவு இப்படி வந்ததுதான். கறுப்பு நாய் கேட்டுக்கருகில் வந்து, மெல்லத் தள்ளிப் பார்த்தது. முடியவில்லை. மறுபடியும் என்னை மேலே அண்ணாந்து பார்த்துவிட்டு, தெருவோரம் இருந்த குப்பைத் தொட்டியருகே போய் நின்றுகொண்டது. ''முனுசாமி'' என்ற குரலுக்கு, ''என்னம்மா?'' என்றவாறு கீழ்ப் போர்ஷன் படிக்கட்டில், உட்கார்ந்திருந்த முனுசாமி எழுந்து நின்று, மேலே நோக்கினான். ''இன்னிக்கு நீ வீட்டுக்குப் போக வேணாம். ஏதாவது சாப்பிட்டுட்டு, இங்கேயே படுத்துக்கோ. நாயிருக்கிற இருப்பைப் பார்த்தால், எப்படியும் உள்ளே வந்துடுமோன்னு பயமாயிருக்கு'' என்றேன். ''ஆகட்டும்மா. எத்தனை நேரம் தான் இப்படி ஆட்டம் காட்டும்னு பார்க்கிறேன். இதை விரட்டிட்டுத்தான் மறுவேலை. நீங்க கவலைப்படாம போய் உக்காருங்க'' என்றான். எழுபது வயதுக் கிழவன் முனுசாமி, அடிக்கடி, வீட்டைச் சுற்றி நான் போட்டிருக்கும் கிச்சன் கார்டனை கொத்தி விட, பந்தல் போட, என பல சில்லறை வேலைகளுக்கு உதவியாக வருவான்.

நாலு நாளைக்கு முன் அவன்தான் சொன்னான். ''மாடிப் படி வளைவுக்குக் கீழே பள்ளம் தோண்டிக் கிடக்கும்மா.

பயத்துடனும், எச்சரிக்கையுடனும், நாங்கள் விழித்திருக்க, தெரு நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது!

பெருச்சாளி வேலையாயிருக்கும்போல''
என்று மண்வெட்டியை எடுத்து,
இழுத்து மூடிட்டுப்போ



முனுசாமி என்று பதிலளித்தபோது, இது இவ்வளவு பெரிய தொந்தரவுக்குக் காரண மாகப் போகிறது என்று நினைக்கவில்லை. கோடை விடுமுறைக்கு கீழ்போர்ஷன் மீனாட்சி, குழந்தைகளுடன் சொந்த ஊருக் குச் சென்றுவிட்டதும், நானும் அவசிய மானால் தவிர, மற்ற சமயங்களில், கீழே இறங்க முடியாத உடல்நிலையாலும், சுற்றுப்புறம் சற்றுக் கவனிப்பில்லாமல் போய்விட்டது உண்மைதான். அதிலும் இந்த காம்பவுண்ட் மரகேட் வேறு, மேல் கொக்கி கழன்றுவிட்டதால்,சும்மா ஒப்புக்குத்தான் சாத்தி வைப்போம். பலமாகக் காற்றடித்தால்கூட வாயைப் பிளந்துகொண்டு

நிற்கும். பால்கனி ஓரத்தில் நாற்காலியைப் போட்டு உட்கார்ந்து கொண்டு உள்ளே வரும் பால்காரன், காய்கறிக்காரி, போஸ்ட் மேன் என்று வர்க்க பேதமில்லாமல், ''கொஞ்சம் கேட்டைச் சாத்திட்டுப் போப்பா'' என்றவாறு உட்கார்ந்திருப்பேன். இந்தக் கறுப்பு நாய் மட்டும், சுவாதீனமாக உள்ளே நுழைந்து மீனாட்சியின் பால் சோறு கிடைக்காமல் ஏக்கத்துடன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, வாலை ஆட்டியவாறு, வெளியே போவதைப் பார்த்திருக்கிறேன். ''சூ'' என்ற என் சத்தத்தைக் கேட்டு மேலே நிமிரும். அது ''மீனாட்சியம்மாளைப் பார்க்க வந்தேன். இன்னும் வரவில்லை போலிருக்கு'' என்பது போல், 'ஜென்டிலா' என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'விடுவிடு' என ஓடிவிடும்.



மிருதுவான ஆப்பம் கிடைக்க, மாவு ஆட்டும் பொழுது தேங்காய்த் துருவல் மற்றும் வாழைப் பழத்தைச் சேர்த்து அரைத்து வைத்து ஆப்பம் வார்த்தால் சூப்பர் ஆப்பம் ரெடி.

- என்.பி. சிவகாமி செல்வம், குஜராத்.

இரண்டு நாளைக்கு முன், முனுசாமி மறுபடியும் கீழேயிருந்து கத்தினான். ''பாருங்கம்மா, அன்னைக்குத்தான் இழுத்துப் போட்டு மூடி லெவல் பண்ணிட்டுப் போனேன். இன்னிக்கும் பறிச்சுக் கிடக்கு! அம்மோய்! இது கறுப்பு நாயோட வேலை. நிறை வயிறா கத்திக்கிட்டு, குட்டி போட இடம் தேடிக்கிட்டிருக்கு.''

சிரமத்தைப் பாராமல் கீழே போனேன். ''முனுசாமி, பள்ளத்தில் முள்ளை வெட்டிப் போட்டு மூடு. கேட்டை கயிற்றால் கட்டிவிடு. தேவைப்பட்டா அவிழ்த்துக்கலாம். நாயை நம் வீட்டுப் பக்கம் பார்த்தாலே விரட்டியடி,'' என்று எச்சரித்து வைத்தேன். இந்த ஒரு வாரமும் நிம்மதியாக இருந்தது. இன்று மாலையிலிருந்து மறுபடியும் தொல்லை ஆரம்பித்துவிட்டது. முனுசாமியும் ''ஆமம்மா, நாய் குட்டி போட்டுடிச்சுன்னா அந்தப் பக்கம், நாம போகவே முடியாது. மேலவிழுந்து பிடுங்கிடும். பெரிய தொந்தரவாப் போயிடும்,'' என்றவாறு முள் வெட்டப் போனான்.

மணி பத்துக்கு மேலாகியும் கறுப்பு நாய் போவதாயில்லை. துணைக்கு ஜோடி நாயையும் சேர்த்துக்கொண்டு நிறை மாத வயிறு கனத்துத் தொங்கச் சுற்றிச் சுற்றி வந்தது. நேரம் ஆக ஆக, வலி அதிகமாக அதன் உறுமலும், ஈனக்குரலும் விட்டு விட்டு எழும்பியது. முனுசாமி விரட்டினால் தெருமுனைக்குப் போகும். பத்து நிமிஷத்தில் திரும்பவும் வந்து, பூட்டிக் கிடக்கும் கேட்டையே ஏக்கத்துடன் பார்க்கும். மணி பன்னிரண்டாகியது. நாய் ஈனமாக உறுமியவாறு நிலை கொள்ளாமல் தவித்ததைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், தொப்புளைச் சுற்றி ஊசி போடுவதை நினைத்துப் பார்க்கும்போதே என் உடல் நடுங்கியது. நானும் முனுசாமியும், தகரங்களைக் கொண்டுவந்து, கேட்டை அடைத்து, பெரிய கற்களை எடுத்து முட்டுக் கொடுத்தோம். பயத்துடனும், எச்சரிக்கையுடனும், நாங்கள் விழித்திருக்க,

தெரு நிம்மதியான உறக்கத்தில், ஆழ்ந்திருந்தது. எப்பொழுது தூங்கினேனோ திடுக்கென்று விழித்து, ஓடி வந்து பார்த்தபோது, முனுசாமி கேட்டுக்கருகிலேயே கோணியை விரித்துத் தூங்கிக்கொண்டிருந்தான். பால் போன்ற நிலவொளியில் கறுப்பு நாயின் சுவடே தெரியவில்லை. எங்கே போனதோ தெரியவில்லை. போய் நிம்மதியாகப் படுத்து உறங்கினேன். மறுநாள் காலை முனுசாமி தகவல் கொண்டு வந்துவிட்டான். ''அந்த டீக் கடை, பெட்டிக் கடையிலே, கறுப்பு நாய் மூணு குட்டி போட்டிருக்கும்மா. நல்ல வேளை ராப்பூரா முழிச்சு விரட்டியடிச்சோம். இல்லேன்னா, நம்ம பாடு ஆபத்தாயிருக்கும்.''

மறுநாள் மாப்பிள்ளையிடமிருந்து போன் வந்தது. பம்பாயிலிருந்து புறப்பட்டு வரும் வழியில் எதிர்பாராதவிதமாக, சுமதிக்கு ரயிலிலேயே பிரசவமாகிவிட்டதாம். அண்டை அசலார் ஒத்தாசையுடன் ஆண் குழந்தை பிறந்து, ஒரு நர்ஸிங் ஹோமில் சேர்த்து விட்டார்களாம். மழைப்பேறும் பிள்ளைப்பேறும் மகாதேவனுக்குக் கூடத் தெரியாது என்பது உண்மை தானா? கொண்ட வீடும், கொடுத்த வீடும், கோடீஸ்வரர்களாக இருந்தும், கை நிறைய சம்பாதிக்கும் கணவன் இருந்தும், அனாதை போல சுமதிக்குப் பிரசவம் நடக்க வேண்டுமென்பது விதியின் செயலா? என் கண்கள் கலங்கின. காரணமில்லாமல் கறுப்பு நாயின் ஞாபகம் வந்தது. ஒரு நிறை சூலியை, இடம் கொடுக்க மறுத்துத் தவிக்க விட்டதன் பலனா இது? முனுசாமியின் குரல் படபடப்புடன் ஒலித்தது.

''அம்மா, இந்தக் கறுப்பு நாயைப் பாருங்கம்மா. டீக்கடைக்காரர் ஒரு குட்டியை எடுத்து யாருக்கோ கொடுத்திருக்கார். இது மிச்சம் இரண்டு குட்டிகளையும் ஒவ்வொண்ணா, வாயிலே கவ்விக்கிட்டு வந்து, நம்ம மாடிப்படிக்கு கீழே படுத்துக்கிச்சு.''



உங்கள் குழந்தை ஆசை ஆசையாய் வரைந்த பெயிண்டிங்க்ஸ் சில நாட்களில் கலர் மங்கி விடுகிறதா? கவலை வேண்டாம். சிறிது ஹேர் ஸ்பிரேயை பெயிண்டிங் மேல் அடியுங்கள். பெயிண்டிங் மங்காமல் வருடக்கணக்கில் அப்படியே இருக்கும்.

- நஸிஹா ஹஃபீஸ்,
கீழக்கரை.

அவசரமாய் ஓடிப் போய்ப் பார்த்தேன். கறுப்பு நாய் என்னை ஏக்கத்துடன் பார்த்தவாறு, குட்டிகளை வயிற்றுக்கடியில் இடுக்கிக்கொண்டது.

'வெளியே போனால் ஆபத்து. என்னை விரட்டாதே. நான் ஒரு பக்கமாய் இருந்து விட்டுப் போகிறேன்' என்பதுபோல் பரிதாபமாய்ப் பார்த்தது.

''இது இங்கேயே இருக்கட்டும் முனுசாமி. கிண்ணத்தில் பாலும், தட்டு நிறைய சாதமும் தர்றேன். பிள்ளைத்தாய்ச்சி. ரொம்பப் பசிக்கும். கொஞ்சம் போட்டுட்டுப் போ. ஒரு பழைய கோணியைக் கீழே போட்டு, ஒண்ணை மறைவாக் கட்டு'' என்றேன் பரிவுடன்.

பீறிட்டெழும் என் இரக்கத்தின் காரணம், முனுசாமிக்கு நிச்சயமாய்ப் புரிந்திருக்காது. ●

சிவராத்திரி

மாசி மாதத்தில் பௌர்ணமிக்குப் பிறகு வரும் 14-வது நாளே மகாசிவராத்திரி. சிவராத்திரியைப் பற்றிக்கூறும் வரலாறுகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

★ திருமாலும், பிரம்மனும் அடிமுடி தேடியும் காணாத அருட்பெருஞ்ஜோதி, திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாகத் தோன்றிய தினமே சிவராத்திரி.

அரியும் யானும் முன்தெடும்
அவ்வனற்கிரி அலை
கிரியெனும்படி நின்றதால் அவ்வொளி
கிளர்ந்த
இரவதே சிவராத்திரி ஆயினது

என்று கந்தபுராணத்தில் பிரம்மா கூறுகிறார்.

★ உமாதேவி தன் திருக்கரங்களால் பரமேச்வரனின் திருக்கண்களை மூடிய குற்றம் தீர, ஆகம விதிப்படி சிவபெருமானை நான்கு ஜாமங்களிலும் பூஜை செய்து வழிபட்ட தினமே சிவராத்திரி.



★ தேவரும் அசுரரும், பாற்கடல் கடைந்தபோது தோன்றிய, ஆலகால விஷத்தை சிவன் உண்டு, அதைத் தன் கழுத்திலேயே நிறுத்திய ராத்திரியே சிவராத்திரி. அன்று தேவர்கள் சிவனைப் பூஜை செய்தது போலவே நாமும் பூஜை செய்து, நல்ல நிலை பெறவேண்டுமென்று ஞான நூல்கள் கூறுகின்றன.

முடிந்த வரை அருகிலிருக்கும் சிவன் கோயில்களுக்குச் சென்று, சிவனை தரிசனம் செய்து வழிபடுதல் நன்று. முடிந்தவர்கள் ஸ்படிகம் அல்லது மற்ற கல்லாலான சிவலிங்கத்தை பால், சுத்தமான தண்ணீர், தேன், விபூதி, வில்வம் இவற்றால் யஜுர் வேதத்தில் வரும் ஸ்ரீருத்ரம், சமகம் முதலியனவை தனக்கே தெரிந்தாலோ, சாஸ்திரிகளைக் கொண்டோ பாராயணம் செய்து, சிவ அபிஷேகம் செய்வது மிகவும் விசேஷம்.

காலையில் நீராடி, தூய ஆடை அணிந்து, "சிவனே! இன்று சிவராத்திரி விரதம் இருக்க விரும்புகிறேன். அதற்கு

மகிமை!

உகந்த மனநிலையையும், சூழ்நிலையையும் தந்து அருள். ஆசை, கோபம், மோகம் போன்ற விரோதிகளால் நான் துயரப்படாமல் இருக்க அனுக்ரஹம் செய்வாய்'' என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். (இந்தப் பிரார்த்தனையைத் தினம் தோறும் செய்வது நல்லது.) பிறகு பகல் முழுவதும் ஜபம், தியானம், நாமசங்கீர்த்தனம், பாராயணம் போன்றவற்றில் ஈடுபட வேண்டும். மாலையில் வீட்டில் ஒரு தூய்மையான இடத்தில் அல்லது பூஜை அறையில் சிவன் படத்தையோ அல்லது சிவலிங்கத்தையோ அலங்காரம் செய்து பிரதிஷ்டை செய்ய வேண்டும். இரவு 4 காலமும் பூஜை செய்ய வேண்டும். (ஒரு ஜாமம் என்பது 3 மணி நேரம். மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை 4 ஜாமம்). இரவு 11.30 மணி முதல் 1 மணி வரை லிங்கோற்பவக்காலம்.




இதுவே மாலும் பிரம்மனும் அடிமுடி தேடிச் சென்றபோது, ஜோதிப்பிழம்பாக நின்ற நேரம். இரவு முழுவதும் கண்விழிக்க முடியாதவர்கள் குறைந்தபட்சம் 'லிங்கோற்பவ' காலத்திலாவது கண்டிப்பாகக் கண்விழித்துப் பூஜை செய்ய வேண்டும்.

ஒரு வில்வ மரத்தடியில் சிவராத்திரி அன்று, சிவன், பார்வதி பேசிக் கொண்டிருந்த போது, அந்த மரத்திலிருந்த குரங்கு ஒன்று தானும் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்தது. தூக்கம் வராத குரங்கு, வில்வ இலைகளைப் பறித்து சிவன் மேலும் பார்வதி மேலும் வீசியபடி இருந்தது. சிவராத்திரியில் 4 கால (ஜாம)ங்களிலும் தூங்காமல் குரங்கு வீசிய வில்வ இலைகளை ஏற்று, சிவபெருமான் அந்த முசுக்கலையை (குரங்கை) முசுகுந்த சக்கரவர்த்தியாய்ப் பிறக்க அருள் புரிந்தார். அருள் பெற்ற குரங்கும் சிவராத்திரியில் பூஜை செய்து தான் பெற்ற பாக்கியத்தை உலகம் அறியும் பொருட்டு, முசுகுந்த மன்னனாகத் தான் வாழும் காலத்திலும் குரங்கு முகத்துடனேயே இருக்க வேண்டும் எனக் கேட்டது. சிவனும் அப்படியே அருள் புரிந்தார். (விரதம் இருந்து உயர்ந்த நிலை அடைந்த பிறகும், விரத நினைவையோ, விரதத்தையோ விடவில்லை என்பதே குறிப்பு.) அப்படியே அந்தக் குரங்கு முசுகுந்தனாகப் பிறந்து, சோழர் குலப்புகழ் இந்திர உலகிலும் பரவும்படி ஆட்சி புரிந்ததை நமக்கு சிலப்பதிகாரம், மணிமேகலை, கலிங்கத்துப் பரணி முதலியன காட்டுகின்றன.

'சிவராத்திரி' அன்று, இரவு முழுவதும் பகவன் நாம ஸ்மரணை செய்தால், புண்ணியம் அதிகம் என்பதால்தான் கண்விழிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் புண்ய தினத்தில், இரவு தூங்கும் நேரத்தைக் கூட மிச்சப்படுத்தி பகவத் ஸ்மரணை செய்தால், அதிக பலன். அது இல்லாமல் சீட்டாடுதல், படம் பார்த்தல் முதலியவை செய்தால் பாவம்தான். கண் விழித்திருந்து பாவம் செய்ய வேண்டுமா? இதற்கு நல்ல எண்ணங்களுடன் உறங்குவதே மேலல்லவா?

தொகுப்பு : கோழியாலம் நந்தகுமார்

நன்றி : 'சிவ பூஜை' (கிரி டிரேடிங் ஏஜென்ஸி)



தனி வீடு கட்டுபவர்கள், ஸோலார் வாட்டர் ஹீட்டரும், ஸோலார் விளக்கும் பொருத்த வேண்டியது மிகவும் அவசியம். இதனால் மின்சாரம் பெருமளவில் மிச்சப் படுவதுடன் மின்வெட்டுச் சமயத்தில் மிகவும் உபயோகமாக இருக்கும்.

வீடு கட்டும் இடம் புதியதாக உருவாகும் காலனியாக இருந்தால் அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் சேர்ந்து ஸோலார் தெரு விளக்கு அமைத்துக் கொண்டால் காலனிக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கும்.

சீலிங் போடும் போது வராண்டாவில் ஊஞ்சல் மாட்ட கொக்கி ஒன்றைப் பதித்து விட்டால், ஊஞ்சல் இல்லையென்றாலும் அலங்கார விளக்குகள், விண்ட் செம், மணி, குரங்கு பொம்மை போன்றவற்றைத் தொங்கவிடலாம். சமயத்தில் தூளி கட்டவும் உபயோகமாகும்.

வாஷ்பேஸின்கள், சிங்க் இவற்றின் அடியில் கட்டாயமாக 'காக்ரோச் ட்ராப்' எனப்படும் ஜாலியைப் பொருத்திவிட்டால் கரப்பான்பூச்சி வருவதைத் தடுப்பதுடன், டிரைனேஜிலிருந்து பைப்பை கடித்துவிட்டு எலி வருவதையும் தடுக்கலாம்.

கம்மோடுக்கு பக்கத்தில் 'ஹெலத் ஃபாஸெட்' பொருத்துவது சுகாதாரத்திற்கு அவசியமானது. டாய்லெட் போன பிறகு இதைக் கொண்டு சுத்தம் செய்வதால், தண்ணீர் பின்னோக்கி பீய்ச்சப்படுகிறது. அதனால், யூரினரி இன்ஃபெக்ஷன் வராமல் தடுக்கலாம்.

ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட படுக்கை அறை ஜன்னல்களுக்கு திரைச் சீலைகளுக்குப் பதிலாக 'வெர்டிகல் பிளைண்ட்ஸ்' போட்டால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அதிக வெளிச்சம் வருவதையும் தடுக்கலாம்.

- நிர்மலா கிருஷ்ணமூர்த்தி,
பெங்களூரு- 64.



ஓமப்பொடி செய்யும்போ ஓமத்தை பொடித்தோ அல்லது அரைத்து வடிகட்டியோ சேர்ப்போம். அதைவிடக் கடையில் கிடைக்கும் ஓமவாட்டரை கொஞ்சம் கலந்து செய்தால் மொறுமொறவென்று மிக வாசனையாகவும், சுவையாகவும் இருக்கிறது.

- சுலோச்சனா வாசுதேவன், தாம்பரம்.

புதிய வடை!



நாம் குழந்தையாக இருந்தபோது, நமக்குச் சொல்லப்பட்டதும், நாம் நம் குழந்தைகளுக்குச் சொன்னதுமான காக்கா - நரி கதை தெரிந்ததுதானே!

காகத்தை ஏமாற்றி... பாட்டுப் பாடச் சொல்லி, வடையை எடுத்துப் போனது நரி... சிறிது காலத்துக்குப் பின் காகம் ஏமாறாமல் வடையைக் காலில் வைத்துக் கொண்டு பாடி, நரியை ஏமாற்றியது என்றோம். இது நல்ல நீதி இல்லையே!

ஒரு பாட்டி மரத்தடியில் அடுப்பை மூட்டி, வடை சுட ஆரம்பித்தாள். மரத்தின் மேல் அமர்ந்து ஒரு காகம் இதைப் பார்த்துக்கொண்டிருந்தது. ஈர விறகானதால், மூட்டிய அடுப்பு எரியாமல் பாட்டி கஷ்டப்பட, மரத்தில் இருந்த காகம், ''பாட்டி! அடுப்பு எரியலையா? கவலைப்படாதே. நான் மரத்திலிருக்கும் காய்ந்த சுள்ளிகளை உடைத்துப் போடுகிறேன்... அதை வைத்து அடுப்பை எரிய விடு'' என்று சுள்ளிகளை உடைத்துப் போட, பாட்டியும் சிரமமின்றி அடுப்பை எரியவிட்டு வடையைச் சுட்டாள்.

காகத்திடம், ''இந்தா! நீ சுள்ளி உடைத்துப் போட்டதற்கு ஒரு வடை... சாப்பிடு!'' என்று பரிவோடு கொடுக்க, காக்கையும் வடையுடன் சந்தோஷமாகப் பறந்து சென்றது.

இதனால் கஷ்டப்படுவோருக்கு உதவி செய்ய வேண்டும்; திருடாமல், அன்போடு கொடுப்பதை வாங்கி உண்ண வேண்டும் என்ற நீதி தெரிகிறதல்லவா?

(இலக்கியச் சிந்தனையாளர் சாரதா நம்பிஆரூரன் சொன்ன கதை...)

கேட்டவர் : சங்கரி வெங்கட், புதுபெருங்களத்தூர்.





நண்பர்கள், உறவினர்களுக்கு பணம் கொடுக்கும் போதும், வாங்கும் போதும் கூச்சப்படாமல் எண்ணி வாங்குங்கள். கவனக்குறைவால் பணத்தை குறைவாகக் கொடுத்திருக்கலாம். நீங்க கொடுத்தால் சரியாகத்தான் இருக்கும் என்று கூறி எண்ணாமல் பணத்தை வாங்கிக் கொள்வதால் பின்னர் பணக்குறைவு ஏற்பட்டால் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதே!

- லலிதா செல்லப்பா, பம்மல்.



"இப்போதெல்லாம் 10-12 வயசுலேயே வயசுக்கு வந்துடறாங்க! எம் பொண்ணுக்கு 16 ஆகுது! ஏஜ் அட்டெய்ன் பண்ணலை!"

"வயசுக்கு வந்தப்ப தீட்டு பட்டதோட சரி, மூணு மாசம் நாலு மாசத்துக்கு ஒருமுறை வருது. மாசா மாசம் வர்றதில்லை!"

"மென்சஸ் வந்தாலே நரகம்தான். வயித்து வலியால துடிச்சுப் போயிடறேன். கால்வலி, தலைவலி, டென்ஷன்... ஒரே பிரச்னைதான்!"

"ஏன் இப்படி எரிஞ்சு விழறான்னு தெரியவில்லை. வயசு 45 ஆகுதே. மெனோபாஸாக இருக்குமோ?"

இப்படி பெண்கள் பூப்படைந்ததிலிருந்து மாதவிடாய் நிற்கும் பருவம் வரை, தொடர்ந்து பலவிதங்களில் மாதவிடாய்ப் பிரச்னைகள் பெண்களை மிரட்டி அடித்துக் கொண்டு இருக்க அடிப்படைக் காரணம் என்ன?

ஹார்மோன்களின் சரிவிகித மின்மைதான்.

மிரட்டும் மாதவிடாய்

"ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் சீராக பட, கருப்பை, கருமுட்டைப்பை, தலையில் உள்ள பிட்யூட்டரி சுரப்பி என எல்லாமே ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அது மட்டுமல்ல! பிட்யூட்டரி சுரப்பியை கன்ட்ரோல் செய்யும் "ஹைபோதலாமஸை" சாதாரண டென்ஷன் கூட மாற்றி அமைத்துவிடும். தேர்வுபயம், வேலைப்பளு, மனபயம், மனக்கவலை என மனப்பிரச்னைகள் மாதவிடாயை நான்கைந்து நாட்கள், மாதம் என தள்ளிப்போக வைக்கலாம். பிட்யூட்டரி சரியாக வேலை செய்து, கருமுட்டைப் பையைச் சரியாகத் தூண்டுகிறதா என்பதை அறிய, மருத்துவர்கள் FSH, LH, Prolactin ஹார்மோன் டெஸ்டுகளை எழுதிக் கொடுப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

FSH ஹார்மோன், கருமுட்டைப் பையில் உள்ள முட்டையை வளரச் செய்து, வெளியேற்றும். அந்த முட்டை

சினைக்குழாயை அடைந்து கர்ப்பம் தரிக்கும். கருமுட்டைப்பையில் 'ஈஸ்ட்ரோ ஜன்' எனப்படும் ஹார் மோனைச் சுரக்க வைக்கும். பெண்மைக்குரிய வனப்பைக் கொடுப்பது இந்த உடல் ஊக்கிதான்.



டாக்டர்
ஆர்.ஞானசம்பந்தம்

LH ஹார்மோனானது, ஒரு பெண் கருவுற்றதும், 'புரொஜெஸ்ட்ரான்' என்ற ஹார்மோனைச் சுரந்து, கருவை வளர வைக்கும். கருவுறாதபட்சத்தில், கருப்பையில் உள்ள உட்சுவரைச் சிதைய வைத்து கருவுற்ற முட்டையுடன் 'மென்ஸஸ்' ஏற்பட வைத்து விடும். கருமுட்டைப் பையிலோ, கருப்பையிலோ கோளாறுகள் இருந்தால், மாதவிடாய்ப் பிரச்னைகள் ஏற்படலாம் அல்லவா? எனவே தான் 'ஸ்கேன்' மிகவும் அவசியமாகிறது. இதன் மூலம், கருப்பையில் தோன்றும் நீர்க்கட்டிகள் (Poly Cystic Ovarian Disease), ரத்த கூழ்க்கட்டி (Chocolate Cyst), கருப்பைக் கட்டிகள் (Fibroids), இடம் மாறிய திசுக்கள் (Adenomyosis, Endometriosis) என, பல பிரச்னைகளை ஸ்கேன் துல்லிய மாகக் காட்டிவிடும்.

ஒரு பெண்ணுக்கு மாதவிடாய்ப் பிரச்னை என்றால், முதன்மையாக மனம் மகிழ்ச்சியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பிட்யூட்டரி, கருமுட்டை பை, கருப்பை நலமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஒரு பெண் சரியான வயதில் பூப்படையவில்லை என்றால் எளிதில் அறிந்து கொள்ளலாம். வயதுக்கேற்ற வளர்ச்சி, நோய் நொடியின்மை ஆகியவற்றையும் கவனத்தில்

கோளாறுகள்!

கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும். ஒருசிலருக்கு, பூப்படைந்தபின் ஓரிரு ஆண்டுகள் தாறுமாறாக இருக்கும். உறுப்புகள் நல்ல வளர்ச்சி அடையும் வரை, இந்தப் பிரச்னை இருக்கலாம். பிறகு சரியாகிவிடும்.

பெரும்பாலான இளம்பெண்களுக்கு தற்காலத்தில், கருமுட்டைப் பையில் நீர்க் கட்டிகள் மாதவிடாய்க் கோளாறுகளை ஏற்படுத்துகின்றன. தேவையில்லாமல் உதடு, கன்னம், கைகால்கள், நெஞ்சு, வயிறு என முடி வளர்ச்சி இருந்தால் பெரும்பாலும் கருமுட்டைப்பையில் நீர்க்கட்டிகள் இருக்கும். ஒரு சிலருக்கு, ஆண்களைப் போல முன் தலை, உச்சி என முடி அடர்த்தி குறைந்து எண்ணெய் வைத்தால் மண்டை தெரியும் அளவுக்கு முடிப்பிரச்னையைக் கொடுக்கலாம். இது 'டெஸ்டோஸ்டீரான் ஹார்மோன்' அதிகமாவதால் ஏற்படுகிறது.

ஒருசிலர் உடல் பருமனுடன் இருப்பார்கள், தைராய்டு சுரப்பியில் கோளாறுகள் உள்ளதா என அறிந்துகொள்ளவும்.

இரத்தசோகை, என்புருக்கி (டி.பி.) என தொடர் நோய்கள் மாதவிடாயை நான்கைந்து மாதங்கள்கூட நிறுத்தி விடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.



மாதவிடாயின்போது வயிற்று வலி இளம்பெண்களுக்கு ஒரு பெரும் பிரச்னை. கருப்பை நன்கு வளராமை, விரிந்து கொடுக்காமை, கருப்பையின் நுனி சிறுத்தல், அழற்சி போன்றவை ஹார்மோன் பிரச்னைகளோடு கைகோத்து அலறவைத்து விடும். பிசைவதுபோல

வலி, வாந்தி, மயக்கம், கைகால் வலி என்று ஓரிரு நாட்கள் படிப்பையும், வேலையையும் கெடுத்துவிடும்.

மாதவிடாய் ஆரம்பிக்கும்போது முகப்பரு, ஒற்றைத் தலைவலி என்று வரலாம். ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன், செல் அணுக்களில் நீரைத் தேங்க வைப்பதால், உடல் கனத்தது போல தோன்றலாம், மார்பகவலி ஏற்படலாம்.

இப்படி அடிப்படையாக ஹார்மோன்களும், பெண்மை திசுக்களின் மாறுபட்ட வளர்ச்சியும் மாதவிடாய்ப் பிரச்னைகளைக் கொடுக்கின்றன. ஒரு பெண்ணுக்கு வயதுக்கேற்ற வளர்ச்சி, நோய் நொடியின்மை, சத்தான ஆகாரங்கள் அவசியம் தேவை. மாதவிடாய்ப் பிரச்னை ஏற்பட்டால், பெற்றோர் முதலில் கவலைப்படுவது எதிர்காலத்தைப் பற்றிதான். குழந்தைப்பேறு, மணவாழ்க்கையில் பிரச்னை ஏற்படும் என்று பயந்துவிடுகிறார்கள். ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சை மேற்கொண்டால், கவலையில்லை.

ஒரு பெண் ஆரோக்கியமாக இருக்கிறாளா என்பதை மாதவிடாயை வைத்தே சொல்லி விடலாம். கருத்தரிக்க முடியுமா என்பதையும் எளிதாகக் கூற முடியும். மாதவிடாயின் இடைப்பட்ட நாட்களில், தோராயமாக 14ம் நாள் உடல் வெதுவெதுப்பாக இருக்கும். சளி போன்று வெள்ளைப்படுதல் இருக்கும். இதற்குக் காரணம், முட்டை, கருமுட்டைப்பையில் இருந்து வெளியேறி சினைப்பை குழாயை அடைந்து கருவுறத் தயாராக இருப்பதே!

மாதவிடாய்ப் பிரச்னை என்றவுடன் ஹார்மோன் பிரச்னைதானோ என்று ஹார்மோன் மாத்திரைகளைப் போட்டுக் கொள்வது தற்காலிக திருப்தியைக் கொடுக்கலாம். அதுவே, ஆரோக்கியம் எனக் கருதிவிட வேண்டாம். அவசரக் காலங்களில் மட்டும் பயன்படுத்தலாம். வேலை வெட்டி என்றும், விசேஷம் என்றும் மாதவிடாய் தள்ளிப்போக, மாத்திரை சாப்பிடுவதைத் தவிர்த்தல் நல்லது.

ஹோமியோபதி மருத்துவத்தில், மாதவிடாய்க் கோளாறுகளைச் சீராக்குவதிலும், குழந்தைப்பேறின்மைக்கு சிகிச்சை அளிப்பதிலும் வித்தியாசமான முறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஒரு ஹார்மோன் குறைவு என்றால் அதை ஈடுகட்ட ஹார்மோன் மாத்திரைகளைக் கொடுப்பதில்லை. உடல் இயக்கத்தை பிட்யூட்டரி, கருமுட்டை பை, கருப்பை கோளாறுகளை இயற்கையாகச் செயல்படுத்துகிறோம்.

ஹோமியோபதி மருந்துகள் மனப் பிரச்னைகளுக்கு மிகவும் உகந்தது. அதனால் பல பிரச்னைகள் இதில் அடங்கிவிடும். கருமுட்டைப்பை கட்டி பிரச்னைக்கும், இதன் தோழமை பிரச்னையான மீசைதாடி வளர்ச்சிக்கும் நிவாரணம் உண்டு. செல் அணுக்களின், திசுக்களின் கோளாறுகளால் ஏற்படும் Endometriosis, Adenomyosis, Fibroid போன்ற கட்டிகளும் அறுவை சிகிச்சையின்றி குணப்படுத்த ஹோமியோ மருந்து சிறப்பாக உதவும்! ●



ஷர்ட் மாட்டும் அலுமினிய ஹேங்கர் உடைந்து விட்டால் தூக்கி எறியவேண்டாம். 3, 4 துண்டுகளாக உடைத்து 'S' அல்லது 'N' வடிவில் வளைத்துக் கொண்டால், அதில் பெல்ட்டுகள், தொப்பிகள், குடைகள், பைகள் போன்றவற்றைத் தொங்க விடலாம்.

– டி.கே. சீத்தாலட்சுமி, திருவேற்காடு.



R.S. PATHY HERBO

அறிமுக விழாவில்

திரு. கருமுத்து கண்ணன் அவர்கள்

HERBO ROLLON PACK

வெளியிட அதனை

திரு. மு.க. அழகிரி அவர்கள்

பெற்று கொண்டார். நடுவில்

நிர்வாக இயக்குநர்

திரு. S. உமாபதி அவர்கள்

நூற்றாண்டு வெற்றி பயணத்தில் ஒரு சாதனை



R.S. PATHY HERBO
10 ml Roll on Pack

Dealers Contact Ph.: 0452-2346716



சுப யாத்ரா

எண்.43, தெற்கு மாட வீதி,
(சித்ரகுளம் எதிரில்) மயிலாப்பூர், சென்னை-4
Ph : 2495 0218, 24952319



ஷிரிடி பாபா தரிசனம்	பிரதி வாரம் வியாழக்கிழமை
4 நாட்கள்	ரயில், பஸ் மற்றும் தங்கும் வசதி ரூ.2200/-

மந்திராலயம், நவபிருந்தாவனம்		**பண்டரிபுரம், துல்ஜாபூர், சோலாபூர்**	
03.04.2008	08.05.2008	27.03.2008	01.05.2008
3 நாட்கள் ரூ.2000/-		3 நாட்கள் ரூ.2000/-	

காசியாத்திரை	8 நாட்கள் ரூ.6000/-	09.06.2008

சாய்சரண்

முதியோர் இல்லம்
Ph : 2495 0218, 24952319

தங்கள் வாழ்க்கையில் முதுமை கட்டத்தில் உள்ள தூய்மை உள்ளங்களுக்கென்று பிரத்யோகமாக ரம்யமான சூழலில் ஆறுதல் சேவை அளிக்கும் இல்லம். அத்தகைய பெரியோர்கள் மற்றும் நன்கொடை அளிப்பவர்கள் அணுகவும்

சென்ற இதழ் கதைச் சுருக்கம் :

உயர்ந்த எண்ணம், எளிய வாழ்க்கை கொண்ட புரட்சிப் பெண்ணின் மாடர்ன் மகள் சுஜனா. சுஜனாவுக்குக் கல்யாணம் பேசப்படுகிறது. அமெரிக்க மாமியார் திருமணச் சடங்குகள் சீர்செனத்திப் பற்றிப் பேச, சுஜனா கோபத்தில் மாப்பிள்ளை வீட்டாரை எடுத்தெறிந்து பேசி விடுவாளோ என பயப்படுகிறாள் சுஜனாவின் தாய்.

நடப்பதையெல்லாம் அமைதியாய்க் கவனித்துக் கொண்டிருந்த பாஸ்கர் பேச ஆரம்பித்தார்.

''எங்க குடும்பத்தில் இதுவரை நடந்த கல்யாணங்களெல்லாம் ரொம்ப எளிமையாத் தான் நடந்திருக்கு. சம்பிரதாயச் சடங்குகளெல் லாம் விஸ்தாரமா செய்யற பழக்கமே எங் களுக்கு விட்டுப் போச்சு. சீர்செனத்தி விஷய மெல்லாம் நீங்கதான் சொல்லணும்...''

ஸ்ரீகாந்தின் அப்பா, மனைவி பக்கம்

''இதெல்லாம் நம் கலாச்சாரத்தை நிலைநிறுத்தணும்கற தவிப்பால் தான். நாங்க கல்யாணத்துக்கு மறு படியும் இவ்வளவு தூரம் வரணுமில் லையா? திரும்பிப் போறதுக்கு நீங்களே இங்க ஏற்பாடு செய்துட்டா நல்லது...''

நானும் பாஸ்கரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டோம். நடுவில் என் மாமியார் தன் பங்குக் கு

தெலுங்கு மூலம் : அப்பூரி சாயாதேவி | தமிழில் : சாந்தா தத்



பார்த்தார். உடனேயே ஒரு நீண்ட பட்டியலை எங்கள் முன் பாய் போல் விரித்தாள் அந்த அம்மாள்.

''வெள்ளி பானகக் குடங்கள், வெள்ளி ஒப்பனைப் பெட்டிகள், மாப்பிள்ளைக்கு வைர மோதிரம், மைனர் செயின், அந்தந்தச் சடங்கு களுக்கேற்ப மாமியார் மற்றும் நாத்தனாருக்கு கெட்டிச் சரிகைப் பட்டுப் புடைவைகள், கல்யாணப் பெண்ணுக்கு சந்திரஹாரம்... ஒட்டி யாணம்... வங்கி... கங்கணம்... வைரத்தோடு... இவையெல்லாம் போக, திருமணச் சத்திரம் மற்றும் மேடைக்கு விசேஷ பூ ஜோடனை... மிக கிராண்டான சாப்பாடு மற்றும் சிற்றுண்டி வகையறாக்கள்.. இரட்டை நாயனம், மேள தாளம், ஜானவாச ஊர்வலம், மறு விருந்து, கட்டுசாதம், இசைக் கச்சேரி, இவ்வளவுதான்'' என்றாள் ஸ்ரீகாந்தின் அம்மா.

சித்தம் கலங்கிவிடும் போலிருந்தது எனக்கு. எங்கள் பாட்டி சொல்லியிருந்த அவரது கல் யாண வைபவ விசேஷங்கள் ஞாபகம் வந்தது.

சொல்ல ஏதுமில்லை என்பது போல் மௌனமாக அமர்ந்திருந்தோம் நானும் பாஸ்கரும்.

''நீங்க ரொம்ப நாளா அமெரிக்காவில் இருந்தும் நம்ம பழக்கவழக்கங்களைப் பாதுகாக்க, இவ்வளவு மெனக்கெடறது சந்தோஷமா இருக்கும்மா'' என்று சான்றிதழ் வழங்கினார்.

என் மாமனாரோ செய்தித்தாளில் புதைத்த தலையை மீட்க முயலவே யில்லை.

பெண்ணும் பையனும் கீழே வந்த னர். இருவர் முகங்களிலும் ஏகமாய் மலர்ச்சி தெரிந்தது. இப்போது சோபாவில் அருகருகே அமர்ந்தனர். மணமேடையில் மணை மீது உட்காருவதுதான் பாக்கி என்பது போலிருந்தது அவர்களது உடல் மொழி.

''என்னம்மா... எங்க பையனைப் பிடிச்சிருக்கா?'' ஸ்ரீகாந்தின் அம்மா கேட்ட போது, கன்னத்தில் குழி விழச் சிரித்தாள் சுஜனா.

புதிய அலை!



''சரி... நாங்க கிளம்பறோம். மத்த விஷயங்கள் அப்புறம் பேசிக் கொள்ளலாம்..''

வாசல் வரை சென்று அவர்களை வழியனுப்பி உள்ளே வந்தோம்.

சுஜனா முகத்தில் உற்சாகம் ஊற்றாய்ப் பொங்கியது. ''ஹி இஸ் சச் அ சார்மிங் மேன்!'' என்றாள், நாங்கள் எதுவும் கேட்காமலேயே!

''அப்ப உனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குன்னு தெரியறது'' என்றார் பாஸ்கர்.

''அஃப்கோர்ஸ்...!''

''ஆனால்...'' பலத்த யோசனையுடன் நான் இழுத்தபோது, எல்லா விழிகளும் என் மீது படிந்தன.

''அமெரிக்காவில் இருந்தும் ரொம்ப பழைய கால மனுஷங்களா, பேராசை பிடிச்சவங்களா இருக்காங்க. இல்லே?''

''என்னம்மா பேசறே நீ. அமெரிக்காவில் இருக்கறவங்களைப் போய் பழைய கால மனுஷங்கன்னு சொல்றே. பேராசைப்படறதுக்கு அவங்க என்ன இல்லாதவங்களா...?'' சட்டெனச் சொன்னாள் சுஜனா.

''கல்யாணம் கொஞ்சம் விமரிசையா அவங்க அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி நடக்கணும்கற ஆசை அவங்களுக்கு...'' இது மாமியார்.

''எங்க கல்யாணம் எவ்வளவு எளிமையா புதுமையா நடந்ததுன்னு உங்களுக்குத் தெரியாதா? இவங்க ஆசைப்படற அளவுக்கு ஆடம்பரமா கல்யாணம் செய்து, இல்லாத அந்தஸ்தை காட்டிக் கொள்ளணுமா நாம்...?'' கோபமாய்க் கேட்டேன்.

''ஏன்... நாம் அவ்வளவு கூட வசதியில்லாதவங்களா...?'' சண்டை போடுவது போல் கேட்டாள்.

''நீண்ட காலமா அமெரிக்காவில் இருந்து கொண்டு வேலை பார்க்கும் அந்தப் பையன் ஏதுமறியாதவன் போல் சீர் செனத்தி விஷயமெல்லாம் அப்பா அம்மாவிடம் விட்டுடறது என்ன? அமெரிக்கா போய் என்ன படிச்சு, என்ன புரட்சி சாதிச்சாப்பல...'' ஆவேசத்தால் உடம்பெல்லாம் எரிந்தது எனக்கு.

அப்போதுதான் சொன்னாள் சுஜனா. ''உன் புரட்சிக் கருத்துகளால் என்னைச் சாகடிக்காதே'' என்று எரிச்சல் மேலிட.

''சம்பிரதாயப்படி எங்க கல்யாணம் நடக்கணும்னு ஸ்ரீகாந்த் எவ்வளவு ஆசைப்படறார் தெரியுமா? ஒரு சின்ன சடங்கையும் விட்டுடாம கிராண்டா நடத்தணும்னு சொல்றார்.''

''ஆசைப்பட்டா போதுமா? அந்தம்மா சொல்றதெல்லாம் செய்யணும்னா எத்தனை லட்சங்கள் வேணும் தெரியுமாடி? எதுக்கு இந்தத் தேவையில்லாத செலவெல்லாம்...?'' முதல் முறையாய் அவளைக் கண்டித்தேன்.

''என்னம்மா இது... இப்படி அல்பமா கணக்கு பார்க்கறே? நீங்க ரெண்டு பேரும் சம்பாதிச்சதெல்லாம் யாருக்காகவாம்? அமெரிக்கச் சம்பந்தம்னா சும்மாவா...?'' துளிக்கூட மரியாதையில்லாமல் பேசினாள் என் பெண்.

அமெரிக்கா என்றால் எவ்வளவு மோகம்?

ஒரு சந்தர்ப்பத்தில் நானும் என் பெற்றோரை எதிர்த்துப் பேசினேன்தான். பெரியவர்கள் கூற்றைப் புறக்கணித்து, என் உரிமைகளுக்காகப் போராடினேன். ஆனால், அப்போராட்டத்துக்குப் பின்னால் தன்மானம் இருந்தது. அப்பா, அம்மாவுக்குச் செலவு வைக்க மனம் கூசும். ஆடம்பரமாய் வாழ்க்கை நடத்துவது அவமானத்திற்குரிய அநீதியாகத் தோன்றும்.

திருமணம் என்பது கொண்டாட்டம் மட்டுமல்ல, பெரிய பொறுப்பும் கூட என நினைத்து வாக்குவாதம் செய்த நாட்கள் அவை. ஆனால், இன்றைக்கு உள்ள புதிய அலையோ, தனது சுய அடையாளத்தை, சுயமரியாதையை அழிப்பது போல அல்லவா வீசுகிறது?

கல்யாணச் செலவை விட, சுஜனாவின் அலட்டல் மனோபாவத்தை நினைத்து வருத்தப்பட ஆரம்பித்தேன்.

(முற்றும்)



தக்காளியை ரசத்திற்கு அரிந்து போட்டால், வீணாக நேரிடலாம். மிக்ஸியின் வைபரில் தக்காளி, கொத்துமல்லி, கறிவேப்பிலை போட்டு ஒரு சுற்று சுற்றி ரசம் செய்தால் மணமான, சுவையான ரசம் ரெடி.

- வி. ஸ்ரீவித்யா ப்ரசாத், கும்பகோணம்.

பாதுகாப்பான லேசர் சிகிச்சை

- தேவையற்ற ரோமங்கள் நீக்குதல்
- கரும் புள்ளிகளை நீக்குதல்
- பரு மற்றும் பருத்தழும்புகள் நீக்குதல்
- வார்ட் ரிமூவல் (Wart Removal)



Satin Skin
Laser Clinics

- சருமத்துக்குப் புத்துணர்வு அளித்தல்
- சருமத்தின் சுருக்கங்களை அகற்றுதல் (Skin Tightening)
- சருமத்தைப் பளபளப்பாக்குதல்
- சூரிய ஒளியால் சருமம் பாதிக்கபடுவதைத் தடுத்தல் (Sun Damage)
- மைக்ரோடெர்மாப்ரேஷன் (Microdermabrasion)
- பிக்மெண்ட்டேஷன் (Pigmentation)
- கெமிக்கல் பீல் (Chemical Peel)

9-30 am to 6-30 pm

* Valet Parking * Credit Cards Accepted

16, Jagannathan Road Opp. Lister Labs Nungambakkam Chennai - 600 034.
Branch- No-3 M.G. Road Sastri Nagar Adyar Chennai - 600 020.
Tel : 2821 6316 / 6332 Cell : 98408 92505



பாரம்பரிய ஜோதிடர்

துயரத்தின் பிடியிலிருக்கும் பலரும் இவர் பார்வை பட்ட பிறகு வாழ்க்கையின் உயர்ந்த நிலையை அடைந்து விடுகின்றனர்.

திருமணத்தடை, குழந்தையின்மை, கணவன் மனைவி பிரிவு, கல்வித் தடை, வேலையின்மை, கொடிய நோய்கள் போன்றவற்றை எளிமையான பரிகாரம் மூலம் இவர் தீர்க்கும் விதம் வியக்கத் தக்கது.

ஜாதகம் கணிப்பதிலும், குழந்தைகளுக்கு அதிர்ஷ்டப் பெயர் சூட்டுவதிலும் வல்லவர் இவர்.

வெளியூர் அன்பர்கள் ஒரு ஜாதகத்தின் மூன்று கேள்விகளுக்குப் பதில் பெற ரூ.150/-MO (or) D.D அனுப்பவும். ஜாதக நகல் + ரூ.5 அஞ்சல் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவர் இணைக்க வேண்டும். ஜாதகம் இல்லாதவர்களுக்கு எங்கள் பிரசன்ன முறையில் பதில் பெறலாம்.

Prof. S. பஞ்சநாதன்

வாக்குச் சித்தர் ஜோதிட நிலையம், எண். 8/27, 3rd மெயின்ரோடு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை 600 061 தொலைபேசி - (044) 22670573 , 9444453693

ரகசியங்கள் ரகசியமாய் இருக்கும். ♦ தொலைபேசி மூலம் முன் அனுமதி பெற்று வருக!

SATISFACTION GUARANTEED



தாத்தா : பி. கிருஷ்ணன்
பாட்டி : எம்.ஆர். சுந்தரிபாய்
பேரன் : ஆர். அன்பரசன்



தாத்தா : சுப்ரமணியன்
பாட்டி : லலிதா
பேரன் : பரத்ராம்



தாத்தா : எஸ். சுப்ரமணியன்
பாட்டி : எஸ். லட்சுமி
பேத்தி : எஸ். மாயா



தாத்தா : சீனிவாஸ ராகவன்
பாட்டி : எஸ். ராதா
பேத்தி, பேரன் :
ரஞ்சனி, தரண்.

என் செல்லமே!



தாத்தா : ராஜகோபாலன்
பாட்டி : ராஜலக்ஷ்மி
பேத்தி : மீரா பாகிரதி



தேட வேண்டாமே!

வெளியூருக்கு இரவு பஸ்ஸில் பயணம் செல்லும் போது காலணிகளை தனியாக ஒரு பாலிதீன் பையில் போட்டு வைத்தால் இறங்கும் போது தேடும் வேலை இருக்காது.

- மீனாக்ஷி நாகராஜன்,
பம்மல்.

இவை எல்லாமே ஆஹா 50தான்!

இரவு வாசல், கொல்லைக்கதவு பூட்டும் முன் பாத்ரூம், டாய்லெட், கட்டில் அடியில் எல்லாம் பார்த்துப் பூட்டவும். யாராவது ஒளிந்திருக்கக் கூடும்.

ஆர். பார்வதி, அம்பத்தூர்.

சுற்றுலா செல்லும் போது வெயிலின் காரணமாக அதிக தண்ணீர் தாகம் எடுத்தால் ஏலக்காயை வாயில் அடக்கி வைத்தால் தண்ணீர் தாகம் எடுக்காது.

பி.டி. விஜயராஜேஸ்வரி,
வாணியம்பாடி.

வாழைக்காய் நறுக்கும்போது அதன் பால் கையில் ஒட்டாமல் இருக்க சிறிது பொடி உப்பைக் கையில் தடவிக் கொண்டு நறுக்கினால் பால் ஒட்டாது.

- எஸ். லக்ஷ்மி,
வைத்தீஸ்வரன்கோவில்.

கண்ணாடி போடும் குழந்தைகளின் பெற்றோரா நீங்கள்? பரீட்சை சமயத்தில் இரண்டு கண்ணாடி வைத்திருக்கவும். தவறி, கீழே விழுந்து உடைந்து விட்டால், பரீட்சை எழுத சிரமப்படலாம். 2 பென்சில், 2 பேனா கொடுப்பது போல் மாற்றுக் கண்ணாடி தந்து அனுப்பவும்.

- சாரதா பாபு, பாளை.

சிட்ரிக் ஆஸிட் கிரிஸ்டல் ஒரு பாக்கெட் வாங்கி தினமும் சமைப்பதற்கு முன் குக்கர் தண்ணீரில் ஒரு சிட்டிகை தூவி விட்டால் போதும். குக்கர் உட்புறம் வெள்ளிக் கட்டிதான்.

- கே. ஜெயலக்ஷ்மி
சேதுராமன், வடபழனி.

பூண்டு சாறைக் காய்ச்சி ஆறவைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து வாதவலிகளுக்கு உள்ள பாகங்களில் சூடுபறக்கத் தேய்த்தால் வலி குணமாகும்.

- எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி - 13.

கோகுல் நிலைகுலைந்து போயிருந்தான். அவனால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. சொந்த மகன் அல்ல என்பதே முதல் அதிர்ச்சி. அதைவிடப் பெரிய அதிர்ச்சி- தான் ஒரு விலைமாதுக்குப் பிறந்தவன் என்பது!

மைத்ரேயி, தேவகி வெளிறிப் போயிருந்தார்கள். திலகம் எதுவும் பேச முடியாமல் ஊமையாக நின்றாள்.

அதற்கு மேல் அங்கு இருப்பது நாகரிகமல்ல என தேவகி, மைத்ரேயி இருவரும் வெளியே வந்து விட்டார்கள்!

கோகுல் தன் அறையில் போய் படுக்கையில் விழுந்து விட்டான். கோகுல் தன் வாழ்வில் எதற்குமே கண்ணீர் விட்டதில்லை. இன்று முதன் முறையாக உடைந்து ஒரு குழந்தை போல அழத் தொடங்கினான்.

திலகம் மெதுவாக வந்து எட்டிப் பார்த்தாள்.

அவன் அழுவதைப் பார்த்துப் பதறி, உள்ளே வந்து மெதுவாக அவனைத் தொட்டாள். ''வேண்டாம். நீ போயிடு. என் பிறப்பே அசிங்கமானது. நான் அனாதை. வேண்டாம். நீ போக வேண்டாம். நான் போயிடறேன். நான் ஈஸ்வரின் பிள்ளை இல்லை. இந்தச் சொத்துக்களை அனுபவிக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை. நான் இனி இந்த வீட்ல வாழக் கூடாது! இத்தனை நாள் மகனா என்னைக் கருதி ஆதரவு கொடுத்த உங்க ரெண்டுபேருக்கும் நன்றி. நான் போறேன்.''

வேகமாகத் தன் துணிகளை ஒரு பெட்டியில் அடுக்கத் தொடங்கினான். திலகம் பதறினாள்.

''வேண்டாம் கோகுல்! நீ போகக் கூடாது. நீ எங்க பிள்ளைதான். சட்ட ரீதியா உன்னை நாங்க தத்து எடுத்திருக்கோம்.



அமாவாசை

11

தேவிபாலா

எல்லாத்துக்கும் சொந்தக்காரன் நீதான். நீ எதுக்காகப் போகணும்?''

''இல்லை. எனக்கு எந்தத் தகுதியும் இல்லை.''

ஈஸ்வர் வந்து விட்டார்.

''என்ன சொல்றான் கோகுல்?''

''வீட்டை விட்டுப் போறானாம்...''

''எதுக்கு...?''

கோகுல் குமுறிக் கொட்டினான்.

''இதப் பாருடா. கடந்த காலத்தைப் பற்றிப் பேச வேண்டாம். இப்ப உனக்கு அப்பா, அம்மா நாங்கதான். இந்த உண்மைகளை நான் சொல்லியே இருக்க மாட்டேன். கல்யாணப் பேச்சு வந்து, அந்தப் பெண்ணும் சம்மதம் சொன்னப்ப, எனக்கு வேற வழியில்லைன்னு ஆயிடுச்சு. இந்த மாதிரி நேரத்துல உண்மைகளை மறைச்சா, நாளைக்கு வாழ்க்கைல பெரிய புயல் வீசும்னுதான் சொன்னேன். அதுக்கும், எங்க கூட நீ வாழறதுக்கும் சம்பந்தமே இல்லைப்பா.''

நிலகம் அழுதாள்.

''எங்களுக்கும் உன்னை விட்டா யாருடா இருக்கா? நீ கண் முழிச்சதே என் முகத்துலதாண்டா. உன் அம்மா நான்தான்பா. பிரசவத்துல போராடி அந்தப் பெண் உயிரை விடும்போது உன்னை என் கைல தூக்கித் தந்தா நர்ஸ். பிரசவ அறைக்கு வெளியே உன்னைக் கைல ஏந்தினவ நான்தான்பா!''

''கோடீஸ்வர ஈஸ்வருக்கு இப்ப நீ ஒரே வாரிசு. அது மட்டுமில்லை. வர்த்தக உலகத்துல புறப்பட்ட புதுப் புயல் நீ. உனக்கொரு புது அந்தஸ்தை நீயே தேடிக்கிட்டாச்சு கோகுல். இனி இதுதான் பேசும். நீ படிச்சவன், புத்திசாலி. விவேகமா யோசி.''

அவன் பேசவில்லை.

''உதாரணத்துக்கு, மைத்ரேயியை எடுத்துக்கோ. அமாவாசைல ஆண் பிறந்தா திருடன். பெண் பிறந்தா விலைமகள்னு ஒரு மூடநம்பிக்கையை யாரோ வளர்த்து விட்டிருக்காங்க. இப்படி ஒரு அமாவாசை பிரச்னையை எடுத்தப்பக் கூட அந்தப் பெண் உடைஞ்சு போகலை. தைரியமா இருந்தா. அண்ணி கொடுமைகள் அவ தன்னம்பிக்கையைக் குலைக்கலை. அவ்ளோ ஏன்? உன்னை திசை திருப்பி, வித்தியாசமான ஒரு இளைஞனா உருவாக்க விதை போட்டவ அவதானேப்பா?''

''அப்பா!''

''இத்தனை வலிகளையும் தாங்கிப் படிச்சு மாநில அளவுல தேர்ச்சி அடைய முடியுமா? சாதிச்சிருக்காளே. அமாவாசை இருட்டுதான். இருட்டுல கூட நிலவு

நிலவு!



அழகுதானே? அமாவாசைல பிறந்த பௌர்ணமிடா மைத்ரேயி!''

திலகம், கோகுலின் அருகில் வந்தாள்.

''கோகுல்! இப்ப நீ என்னவா இருக்கே? இந்த உலகம் உன்னை எப்படிப் பார்க்குது? இதுதான் முக்கியம். நாங்க இத்தனை பேசியும், எங்களை உதறிட்டு நீ போகணும்னா போ. உன் ஏக்கத்துல நாங்களும் சீக்கிரம் போய்ச் சேருவோம்!''

''அம்மா!''

''என்னங்க! இதுக்கு மேல நாம் பேச எதுவுமே இல்லை. அவன் விருப்பப்படி செய்யட்டும்!''

இருவரும் வெளியேற, கோகுல் அப்படியே உட்கார்ந்து விட்டான்.



வாட்டர் குஷன் தற்சமயம் விற்பனைக்கு வந்துள்ளது. மணிக்கணக்காக டி.வி. பார்ப்பவர்களும், நெடுந்தூரம் பயணம் செய்பவர்களும், அடியில் போட்டு அமர்வதால் உஷ்ணத்தின் தாக்குதலிவிருந்து தப்பிக்கலாம்.

- என். கோமதி, நெல்லை - 7.

அதே நேரம் மைத்ரேயி - தேவகி மத்தியில் ஓர் உணர்ச்சிப் போராட்டமே நடந்து கொண்டிருந்தது.

''மழை ஆகாயத்துலேருந்து புறப்படும் போது தெளிவாத்தான் இருக்கு. விழக் கூடிய பூமியைப் பொறுத்துதானே அதோட குணங்கள் மாறுது. அதுக்காக மழைக்குனு உள்ள மரியாதை இல்லைன்னு போயிடுமா?''

''நீ என்னடீ சொல்றே?''

''இத்தனை நாள் எப்படியோ வாழ்ந்த கோகுல், இன்னிக்கு உழைப்பால உயர்ந்து சாதிச்சிருக்கார்.''

''அதனால?''

''நமக்குத் தேவை கோகுல்ங்கிற ஒரு தனிமனிதனோட உறவுதான்!''

''நீ என்ன சொல்றே?''

''வா! அங்கே போவோம். மனசு விட்டுப் பேசுவோம். அவருக்கு ஆறுதல் சொல்வோம். உடைஞ்சு போயிருக்கிற அவர் மனசை ஒட்ட வைக்கணும்மா!''

''சரிம்மா!''

இருவரும் நேராக பங்களாவுக்கு வந்தார்கள். கூடத்தில் ராஸ்வரும், திலகமும்.

மைத்ரேயி அருகில் வந்தாள். ''கோகுல் எங்கே?''

''உள்ளே இருக்கான்மா. வீட்டை விட்டே போறதா இருக்கான். நான் பல விதமா பேசிப் பாத்துட்டேன். அவனைத் தடுத்து நிறுத்த முடியும்னு எனக்குத் தோணலை. நீ முயற்சி செய்!''

மைத்ரேயி உள்ளே வந்தாள்.

கோகுல் திரும்பினான்.

''எங்கே போறதா எண்ணம்?''

''தெரியலை. அனாதைக்கு ஏது திசை?''

''சரி... நீங்க விலைமாதுக்குப் பிறந்தவர். நான் அமாவாசைல பிறந்து, அமாவாசைல மலர்ந்தவள். அதனால உங்களுக்கு சரியான ஜோடி நான்தான். நானும் உங்க கூட வரலாமா கோகுல்?''

''என்னம்மா இப்படிக் கேட்டுட்டே? எனக்கே வெளிச்சம் காட்டினவ நீதான். எங்கப்பா உயிரைக் காப்பாற்றினவ நீ. எங்க குடும்பத்துக்குக் கிடைச்ச மிகப் பெரிய சொத்து நீ.''

மைத்ரேயி சிரித்தாள்.

''ஏன் சிரிக்கறே?''

''எங்கப்பா, எங்க குடும்பம்னு ஏன் சொல்றீங்க?''

''மைத்ரேயி?''

''உங்க ரத்தத்துல இந்த உறவும், உணர்வும் ஊறிப் போச்சு. அப்படி இருக்க, இவங்களைப் பிரிஞ்சு உங்களால வெளில போக முடியுமா? இடைக்காலத்துல நீங்க போதைல மூழ்கி, பொறுப்பில்லாம அலைஞ்சப்ப, நீ எங்க பிள்ளையே இல்லைன்னு உங்களைத் தூக்கி வெளில போட்டாங்களா? அப்பவும் உங்களைத் திருத்தி வாழவைக்கத்தானே துடிச்சாங்க? அப்படிப்பட்ட பாசமான ரெண்டு பேரை உதறிட்டு வீட்டை விட்டு நீங்க வெளில போறது நியாயமா? தர்மமா? உங்க மனசாட்சிக்கு இது நியாயம்னு படுதா?''

கோகுல் ஆடிப் போனான்.

''மைத்ரேயி?''

''இவங்க ரெண்டு பேரும் உங்களுக்கு தெய்வம். எந்த நிலைக்கு நீங்க உயர்ந்தாலும், இந்தத் தெய்வங்களை விட்டு நீங்க பிரியக் கூடாது. இத்தனை நாள் இவங்க வளர்த்த வளர்ப்புக்கு உங்க நன்றிக்கடனை எப்படிச் செலுத்தப் போறீங்க கோகுல்? அவங்களை நெஞ்சுல தாங்கி, கரையேத்தற வரைக்கும் நீங்க விலகக் கூடாது. அது உங்க கடமை!''

''நான் போகலை மைத்ரேயி! அப்பா - அம்மாவை விட்டு நான் போகலை. உணர்ச்சி வசப்பட்டு வெளியே போக முடிவெடுத்துட்டேன். என் கண்களை இப்பவும் திறந்தவ நீதான்..''

சகலமும் கேட்டுக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டுக் கதவோரம் நின்றார்கள் ஈஸ்வரும், திலகமும்.

காலில் வந்து விழுந்தான் கோகுல்.

''என்னை மன்னிச்சிடுங்கப்பா!''

''எதுக்கு ராஜா? நீ எந்தத் தப்பும் செய்யலை. உன் மனநிலைல யார் இருந்தாலும், இப்படியொரு அதிர்ச்சி ஆளையே புரட்டித்தான் போடும். மைத்ரேயி திரும்பவும் உன்னை மீட்டு எங்களுக்கே தந்துட்டா..''

தேவகி முன்னால் வந்தாள்.

''இதப் பாருங்க. எந்த உண்மையும் எங்களைப் பாதிக்கலை. எங்களுக்கு ஆதரவு தந்தவங்க நீங்க. அந்த நன்றியை எப்படி நாங்க செலுத்தப் போறோம்? ஏற்கெனவே பேசினபடி, மைத்ரேயி உங்க மருமகள் ஆகட்டும். எங்களுக்கு முழுச் சம்மதம். ஏற்பாடுகளைச் செய்யுங்க.''

அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி பொங்க, ஈஸ்வர் திரும்பினார்.

''மன்னிச்சிடுங்கம்மா! எல்லாம் நடக்கும். ஆனா மைத்ரேயி மருமகளா வர்றதுக்கு மட்டும் வாய்ப்பே இல்லை.''

''அப்பா... என்ன சொல்றீங்க?''

''உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்காது. நடக்கக் கூடாது.''

மைத்ரேயி அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)



கடைகளில் விற்கும் பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்கள் வெயிலில் வைத்திருந்தால் அவற்றை வாங்கக் கூடாது. இரசாயன மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

- ஜி. சுந்தரராஜன்,
வேளச்சேரி.

ஆஹா 50!



தங்க வளையல் வாங்குவதற்கு கடைக்குச் செல்லும்போது உங்களது பழைய வளையலை அணிந்து செல்லுங்கள். அப்போதுதான் புதிய வளையலை பழைய வளையல் அளவுக்கு வாங்க முடியும். இல்லையெனில், சேர்த்து அணியும்போது ஒன்றுக்குள் ஒன்று புகுந்து கொள்ளும்.


- தீபா பாலசந்தர்,
மதுரை - 16.

சிந்திக்க வைத்த சிட்டுக் குருவி!

ஜெயா டி.வி.யில் பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் 'என்னோடு பாட்டுப் பாடுங்கள்' நிகழ்ச்சியைப் போலவே, கன்னட ஈ.டி.வி.யில் எஸ்.பி.பி. நடத்தும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.

குழந்தைகள் பங்கேற்ற ஒரு நிகழ்ச்சியில், நடுவராக வந்த பிரபல கன்னடக் கவிஞர் ஒருவர், குழந்தைகள் எப்படி பாஸிடிவ் திங்கிங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு அருமையான ஒரு கவிதை கூறினார். குழந்தைகள் மட்டுமல்ல; எல்லோருக்காகவும் அதன் சாராம்சத்தைத் தமிழில் எழுதுகிறேன் :

''தாய்க்குருவி, குஞ்சுக் குருவியிடம் கூறியது -
''யாருடன் வேண்டுமானாலும் விளையாடு- ஆனால்
அந்தக் காக்கை குஞ்சுடன் மட்டும் வேண்டாம்'
குஞ்சுக் குருவி கேட்டது - ''ஏன்மா அப்படி?''
தாய்க்குருவி கூறியது -
''நீ அதனுடன் விளையாடினால்,
அதன் கருமை நிறம் உனக்கு ஒட்டி விடும்''
குஞ்சு கேட்டது -
''ஏனம்மா அப்படி யோசிக்கிறாய்?
மாறாக, என் வெண்மை நிறம் அதற்கு வரலாமல்லவா?''



என்ன அருமையான மனப்பாங்கு!

- உமா பாலகிருஷ்ணன்,
பெங்களூர் - 97.

110 நினைவிருக்கட்டும்!

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூட இன்று கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் செல்வது சாத்தியமாகிறது.

ஆறு மாதம் தங்க விசா கிடைத்தவுடன் பறந்து செல்லும் அவர்கள், இந்தியா திரும்பி வரும்போது சூட்கேஸ்கள் நிறைய பலவிதமான பொருள்களை அள்ளிக் கொண்டு வர விரும்புகிறார்கள்.

கிலோ மீட்டர் கணக்கில் நீள அகலத்தில் காணப்படும் பல 'மால்'களைப் (சூப்பர் மார்க்கெட் போன்றவை) பார்த்தும் அசந்து போய் விடுகிறார்கள்.

பல சந்தர்ப்பங்களிலும் இந்த மால்களில் 'சேல்' என்று போட்டு, பொருளின் விலையை மிகவும் குறைத்துத் தருகிறார்கள். அதனால், தேவையோ இல்லையோ, அதை இந்தியாவில் உபயோகப்படுத்த முடியுமோ, முடியாதோ வாங்கி விடுகிறார்கள்.

இந்தியா வந்த பின், பல பொருள்களை உபயோகப்படுத்த முடியாமல் மூலையில் தூக்கி எறிந்து விடுகிறார்கள்.

இப்படித் தூக்கி எறியப்படும் பொருள்களில் முக்கியமானவை எலக்ட்ரானிக் உபகரணங்கள்.

கனடாவிலும், அமெரிக்காவிலும் உபயோகப்படுத்தப்படும் மின்சார வோல்டேஜின் அளவு 110 வோல்ட் என்பதை பலரும் அறிவதில்லை.

அதனால் ஆவலுடன் வாங்கும் பல மின்சார உபகரணங்களை உடனே உபயோகப்படுத்த முடிவதில்லை.

சில உபகரணங்களுக்கு 220 வோல்ட்டிலிருந்து, 110 வோல்ட்டுக்கு குறைக்க உதவும் - இந்தியாவில் கிடைக்கும் உபகரணத்தை வாங்கி உபயோகிக்கலாம் என்பது உண்மைதான் என்றாலும், இது போன்ற உபரியான - ஆனால், தேவையான உபகரணங்களை எல்லா இடங்களிலும் பொருத்துவது ஆபத்தானது. உதாரணமாக, தண்ணீர் படக்கூடிய இடங்களில்.

சில உபகரணங்களுக்கு இந்த உபரி உபகரணம் (220 volt to 110 volt converter) குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்றாலும், ஒருசில உபகரணங்களுக்கு இந்த உபரி உபகரணத்தின் விலை மிக அதிகமாக - ஆயிரத்தின் அருகே காணப்படும்.



வலது பக்கம் ஏன்?



மங்கையர் மலரில் 'படுத்துக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து எழுந்து உட்காரும்போது வலது பக்கம் திரும்பி எழுந்து கொள்ள வேண்டும் என்பதற்கு காந்த வளையம் காரணம்' என்று வாசகி ஒருவர் எழுதியிருந்தார்.

நான் 5 வருடங்களாக யோகப் பயிற்சி செய்து வருகிறேன். வலது பக்கம் திரும்பி எழவேண்டியதற்கு எங்கள் குரு சொன்ன மற்றொரு காரணம் இது!

படுத்திருக்கும் போது நம் உடலில் ரத்த ஓட்டம் சீராக நடந்து கொண்டிருக்கும். அதனைத் தொந்தரவு செய்யாமல் வலதுபுறம் திரும்பிப் படுத்து சில நொடிகள் இருந்து விட்டு பிறகு இடதுகையை மார்பின் முன் ஊன்றி அதனுடைய உதவியுடன் எழுந்து கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால் நமது மார்பின் இடதுபுறம் இருதயம் இருப்பதால் அதன் மேல் அழுத்தம் கொடுக்காமல் எழுந்து கொள்கிறோம். மேலும் படுத்த நிலையிலிருந்து உட்கார்ந்து பிறகு எழுந்து நிற்பது எல்லாம் அதிர்வு இல்லாமல் நிதானமாகச் செய்தால், தலைச்சுற்றல் மற்றும் பாலன்ஸ் தவறுதல் போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

– வகுளமாலா, பெங்களூர் - 70.

நாங்கள் சென்ற வருடம் அமெரிக்கா சென்றிருந்தபோது, அங்கு கொண்டாடப் படும் 'தாங்க்ஸ் கிவ்விங் டே' சமயத்தில் - (வழக்கமாக இது நவம்பர் மாதத்தில் வரும்) ஒரு 'மாலு'க்குச் சென்ற போது அங்கு ஒரு காஃபி மேக்கரைப் பார்த்தோம். சாதாரணமாக அதன் விலை 10 அமெரிக்கன் டாலர் (சுமார் 460 ரூபாய்). அன்றைய தினத்தில் அதன் விலை 5 டாலராகக் குறிப்பிடப்பட்டிருந்தது. உடனே ஆவலுடன் வாங்கி விட்டோம். டிகாக்ஷன் சேகரிக்க ஒரு கண்ணாடிப் பாத்திரமும் உண்டு. காகிதத்தால் ஆன ஃபில்டர் பேப்பர்கள் நிறைய தேவை என்றதால், அதையும் நிறைய வாங்கி வைத்துக் கொண்டோம்.

பயணம் செல்லும் நாள் நெருங்கிய போது, சூட்கேஸில் அது உடைந்து போகாமல் இருக்க, எவ்வளவு பாதுகாப்பு செய்ய முடியுமோ அவ்வளவு பாதுகாப்பு செய்து அடுக்கினோம்.

இந்தியா வந்து சூட்கேஸைத் திறந்து பார்த்தபோது, அந்தக் கண்ணாடிக் குடுவை உடைந்திருந்தது. ஆவலுடன் வாங்கிய காஃபி மேக்கரை உபயோகப்படுத்தாமல் இருக்க முடியுமா?

அதனால், கடைக்குச் சென்று வேறு ஒரு கண்ணாடிக் குடுவை வாங்கினோம் (220 ரூபாய்). அமெரிக்காவில் வாங்கிய அயிட்டம் 110 வோல்ட்டைச் சேர்ந்ததாயிற்றே. அதனால் கடைக்குச் சென்று உடரி உபகரணத்தை வாங்க அதன் விலையைக் கேட்டபோது அதன் விலை ஏறக்குறைய ஆயிரம் ரூபாய் என்றதும் அதிர்ச்சி அடைந்து அதை வாங்காமல், அதற்குப் பதிலாக இந்தியாவில் கிடைக்கும் காஃபி மேக்கரையே (சுமார் 1200 ரூபாய்) வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று தீர்மானித்து விட்டோம். அமெரிக்காவில் வாங்கிய காஃபிமேக்கர் ஒரு ஷெல்ஃபில் கிடக்கிறது!!

– கமலநாதன், திருவனந்தபுரம்.

நம்பிக்கை!



கற்பனை வளத்துடன்
கவிதை அனுப்பினேன்
கரெக்டாகத் திரும்பி
வந்தது என்னிடமே!
சிறிய கருவெடுத்துச்
சிறுகதை எழுதி அனுப்பினேன்
சிட்டாய்ப் பறந்து வந்தது சீக்கிரமே!
நம்புங்கள், நான் இன்று
அனுப்பும் கதை,
நிச்சயமாகத் திரும்பி வராது.
திரும்பி வரத் தபால்தலை
வைத்தால்தானே!

விஜிமுத்து,
மும்பை

உன்னைக் கண் தேடுதே!



எங்கு மறைந்து போனாய்
என் கண்மணியே?
உன் மேனி வழுவழுப்பை
நான் வாழ்த்தாத நாளுண்டோ?

நீ என்னுடன் இருந்தால்
இந்த உலகமே 'பளிச் பளிச்'
என் கையிலிருந்து வழுக்கி
எங்கு விழுந்து தொலைந்தாய்
என் காண்டாக்ட் லென்ஸே?

ஆஞ்ஜனேய ஸ்வாமிகளின் விசேஷமே அலாதியானது. இவரை வணங்குவோர் எவ்விதக் குறையும் இல்லாமல், மிகச் சிறப்பாக வாழ்வார்கள். பாரதப் போரில் அர்ஜுனனின் தேர்க் கொடியில் அவர் இருந்ததால் பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது என்பார்கள். அவரது மகிமையை விளக்கும் சில துதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. பரீட்சைக்கு படிக்கும் மாணவமணிகள் இந்தத் துதிகளை தியானம் செய்தால் வெற்றி நிச்சயம்.



வரம் தருவாய் வாயு மைந்தா!

கோஷ்பதீக்ருதவாராசிம்
மசகீக்ருதராக்ஷஸம் ।
ராமாயண மஹாமாலா ॥
ரத்னம் வந்தேனிலாத்மஜம்

கடலை குளம்படிப் போல் செய்தவரும், கொசுக்களை அடித்து அழிப்பது போல் அரக்கர்களை அழித்தவரும், ராமாயணம் எனும் ஒப்பற்ற மாலையின் ரத்னம் போன்று விளங்குபவரும், வாயு பகவானின் புதல்வருமான அனுமனைத் தியானிக்கிறேன் என்று இத்துதி கூறுகிறது. சிரஞ்சீவியான ஆஞ்ஜநேயரின் அருமை பெருமைகளை, பொருள் பொதிந்த எளிய வார்த்தைகளின் மூலம் அவரது பக்தர்கள் புரிந்து கொள்ள இத்துதி பெரிதும் உதவுகிறது.

உல்லங்க்யஸிந்தோ : ஸலிலம் ஸலீலம்
யச்சோகவஹ்னிம்
ஜனகாத்மஜாயா : ।
ஆதாய தேனைவ ததாஹ லங்காம்
நமாமி தம்
ப்ராஞ்ஜலிராஞ்ஜநேயம் ॥

ஸமுத்திரத்தை மிகவும் விளையாட்டாகக் கடந்து, அன்னை ஜானகியின் சோகமென்ற நெருப்பினை எடுத்துக் கொண்டு, அந்த நெருப்பினைக் கொண்டே இலங்கையை அனுமார் எரித்தார். அத்தகைய ஸாஹஸச் செயல் புரிந்த வாயுபகவானின் மைந்தனை கைகூப்பி வணங்குகிறேன். என இந்த ச்லோகம் கூறுகிறது.



ஆஞ்ஜனேயமதிபாடலானனம்
காஞ்சனாத்ரி கமனீய விக்ரஹம் |
பாரிஜாததருமூலவாஸினம்
பாவயாமி பவமான நந்தனம் ||

செந்தாமரை போன்ற முகம் உள்ளவராக விளங்குகிறார் ஆஞ்ஜநேயர். பொன் மலை போன்ற உடலினை உடையவர். பாற்கடலைக் கடைந்தபோது பல உயர்ந்த விஷயங்கள் வெளியே வந்தன. அப்படி வந்தவற்றில் ஒன்றுதான் பாரிஜாத மரம். அதை தேவேந்திரன் எடுத்துக் கொண்டான். ஸத்யபாமா விருப்பப்பட்டதனால் கிருஷ்ண பரமாத்மா அதனை அவளுடைய நந்தவனத்தில் கொண்டு வந்து வைத்து வளரச் செய்தார். அத்தகைய உயர்ந்த மரத்தின் அடியில் அமர்ந்திருப்பவர் ஆஞ்ஜநேயர்.

யத்ர யத்ர ரகுநாதகீர்தனம்
தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம் |
பாஷ்பவாரிபரிபூர்ணலோசனம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ||

எங்கெல்லாம் ஸ்ரீ ராமருடைய புகழ் பாடப்படுகிறதோ, பேசப்படுகிறதோ அங்கெல்லாம் சிரமேற்கூப்பிய கையுடனும் ஆனந்தக் கண்ணீருடன் தோன்றுபவர் ஹனுமான். 'ராம் ராம்' என எங்கெல்லாம் சொல்லப்படுகிறதோ அங்கெல்லாம் நம் கண்களுக்குத் தெரியாமல் ஆஞ்ஜநேயர் கண்ணீர் மல்க நின்று கேட்பார். அரக்கர்களுக்கு எமனாக விளங்கும் ஆஞ்ஜநேயரை வணங்குகிறேன் என இத்துதி கூறுகிறது.

புத்திர்பலம் யசோ தைர்யம்
நிர்பயத்வம் அரோகதாம் |
அஜாட்யம் வாக்படுத்வஞ்ச
ஹனூமத் ஸ்மரணாத்பவேத் ||

புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சாநெஞ்சம், ஆரோக்கியம், சுறுசுறுப்பு, சொல்வன்மை இத்தனையும் தருகிறார் ஆஞ்ஜநேயர். பொதுவாக இவை எல்லாம் ஒன்றுசேர ஒருவரிடத்தில் இருக்க வாய்ப்பில்லை. ஒன்று இருந்தால் ஒன்று இல்லை. அப்படியில்லாமல் மேற்கண்ட குணங்கள் எல்லாமும் பெற அருள் பொழிகிறார் ஆஞ்ஜநேயர்.

ஸர்வகல்யாணதாதாரம்
ஸர்வபாபப்ரணாசனம் |
அபாரகருணாமூர்திம் ஆஞ்ஜநேயர்
நமாம்யஹம் ||

அனைத்து நன்மைகளையும் அருளுபவர் ஆஞ்ஜநேயர். கருணைக்கடல். பக்தர்களின் பாபங்களை அகற்றுபவர். ராம நாமம் ஜபிப்பவர்கள் அனைவரையும் தடுத்தாட்கொள்பவர்.

அஸாத்யஸாதகஸ்வாமின்
அஸாத்யம் தவ கிம் வத |
ராமதூத தயாஸிந்தோ
மத்கார்யம் ஸாதய ப்ரபோ ||

ஆஞ்ஜனேயரால் செய்ய முடியாத, முடிக்க முடியாத காரியம் என ஒன்றும் இருக்க முடியாது. எத்தகைய அரிய செயல்களையும் இலகுவாக நிகழ்த்தக்கூடியவர். கடலைத் தாண்டி இலங்கைக்குச் சென்று, அசோவனத்தில் ஸீதையைக் கண்டு, அவரிடம் மோதிரத்தைக் கொடுத்து, சூடாமணியை வாங்கிக் கொண்டு வந்து ராமரிடம் கொடுத்துத் தன் திறமையை வெளிக்காட்டியவர். அப்படிப்பட்ட திறமை வாய்ந்த மாருதியே, என் வேண்டுகோளையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.


நன்றி : வேதாரண்யம் ராமகிருஷ்ண சர்மா தொகுத்த 'அனுமானின் தியான சுலோகங்கள்'

ஜொலிக்கும் ஃபேஷன் ஜுவல்ஸ்

29-02-2008 முதல்
31-03-2008 வரை

ஸ்ரீ பல்சானி ஜுவல்லர்ஸ்

தங்க முலாம் பூசப்பட்ட தகதகவென மின்னும் எண்ணற்ற புதிய டிசைன்கள், எண்ணிலடங்கா மாடல்கள். சொர்ணங்களின் சொர்க்கம்.



உங்களின் கண்களை கவரும் Temple Jewels பல வண்ணங்களில், பல வித டிசைன்களில் உங்கள் பல்சானி ஜீவல்லர்ஸ்-ல் இப்பொழுது மிக மிக குறைந்த விலை அறிமுகமாகி உள்ளது



ஒரு வித ஸ்பெஷல் உலோகத்தின்மேல் ½ கிராம் அல்லது 1 கிராம் தங்கம் 'கோட்' செய்யப்பட்டு உருவாக்கும் தங்க நகைகள்தான் இன்றைய பேஷன் உலகின் நவநாகரீக மங்கைகளின் உள்ளத்தில் நம்பர் ஒன் இடத்தை பிடித்திருப்பது.



இளைய தலைமுறைகளை சுண்டி இழுக்கும். வெள்ளியில் பதித்த அமெரிக்கன் டயமண்ட் நகைகள், அழகான டிசைன்களில்... குறைந்த விலையில்... பாலீஷ் போய்விடுமே என்ற கவலை வேண்டாம். மீண்டும் பாலீஷ் செய்து கொள்ள லாம். இதன் விலை ரூ.1000/- முதல் ஆரம்பம்.

நீங்கள் வாங்கிச் செல்லும் ½ கிராம் தங்க நகையை உபயோகப் படுத்திய பின் ஆறு மாதத்துக்குள்ளும், ஒரு கிராம் தங்க நகையை உபயோகப்படுத்திய பின் ஒரு வருடத்திற்குள்ளும் எங்களிடம் திருப்பித் தந்தால் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்து வேறு புதிய நகையை எங்களிடம் பெற்று மீண்டும் நீங்கள் ஜொலிக்கலாம்.

உங்கள் வாழ்க்கையில் வளம் பெற, வியாபாரத்தில் செழிக்க, கண்களை கவரும் விலை உயர்ந்த ஒரிஜினல் ராசிக்கற்களை வெள்ளியில் பதித்து 350 ரூபாய்க்கு குறைந்த விலைக்கு விற்பது நாங்கள் மட்டும்தான் இது தவிர 22 கேரட் ராசிக்கல் மோதிரமும் உண்டு. அதுவும் 100 சதவிகிதம் உத்திர வாதத்துடன்.

சிறப்புச் சலுகைகள்:

(1gm மற்றும் American Diamond நகை வாங்குபவர்களுக்கு மட்டும்)

உங்கள் நகைகளுக்கு 100% உத்திரவாதம் உண்டு

ரூ. 100 முதல் ரூ.1000 வரை மாத சீட்டும் உண்டு

ரூ. 500 முதல் 1,500 வரை வாங்குபவர்களுக்கு ஒரு ஜோடி American Diamond கம்மல் இலவசம்.

ரூ. 1,500/- முதல் ரூ. 2,500/- வரை வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Dollar இலவசம்.

ரூ. 2,500/- க்கு மேல் வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Necklace Set இலவசம்.

இந்த விளம்பரத்தை கத்தரித்து வருபவர்களுக்கு **5%** கூடுதல் கழிவு

நீங்கள் வாங்கிச்செல்லும் மூக்குத்தி ஜோடியை தோடுகள் மேல் தோடாகவும், அல் லது குழந்தைகளுக்கும் தோடாக அணிவித்து அழகுபடுத்தலாம். பரவசப் படுத்தும் எண்ணற்ற வண்ணங்களில் 22 கேரட் தங்கத்தினால் தயாரிக்கப்பட்ட விலை ரூ.100/- முதல்...

பல்சானி ஜுவல்ஸ் நகைகளை ஆன்லைன் மூலமாகவே வாங்கலாம்! எங்களுடைய புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையதளம் www.sripalsanijewels.com மூலம் நகை வாங்குபவர்களுக்கு டெலிவரிசார்ஜில் 50% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும். இச்சலுகை பிப்ரவரி 29 முதல் மார்ச் 31 வரை மட்டுமே.

SRI PALSANI JEWELS

110, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, (ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் அருகில்)

ஒரு சாப்ட்வேர் இன்ஜினியரின் நிஜக் கதை!



சராசரி பெற்றோர்களுக்கு இருக்கும் கனவு போலவே என் பெற்றோருக்கும் இருந்தது. 'மகன் கம்ப்யூட்டர் இன்ஜினியராகணும்' என்று. நானும் அப்பா-அம்மாவின் சொல் மீறாத கடமை பிள்ளையாக கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் முடித்த கையோடு யு.எஸ்ஸில் ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தேன்.

எந்த இடத்தில் இருக்க விரும்பினேனோ அங்கு வந்து விட்டேன். ஒரு ஐந்து வருடத்திற்கு இருக்கலாமென முடிவெடுத்தேன். அப்போதுதான் இந்தியா போய் செட்டிலாவதற்கு கையில் கொள்ளையாகப் பணம் சம்பாதிக்க முடியும்...

என் அப்பா ஓர் அரசு ஊழியர். வேலையிலிருந்து ரிடையர் ஆன பிறகு அவரால் வாங்க முடிந்தது ஒரு ஒன் பெட்ரூம் ஃப்ளாட் மட்டுமே!

அவரை விட சிறப்பாக நான் ஏதேனும் சாதிக்க விரும்பினேன். காலம் செல்லச் செல்ல ஒருவித ஹோம்சிக்னெஸ் வந்து வாடினேன். ஒவ்வொரு வாரமும் வீட்டுக்குத் தொடர்பு கொண்டு அப்பா-அம்மாவிடம் பேசுவேன்,சீப்பாக இன்டர்நேஷனல் ஃபோன்கார்டு போட்டு!



இரண்டு வருடம் ஓடிவிட்டது. பர்கர்ஸ், பிஸ்ஸா விழுங்கி... எப்போதேனும் டிஸ்கொத்தே போய்.. என நாட்கள் ஓடின. ரூபாய் மதிப்பு குறைந்து அந்நியச் செலாவணி ஏறியபோதெல்லாம் குபீரென்று சந்தோஷம் ஏறும்...

ரொம்ப பேர் அடிக்கத் தொடங் கியபோது திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தேன். பத்தே நாட்கள் லீவில் எல்லாம் முடிந்துவிட வேண்டுமென பெற்றோர்களிடம் கறாராகச் சொல்லி விட்டேன். எந்த ஃப்ளைட்டில் சீப்பான டிக்கெட் என பார்த்து அதில் புக் செய்தேன். பெரிய மனது பண்ணி உறவினர் நண்பர்களுக்கு பரிசுப் பொருள்கள் வாங்கினேன்.

வீட்டுக்குப் போனவுடனேயே பெண்களின் போட்டோக்களை நுட்பமாக



டபுள் பெட்ரூம் ஃப்ளாட்!

ஆராய்ந்தேன். அதிலிருந்து ஒருத்தியைத் தேர்வு செய்தேன்.

பிறகென்ன? லீவு கிடைக்காத காரணத்தினால் நான்கு நாட்களிலேயே திருமணம் நடந்தேறியது. அப்பா-அம்மா கையில் ரொக்கமாக சிறிது பணத்தைக் கொடுத்து விட்டு, புது மனைவியுடன் அமெரிக்கா திரும்பினேன்.

முதல் இரண்டு மாதம் என் மனைவிக்கு இந்த ஊர் பிடித்திருந்தது. பிறகு தனிமையை உணர ஆரம்பித்தாள். ஆதலால் இந்தியாவிற்கு வாரமிருமுறை ஃபோன்கால் போட்டு பேச ஆரம்பித்தாள். சில சமயம் மூன்று நான்கு முறை! என்னுடைய சேமிப்பு குறைய ஆரம்பித்தது.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு எங்களுக்கு ஒரு பெண்ணும், பிள்ளையும் பிறந்தனர். 'கடவுளின் அருள்' என மகிழ்ந்தோம்.

ஒவ்வொருமுறை அப்பா-அம்மாவிடம் பேசும் போதும் இந்தியா வரச் சொல்லி அழுதனர். பேரன் பேத்தியைப் பார்க்கணும் என பரிதவித்தனர். ஃபோட்டோக்களை அனுப்பி வைத்தேன்.

ஒவ்வொரு வருடமும் புத்தாண்டு பிறக்கும்போதெல்லாம் இந்தியா போக வேண்டுமென தீர்மானிப்பேன். வேலைப் பளு பாதி, பொருளாதாரப் பிரச்னை பாதி.. என தாய்நாடு திரும்ப முடியாமல் தவிப்பேன்.

வருடங்கள் ஓடிக் கொண்டிருந்தன. இந்தியா என்பது தொலைதூரக் கனவாகிப் போனது. ஒருநாள் திடீரென என் பெற்றோருக்கு உடல்நலம் சரியில்லை எனத் தகவல் வந்தது. மிகத் தீவிரமாக முயற்சித்தும் லீவு கிடைக்கவில்லை. அடுத்த தகவல்... என் பெற்றோர் இருவருமே இறந்து விட்டனர் என்று! ஈமக்கடன்கள் செய்ய யாருமில்லாது போக, பெற்ற பிள்ளை நான் தூரதேசத்தில் இருக்க, உறவினர்களே செய்து விட்டனர். தங்களுடைய பேரன் பேத்திகளை கடைசி வரை பார்க்காமலேயே கண்ணை மூடி விட்ட பரிதாபத் தாத்தா - பாட்டி!



இரு சக்கர வாகனங்களில் பயணிக்கும் போது பின்னிருக்கையில் அமர்ந்திருப்பவர், எக்காரணம் கொண்டும் 'சிக்னல்' காட்டக் கூடாது. ஓட்டுபவர் எந்தப் பக்கம் திருப்புவார் என்பதைக் கணிப்பதில் தவறாகிவிட்டால், வேகமாக பின்னால் வரும் வாகனங்களால் விபத்து நேரிடும்.

- ஆர்.கே. சுந்தரம், வடபழநி.

இன்னும் சில வருடங்கள் உருண்டோடின. என் குழந்தைகளின் வெறுப்பு ஒருபக்கம், என் மனைவியின் உற்சாகம் ஒரு பக்கமுமாக செட்டில் ஆகிடலாம் என இந்தியா திரும்பினேன்! வீடு வாங்கலாம் என தேட ஆரம்பித்தேன். ஆனால் என்னுடைய சேமிப்புக்குத் தகுந்தாற்போல் வீடு கிடைக்கவில்லை. இத்தனை வருடத்தில் இங்கும் விலை எக்கச்சக்கமாக ஏறியிருப்பது புரிந்தது. பிறகென்ன கனத்த மனதுடன் யு.எஸ். திரும்பினேன்.

என் மனைவி வர மறுத்து இந்தியாவிலேயே தங்கி விட்டாள். என் குழந்தைகள் இந்தியாவில் இருக்கப் பிடிக்காமல் என்னுடன் திரும்பினர். 'இன்னும் இரண்டே வருடத்தில் திரும்பி வருகிறேன்' என மனைவியிடம் சொல்லிவிட்டு ஃப்ளைட் ஏறினேன்.

காலம் ஓடியது. என் மகள் ஒரு அமெரிக்கனை மணம்புரிந்தாள். என் மகனோ, யு.எஸ்ஸில் தான் இருப்பேன் என திட்டவட்டமாகச் சொல்லிவிட, போதும் இனி, திரும்பி விடலாம் என தீர்மானித்தேன்.

ஒரு நல்ல ஏரியாவில் இரண்டு பெட்ரூம் ஃப்ளாட் வாங்குகிற அளவுக்கு என்னிடம் சேமிப்பு இருந்தது.

இப்போது எனக்கு வயது அறுபது. என்னுடைய ஃப்ளாட்டை விட்டு வெளியே வருவது கோயிலுக்குப் போவதற்கு மட்டுமே. சில மாதங்களில், என் அன்பான மனைவியும் என்னை விட்டுப் போய் விட்டாள். வேறெங்கே? இறைவனைத் தேடித்தான்...!

சில சமயம் தோன்றும் இதெல்லாம் எதற்காக? இவ்வளவு கஷ்டப்பட்டது அவசியம்தானா? என் அப்பா இந்தியாவில் இருந்தாலும், அவர் பெயரில் ஒரு ஒன் பெட்ரூம் ஃப்ளாட் இருந்தது. எனக்கும் ஒரு டூ பெட்ரூம் ஃப்ளாட் இருக்கிறது. இதைத் தவிர உபரியாக வேறெதுவும் இல்லை.

என்னுடைய பெற்றோர், என் குழந்தைகள் இருவரையுமே ஒரு 'எக்ஸ்ட்ரா பெட்ரூமிற்காக' இழந்தேன்.

எப்போதேனும் என் மகன் மகளிடமிருந்து என் நலம் அறிந்து கொள்ள வாழ்த்து அட்டை வரும். ஏதோ இந்த மட்டுக்கும் நினைவு வைத்திருக்கிறார்களே... தொடர்பு இருக்கிறதே... சந்தோஷம்தான்!

இனி நான் செத்த பிறகு ஃப்ளாட்டில் உள்ள அக்கம் பக்கத்தினர் அந்திமக் கிரியைகளை செய்து முடித்து விடுவார்கள். கடவுள் அவர்களுக்கு அருள்புரியட்டும்.

ஆனால் இன்னமும் ஒரு கேள்வி அரித்துக் கொண்டே இருக்கிறது. இதெல்லாம் யாருக்காக? இத்தனை சிரமப்பட்டது தேவையா? டூ பெட்ரூம் ஃப்ளாட்டிற்காக நான் வாழ்க்கையில் இழந்ததுதான் எத்தனை எத்தனை?

- இன்டர்நெட்டில் படித்த உண்மைச் சம்பவம்

- லதா சேகர், மும்பை.

ட்யூலிப் திருவிழா!

ஷங்கர் இயக்கிய 'அந்நியன்' படத்தில் வரும் 'குமாரி...' பாடல் காட்சியைப் பார்த்திருப்பீர்கள்! ஆரஞ்சு, மஞ்சள், வயலெட் என்று விதவிதமான ட்யூலிப் மலர்களின் படுகைகள் இடையே சதாவும், விக்ரமும் ஆடிப்பாடுவார்கள். அந்த மலர்களுக்குப் பெயர் போன இடம் மிச்சிகன்.

அமெரிக்க மாநிலங்களிலேயே அழகும், பசுமையும், நீர்வளமும் கொண்ட அருமையான பிரதேசம் மிச்சிகன். நவம்பர் முதல் மார்ச் வரையில் கடும் பனிமழையிலும், குளிரிலும் அவதியுறும் மக்களுக்கு, வசந்தத்தின் வருகையை அறிவித்து மகிழ்ச்சியூட்டும் வகையில் பூங்காக்களிலும், பாதையோரங்களிலும், விதவிதமான நிறங்களில்



மலர்ந்து, கண்களுக்கு இதமூட்டி விருந்தளிக்கும் ட்யூலிப் மலர்களைக் காணலாம்.

ஹ்யூரான் நதியை அடுத்துள்ள தோப்புகள், புல்வெளிகள் எங்கு பார்த்தாலும் ட்யூலிப் மலர்களின் புன்னகைதான். உயரமான காம்பின் நுனியில் பூக்கும் இவை, மலர்ந்தும் மலராத தாமரை மொட்டுக்களைப் போல் உள்ளன.

இவை முதல் முதலாக 1594 ஆம் ஆண்டில் ஹாலந்தில் வசந்த காலத்தில் மலர்ந்தனவாம்.

இந்த மலர், இஸ்தான்புல் நகரிலிருந்து Turbon என்கிற பெயருடன் இடம் பெயர்ந்து, Tulip என்றாகிவிட்டதாம். பதினேழாம் நூற்றாண்டு வரை இதை யாரும் அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை.

1929-ல் மிச்சிகனிலுள்ள டச்சுக் குடியிருப்பான ஹாலந்தில், 'ட்யூலிப்' மலர்கள் திருவிழாவை நடத்த ஆசைப்பட்ட 'லிடா ரோஜர்ஸ்' (Lida Rogers) என்கிற தாவர இயல் ஆசிரியர், அந்த ஊர் மாநகராட்சியினரிடம் கேட்டுக் கொள்ள, நெதர்லாந்திலிருந்து சுமார் 10,000 ட்யூலிப் தாவரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் மிச்சிகனைச் சேர்ந்த ஹாலந்திலுள்ள டச்சு கிராமத்தில், ட்யூலிப் திருவிழா ஏப்ரல் மாதக் கடைசியில் கொண்டாடப்படுகிறது.

அப்போது சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட ட்யூலிப் மலர்களைக் காண மக்கள் திரண்டு வருகிறார்கள். இவற்றுக்கு விதவிதமான பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. மணம் நிறைந்த சிவப்பு நிற ட்யூலிப் மலருக்கு முன்னாள் பிரபல இசைக் குழுவான 'அப்பா' (ABBA) வின் பெயரை வைத்துள்ளனர்.

இரட்டை நிறமுள்ள ட்யூலிப்புகள் இறைவனின் தூரிகையில் சிருஷ்டிக்கப்பட்ட சித்திரங்களாய் நம்மைத் திகைக்க வைக்கின்றன. ட்யூலிப் மலர்களின் காம்புப் பகுதியின் நீளம் சுமார் பத்து முதல் இருபத்தைந்து சென்டிமீட்டர்.

குழந்தைகள் ஆவலுடன் கலந்துகொள்ளும் இந்தத் திருவிழாவில், இன்னும் என்ன விசேஷம் என்கிறீர்களா?

Carousel எனப்படும் குடைராட்டினம், குட்டிக் குதிரைச் சவாரி, குழந்தைகளுக்குப் பிரியமான சாக்லேட், ஃபட்ஜ், சீஸ் ரகங்களை விற்கும் கடைகள், ஜெர்மானியக் கடிகாரங்கள், பெல்ஜியன் நாட்டுத் திரைச் சீலைகள் மற்றும் தரைவிரிப்புகள், வண்ணமயமான மரக் காலணிகள் என்று ஷாப்பிங் விஷயங்களும் நிறைய உண்டு! குளிரும் இல்லை, உஷ்ணமும் இல்லை என்கிற மிதமான, இதமான சீதோஷ்ணம். நடன, நாடகக் குழுவினர் அளிக்கும் கலை நிகழ்ச்சிகள். அருமையான முறையில் 'வீகென்'டைக் கழிக்க, இதைவிட வேறு என்ன வேண்டும்?!

- லக்ஷ்மி ரமணன், சென்னை - 4.



சுத்தியல், கத்தரிக்கோல், ஸ்க்ரூ டிரைவர் மூன்றையும் சமையலறையில் ஸ்பூன்களோடு வைத்திருக்கவும். கத்தரிக்கோல் பால் பாக்கெட், எண்ணெய் பாக்கெட் கத்தரிக்கவும் சுத்தியல் கட்டி பெருங்காயம், வெல்லத்தை உடைக்கவும் ஸ்க்ரூ டிரைவர், லூஸான குக்கர் மூடிகளை முடுக்கவும் உபயோகப்படும்.

- கே. பிரமிளா, ஹைதராபாத் - 36.

புதுசா-சந்தா-கட்டுங்க!

மங்கையர் மலர் வாசகர்களுக்கு
ஆண்டு விழாவை ஒட்டி சிறப்பு சந்தா சலுகை



ஓராண்டு சந்தா
(12 இதழ்கள்)
~~ரூ.225/-~~ **ரூ.180/-**

இரண்டாண்டு சந்தா
(24 இதழ்கள்)
~~ரூ.450/-~~ **ரூ.340/-**

இந்தச் சலுகை
மார்ச் 31 2008
வரை மட்டுமே

☐ எனக்கு ஒரு சந்தா ப்ளீஸ்

☐ என் நண்பருக்காக சந்தா செலுத்துகிறேன்.

☐ எனக்கும் என் நண்பருக்குமாக சந்தா வேணுங்க!

இத்துடன் ☐ ரூ.180/- ☐ ரூ. 340/- அனுப்பியிருக்கிறேன்.

என் முகவரி : ....

....

....

Phone / Email : ....

நண்பரின் முகவரி : ....

....

....


Phone / Email : ....



● சந்தாவுக்கான தொகையை மங்கையர் மலர் என்ற பெயருக்கு டிமாண்ட் டிராப்ட்/மணியார்டர் அல்லது சென்னை காசோலையாகவோ அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
சர்க்குலேஷன் மேனேஜர், பரதன் பப்ளிகேஷன்ஸ் (பி)லிமிடெட்
கல்கி பில்டிங்ஸ், 47-NP ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-32

இப்படியும் இருக்குமா?



என்றைக்கோ எதிர்பாராது சந்தித்த அந்த கைரேகை ஜோசியர் அண்ணாமலை, என்னுடைய எதிர்காலத் தொழிலைப் பற்றிச் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட பிறகு, தூக்கமே போய் விட்டது.

நாளும் பொழுதும் அவர் சொன்ன வார்த்தைகளே திரும்பத் திரும்ப மனத்தில் வந்து ரீங்காரமிட்டன. 'அப்படி என்ன தொழில் எனக்கு?' 'என்னவாக இருக்கும்?' என்று மனதை எப்படிக் குடைந்தெடுத்து விட்டது.

அது சரி, திடீரென்று இப்படி மொட்டையாகச் சொன்னால் எப்படி? முதலிலிருந்து சொன்னால்தானே உங்களுக்குப் புரியும்...?

என்னுடைய பெரியம்மா பையன் ராமுதான் அந்த கைரேகை

சிறுகதை



• ஜி.பி.சதுர்புஜன்

ஜோசியரை பல வருடங்களுக்கு முன்னால் எனக்கு அறிமுகப்படுத்தி வான்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலம் அது. தில்லியில் விடுதியில் தங்கி, பிரபல கல்லூரி ஒன்றில் இன்ஜினியரிங் படித்துக் கொண்டிருந்தேன். இரண்டாவது வருடம் படிக்கும்போது ஸ்டிரைக்கை வழிநடத்திச் சென்றதால், ஏதோ காரணம் சொல்லி என்னை ஆறு மாதம் கல்லூரியிலிருந்து தள்ளி வைத்திருந்தார்கள் அப்போது. அப்பா, அம்மா முகத்தைப் பார்த்துக்கொண்டு, அவர்கள் கரித்துக் கொட்டுவதைக் கேட்டுக் கொண்டு ஆறு மாதம் தள்ளுவது கஷ்டம் என்று, மதுரையிலிருந்த பெரியம்மா வீட்டில் தங்கிப் பொழுதைக் கழிப்பதாக ஏற்பாடு.

ராமு பஸ் ஸ்டாண்ட் அருகிலேயே 'விமலா ஃபுட்வேர்' என்று பெரியம்மா பெயரில் செருப்புக் கடை ஒன்று நடத்திக் கொண்டிருந்தான். 'என்ன பண்ணறதுன்னு தெரியாம அலைஞ்சுக்கிட்டிருக்கான். இவனையும் ஒன்னோட இழுத்துக்கிட்டு போ!'ன்னு பெரியம்மாதான் கடைக்கு ராமுவோடு என்னை அனுப்பி வைத்தாள். தலைக்கு மேலுள்ள ஓடுகளை மீண்டும் மீண்டும் எண்ணுவதைவிடவும், தட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளியில் தப்புத் தப்பாக அடிப்பதைவிடவும், செருப்புக் கடைக்குப் போய் உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்ப்பதே எனக்கும் பிடித்த விஷயமாயிருந்தது. அதனாலேயே, விரும்பியே தினம் தினம் ராமுவின் கடையில் ஆஜராவது என் வழக்கமாயிற்று.

இப்படி இருக்கும்போதுதான் ஒருநாள் அந்த ஆள் உள்ளே நுழைந்தார்.

வெள்ளைச் சட்டை, வெள்ளை பேண்ட், எடுப்பான மீசை. கையில் ஒரு தோல் பை. பாக்கெட்டில் துருத்திக் கொண்டு ஒரு சிறிய டைரி.

''வாங்க அண்ணாமலை அண்ணாச்சி, வாங்க! எங்கே ஆளையே காணலை?'' ராமுவின் விசாரிப்பில் ஆழ்ந்த அந்நியோன்னியம் தெரிந்தது.

''நல்ல சௌக்கியம், ராமு! நம்ம வீட்ல

The following particulars regarding the ownership of 'MANGAYAR MALAR' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total captial: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2008

Lakshmi Natarajan
Publisher

எப்படி...? பிசினஸ் எல்லாம் நல்லா ஓடுதுங் களா...?''

''ஆமாம். நீங்கதான் கடை ஆரம்பிச்ச போது, கடையை எம் பேர்ல வைக்க வேண்டாம், அம்மா பேர்ல வைங்க, அமோகமா ஓடும்னீங்க. அதான், அப்படி வெச்சேன். அண்ணாமலை வாக்கு பொய்க்குமா? ஏதோ ஒங்க புண்ணியத்துலே, ரொம்ப நல்லா ஓடிட்டிருக்கு.''

''தம்பி யாருன்னே சொல்லலியே! பாக்கறத்துக்கு நல்ல அறிவுஜீவி மாதிரி இருக்காரே...!'' அண்ணாமலைதான் அறிமுகம் தேடினார்.

''நம்ம சித்தி பையன்தான். ரொம்ப புத்திசாலி.. டெல்லிலே காலேஜ்லே படிக்கறாப்பல... இங்கே ஏதோ ப்ராஜெக்ட் பண்ணறதுக்காக வந்திருக்காப்பல...'' என்று என்னுடைய தகிடுதத்தத்தையெல்லாம் மறைத்து, ஒரு கௌரவமான சாயம் பூசி அறிமுகம் செய்து வைத்தான் ராமு.

''சேகர்! சாரு பேரு அண்ணாமலை. எக்ஸ்போர்ட் கம்பெனி வெச்சு நடத்றாரு. ஆனா, அதைவிட பெரிய விஷயம், இவரு ஒரு கைதேர்ந்த ஜோசியரு'' என்று சிலாகித்தான்.

இவ்வளவையும் கேட்டுவிட்டு சும்மா இருக்க முடியுமா? என்னுடைய கையையும் நீட்டினேன்.

''தம்பீ, நீங்க இப்ப இன்ஜினீயரிங் படிக்கறீங்க... கரெக்டா...?''

எதை வைத்து இப்படி கரெக்டாகக் கணித்தார் என்று எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ராமு, என்னைப் பார்த்து, 'பார்த்தியா என் ஜோசிய நண்பனை!' என்று பெருமிதம் தொனிக்க புன்னகைத்தான்.

''ரொம்ப கரெக்ட் சார்!''

''தம்பி நல்ல புத்திசாலிதான். நல்லா படிக்கிறவருதான். ஆனாலும் சகவாச தோஷத்தால, படிப்புல ஒரு தடை வருது''

'ஆணித்தரமாகச் சொல்கிறாரே!' நான் நெளிந்தேன்.

நிமிர்ந்து உட்கார்ந்தவர் ஆதரவுடன் என் தோளை ஒரு நிமிடம் பற்றி விட்டுத் தொடர்ந்தார்.

''ஆனா, மலை போல வந்த கவலை பனி போல போச்சும்பாங்களே, அது மாதிரிதான் உங்களுக்கும். இந்த ஆறு மாசம் கழிச்சு, நீங்க காலேஜுக்குப் போனப்புறம், படிப்பை நல்லபடியாக முடிப்பீங்க. ஒண்ணும் கவலையேபட வேணாம்!''

'அப்பாடா!' என்றிருந்தது எனக்கு.

''இன்னும் ஒரு ஆச்சரியமான விஷயம் ஒண்ணு சொல்றேன், கேளுங்க! நீங்க பின்னாடி பண்ணப் போற தொழிலுக்கும் இன்ஜினீயரிங்குக்கும் சுத்தமா சம்பந்தமே இருக்காது... சும்மா பேச்சு, பேச்சு, பேச்சுதான். பேச்சுதான் தம்பிக்கு சோறு போடப் போவுது. சோறு என்ன லட்டு, ஜாங்கிரியே போடும், ஆமாம்!''

ஆணித்தரமாக அண்ணாமலை அன்று சொல்லிவிட்டுப் போனது, அதற்குப் பிறகு

என் மனதை விட்டு அகலவேயில்லை. ஏதோ, அசரீரி கேட்ட மாதிரி, 'பேச்சே தொழில், பேச்சே தொழில்'னு என்னை அறியாமல் மனதில் வந்து வந்து போய்க் கொண்டேயிருந்தது.

ஆறு மாத அஞ்ஞாதவாசம் மதுரையில் முடித்து மீண்டும் தில்லியில் கல்லூரிக்குத் திரும்பினேன்.

எப்படியோ 'அம்மாடி அப்பாடி' என்று லெக்சரர்களின் கால்களைப் பிடித்துப் பிடித்து டிகிரியோடு கரையேறினேன்.

அப்புறம்தான் உண்மையான போராட்டமே ஆரம்பமானது எனக்கு. என்னென்னவோ வேலைக்கெல்லாம் மனு போட்டேன். எல்லாவற்றிலும் தோல்விதான்.

எங்கே பேச்சு உபயோகமாகும்? எந்தத் தொழில்?

தீவிரமாக யோசித்தேன். கூடவே, என்னுடைய பேச்சுத் திறமையை வளர்க்க பயிற்சிகள் எடுத்துக்கொண்டேன்.

மோட்டார் கம்பெனி ஒன்றில் விற்பனைப் பிரிவில் சேர்ந்து, புது மாடல் கார்களை விற்றுப் பார்த்தேன். சில நாட்களிலேயே வேலை போரடித்துப் போனது.

இதே போல இரண்டு மூன்று வேலைகள். கம்பெனிகள்...

வேறு என்னதான் என் தொழில்...? அவ்வப்போது என் கையில் ஓடும் ரேகைகளை என்னையறியாமல் பார்த்து நிற்கும் பழக்கம், எப்போது ஒட்டிக் கொண்டதென்றே தெரியவில்லை.

தொழில் ரேகை மாறிக் கொண்டிருக்கிறதா? எப்போது நல்ல வேலை, எனக்கேற்ற வேலை கிடைக்கும்?

இப்படி வேலை தேடல் நடந்து கொண்டிருக்கும்போதே, பொழுது போவதற்காக, கைரேகை சாஸ்திரப் புத்தகங்களைப் புரட்டத் தொடங்கினேன். நாளாக நாளாக கீரோ, செயின்ட் பெர்னார்ட் ஆகியோரின் கைரேகைப் புத்தகங்களே என்னுடைய படுக்கைத் துணையாயின.

நண்பர்கள் வந்தார்கள். படித்ததை வைத்து தயங்கித் தயங்கி ஜோசியம் சொன்னேன். செலவுக்கு ஏதாவது கொடுத்து விட்டுச் சென்றார்கள். என்ன ஆச்சரியம்! அதில் பலரும் மீண்டும் என்னிடமே திரும்பி வந்தார்கள் - அவர்களுடைய நண்பர்களையும், குடும்பத்தார்களையும் அழைத்துக் கொண்டு. எப்போது வேலை கிடைக்கும், எப்போது கல்யாணம் கைகூடி வரும், எப்போது பதவி உயர்வு, குழந்தைப் பேறு உண்டா என்று கேள்விகளையும் பிரச்னைகளையும் கொண்டு வந்தார்கள். தெரிந்ததைச் சொன்னேன். என்னுடைய அதிர்ஷ்டம் - சொன்னது சரியானது. இது தான் சரியான சமயமென்று கேள்விக்கு ஐம்பது, நூறு என்று எம்.டி. படித்த டாக்டர்கள்போல ஃபீஸை ஏற்றிக்கொண்டே சென்



வெயில் படுவதால் சிலருக்குக் கைகள் இரண்டும் கன்றிக் கறுத்துவிடும். இதனை ஃபோட்டோ சிந்தடிக் எஃபெக்ட் என்பர். தினமும் குளிக்கப். போகுமுன் கைகளுக்கு எலுமிச்சைச் சாறு கலந்த மஞ்சள் பொடி பூசி வந்தால் இயற்கையான நிறம் கிடைக்கும்.

- மனோரமா கோபிநாத், பெங்களூரு - 28.

எனது அனுபவத்தில் கண்ட வெற்றியை (பொடுகுத் தொல்லை மேல் போரிட்டுப் பெற்றது). வாசகிகளுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

பலவித வழிகளில் முயன்று, விடுபட முடியாத பொடுகுத் தொல்லையை எளிய முறையில் வென்றவள் நான். அன்பும், அறிவும் மிகுந்த ஜம்பா மாமி சொன்னபடி,

ஜெய் ஜம்பா எண்ணெய்!



முதல் நாள் இரவே நல்லெண்ணெயில் வெல்லத்தைப் போட்டுக் காய்ச்ச, வெல்லம் பொங்கிவரும். இறக்கி வச்சுடலாம். மறுநாள் காலை, சமர்த்தாய் பாகு அடியில் போய் உட்கார்ந்து, தேன் நிற எண்ணெய் 'ஜம்'மென்று தயாராக இருக்கும். மயிர்க்கால்களில் பட... தேய்த்து, வழக்கமான எண்ணெய்க் குளியல்தான். நாலு குளியல்களில், ஏன் அதற்குள்ளாகவே பொடுகு போயே போச்... நான், என் பெண், இப்போ பேத்திகள் என மூன்று தலைமுறையாக இந்த ஜெய்ஜம்பா எண்ணெய்தான்!

- கல்யாணி, சென்னை - 33.

றேன். யாரும் கொடுக்கத் தயங்கவில்லை. 'பலே ஜோசியர்', 'துல்லியமாகப் பார்த்துச் சொல்கிறார்', 'சொன்னால் சொன்னபடி நடக்கிறது' என்றெல்லாம் புகழ்மாலை வந்து விழ, 'கைரேகை கிங் சேகர்' என்ற பட்டப் பெயரே நிலைத்துவிட்டது.

என்னுடைய அனுபவத்தையெல்லாம் வைத்து 'கை என்ன சொல்கிறது?' என்ற தலைப்போடு நான் எழுதிய புத்தகம்கூட ஆயிரக்கணக்கான பிரதிகள் விற்றுத் தீர்ந்துவிட்டன. நீங்கள் கூட என்னை அவ்வப்போது டி.வி. பேட்டிகளில் பார்த்திருப்பீர்களே!

எங்கே ஆரம்பித்து எந்த உயரத்துக்கு வந்திருக்கிறேன் என்று ஒரு மாலைப் பொழுதில் மொட்டை மாடியில் உலாத்திக் கொண்டே, நான் காதலித்துக் கைப்பிடித்த கலைவாணியிடம் விலாவாரியாகச் சொல்லி முடித்த பொழுது, அவள் சொன்னாள் :

''நீங்க நெனக்கிற மாதிரி அந்த அண்ணாமலை ஜோசியர் சொன்ன ஜோசியம் பலிக்கலீங்க... என்ன நடந்திருக்குன்னா, நீங்கதான் ரொம்பவே கஷ்டப்பட்டு, எப்படியோ அவரோட ஜோசியத்தைப் பலிக்க வெச்சுட்டீங்க... அவரு பேச்சே தொழில்னாரு - இன்னிக்கி நீங்க பெரிய ஜோசியரா வளர்ந்து பேரையும் புகழையும் சம்பாதிச்சிருக்கீங்க. இதுவே, அவரு ஒங்களை பாம்பாட்டியா வருவீங்கன்னு சொல்லியிருந்தாக்கூட நீங்க ஒரு பெரிய பாம்புப் பண்ணையே வெச்சு, ஒங்களைப் பத்தி ஊரைப் பேச வெச்சிருப்பீங்க... உங்க முயற்சியைப் பற்றியும், உழைப்பைப் பற்றியும் எனக்குத் தெரியாதா என்ன...?''

ஓகோ, கலைவாணி சொல்வதுபோல், இப்படியும் இருக்குமோ..?

ஆமாம், இதைப் பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க...? ●



வலியே தெரியாது!

குழந்தைகளின் கை, கால்களில் ஏதாவது பேண்டேஜ் போடும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அந்தக் கட்டுகளின் மீது அவர்களுக்குப் பிடித்த கார்டூன் ஸ்டிக்கர் படங்களை ஒட்டி விடுங்கள். வலியை மறந்து விடுவார்கள்.

- பத்மா சுப்பிரமணி,
சென்னை - 11.

இவை எல்லாமே ஆஹா 50தான்!

கோடை விடுமுறையில் வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் வரும்போது ட்ராவல்ஸ் தேடி அலைய வேண்டி யிருக்கும். இரண்டு மாதங்களுக்கு முன்பே, விசாரித்து வைத்தால் வசதியாக இருக்கும்.

- அலமேலு நாராயணன்,
நியூடெல்லி.

வயிற்றில் பிடிப்பு ஏற்பட்டால் அரை கப் வெதுவெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி நெய், மற்றும் ஒரு தேக்கரண்டி சர்க்கரை சேர்த்துப் பருகினால் உடனே குணமாகும்.

-பி. பிரேமா, மடிப்பாக்கம்.

வெயில் காலத்தில் ஐஸ் நிறைய தேவையாய் இருக்கும். ஃப்ரிஜ்ஜின் டிரேயில் வைத்தால் போதாது. சிறு சிறு பிளாஸ்டிக் பைகளில் தண்ணீர் ஊற்றி, டைட்டாக ரப்பர் பேண்ட் போட்டு, செங்குத்தாக நிறுத்திவிட் டால், உறைந்தவுடன் அப்படியே பையுடன் எடுக்க சுலபம்.

- அபிராமி ஸ்ரீ, ஈரோடு.

சுண்ணாம்பு கட்டித் தட்டிப் போய் விட்டால், அதில் சிறிது ரோஸ் வாட்டர் (பன்னீர்) விட்டுக் குழைத்து உபயோ கிக்கலாம். இதே போல, முகத்துக் குப் போடும் க்ரீம் வகைகள் கட்டி தட்டி விட்டாலும் பன்னீர் சேர்த்து உபயோகப்படுத்தலாம். எவ்வித கெடுத லும் செய்யாது.

- வி. விஜயராணி, திருப்பூர்.

பிறந்த நாள், புத்தாண்டு, பொங்கல், தீபாவளி போன்ற விழா நாட்களில் கோயில், குளம், சுற்றுலா என செல்வதால் பஸ் நெருக்கடி, மன உளைச்சல், கூட்ட நெரிசல் ஏற்படுகின்றது. அந்த இடங் களுக்கு வேறு ஏதாவது நாளில் திட்டமிட் டால், சுகமாகச் செல்லலாமே!

- ஆர். தங்கராஜ், திருப்பூர்.

ஹோட்டலில் அனைவரும் ஒரே வகை உணவைக் கேட்டு வாங்கா மல், வெவ்வேறு வகை உணவு களை வாங்க வேண்டும். பிடிக்காத பட்சத்தில் மாற்றிக் கொள்ளலாம்.

- வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி.




ஸ்டப்டு தால்

தேவையான பொருள்கள் :

கோதுமை மாவு - 2 கப்,
சோள மாவு - ¼ கப்,
பெரிய வெங்காயம் - 1,
பச்சை மிளகாய் - 2,
கடலைப் பருப்பு - 1 கப்,
உப்பு - தேவையான அளவு,









நெய் - ¼ கப் (அ) எண்ணெய் - தேவையான அளவு.

செய்முறை :

பச்சை மிளகாயை விழுதாக மிக்ஸியில் அரைக்கவும். கடலைப் பருப்பை குக்கரில் வேகவைத்து எடுக்கவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

ஓர் அகன்ற பாத்திரத்தில் கோதுமை மாவு, சோள மாவு, நறுக்கிய வெங்காயம், அரைத்த பச்சை மிளகாய் விழுது, வேகவைத்த கடலைப் பருப்பு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து இலேசாக சுடவைத்த தண்ணீரைச் சிறிது சிறிதாக ஊற்றி, சப்பாத்தி மாவு போல் பிசையவும்.

கடைசியில் சிறிது எண்ணெய் விட்டுப் பிசைந்து அரைமணி நேரம் அதன் மேல் ஒரு பாத்திரமோ அல்லது மெலிதான துணியையோ போட்டு மூடிவைக்கவும். பின் கனமாக இட்டு (பரிமாறு முன்) தோசைக் கல்லில் போட்டு நெய் அல்லது எண்ணெய் விட்டு எடுக்கவும். குழந்தைகளும் விரும்பக்கூடிய வித்தியாசமான சப்பாத்தி தயார்! இதற்குத் தொட்டுக் கொள்ள வெள்ளரிக் காய் ராய்தா சரியான தேர்வாக இருக்கும்.



பால் - 2 கப்,
சர்க்கரை - ¼ கப்,
உலர் பழங்கள் - 1 கப் (முந்திரி, பாதாம், பிஸ்தா பொடியாக நறுக்கியது)

செய்முறை :

பாசுமதி அரிசியை மிக்ஸியில் ரவை பதத்துக்கு உடைக்கவும். பாலைக் கொதிக்க வைத்து, உடைத்த அரிசியை அதில் போட்டு வேகவைக்கவும். பைனாப்பிள் டின்னில் உள்ள சிரப்பைத் தனியாக எடுத்து வைத்துக் கொண்டு அதில் உள்ள பைனாப்பிள் துண்டங்களைச் சிறியதாக நறுக்கிக் கொள்ளவும். சிரப்பில் ஜெல்லி க்ரிஸ்டல்ஸைப் போட்டு அடுப்பில் மிதமான தணலில் வைக்கவும். பாலில் அரிசி வெந்தவுடன் சர்க்கரையைப் போட்டு நன்கு கரைத்தவுடன், கரைத்த ஜெல்லியைப் போட்டுக் கலந்து நறுக்கி வைத்த பைனாப்பிள் துண்டங்களை அதில் சேர்க்கவும். ஃப்ரெஷ் க்ரீம் போட்டுக் கலந்து, நறுக்கி வைத்த உலர்பழங்களை மேலே தூவி அலங்கரிக்கவும். கிண்ணத்தில் ஊற்றி ஃப்ரிட்ஜில் வைத்துப் பரிமாறவும். இது கோடைக்காலத்துக்கு ஏற்ற சுவையான புட்டிங்.

விசிட்டி

தேவையான பொருள்கள் :

மைதா - 1 கப்,
சர்க்கரை - 3/4 கப்,
நெய் - ¼ கப்,
எண்ணெய் - சிறிதளவு,
ஏலக்காய் - சிறிது,
தண்ணீர் - சிறிதளவு,
சோள மாவு - சிறிது,
கலர் - சிறிது,
நட்ஸ் - சிறிது

பைனாப்பிள் புட்டிங்

தேவையான பொருள்கள் :

பைனாப்பிள் ஜெல்லி க்ரிஸ்டல்ஸ் - 1 பாக்கெட்,
பைனாப்பிள் - 1 டின் (சிறிய சைஸ்)
ஃப்ரெஷ் க்ரீம் - ½ கப்,
பாசுமதி அரிசி - 1½ டேபிள் ஸ்பூன்,



செய்முறை :

மைதாவை இலேசாகத் தண்ணீர் விட்டு சப்பாத்தி மாவு போல் பிசையவும். வட்டமான மெல்லிய சப்பாத்தி இடவும்.. வாணலியில் நெய்யைச் சூடுபண்ணி அந்தச் சப்பாத்தி மேல் நெய்யைத் தடவி அதன் மேல் சோள மாவை இலேசாகத் தூவவும். இதே மாதிரி இன்னொரு சப் பாத்தியும் செய்து, அதன் மேல் வைத்து ரோல் பண்ணவும். அந்த ரோலை வட்ட மாக வெட்டி எண்ணெயில் பொரிக்கவும். இன்னொரு வாணலியில் சர்க்கரையைப் பாகு வைத்து அதில் ஏலக்காய், கலர்



போட்டு, பொரித்ததைப் போடவும். பாகு ஊறியதும் பரிமாறும் தட்டில் வைத்து, உலர்ப்பழங்களைப் பொடியாக நறுக்கி மேலே தூவி அலங்கரிக்கவும்.

பனீர் ஜிலேபி

தேவையான பொருள்கள் :

மைதா - 1 கப்,
துருவிய பனீர் - 1 கப்,
பால் - 1 கப்,
சர்க்கரை - 1 கப்,
கேசரி பவுடர் - 1 டீஸ்பூன்,
நெய் - ½ கப்,
தண்ணீர் - சிறிது.

செய்முறை :

மைதா மாவு, துருவிய பனீர், பால், கேசரி பவுடர் எல்லாவற்றையும் நன்றாகக் கலந்து நன்றாக 'பீட்' பண்ணவும். ஒரு நான்ஸ்டிக் வாணலியில் நெய் விட்டு அந்த மைதா கலவையை வட்ட வடிவமுள்ள கரண்டியால் எடுத்து வட்டமாக விடவும். பொன்னிறமாக, வந்தவுடன் எடுக்கவும். இன்னொரு பாத்திரத்தில் சர்க்கரையை பாகு வைத்து, பொரித்த ஜிலேபியை அதில் போட்டு நன்கு பாகு ஊறியவுடன் எடுத்துப் பரிமாறவும்.

பனீர் பிஷ்பாவரி (சைனீஸ் ஸ்பெஷல்)

தேவையான பொருள்கள் :

பனீர், வெங்காயம், தக்காளி,
உருளைக்கிழங்கு - 100 கிராம்,
எண்ணெய் - 1 கப்,
சோள மாவு - 1 கப்,
பட்டை - சிறிது,
கிராம்பு, ஏலக்காய் - 4,
முந்திரி விழுது - 2 டீஸ்பூன்,
சீரகம் - 2 டீஸ்பூன்,
வெள்ளை மிளகுத்தூள் - 1 டீஸ்பூன்,
தக்காளி சாஸ், சோயா சாஸ்,
சில்லி சாஸ் - 1 டீஸ்பூன்,
அஜினோமோட்டோ - சிறிது,
பூண்டு, இஞ்சி விழுது - 1 டீஸ்பூன்,
மஞ்சள் பொடி, மசாலாப் பொடி - 1 டீஸ்பூன், தனியாப் பொடி - 2 டீஸ்பூன்,
உப்பு - தேவையான அளவு,
வெங்காயத் தாள் - சிறிது,
மிளகாய்ப் பொடி - ருசிக்கேற்ப.

செய்முறை :

உருளைக்கிழங்கை வேகவைத்து மசிக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு சீரகம் போட்டுத் தாளித்து வெங் காயத்தைப் பொடியாக நறுக்கி வதக்கவும். சிறிது மஞ்சள் பொடி, மிளகாய்ப் பொடி, மசித்த உருளைக்கிழங்கைப் போட்டு



மசாலா தயாரிக்கவும். பனீரை சதுரமாக பெரியதாக வெட்டி இரண்டு பனீருக்கு நடுவில் உருளைக் கிழங்கு மசாலா வைத்து ஸ்டஃப் செய்யவும். சோள மாவை ஒரு பாத்திரத்தில் கரைத்து அதில் ஸ்டப் பண்ணிய பனீரை முக்கி எண்ணெயில் பொரிக்கவும். பொன்னிறமாக வந்தவுடன் எடுத்து முக்கோணமாக கட் செய்யவும்.

க்ரேவி :

வாணலியில் எண்ணெய் விட்டு பட்டை, கிராம்பு, ஏலக்காய், சீரகம் போட்டு பொரிந்தவுடன் பொடியாக நறுக்கிய வெங்காயத்தை வதக்கவும். வதங்கியவுடன் தக்காளியைப் போட்டு வதக்கவும். முந்திரியை நன்றாக நைசாக அரைத்து அதில் சேர்க்கவும். இஞ்சி, பூண்டு விழுது சேர்க்கவும். பச்சை வாசனை போகும் வரை வதக்கியவுடன் மஞ்சள் பொடி, தனியாப் பொடி, மசாலாப் பொடி சேர்த்து வதக்க வும். தக்காளி சாஸ், சோயா சாஸ், சில்லி சாஸ் விட்டுக் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கொதிக்கவிடவும். உப்பு, அஜினோமோட்டோ போடவும். பொரித்த பனீரை அதில் போட்டு நன்றாகக் கலந்து வெங் காயத்தாள் போட்டுப் பரிமாறவும்.

- ஜெயஸ்ரீ ஸ்ரீனிவாஸ்,
கொரட்டூர்.

ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை

சூட்சுமம்!



அதுவரை ஐந்து பெண்களைப் பார்த்து விட்டான் முருகன். ஒரு சம்பந்தமும் முடிவான பாடில்லை. அதில் மூன்று பெண்களை முருகனின் பெற்றோருக்குப் பிடித்திருந்தும், முருகன் பச்சைக்கொடி காட்டவில்லை.

முருகனின் தந்தை ரங்கநாதனுக்கு வரதட்சணை என்ற பேச்சே பிடிக்கவில்லை. "உங்களுக்கு விருப்பமில்லேன்னா சும்மா இருங்க. நான் பேசிக்கிறேன்'' என்று வரதட்சணை வாங்கப் பிடிவாதமாக இருந்தான் முருகன். அதனாலேயே வந்த சம்பந்தங்கள் முறிஞ்சுப் போயின.

ரங்கநாதனின் நண்பன் கேசவன். அவர் மகள் மாலினியை ரங்கநாதனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

"உன் மகன் கேட்கும் வரதட்சணையை என்னால் கொடுக்க முடியாதப்பா'' என்றார் கேசவன்.

பெண் பார்க்கச் சென்றபோது, ரங்கநாதனே முந்திக் கொண்டு, ஒரு லட்சம் வரதட்சணை கேட்டார். வரதட்சணை இல்லாமலே திருமணம் நிச்சயமானது!

"எப்படி?'' ஆச்சரியமாகக் கேட்டார் கேசவன்.

"அப்படித்தான். நான் என்ன சொன்னாலும் அதற்கு நேர்மாறாக நடப்பான் என் மகன்'' என்று சிரித்தார் ரங்கநாதன்.

- ஆர்.வி. காயத்ரி, காட்பாடி.

ராஜன்புத்திரன்

சொக்கத்

சம்பந்தி ரகுபதி வருவதைப் பார்த்துவிட்டு, கோபாலன் எழுந்து நின்றார். முகம் மலர வரவேற்று, ஹால் சோபாவில் அமரச் சொன்னார்.

ரகுபதியின் பையனுக்குத்தான் கோபாலன் தன் மகள் ராதாவைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்.

''வாங்க சம்பந்தி... என்ன சாப்பிடுறீங்க...?'' என்று சொல்லிக் கொண்டே மனைவி ஜானகியை அழைத்து, காப்பி கொண்டு வரும்படி சொன்னார் கோபாலன்.

''அதெல்லாம் வேண்டாம் சார். ஒரு விஷயம் சொல்லப் போறேன். நீங்க கோபப்படக்கூடாது...'' என்றார் தயக்கத்துடன் ரகுபதி.

''நமக்குள் என்ன.. சொல்லுங்க'' என்றார் கோபாலன்.

''என் பையனுக்கு ஏதோ பணமுடை போலிருக்கு. உங்க பெண் ராதாவிடம் சொல்லியிருக்கிறான். அவளும் தயக்கமில்லாமல், கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்திருக்காள். அடகு வைக்கிறதெல்லாம் எனக்குப் பழக்கமில்லை. அதனாலே...'' ரகுபதி தயங்கினார்.

''அதனாலே...'' ஜானகி குறுக்கிட்டாள்.

''இந்த நகையை உங்ககிட்டயே தர்றேன். நீங்களே அடகுவைச்சு பணம் வாங்கிக் குடுங்க. ம்... அவசரமில்லை. ஏனென்றால், சங்கிலி வாங்கியதற்கு 'பில்' வெச்சுருப்பீங்க. ஏதாவது பிரச்னை வந்தால் கூட, வாங்கிய ரசீதை நீங்க காட்ட முடியும். காலம் கெட்டுப் போயிருக்குப் பாருங்க; அதான் சொல்றேன்'' என்றார் ரகுபதி.

''என்னமோ, உங்க பையன் முப்பதாயிரம் சம்பளம் வாங்குறார்னு சொன்னீங்களே! கல்யாணமாயி ஒரு மாசம் கூட ஆகலை, அதற்குள் பணக்கஷ்டமா?'' நக்கலாகச் சாடினாள் ஜானகி.

கோபாலன், ஜானகியைப் பார்த்து, ''வாயை மூடு'' என்று அதட்டி, அடக்கினார். கூடவே, ''சம்பந்தி... நீங்க அந்த நகையைக் கொடுங்க. நானே அடகு வைச்சுத் தர்றேன்...'' என்றார் பவ்யமாக.


''நீங்க எவ்வளவோ கஷ்டப்பட்டு பணம் சேர்த்து, இந்தத் தங்கச் சங்கிலியை வாங்கி, பெண் கழுத்தில் போட்டிருக்கீங்க. அதை அடகு வைச்சுத் தாங்கன்னா, உங்க மனைவிக்குக் கோபம் வரத்தானே செய்யும்? நானும் இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருக்கேன். உங்க மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. நீங்க சொல்லியிருக்கணும்'' என்ற ரகுபதி புறப்பட ஆயத்தமானார்.

அவரை மிக்க மரியாதையுடன், வாசல் வரை கூடவே சென்று வழியனுப்பி வைத்தார் கோபாலன்.

ரகுபதி போனவுடன் ஜானகி, ''இது என்ன அநியாயம்? கல்யாணமாகி இன்னும் ஒரு மாசம்கூட ஆகலை. அதற்குள் பெண் கழுத்தை மூளியாக்கிட்டாங்களே, குடும்பமே ஹம்பக் போலிருக்கு...'' பெரிதாகச் சப்தம் போட்டாள்.

கோபாலன் மனைவியின் அருகே வந்து, ''ஜானகி, சம்பந்திக்குப் பணக் கஷ்டமில்லை. இந்த நகையை அடகு வைக்கவும் கொடுக்கலை. ராதா கல்யாணத்தின்போது, நினைத்தது போல்

தங்கம்!



பணம் புரட்ட முடியலை. அதனால், ஒரு கிராம் தங்கக் கவரிங் சங்கிலியை வாங்கி வந்து, 'நான்கு பவுன்'னு பொய் சொல்லி ராதா கழுத்தில் போட்டேன். அது இப்போ அவர்களுக்குத் தெரிஞ்சு போச்சு. சம்பந்தி ரகுபதி எவ்வளவு நாசூக்காகப் பேசி, நாம போட்ட கவரிங் தங்கச் சங்கிலியைத் திருப்பிக் கொடுத்திட்டுப் போறார் பார்த்தியா? அவர் நடந்து கொண்டவிதம் தங்கமாத் தெரியலையா?'' என்றவரின் கண்கள் கலங்கின.

''சாதா தங்கமில்லைங்க. சொக்கத் தங்கம்!'' மனைவி ஜானகியும் நெஞ்சம் நெகிழ்ந்தாள். ●

பெண் சிசுக் கொலை என்னும் கொடுமையில் ஆரம்பித்து, தூய அன்பின் இலக்கணமாய்த் திகழும் தாயை, முதியோர் இல்லத்தில் விடும் கொடுமை வரை மனிதன் இன்று எத்தனை, எத்தனை கொடுமைகள் செய்கின்றான்!

உறக்கத்துக்கு நடுவே சிந்தும் புன்னகை, பால்மணம் மாறாத வாசம், அழுகையிலும் ஓர் அழகு என எத்தனையோ ரசிக்கும் விஷயங்கள் அந்தக் குழந்தையிடம் இருக்க அவற்றைப் புரிந்து கொள்ளத் தெரியாத மனிதன், தன்னைப் பெற்றெடுத்து பெயர் வைத்து, பெரியவனாக்கியவளும் பெண்தான் என்பதை மறந்து, பெண் சிசுக் கொலை என்னும் பாவத்தைச் செய்கிறான்.

'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்பது அக்கால பழமொழி, 'அறிவுள்ள ஐந்து பெண் பெற்றால் ஆண்டியும் இந்த அகிலத்தையே ஆளலாம்' என்பது இக்கால புதுமொழி.

அன்று
ஆத்திச்சூடி தந்த ஔவையும்,
பெண்தான்
இன்று
சாதனை படைக்கும் சானியா
மிர்ஸாவும், பெண்தான்
பெண்கள் செய்யாத வேலைகள்
இல்லை
அவற்றால்
பெருமைகள் பல பெறாதோர் எவரும்
இலர்
பெண்கள் கால்பதிக்காத துறையே

மாறுவது




இல்லை இவ்வுலகில்

இப்படி சாதனை செய்யும் பெண்களை சிசுவிலேயே கொல்கிறார்கள் கொலைகாரப் பாவிகள்.

''தச்சன் உலை நெருப்பும் குளிரும் ஒருசாமம், நான் கொண்ட மடி நெருப்பு குளிர்வது எக்காலம்?'' என்று பால்ய வயது பெண்ணொருத்தி கணவனை இழந்து கண்ணீர் வடித்து பாடும் ஒப்பாரிப் பாடல், கல் நெஞ்சையும் கரைய வைக்கும். பணம், சொத்து ஆசை, சொந்தம், பந்தம் என்பதற்காக இளம்வயதிலேயே திருமணம் செய்து, அவர்களின் மனம் நோகும்படி செய்து விடுகின்றனர். பட்டா

எப்போது?



டையுடுத்தி பட்டாம் பூச்சிகளாய் சுற்றித் திரிய வேண்டியவர்கள் பால்யத் திருமணம் என்னும் பாதாளச் சிறையில் சிக்கி சிரமப் படுகின்றனர். இந்த நிலை எப்பொழுது மாறும்?

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அக்னிசாட்சியாய், ஆன்றோர், சான்றோர் முன்னிலையில் நடந்த திருமணத்திலாவது பெண்கள் சந்தோஷமடைகின்றனரா? இல்லை. வரதட்சணை என்னும் கொடுமையால் வதைக்கப்படுகின்றனர். வாழ்க்கை முழுவதும் துன்பப்படுகிறார்கள். இவர்கள் மலர்வது எப்போது? மனம் நிறைய சிரிப்பது எப்போது?

அம்மா என்ற உறவு புனிதமானது, வணக்கத்தக் குரியது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று முதலில் தாயைத்தான் சொல்கிறோம். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'', ''தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை'' போன்ற வாக்குகள் தாயின் பெருமைகளைப் பறைசாற்றுகின்றன. அம்மா என்ற மூன்றெழுத்தினுள் அன்பு, அரவணைப்பு, இரக்கம், ஈதல், உவகை, ஊக்கம், ஒழுக்கம், ஓம்புதல், கனிவு, தியாகம், தொண்டு, பரோபகாரம் என்று எத்தனை எத்தனை பண்புகள் பொதிந்து கிடக்கின்றன. 'ஒரு கெட்ட மகன் இருக்கலாம். ஒரு கெட்ட தாய் இருப்பதில்லை' என்கிறது ஒரு பழமொழி.

நிலா காட்டி, ஊட்டியவளுக்கு கடைசியில் இவன் கை நீட்டுகிற இடம் எது தெரியுமா? முதியோர் இல்லம்! முதிர்ந்த அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளத் தெரியாமல், அறிவுரை கேட்க அடுத்தவரை நாடுகிறான். தள்ளாடிய வயதிலும் தன் பிள்ளை என்று உருகும் தாயைத் தள்ளி வைக்கிறான்! என்று மாறும் இந்த நிலை?



- மணிகண்டன், சிவில் இன்ஜினியரிங் (இறுதியாண்டு), தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரி, சேலம்- 5.



கிரிக்கெட் ஹைகூ

போட்டி முடிவு

* புறமுதுகிட்டு ஓடிவருவதற்கும்
பேடு, கிளவுஸ், ஹெல்மெட் என
பாதுகாப்பு கவசம் அணிகிறார்கள்

- வே. தனசேகர், ஒன்பதாம் வகுப்பு, கலைமகள் வித்யாமந்திர் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி.

* கிரிக்கெட் மட்டுமே
வெளிப்படுத்துகிறது...
இந்தியர்களின் தேசபக்தியை!

- அ. அனிதா, மூன்றாம் ஆண்டு, கணிதவியல், விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்.

* 20-20 பஞ்சும் நெருப்பும்
ஆனால் எப்போதாவதுதான்
தீப்பிடிக்கும்.

* ஆடுகளமும் பங்குச்சந்தையும்
ஒன்றே
'புள்ளி'கள் த(டம்)டுமாறினால்
சரிவு... சாமானியனுக்கே.

- ஆர். தரணேஸ்வரி, இரண்டாம் ஆண்டு, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை - 600 010.

* கயல்விழி பா(ர்)வை வீச்சில்
சுருண்டனர் வேகப்பந்தாளர்கள்
அதிசயம் உடையாமல் -
வாத்து முட்டை

- ஆர். நித்யா, எம்.எஸ்ஸி., எம்ஃபில்., கல்வியியல் கல்லூரி மாணவி, அரசு கல்வியியல் கல்லூரி, காந்தி நகர், வேலூர் - 632 006.

* தோற்கின்ற ஆட்டத்தை
'டிரா' செய்யும்
மழை!

* வென்றாலும் உண்டு
தோற்றாலும் உண்டு
'ஸ்பான்சர்' செய்வோர்!

- வரத. சண்முக சுந்தர வடிவேலு, முதலாண்டு முதுகலை (தமிழ்), அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்.

* ஒரு ஓவருக்கு
ஆறு பந்து என்று கூறி
ஒரே பந்தினை வீசினார்கள்.

சுற்றுலா சொல்லித் தந்த பாடம்!



நாங்கள் ஆறேழு குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து ஒருமுறை ஒகேனக்கல் சுற்றுலா கிளம்பினோம். பாட்டுக்கள் பாடியபடியும் நடனமாடியும் சென்றோம். வழிநெடுக இயற்கைக் காட்சிகள்! அருவிகளின் 'ஹோ' என்ற இரைச்சல் ஒருபுறம்! மெல்லிய சிற்றோடையாய் ஓடும் நீர்நிலை ஒருபுறம். ''மஸாஜ், மஸாஜ்'' என்று கையில் எண்ணெயுடன் அலையும் ஒரு கூட்டம். ஆஹா! ரசனைக்குரிய இடம்! அனைவரும் குளித்தனர். குழந்தைகளையும் சிற்றோடையில் குளிக்க வைத்தனர்.

மதியம் பரிசலில் போக ஏற்பாடு செய்தார்கள். பரிசல்கள் நகரத் தொடங்கின. சற்று நேரத்தில் குழந்தைகள் தாகத்தாலும் பசியாலும் அழ ஆரம்பித்தன. அருவியில் குளித்ததனால் அனைவருக்கும் நல்ல பசி. உணவுப் பொட்டலங்கள், தண்ணீர் பாட்டில்கள் வேனில்! என்ன செய்வது? பெரியவர்கள் பசி பொறுப்பார்கள். ஆனால் குழந்தைகள்? தண்ணீர் தண்ணீர் என்று அழுதனர். உடனே நிலைமையைச் சமாளிக்க, வயதான பாட்டி ஒருவர், ''அழாதே கண்ணு, அழாதே. தண்ணீர்தானே? நான் தரேன்' என்று ஓடும் ஆற்று நீரை அள்ளி அள்ளி புகட்டினார். ஓரளவு தாகம் தீர்ந்தது. கரைக்கு அருகில் வந்ததும் வேனுக்கு வந்து உணவைப் பிரித்து பகிர்ந்து உண்டனர். நேரம் 3-45 மணி. பிறகு ஊரை நோக்கிப் பயணப்பட்டனர். சுற்றுலா இன்பமாயிருந்தது. பின்னால் சிறிது நாட்களுக்குள் குழந்தைகள் மஞ்சள் காமாலை நோய் தாக்கி அவஸ்தைப்பட்டனர்.

இதனால் சுற்றுலா செல்லும்போது நேரத்துக்கு அனைவரையும் சாப்பிட வைப்பதும், காய்ச்சி ஆறிய வெந்நீர் குடிப்பதும் அவசியம். மஞ்சள் காமாலை தாக்கி மரணம் ஏற்படவும் வழியுண்டே. ...சுற்றுலா, இன்பம் தருவதற்கு பதில் துன்பமாகி விடக்கூடாது அல்லவா?

அந்த குழந்தைகளுள் ஒன்று வேறு யாருமில்லீங்கோ. நானேதான்! என் தாய் சொல்லக் கேட்டு எழுதிய அனுபவப் பாடம்!

- அ. ஆர்த்தி, பி.டெக்., (ஐ.டி.) கோயமுத்தூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, கோயமுத்தூர்.



இன்பம்



சிற்பிக்குக் கல்லை கண்டால் இன்பம் - அதைச்
செதுக்கி சிலை துடித்தாலோ பேரின்பம்;

கவிஞனுக்கு மலர்களைக் கண்டால் இன்பம் - அதை
வர்ணித்து கவிபாடினாலோ பேரின்பம்;

பறவைக்கு இரையைக் கண்டால் இன்பம் - அதைத்
தன் குஞ்சுக்கு ஊட்டினாலோ பேரின்பம்;

இளமையில் காதல் இன்பம் - அதை
முதுமையிலும் கொண்டிருந்தால் பேரின்பம்;

பெண்ணுக்குத் தாய்மை என்பது இன்பம் - அதை
அடைந்துவிட்டால் வருவதோ பேரின்பம்;

ஏழைக்குப் பணம் கிடைத்தால் இன்பம் - அதை
முறையாகப் பயன்படுத்தினாலோ பேரின்பம்;

பசித்தவனுக்கு உணவைக் கண்டாலே இன்பம் - அதை
பசியாற உண்டாலோ பேரின்பம்;

மண்ணுக்கு மழை வந்தால் இன்பம் - அதைக்
கண்ட உழவனுக்கோ பேரின்பம்;

உலகில் உள்ள ஒவ்வொன்றும் ஒரு இன்பம் - அதில்
வாழும் மக்களுக்கு என்றுமே பேரின்பம்

கே.வீணா, பி.எஸ்ஸி., மூன்றாம் ஆண்டு,
நிர்மலா மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்-18

எப்போதும் உன்னுடன்!



உன்னிடம் நான் காற்றாக வந்தால்
ஒரு நிமிடம்தான் இருப்பேன்.

உன்மேல் மழைத் துளிகளாக விழுந்தால்
ஈரம் காயும் வரைதான் இருப்பேன்.

உன்னிடம் நான் பூவாக வந்தால்
வாடும் வரைதான் இருப்பேன்.

உன்னிடம் நான் கவிதையாக வந்தால்
நீ படிக்கும்வரைதான் இருப்பேன்.

அதனால்தான் உன் தோழியாக வந்தேன்
எப்பொழுதும் உன் தோளில் சாயலாம் என்று...!

- எஸ்.புவனேஸ்வரி,
பி.காம்., முதலாமாண்டு,
ஜெய்ராம் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, சேலம்.

போட்டிக்குத் தயாரா?

ஹாய் காலேஜ் பாய்ஸ்
அண்ட் கேர்ள்ஸ்!
இந்தப் பூனைக் குட்டியோட
செம ஸ்டைல் போஸைப்
பார்த்ததும் உங்க மனசுல
தோணும் ஒரு வரி
கமெண்ட் என்ன?
அதை அஞ்சலட்டையில
எழுதி அனுப்புங்க!
ஜாலியான கமெண்ட்டுக்கு
ரூ 100 - பரிசும்
சான்றிதழும் உண்டு!



படிக்கும் படிப்பு, துறை, பள்ளி கல்லூரி
வீட்டு முகவரி போன்ற தகவல்களோடு
புகைப்படத்தையும் மறக்காமல்
இணைக்கவும்.
கடைசித் தேதி: 12.3.2008



டீன் ஏஜ் அனுபவங்கள்!

செ.கோகிலா பிரியதர்ஷினி.
எம்.காம்., (முதல் வருடம்).
இந்திராகாந்தி கல்லூரி, திருச்சி.

எங்கள் தமிழ் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு கதாபாத்திரத்தின் குணத்தைக் குறிப்பிடுவதற்கு பல வார்த்தைகளை உபயோகித்துக் கொண்டிருந்தார். கடைசியாக அவர், "அவர் ஒரு சொக்கத் தங்கம்" என்று கூறினார். ஒரு குறும்புக்காரப் பையன் எழுந்து, "சார்! அது விஜய காந்த் நடித்த படம்" என்றான். உடனே ஆசிரியருக்குக் கோபம் வந்து, "ஏய்" என்று கத்தினார். உடனே அவன் அருகே அமர்ந்திருந்த பையன் எழுந்து "அது சரத்குமார் படம்!" என்றானே பார்க்கலாம்! ஆசிரியரும் கோபம் மறந்து சிரித்து விட்டார்.

கலக்குறாங்க பசங்களா!



ஹாய் ஸ்டூடன்ட்ஸ்...
பூஞ்சாரல் பக்கங்களில் உங்கள்
கை வண்ணத்தைப் பார்த்து
அசந்து போயிருக்கிறோம்.
தொடர்ந்து உற்சாகமா எழுதுங்க.
கவிதை மட்டுமில்லாமல், இலியம்
சிறுகதை, கட்டுரை, கல்லூரி
அனுபவங்கள், கேம்பஸ்
கலாட்டா, சமூக சிந்தனைகள்
என எதை வேண்டுமானாலும்
எழுதிக் குவியுங்க. தேர்வானால்
சன்மானமும், சான்றிதழும் உண்டு.
-ஆசிரியர்

பிறந்ததும் தங்கத் தொட்டிலில்... புகுந்ததும் தங்கக் கட்டிலில்... துய்க்க இன்பங்கள் இல்லை இந்நாட்டில்? ஆனால் அதை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு, தான் பிறந்த மண்ணுக்குப் பசுமையும் வளமும் சேர்ப்பதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு உழைத்து வருகிறார் கோவை நகர பசுமைநாயகி வனிதா மோகன். 'சிறு துளி' அமைப்பின் நிர்வாக அறங்காவலராகிய வனிதா மோகன், தன் குழுவுடன் ஆற்றி வரும் சீரிய பணிகளின் ஒரு துளி இதோ!



மண் பயனுற

"**நா**ன் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே கோவையில் தான். மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்திருக்கும் கோவையின் இதமான குளிர்ச்சியும், செழுமையும் என்னை எப்போதும் பெருமைகொள்ளச் செய்யும்.

நான் பள்ளியில் படித்த காலங்களில், 'வாலாங்குளம்' என்ற பெரியதொரு குளத்தைத் தாண்டிப் போவதுண்டு. அங்கே எப்போதும் 'நேவி செயிலிங்' பயிற்சி நடந்து கொண்டிருக்கும். 'மலைக்கள்ளன்' படப்பிடிப்பு கூட அங்கே நடந்தது. அதனால் சிறுமிக்கே உரிய ஆர்வத்துடன் அந்தக் குளத்தை ரசிப்பேன். குளத்தின் மேல்மட்டம் வரை தண்ணீர் ததும்பி, அலைபாய்ந்து கொண்டிருக்கும். சுத்தமான, பளிங்கு நீர்! சுற்றிலும் அடர்ந்த மரம் செடி கொடிகள். அங்கே, விதவிதமான நீர்ப் பறவைகள், ''கீச்... கீச்'' என்று சத்தம் எழுப்பியபடி பறந்து கொண்டே யிருக்கும். பெருங்காற்று ஒன்று அடித்தால், நீரலைகள்



நளும்பி, சிறு சாரலென கரையோரங்களில் தெளிக்கும்...

ஆனால் அப்படிப்பட்ட அழகான தளம், காலப்போக்கில் சீரழிந்து நின்ற போது, மனம் பதறிப் போனேன். ஊருக்கே மிகப் பெரிய நீராதாரமாக இருந்த அந்த வாலாங்குளம் வறண்டு போயிருந்தது. ஒரு பக்கம் குப்பைகளும் கழிவுகளும் கொட் டப்பட்டு சாக்கடையாகி விட்டிருந்தது. மறுபக்கம் ஏகப்பட்ட ஆக்ரமிப்புகள். பஸ் ஸ்டாண்ட், மின்சாரப் பகிர்வு நிலையம் போன்றவை புதிதாக முளைத்திருந்தன. சலவைக்காரர்கள் துணி துவைப்பதும்,

தானே சவக்குழி தோண்டிக் கொள்கிறான் என்பதை உணர்ந் தேன். என் மனசுக்குள் ஒரு பெரிய தவிப்பு... தாகம்! ''இதை எப்படியாவது சரிசெய்யணும்! பூமித்தாயின் தங்க மடி யானது, கண் முன்னாலேயே தரிசாவதைத் தடுத்தே ஆக வேண்டும்' என்ற எண்ணம் தீவிரமாக என்னுள் ஏற்பட்ட போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது!'' என்று சொல்லி சிறு இடைவெளி விட்டார் வனிதா மோகன்.

8 ... வேண்டும்!



பால் கேன்கள் கழுவப்படுவதும் அந்த அழுக்கு நீரில்தான்!

நான் சிறுமியாகப் பார்த்த அதே வாலாங்குளமா இது...? எனக்குள் ஏற்பட்ட ஆதங்கத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. 2001ம் ஆண்டு கோவை நகரம் முழுக்க ஏற்பட்ட கடும் வறட்சிக்கான காரணம் புரிந்தது. ஆயிரம் அடிகள் துளை யிட்டு போர்வெல் போட் டாலும் 'புஸ்' என்று காற்று வந்ததன் காரணம் புரிந்தது.

நீர்வள ஆதாரங்களை, மனிதன் தவறாகக் கையாண்டு, தனக்குத்

* வனிதா மோகன்



“என்னுடைய ஆன் மிக வழிகாட்டி, குரு தயானந்த சரஸ்வதி சுவாமிகளிடம் பேசிக் கொண்டிருந்தபோது, மிக வும் தற்செயலாக, ''நமது கோவை மாவட் டத்தில் ஓடும் நொய் யல் ஆறு, ஒரு காலத் தில் ஜீவநதியாக ஓடிக் கொண்டிருந்தது. அது இன்று சாக்கடையாகி விட்டது. அதை மீட் டெடுங்கள்!'' என்றார்.

எனக்கு ஒரே பிர மிப்பு! நான் என்ன செய்ய நினைத்தேனோ அதையே அவரும் கோடிட்டுக் காட் டவே, எனக்கு உற்சாக மான உத்வேகம் வந்து

விட்டது.

அதன் தொடர்ச்சியாக இன்னொரு சம்பவமும் நடந்தது. 2003ல் காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சுவாமிகளின் பீடாரோகணம் நாடு முழுக்க நடந்து கொண்டிருந்தது. கோவையில் முகாமிட்டிருந்த அவரை, சங்கரா கண் மருத்துவ மையத்தின் டாக்டர் ஆர்.வி. ரமணி, பண்ணாரி குழும நிறுவனத் தலைவர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் போன்றோர் சந்தித்தனர்.

''கோயமுத்தூரிலே தண்ணீர்ப் பஞ்சம்னு கேள்விப்பட்டேன். இந்த பீடாரோகணத்தை ஒட்டி, நீர்வள ஆதாரங்களைப் பெருக்கும் அறப்பணியில் ஈடுபடலாமே!'' என்று யோசனை சொன்னார். ஸ்ரீ ஜெயேந்திரரின் அருள்வாக்குப் படியே, நாங்கள் அனைவரும் கலந்தாலோசித்து, உடனே அதற்கான வேலைகளில் முழுமூச்சாக ஈடுபட்டோம்.

பண்ணாரி குழும நிறுவனங்களின் தலைவர் திரு. டாக்டர் எஸ்.வி. பாலசுப்ரமணியம், எங்களுடைய 'ப்ரிகால்' நிறுவனம், சங்கரா கண் மருத்துவமனை, லக்ஷ்மி மிஷின் வொர்க்ஸ், எல்.ஜி. நிறுவனங்கள் போன்றவை தலா இருபத்தைந்து லட்சம் நன்கொடையாகப் போட்டதில் 'சிறு துளி' அமைப்பு ஆரம்பமானது.

முதலில் கிருஷ்ணம்பதி, நரசம்பதி என்ற இரட்டைக் குளங்களைத் தூர்வார திட்டம் போட்டு, மாவட்ட ஆட்சியாளர், பொதுப்பணித்துறை, மாநகராட்சி என எல்லாரிடமும் ஒப்புதலும் பெற்று விட்டோம். இயந்திரங்கள் உதவியுடன் பணிகளைச் செய்யப் போனபோது, சுற்றியிருந்த வேடப்பட்டிப் பகுதி விவசாயிகள் எங்களைச் சூழ்ந்து கொண்டனர்.

''பருவ மழை பெஞ்சாலே, இதுல தண்ணி நிற்காது... ஏம்மா... பணத்தையும் நேரத்தையம் வீணாக்குறீங்க?'' என்று அனுதாபப்பட்டார்கள். ஆனால் நாங்கள் முன் வைத்த காலை பின் வைப்பதாக இல்லை.

''எவ்வளவு வேணும்னாலும் செலவா

* கிருஷ்ணம்பதி பணிகளுக்கு முன்...



* செல்வம்பதி பணிகளுக்கு முன்...



கட்டும். நம்ப ஊருக்குத் தண்ணீர் வேணும். அதற்கான முயற்சிகளை செய்தே தீருவோம்!''னு பிடிவாதமாகச் சொல்லி விட்டேன்.

விவசாயப் பெருமக்களிடம் வீராவேசமாகச் சொல்லி விட்டேனே தவிர, உள்ளூர எனக்குக் கலக்கம்தான்! அப்போதுதான் டாக்டர். ராஜேந்தர்சிங்கைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ராஜேந்தர் சிங், ஓர் ஆயுர்வேத மருத்துவர். ராஜஸ்தானைச் சேர்ந்த இவர், காய்ந்து போய்க் கிடந்த 'அர்வாரி' என்ற நதியைப் புதுப்பித்து ஓடச் செய்தவர். அதுவும் எப்படி? பதினேழு ஆண்டுகளாக, ஒற்றை ஆளாக, தூர்வாரி உயிர்ப்பித்திருக்கிறார்.

அவரை, கிருஷ்ணம்பதி குளத்துக்கு அழைத்து வந்து காட்டினேன். குளத்தில் ஒரு கைப்பிடி மண்ணை அள்ளியவர், சந்தோஷக் கூக்குரலிட்டு ஓடினார். குதித்தார்!

''இந்தக் குளத்துக்கு உயிர் இருக்கு! இதைப் புதுப்பிக்க முடியலைன்னா, இனி



* தண்ணீருடன்...



* தூர்வாரப்பட்ட பின்...



உலகமே பாலைவனம் ஆன மாதிரிதான்! நிச்சயம் உயிர்ப்பிக்கலாம்!'' என்று ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

அன்றைக்கு எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

ஏதைச் செய்தாலும் விஞ்ஞானப்பூர்வ மாகச் செய்தால், வெற்றிக்கோட்டை எட்டு வது சுலபமில்லையா? அதனால் கோவை யைச் சுற்றியுள்ள நீர்வள ஆதாரங்களைப் பற்றி ஆராய ஆரம்பித்தோம். அப்போது, எனக்குக் கிடைத்த தகவல்கள், நாளுக்கு நாள் என் ஆர்வத்தை அதிகப்படுத்துவதாக அமைந்தன.

ஐதராபாத்தில் உள்ள தேசிய தொலை உணர்வு மையத்திலிருந்து செயற்கைக் கோள் படங்களைப் பெற்று, அதன் மூலம் கோவையில் உள்ள நீர்வழிகளைக் கண்டு பிடித்தேன். ஆச்சரியத்தில் மலைத்தே போனேன். நம்முடைய முன்னோர்களின் தொலைநோக்கும், இயற்கையைக் காக்க அவர்கள் செய்த அருங்காரியமும். அடேயப்பா!

நொய்யல் ஆற்றின் இயற்கையான நீரோட்டப் பாதையில் கிட்டத்தட்ட 22 குளங்களை ஓர் அழகிய வைரமாலை போன்ற அமைப்பில், மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு நிர்மாணித்திருந்தனர். அதுவும் எப்படி? மழை பெய்து ஒரு குளம் நிரம்பி னால், அடுத்த குளத்துக்கு நீர் தானாகவே பாய்ந்து நிரப்பும். அப்படியே தொடர்ச்சி யாக நிரம்பி, ஒரு சொட்டு நீர் கூட வீணா காதவண்ணம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இத்தனைக்கும் நீர்வளம் மிகுந்தும், மக்கள் தொகை குறைந்தும் இருந்த காலம் அது! தொழில்நுட்பமோ, இயந்திர உதவியோ இல்லாத காலத்திலேயே இப்படி ஒரு தொலைநோக்குடன் அவர்கள் சிந்தித்துச் செயல்பட்டிருக்கிறார்கள். ஆனால் நாமோ? காடுகளை வெட்டி கான்க்ரீட் நகரமாக்கி விட்டோம். ஆறுகள் சாக்கடைகளாகி விட்டன. பூமியில் பிளாஸ் டிக்கின் குவிப்பு... காற்று விஷமாகி விட் டது. அப்படியானால் அடுத்து வரப் போகும் சந்ததிக்கு நாம் எதை விட்டுச் செல்லப் போகிறோம் பாலைவனத்தைத் தவிர?

கூடாது... நொய்யலைக் காப்பாற்ற வேண்டும். கோவையைச் சுத்தமான, பசுமையான நகரமாக்க வேண்டும். இந்த லட்சியத்துக்காக 'சிறு துளி' டீம் பாடுபட ஆரம்பித்தது.

பொக்லைனர், டிப்பர், புல்டவுஸர், எஸ்கலேட்டர்ஸ், எல் அண்டு 20 உள் ளிட்ட வாகனங்கள் இரவுப் பகலாக வேலை செய்தன. கழிவுகள் தூர்வாரப்பட் டன. குளத்தில் இருந்த புதர்களும், ஆகா யத் தாமரைகளும் அகற்றப்பட்டன. பிரம் மாண்டமான கிருஷ்ணம்பதி குளத்தின் எல்லை தெரிய ஆரம்பித்தது. வேடப் பட்டி சாலையில் துவங்கி, பூசாரிப்பாளை யம் எல்லை வரை விரிந்திருந்த குளத்தைக் கண்டு அப்பகுதி மக்கள் வியந்து ஆர்ப் பரித்தனர். அடுத்த மழையில் குளமும் நிரம்பியது; நாங்கள் சிந்திய வியர்வைக்கு அர்த்தம் வந்தது அந்தக் கணத்தில்தான்!''



'சர்வஜித் பெண்' சந்திப்புகள் இத்துடன் நிறைவு பெறுகின்றன. இவர்களி 'சர்வஜித் பெண்' விருதுக்கு உரியவர் யார்? வாக்களிப்பு விவரங்கள் அடுத்த இதழில்... தேர்ந்தெடுக்கத் தயாராகுங்க தோழியரே!

என்று பெருமைபட்டார் வனிதா மோகன்.

முதலில் குளங்களைத் தூர்வாருவது என்று சின்ன பட்ஜெட்டில் ஆரம்பித்த 'சிறு துளி'யின் லட்சியம், மெகா லட்சியமாக மாறியதும் பெருஞ்சவால்களை எதிர் கொள்ள வேண்டியிருந்ததாம்...

''வெறும் தூர்வாருவதில் உபயோக மில்லை! பள்ளி, கல்லூரி மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என எல்லோ ருக்குமே வாழ்வின் ஆதாரமான நீர், நிலம் பற்றிய விழிப்புணர்வை ஊட்டுவது மிக அத்தியாவசியமானது. எனவே, அதற்கான முயற்சிகள், பயிற்சிகள், நிகழ்ச்சிகளில் பெருமளவு பணம் கரைந்தது. ஆனால் அதற்கும் நல்லதொரு பயன் இருந்தது. காந்தியடிகளின் தண்டியாத்திரை போல, 'சிறு துளி' அமைப்பினர் 'நொய்யல் யாத்திரை' மேற்கொண்ட போது, லட்சக் கணக்கான மக்கள் கூடி ஆதரவு தந்தது மெய்சிலிர்க்க வைத்த அனுபவம்.

''அது மட்டுமா? 'நொய்லுக்கு நூறு!' என்ற திட்டத்தில் கோவை மக்கள் அனை வரும் ரூ. 100/- நன்கொடையாகத் தரவேண் டும் என்று கேட்டுக் கொண்டோம். இதற் கும் நல்ல வரவேற்பு கிடைத் தது. சிறிய வியாபாரிகள் முதல் பெரிய நிறுவனங்கள் வரை, தங்களால் இயன்ற பொருள் உதவியை நொய்யலுக்காகச் செய்து வருகின்றனர்!'' என்று நன்றியுடன் குறிப்பிகிறார் வனிதா மோகன்.

'சிறு துளி'யின் பசுமைப் புரட்சிப் பணிகளில் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்டினார்.

◆ Wanted bride upto 39 years for Tamil Iyer, Vadamal, Naidruvakasyapa, Ashwini, 1967, 170cm, B.Sc., Electronics MBA employed Mumbai. Brahmin mixed parentage acceptable. Contact : Flat 21, Anuradha Complex, Bhaupatil Road, Kirkee, Pune - 411 020. Phone : 020-25818702, 9890001857

◆ Iyer, Vadama, Vadhoolam, Mirghaseerisham, 37/170cm, DME & DSM 20,000/- seeks bride, Subsect acceptable. B. Vaidyanathan, 2, 5th street, Aranganathan Nagar, Pammal, Chennai - 75. Ph : 044-2248 3397.

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜம், பூரட்டாதி 2ம் பாதம், கும்பம், 33, 5.8', B.Com., DBM, Qwait 90,000p.m. Qwait செல்ல விருப்பமுள்ள பட்டதாரிப் பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். M. Nagarajan, No. 150/100, North Redhills Road, Villivakkam, Chennai - 49. Ph : 65686503



◆ Iyer, Vadamal, Bharathwajam, Uttirattathi, 1980/5.8', B.E., TCS 6 lacs p.a. suitable bride invited- V. Gurumurthy, 10/19, NSK Cross St., Gangai Nagar, Kallikuppam, Ambattur PO., Chennai - 600 053.

◆ Madhwa Kannada, Agasthia, Balaganadu, Kiruthiga-IInd pada, 29.3.82, B.E., Senior Software Engineer, MNC, Bangalore, 6.5 lakhs p.a. 5.9', Wants slim, graduate girl (not professional) Contact : N. Udayakumar, 110, Ajees Colony, Tiruvannamalai - 606 602. Ph : 04175-225553

◆ Iyer, Kaashyapam, Mrigasheersham, Rishabha Rasi, 34 years, 5.8', working reputed organization at Mumbai seeks suitable bride. Contact : S. Mani, B-8, Sudhama Co-op Hsg Soc., Mhatre Nagar, Dombivli East, Maharashtra - 421202.

◆ Iyer, Vadamal, Thanjavur District, Uchithya Gothram, Karthikai, Rishabam, July 1979, 5.11', B.Com., IATA employed in Travel Service Chennai (only sister married-settled) seeks graduate employed girl. V. Sethuraman, Sastrihal D1, Dwaraka Apts, New No 70/Old 42, Moorthy Street, West Mambalam, Chennai - 600 033. Phone : 24745138/99400 69613

◆ Iyer, Brahacharanam, Kasyapam, Poorattathi-II, 32/160cms, MBA, working as a Manager in Pvt. College, Delhi. Salary Rs. 2.4 lacs per annum, seeking graduate employed girl. Send horoscope. Phone No. 011-28546137 Shri. S. Ranganathan, GG-1, 183-B, Vikas Puri, New Delhi - 110 018.

◆ Iyer, Good-looking, employed bride is requested to Kowsika, Vadama, Uthradam groom, 30, B.E., MBA, 5.7' in ICICI Bank, salary Rs. 30,000/- p.m. R.Virdhagiri, 105, TNHB, Anna Nagar Cuddalore- 1. Ph : 04142-292303.

◆ தமிழ் ஐயர், பிரஹசரணம், கௌண் டின்யம், மகம் 38/158 MA MBA Fair தனியார் நிறுவனம், 10,000/- மாத வருமானம் சொந்த Flat மணப்பைய னுக்கு படித்த வேலைக்குச் செல்லும்/ செல்லாத அழகான பிராமணப் பெண் தேவை. டி. ராமாமிர்தம், 4/37 28வது தெரு, தில்லை கங்கா நகர், நங் நல்லூர், சென்னை - 600 061. ஃபோன் : 044-2267 1745

◆ Vadammal, Vadhula Kothram Aswini, 1975/5.8/B.A., State Govt Employee/North Arcot, Rs. 10,000/ p.m., seeks suitable girl. Babu Rao, No 17, Mukkathal Street, Pursawalkam Chennai - 600 007. Phone : 2640 2059

◆ ஐயங்கார், வடகலை, பாத்ராயணம் உத்திரம், 1976, எம்.காம்., 15,000/ தனியார் பணியிலுள்ள மணமகனுக்கு தகுந்த மணப்பெண் தேவை. தொடர் : W.R. நரசிம்மன், எண் 2, 2வது தெரு கோவிந்தசாமி நகர், மடிப்பாக்கம் சென்னை - 91. போன்: 044-2258 116

மணமகன் தேவை

◆ ஐயர், வடமாள், கௌசிகம், ரோகிணி முதல் பாதம், 24 வயது, DECE, B (Final - will get completed by April '08 பெண்ணிற்கு தகுந்த வரன் தேவை கௌண்டின்ய கோத்திரம் தவிர மற்றவ கள் விண்ணப்பிக்கலாம். ஜாதக பொருத்தம் முக்கியம். ஃபோன் : 222 9 621. பெட்டி எண் : 20026

◆ Alliance invited for Iyer girl 24 year Vadamal, Barathwaja, Hastam, B.Tec (Chem) working in Chennai MN (Non-IT), from professional qualified groom, well employed Chennai. Age 26 to 29 years. Box N 20027

◆ Iyer, Vadamal, Bharathwajan Thiruvadhirai, 1978/5.4', B.Com., MB. MNC, employed fair, seeks Vadamm

groom upto 35 well employed with clean habits. Apply with horoscope. Phone : 22237316 Box No. 20028

◆ Kerala Iyer, Brahacharanam, Moudgalya, Uthram, 26 years, fair, good-looking, +2, Efficient in Computer Operation, Staying at Bombay seeks Kerala Iyer Boys. Contact : Sri G. Subramanian - 022-27820102 Box No. 20029

◆ ஐயர், பிரஹசரணம், ஆத்ரேயம், சித்திரை 4ம் பாதம், 1979, 5.2', பி.ஈ. படித்த பெண்ணிற்கு பி.ஈ.,/பி.டெக் படித்த நல்ல குணம், உத்தியோகத்தி லுள்ள, 1 முதல் 3 வயது வித்தியாசத்தில் பையன் தேவை. செல் : 9444288988 பெட்டி எண் : 20030

◆ Suitable alliance invited for Tamil Iyer, Vadama, Srivatsa girl, 1982/165 fair, B.Tech., MS, doing MBA (IIM) course completion - March 2008. Box No. 20031

◆ Cultured, Highly placed, Respectable Chennai based Brahmin Parents, Father Telugu, Mother Tamil, Looking for USA based M.S. Grooms from South Indian Brahmin Families for daughter 31, 5.2', M.S. USA, H1B Visa. Uttaratadi, Koundinya. email : sarma_chandar @yahoo.com Box No. 20032

◆ பிரஹசரணம், ஹரிதம், திருவாதிரை, 29/5.5, M. Phil., Eco., தனியார் பணி, நடுத்தரக் குடும்பம் நல்ல குணமுள்ள பெண் ணிற்கு 30 முதல் 35 வயதிற்குள் சென்னையில் நல்ல உத்தியோகத்தி லுள்ள, பரந்த மனமும் நல்ல குணமும் உள்ள மணமகன் தேவை. எளிய திருமணம் - கோவிலில், வரவேற்பு நல்ல ஹோட்டலில். தொடர்பு : 044-22780641/9952894806 பெட்டி எண் : 20033

◆ Iyer, Brahacharanam, Kousigam, Spinster, Visagam, Thulam, 1963, M.A., B.Ed., Good-looking, 5.1', fair, willing only to be homemaker, seeks groom well educated, well employed, preferably Govt/PSU, aged below 47. Send horoscope Shri. K. K. Ananthakrishnan, Ph : 04259-236688 Cell : 94424 14284 Box No. 20034

◆ Tamil Iyer, Ashtasahasram, Vadhoolam, Mirugashreesam, 9-03-1976, 5.6', MBA, working in scope as a manager, seeks suitable groom. Contact : 044-2811 5322. Mail ID : srinivasan_sgb@yahoo.com Box No. 20035

◆ Iyer, Vadamal, Vashista Gothram, Bharani, 14.5.1980, B.Tech., 155cm, fair, TCS Software Engineer seeks suitable groom. Tamil Matrimony ID:M857625 email: kshrinnasan@gmail.com Ph : 0413-4205798 Cell : 98945 03388 Box No. 20036

◆ 25/157 cms, Brahmin, Ashtasahasraham, B.E. seeking age between 28 to 29, BE/ME, preferred from US. Contact : 9987434814 Box No. 20037

◆ Iyer, Vadamal, Bharatwajam, Ayilyam IV, 37/165 fair, slim, Government Lecturer, Tirunelveli, transferable, Legal Divorcee without encumberance seeks Brahmin employed. Clean habits groom. Box No. 20038

◆ கன்னட ஐயங்கார், கேட்டை, விசுவாமித்திர கோத்திரம், 29/5.1', HSC, மாநிறம், ஒரு சிறிய குறை தெரியாத நல்ல தோற்றம், அருமையான குணம், பாடகியாகவுள்ள பெண்ணிற்கு 35 வயதிற்குள் நல்ல குணமும், நிரந்தர வருமானமும் உள்ள பெங்களூரில் வாழும் தமிழ் அல்லது கன்னட பிராம்மண வரன் தேவை. போன் தொடர்பு: திருமதி வித்யா 08175-252717; பெட்டி எண் : 20039

◆ Iyer, Ashtasahasram, Kashyapam, Pooram, 31/5.2', B.Com., GNIIT, M.Sc., IT Qualified, wheatish, good-looking, healthy seeks professionally Competent well employed groom with income drawn above 25K within 36. Contact : 03324359512/ 09432339512 email:rsmani42 @vsnl.net Box No. 20040

◆ Iyer, Brahacharanam, Srivatsam, Oct.77, Bharani, 5 ft, B.A., (Eco), D.C.S. P.P.T.C. wheatish, not willing to go job, Expectation, Professionally qualified with above 25,000/- salary, well settled Boy. Ph : 04179-221383, 9843350280. Box No. 20041

◆ Iyer, Vadma, 1983, 5.3', Athreya, Swathi, B.E., (Computer Science) TCS Software Engineer, Bangalore, Rs. 30,000/- p.m. seeks BE or BE, MS bridegroom. N. V. Ganesan, B 3/18 Bagalur (Housing Bd) Road, T.N.H.B. Colony, Hosur - 635 109. Phone : 04344-240978 Cell : 9443922201

◆ ஐயர், அஷ்டசகஸ்ரம், கௌண்டின்யம், 28/162, B.Sc., M.S. (wipro), விசாகம் -3, சாஃப்ட்வேர் என்ஜினியர், 7ல் ராகு உள்ள பெண்ணுக்கு நருந்த படித்த, லக்னத்தில் ராகு அல்லது கேது உள்ள மணமகன் தேவை. என். பால சுப்ரமணியன், நெ. 116/97, முண்டக கண்ணி அம்மன் கோவில் தெரு மைலாப்பூர், சென்னை-4. ஃபோன் 2498 6330.

மணமகன் மணமகள் தேவை

◆ Astasahasram, Koundinya Mirugasirisham-I, 1982/168 MCA SWE, MNC, Sudha Jadagam, Seek Professionally qualified well settled Boy. Also for her Brother, Thiruvadirai 1977/180 M.B.B.S., (Gold Medalist Ph.D. in Medical Genetics doing post Doctorate Fellow in Seattle. Seek professional qualified girl. Sudh Jadagam. Subsect no bar. Age difference 2 to 5 years for Both Visiting India in March. Horoscop match must. Contact : Ph 080 25611671. email girirajan_v@yahoo.co.in Box No 30010




மார்ச் மாதம் எப்படி?

ராசிபலன்களும் எளிய பரிகாரங்களும்

கிரக நிலை

			செவ்
சூரி ரா	1.3.2008 அன்று கிரகநிலை		
சுக் புத			கே சனி
கு	சந்		



கணித்து வழங்குபவர் : டாக்டர் முருகடிமை துரைராஜ்

மேஷம்



(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ஆம் பாதம்)

மேஷராசி அன்பர்களே! உமது எண்ணம் ஈடேறும். புதிய முயற்சிகள் எதுவானாலும் அதில் அபார வெற்றி கிட்டும். இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும். பூர்விகச் சொத்தில் வில்லங்கம் தீரும். வெளிநாடு செல்லத் திட்டமிட்டவர்கள் வெற்றி பெறுவர். அரசு வழி அனுகூலம் தேடி வரும். புதிய வீடு, மனை, பூமி, வண்டி வாகனம் என வாங்க இடமுண்டு. பெற்றோரின் உடல் நலனில் மிக்க கவனம் தேவை. பெண்களுக்கு மாமனார் மூலம் ஒத்துழைப்பு கிட்டும். மாமியாருடன் சற்று அனுசரித்துப் போவது நன்று. மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவது நலம். வியாபாரிகள் புதிய கிளைகள் திறக்கவும் புதிய வியாபார ஒப்பந்தம் மற்றும் ஏஜென்சி பெறவும் இடமுண்டு. உத்யோகஸ்தர்களுக்கு வேலையில் பளு கூடும். எனினும், மன அமைதி கிட்டும். 1.3.2008 மாலை வரை மற்றும் 25.3.2008 காலை முதல் 28.3.2008 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள்: 3, 6, 9. அதிர்ஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு, ஆரஞ்சு.

பரிகாரம்: பிரதி செவ்வாய் லட்சுமிநரசிம்மரை வழிபடவும்.

(கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாதங்கள்)

ரிஷப ராசி அன்பர்களே! தொட்டது துலங்கும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டாம். சகோதர வழியில் உதவிகள் கிட்டும். வீடு, பணிமனை, வியாபாரஸ்தலம் போன்றவற்றில் மாற்றம் நிகழும். தொழில் வளர்ச்சிக்கு வேறு மொழி பேசுவோரால் உதவி கிட்டும். இசை பயில்வோர் அதனை அரங்கேற்றம் செய்வர். மாணவர்கள் விடாமுயற்சியுடன் படித்தல் நலம். உத்யோகஸ்தர்கள் உயர் அதிகாரிகளிடம் மிகவும் பக்குவமாக நடந்து கொள்ளவும். வியாபாரிகள் வரி சம்பந்தமான அனைத்து செயல்பாடுகளிலும் தனிக்கவனம் செலுத்துவது நல்லது. 1.3.2008 மாலை முதல் 3.3.2008 நள்ளிரவு வரை மற்றும் 28.3.2008 முன்னிரவு முதல் 31.3.2008 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கொடுக்கல் வாங்கலில் மிக்க கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள்: 4, 6, 9. அதிர்ஷ்ட நிறம் : ரோஸ், ஊதாப்பூ நிறம்.

பரிகாரம்: தினசரி மாலை 5 முதல் 6 மணிக்கு வீட்டில் நெய் தீபம் ஏற்றி மகா லட்சுமி ஸகஸ்ரநாம ஸ்தோத்திரம் பாராயணம் செய்யவும்.



ரிஷபம்

மிதுனம்



(மிருகசீரிஷம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

மிதுனராசி அன்பர்களே! கடன் தீரும். கவலைகள் விலகும். வியாபார அபிவிருத்திக்குப் போதிய நிதி வசதி கிட்டும். புதிய ஒப்பந்தங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கண் சம்பந்தமான சிறு சிறு உபாதைகள் வந்து விலகும். சகோதர வழியில் இணக்கமான போக்கு நிலவும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். பிரிந்து வாழும் தம்பதியர் இணைந்து வாழ வழி பிறக்கும். கணவன் - மனைவி இடையில் சந்தோஷம் குடிகொள்ளும். மாணவர்கள் படிப்பில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். உத்யோகஸ்தர்கள் விரும்பிய இட மாறுதல் பெறலாம். வியாபாரிகள் தமது வியாபாரத்தை பல வழிகளிலும் விருத்தி செய்வர். 3.3.2008 நள்ளிரவு முதல் 5.3.2008 பின்னிரவு வரை சந்திராஷ்டமம் என்பதால் கவனம் தேவை. பணம் கையாள்வதில், உறுதிமொழிகள் தருவதில் மிகுந்த முன்னெச்சரிக்கை தேவை.

அதிர்ஷ்ட எண்கள்: 1, 5, 6.

அதிர்ஷ்ட நிறம் : இளம் பச்சை , இளஞ்சிவப்பு.

பரிகாரம்: பிரதி புதன் கிழமை அருகில் உள்ள பெருமாள் கோவில் சென்று துளசி மாலை சாத்தி அர்ச்சனை செய்க.

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்)

கடக ராசி அன்பர்களே! உமது புத்திக்கூர்மையினால் சாதனை படைப்பீர்கள். பிரிந்து வாழும் தம்பதிகள் இணைய வழியுண்டு. விவாகரத்து வழக்குகள் முடிவுக்கு வரும். வீடு, மனை, தோட்டம் என ஸ்திர சொத்துக்கள் வாங்க வாய்ப்புள்ளது. சகோதர வழியில் உதவியும், ஒத்தாசையும் கிட்டும். மாமனார், மாமியார், நாத்திமார் போன்றவர்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தவும். கணிதம், விஞ்ஞானம் போன்றவற்றில் நல்ல மதிப்பெண் பெறுவர். ஏனைய பாடங்களில் பிரத்யேக கவனம் தேவை. உத்யோகஸ்தர்கள் பதவி உயர்வு, இடமாறுதல் பெறுவர். வியாபாரிகள் வியாபார முறைகளில் மாற்றத்தையும், புதிய கிளைகள் திறப்பதில் அதிக கவனமும் செலுத்துவர். 5.3.2008 பின்னிரவு முதல் 6.3.2008 அதிகாலை முதல் 8.3.2008 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9

அதிர்ஷ்ட நிறம் : வெளிர் பச்சை.

பரிகாரம் : லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்யலாம். இறைவனை மனமுருக வேண்டவும். சோமவாரம் விரதம் இருக்கவும்.



கடகம்

சிம்மம்



(மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்)

சிம்ம ராசி அன்பர்களே! சரளமான பணப் புழக்கம் உண்டாகும். கடன் தீரும். கோர்ட் வழக்கில் எதிர்பாராத சாதகமான தீர்ப்பு கிட்டும். உத்தியோக உயர்வு வரும். கணவன், மனைவி இடையில் சிறு சிறு ஊடலும் கூடலும் நிகழும். அளவோடு பேசுங்கள். பிரச்னைக்கு இதுவே தீர்வாகும். பூர்விகச் சொத்து உமது வசம் ஆகும். பொது வாழ்வில் சிறப்பாக பீடுநடை போடலாம். பெண்கள் தமது வாழ்க்கைத் துணையுடன் சற்றே விட்டுக் கொடுத்துப் போவது நலம். சிலர் உயர்கல்விக்காக வெளிநாடு செல்லத் திட்டமிடுவர். உத்யோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிட்டும். விரும்பிய இடமாற்றமும் கிட்டும். வியாபாரிகள் புதிய திட்டங்களை அறிமுகம் செய்வர். 8.3.2008 காலை முதல் 10.3.2008 நண்பகல் வரை சந்திராஷ்டமம். மிகவும் கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 1, 3, 4, 6, 9. அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு.

பரிகாரம் : பிரதோஷ காலத்தில் சிவாலயம் சென்று வழிபடவும். தினசரி சூரிய நமஸ்காரம் செய்க. ஒருமுறை திருவெண்காடு சென்று அங்குள்ள சிவபெருமானை வழிபட்டு வரவும்.

கன்னி

(உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்)

கன்னிராசி அன்பர்களே! நண்பர்கள் சேர்க்கை கிட்டும். புதிய ஒப்பந்தம் உண்டாகும். ஏற்றுமதி, இறக்குமதி, வாணிபம் சிறப்பாக அமையும். உமது மகன் (அ) மகள் உயர் கல்வியில் வெளிநாடு செல்வர். தூரதேசத்திலிருந்து நல்ல செய்திகள் வரும். வீடு, மனை என வாங்க வழிவகை உண்டாகும். பெண்களுக்கு தாயார் வீட்டுச் சீதனம் கணிசமாகக் கிடைக்கும். நீங்கள் வீடு கட்டுவதற்கு தக்க தருணத்தில் உதவி பெறுவீர்கள். மாணவர்கள் உயர்கல்வி பெற இருந்த தடைகள் விலகும். உத்யோகப்பிரிவினர் உயர் அதிகாரிகளின் அன்புத் தொல்லைக்கு ஆளாகவும், அதனால் இடையறாது ஓய்வு ஒழிச்சலின்றி பாடுபடவும் நேரிடும். வியாபாரிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிபாக்கிகளை உரிய காலத்தில் செலுத்தி விடுவது நலம். 10.3.2008 நண்பகல் முதல் 12.3.2008 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம்.

அதிர்ஷ்ட எண்கள் : 4, 5, 6, 8

அதிர்ஷ்ட நிறம் : பச்சை

பரிகாரம் : பிரதி புதன் மகாவிஷ்ணுவை துளசி தளத்தால் அர்ச்சித்து வணங்கவும்.



துலாம்



(சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

துலாம் ராசி நேயர்களே! வெளிநாடு செல்ல வாய்ப்பு கிட்டும். சகோதர வழியில் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும்.

கோயில் திருப்பணிகளில் பங்கு பெற வாய்ப்புண்டு. பிரயாணம் செல்வதால், உடல் உபாதைகட்கு ஆளாகலாம். பணம் கையாள்வதில் கவனம் தேவை. பெண்கள் பேரில் சொத்துக்கள் வாங்க இடம் உண்டு.

மாணவர்கள் உயர்கல்வி பயில வெளிநாடு செல்ல இடமுண்டு. மருத்துவம் மற்றும் கணிப்பொறி தொடர்பான பிரிவுகளில் பயில்வோர் அனுகூலம் பெறுவர். வியாபாரிகளுக்கு புதிய ஒப்பந்தம் (அ) ஏஜென்சி கிடைக்கும். அரசு உதவி (அ) கடன் கிடைக்கும். 12.3.08 மாலை முதல் 14.3.2008 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9.

அதிர்ஷ்ட நிறம் : ரோஸ் மற்றும் ஆரஞ்சு.

பரிகாரம் : தினசரி காலை, மாலை வேளைகளில் 5.30 - 6.00 வீட்டில் தீபம் ஏற்றி வழிபடவும். நெய் தீபம் ஏற்றினால் மகாலட்சுமி வாசம் செய்வர். இயன்றவர்கள் பிரதி வெள்ளியன்று மகாலட்சுமி அஷ்டகம் படிக்கவும்.

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

விருச்சிக ராசி அன்பர்களே! கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். புத்திரபாக்யம் கிட்டும். நில புலங்கள் மற்றும் வீடு போன்றவற்றின் பேரில் இருந்த நீண்ட கால கடன் தீரும். பதவி உயர்வு சம்பந்தமான மேல்முறையீடுகளில் வெற்றி கிட்டும். அதற்கு தக்க பொருளாதாரப் பயனும் கிட்டும். அரசு வழி பணம் கையாளும் பணியிலிருப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணிபுரிதல் நலம். வேலைப் பளுவும் பொறுப்புகளும் அதிகரிக்கும். அன்றாட அலுவலை அன்றே முடித்து விடுவது நலம்.

மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல செய்தியைப் பெறுவர். சிலர் வெளிநாடு செல்லவும் இடம் உண்டு. வியாபாரிகளுக்கு அரசு கெடுபிடிகள் அகலும். அரசு வழி ஆதரவு கிட்டும். 14.3.2008 மாலை முதல் 16.3.2008 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. அளவோடு பேசுங்கள்.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9.


அதிர்ஷ்ட நிறம் : சிவப்பு

பரிகாரம் : கருமாரியம்மனை பிரதி செவ்வாய்க்கிழமை வழிபடவும். 'சக்தி கவசம்' படிக்கவும். மணவாழ்வில் பிரச்னை உள்ளவர்கள் 'மங்கள சண்டிகை ஸ்லோகம்' சொல்லவும்.



விருச்சிகம்

தனுசு



(மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்)

தனுசு ராசி அன்பர்களே! சகோதர வழி ஒற்றுமை மேலோங்கும். பூர்விகச் சொத்தில் வில்லங்கம் நீரும். அரசு வழி அனுகூலம் கிட்டும். எதிர் பார்த்த அவசியமான உத்தரவு, விசா, பாஸ்போர்ட், லைசென்ஸ் தடையின்மைச் சான்று போன்றவை கிடைக்கும். அரசாங்கத்தில் செய்து கொண்ட மேல்முறையீட்டுக்கு சாதகமான பதில் கிடைக்கும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள். தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. வீடு, கடை மற்றும் வியாபார நிறுவனங்கள் சற்று வசதி அதிகமான இடத்துக்கு மாற நேரும். தொழில்வளம் பெருகும். பெண்களுக்கு இல்லற வாழ்வில் இன்பம் கூடும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் தேவை. உத்தியோகப்பிரிவினர் விரும்பிய இடமாறுதலைப் பெறுவர்.

16.3.2008 முன்னிரவு முதல் 18.3.2008 நள்ளிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9.
அதிர்ஷ்ட நிறம் : பொன்னிறம்.

பரிகாரம் : பிரதி வியாழன் தட்சிணாமூர்த்தியை வழிபடவும். 'தட்சிணாமூர்த்தி அஷ்டகம்' பாராயணம் செய்க. இதனால் குருவருள் கூடும். குறைகள் அகலும்.

(உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்)


மகர ராசி அன்பர்களே! சகோதர வழி உறவுகளில் நிலவிய சங்கடம் விலகும். வீடு, மனை நல்ல விலைக்கு விற்பனையாகும். பூர்விகச் சொத்தில் சில பரிவர்த்தனைகள் செய்ய நேரும். பணம் கையாளும் பணியிலிருப்போர் கவனமுடன் பணிபுரிவது அவசியம். இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மருத்துவ வசதி பெறுவது நல்லது. செய்தொழிலில் நல்ல அபிவிருத்தி கிட்டும். மாணவர்கள் இரவு பகல் பாராது படித்து முன்னிலை பெறுவர். உத்தியோகஸ்தர்கள் துறைவாரியாக நடைபெறும் தேர்வில் வெற்றி பெற்று, பதவி உயர்வு பெறுவர். சிலர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பதவிகளுக்கு, கௌரவ அடிப்படையில் தேர்வு பெறுவர். வியாபாரிகள் ஜவுளி, டிராவல், நகை அனைத்து வகை ஏஜென்ஸி மூலம் கணிசமான லாபம் பெறுவர். 18.3.2008 நள்ளிரவு முதல் 21.3.2008 காலை வரை சந்திராஷ்டமம்.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 4, 6, 9
அதிர்ஷ்ட நிறம் : நீலம்.

பரிகாரம் : வெங்கடாஜலபதியை வழிபடவும். தினசரி காலை 5.30 - 6.00 மணியளவில் வெங்கடேச சுப்ரபாதம் கேட்க நன்று.



மகரம்



நெல்லிக்காய் வடாம்

தேவையான பொருள்கள் :

நெல்லிக்காய் – 15, மிளகாய் வற்றல் – 8, கொத்துமல்லி – 1 பிடி, பெருங்காயம், உப்பு – சிறிதளவு.

செய்முறை : கொட்டை நீக்கிய காயை உப்பு, காரம், பெருங்காயம் சேர்த்து அரைத்து, பொடியாக நறுக்கிய கொத்துமல்லி சேர்த்து உருண்டைகளாக உருட்டி காயவைக்கவும்.

– லலிதா, பெங்களூர்.

சத்துமா வடாம்

தேவையான பொருள்கள் :

வெள்ளை காராமணி – 2 கப், உளுத்தம் பருப்பு – 1 கப், நிலக்கடலை + பொட்டுக்கடலை – ¼ கப், சிவப்பு மிளகாய் – 8, உப்பு, பெருங்காயம், நறுக்கிய கறிவேப்பிலை, கடுகு, மஞ்சள் பொடி – சிறிதளவு.



செய்முறை :

ஒரு மணி நேரம் ஊறிய பருப்புகளை, உப்பு, காரம் சேர்த்து 'கரகர'ப்பாக அரைக்கவும். இதர சாமான்களைக் கலந்து, கெட்டியாக உருட்டி சிறிய உருண்டைகளாகக் காயவைக்கவும்.

– ஜானா கண்ணன்,
மைலாப்பூர்.

கேழ்வரகு வடாம்

தேவையான பொருள்கள் :

கேழ்வரகு மாவு –200 கிராம்,

பெருங்காயம், காரப்பொடி – தலா 1 ஸ்பூன்,

உப்பு – தேவைக்கு.

செய்முறை : சலித்த மாவை, தோசை மாவு பதத்துக்குக் கரைத்து உப்பு, காரம், பெருங்காயம் சேர்த்து கஞ்சியாகக் காய்ச்சவும். ஆறியபின், கரண்டியால் ஊற்றிக் காயவிடவும்.

– ஏ. கீதா ஆறுமுகம்,

தூத்துக்குடி.



ரோஜாப்பூ வத்தல்

தேவையான பொருள்கள் :

ஜவ்வரிசி, பன்னீர் ரோஜா இதழ்கள் – தலா 2 கப், ரோஜா நிறம் – 2 சிட்டிகை, சிட்ரிக் ஆசிட் – ¼ ஸ்பூன், உப்பு, மிளகாய் – தேவைக்கு.



செய்முறை : இரண்டு மணி நேரம் ஊறிய ஜவ்வரிசியை 6 கப் தண்ணீரில் வேகவிடவும். விழுதாக்கிய ரோஜா இதழ்கள், உப்பு, அரைத்த காரம், சிட்ரிக் ஆசிட், ரோஸ் கலர் பவுடர் எல்லாவற்றையும் சேர்த்து அழகாய் வட்டமாக ஊற்றிக் காயவைக்கவும்.

– ர. கிருஷ்ணவேணி, வடபழனி.

ஆந்திரா எள் வடாம்

தேவையான பொருள்கள் :

உளுத்தம் பருப்பு ¼ கிலோ , பச்சை மிளகாய் – 10,

வெள்ளை எள் – 50 கிராம்,

பெருங்காயம் – 1 டேபிள் ஸ்பூன்,

உப்பு – தேவைக்கு.

செய்முறை : முதல் நாள் இரவிலிருந்தே ஊறிய பருப்பையும், உப்பு + மிளகாயையும் தனித்தனியாக அரைத்துக் கொள்ளவும். சுத்தம் செய்த எள், காயம் இரண்டையும் எல்லாவற்றுடனும் கலந்து, கிள்ளிப் போட்டு காயவைக்கவும்.

– கே. பிரமிளா,
ஹைதராபாத்.



பாகல் வடாம்

தேவையான பொருள்கள் :

துவரம் பருப்பு – ½ கிலோ, விதை நீக்கிய பொடியாக நறுக்கிய பாகற்காய் துண்டுகள் – 1 கப், பச்சை மிளகாய் – 20, சீரகம் – 1 ஸ்பூன், உப்பு – தேவைக்கு.



செய்முறை : ஊறிய பருப்புடன் உப்பு, காரம், சீரகம் சேர்த்து அரைக்கவும். பாகல் துண்டுகளை மாவில் கலந்து சிறிய வடைகளாகத் தட்டி, வெயிலில் காயவைக்கவும்.

– தஸ்மிலா அஸ்கர், கீழக்கரை.

இலந்தை வடாம்

தேவையான பொருள்கள் :

காய்ந்த இலந்தைப் பழம் – 2 படி,

சிவப்பு மிளகாய், வெல்லம் – தலா 100 கிராம்,

உப்பு – 75 கிராம்.

செய்முறை : கொட்டை நீக்கிய இலந்தையை, இரண்டு மணி நேரம் ஊற வைத்து அரைக்கவும். காரம், வெல்லம், உப்பை அரைத்து இலந்தை அரவையில் கலக்கவும். வடையாகத் தட்டி காய்ச்சல் போடவும்.

– கே.எஸ்.

பொன்னம்மாள்,

சூளைமேடு.



கோவைக்காய் வத்தல்

தேவையான பொருள்கள் :

பிஞ்சு கோவைக்காய் – ½ கிலோ [வெட்டியது],
பச்சை மிளகாய் – 10, உப்பு – தேவைக்கு, புளித்த தயிர் – 1 கப்.



செய்முறை : கொதிக்கும் நீரில் ஐந்து நிமிடங்கள் சுத்தம் செய்த கோவைக்காயைப் போடவும். உப்பு, மிளகாய் சேர்த்து அரைத்து, தயிரில் கலந்து காயை ஒருநாள் ஊறவிடவும். மறுநாள் உலர்த்தவும்.

– பி. கஸ்தூரி ஹரிராம்,
சைதாப்பேட்டை.

தளி வடாம்

தேவையான பொருள்கள் :

புழுங்கலரிசி – 2 கப், ஜவ்வரிசி – ½ கப்,

ஓமம் – 1 ஸ்பூன், உப்பு – தேவைக்கு.

செய்முறை : ஜவ்வரிசியை ஊறவைக்கவும். அரிசியை ஊறவைத்து அரைக்கவும். இரண்டையும் கலந்து உப்பு சேர்த்து இரவு முழுவதும் புளிக்கவிடவும். மறுநாள் ஓமம் சேர்த்து, இட்லித் தட்டில் வாழை இலை போட்டு மெலிதாக எழுதி ஸ்டீம் குக் செய்யவும். இதை வெயிலிலும், நிழலிலும் மாற்றி மாற்றி மூன்று நாட்கள் காயவைக்கவும்.

– வி. ஸ்ரீவித்யா,
குடந்தை – 1.



வடாம்

பிரிஞ்சால் 2008

தேவையான பொருள்கள் :

பிஞ்சு கத்திரி – 1 கிலோ, புளி – எலுமிச்சை அளவு, மஞ்சள் தூள் – 2 ஸ்பூன், காயம், உப்பு – தேவைக்கு.



செய்முறை : சுத்தம் செய்த கத்திரிக்காயை நீளவாக்கில் நறுக்கி, நான்கு தம்ளர் புளித்தண்ணீரில் போடவும். உப்பு, மஞ்சள் தூள், காயம் சேர்த்து, முக்கால் பதத்துக்கு வேக விடவும். வடியவிட்டு உலர்த்தவும்.

– ஆதிரை.வி, சூளைமேடு.

சுக்காங்காய் வத்தல்

தேவையான பொருள்கள் :

சுக்காங்காய் – ½ படி, புளித்த தயிர் – 2 ஆழாக்கு, உப்பு – ருசிக்கு, மிளகாய் வற்றல் – 10, மஞ்சள், பெருங்காயத் தூள் – தலா 1 ஸ்பூன்.

செய்முறை : இரண்டு மணி நேரம் நீரில் ஊறிய காயை நான்காக வெட்டவும். உப்பு, காரம், காயம், மஞ்சள் சேர்த்து அரைத்து, தயிரில் கலக்கவும். வெட்டிய காயை தயிரில் ஊறவிடவும். மறுநாள் காய வைத்து மீண்டும் தயிரில் ஊறவிட்டு மறுநாள் காயவைத்து எடுத்து வைக்கவும்.

– வே. சந்தியா, சூளைமேடு.

வடாம்



சாபுதானா பொட்டேட்டோ பப்பட்

தேவையான பொருள்கள் : சாபுதானா [ஜவ்வரிசி] – ½ கிலோ, உருளைக்கிழங்கு [வெந்தது] – 150 கிராம், மிளகாய்த் தூள் – 1 ஸ்பூன், அப்பளக் காரம் – 2 ஸ்பூன், மசாலாத் தூள் – ½ ஸ்பூன், உப்பு – ருசிக்கு. ஒரு பழம் எலுமிச்சைச் சாறு, காயம் – சிறிதளவு.



செய்முறை : ஆறு மணி நேரம் ஊறவைத்த ஜவ்வரிசியை மாவாக அரைக்கவும். மாவை மூன்று தம்ளர் தண்ணீரில் உப்பு சேர்த்து கொதிக்க விடவும். மசித்த உருளை, பொடி வகைகள், எலுமிச்சைச்சாறு கலந்து, ஸ்பூனால் வட்டமாக இட்டு, காயவிடவும்.

– வி. சுமித்ரா, சென்னை.

கார வடாம்

தேவையான பொருள்கள் :

கடலை மாவு – 3 தம்ளர், அரிசி மாவு – 1 தம்ளர், வெங்காயம் – ¼ கிலோ, (நறுக்கியது), ப. மிளகாய் – 10 (நறுக்கியது), உப்பு – தேவைக்கு. நெய், எண்ணெய் – தலா 1 ஸ்பூன்.

செய்முறை : எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து, கெட்டியாகப் பிசையவும். நறுக்கிய கறிவேப்பிலையைக் கலந்து பக்கோடா போடுவது போல் பிசிறினாற் போல் உதிரியாகச் செய்து காய விடவும்.

–யாழினி பர்வதம்,
கே.கே. நகர் (மேற்கு).



சோற்று வடகம்

தேவையான பொருள்கள் :

தண்ணீர் கொட்டிய பழைய சாதம் – 1 கப், மிளகாய் வற்றல் – 2, சீரகம் – ½ டேபிள் ஸ்பூன், உப்பு, கறிவேப்பிலை – தேவைக்கு.



செய்முறை : நீர் வடித்த சாதத்தில், உப்பு, கறிவேப்பிலை, சீரகம், அரைத்த மிளகாய் சேர்த்து நன்கு பிசைந்து உருண்டைகளாக்கி காய விடவும். ருசிக்கு வெங்காயம் கூட சேர்க்கலாம்.

– டி. இராஜேஸ்வரி, சாத்தூர்.

வாழைத்தண்டு வடாம்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி – ½ கிலோ, நறுக்கிய வாழைத்தண்டு – 1 பெரிய கப், ப.மிளகாய் – 5, உப்பு, காயம் – தேவைக்கு.

செய்முறை :

முதல் நாள் இரவு ஊறப்போட்ட அரிசியை மைய அரைக்கவும். சுத்தம் செய்த வாழைத்தண்டை உப்பு, காரம், காயம் சேர்த்து அரைத்து மாவில் கலந்து கெட்டியாகும் வரை வேகவிடவும். ஆறியபின் வட்டமாக இட்டு வெயிலில் உலர்த்தவும்.

– கே. ஹேமமாலினி,
மணப்பாறை.




வடாம்

வெங்காய அவல் வடாம்

தேவையான பொருள்கள் :

கெட்டி அவல் – 500 கிராம், சின்ன வெங்காயம் – 250 கிராம், [வெட்டியது], எலுமிச்சைச் சாறு – 2 பழம், உப்பு – தேவைக்கு.



செய்முறை : உப்பு சேர்த்து அரைத்த மிளகாயை, இரண்டு தம்ளர் நீரில் கொதிக்க வைக்கவும். சுத்தம் செய்த அவல், வெங்காயம், எலுமிச்சைச் சாறு சேர்த்து நன்கு பிசைந்து, சிறு உருண்டைகளாகக் கிள்ளிப் போட்டு காயவைக்கவும்.

– க. வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி.

வடாம்

பிரண்டை வத்தல்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி – ½ கிலோ, பச்சை மிளகாய் – 6, ஜவ்வரிசி – 25 கிராம், சுத்தம் செய்த பிரண்டை – 1 கப்.

செய்முறை : ஊறவைத்து அரைத்த அரிசியை 2 நாட்கள் புளிக்க வைக்கவும். ஒரு படி தண் ணீரில் ஜவ்வரிசியைப் போட்டு பாதி வெந்தவுடன், அரைத்த பிரண்டை, உப்பு, காரம் விழுதைக் கலக்கவும். அத்தோடு அரிசி மாவையும் சேர்த்து கொதிக்கவிட்டு, ஆறியபின் அச்சில் போட்டுப் பிழியவும்.



– வி.சி. வஸந்தா,
தாம்பரம் (மேற்கு).

பக்கோடா வடாம்

தேவையான பொருள்கள் : புழுங்கலரிசி – 1 கிலோ, ஜவ்வரிசி – 100 கிராம், உளுத்தம் பருப்பு, ப. மிளகாய் – தலா 50 கிராம், வெங்காயம் – 150 கிராம்,சோம்பு – 10 கிராம்.



செய்முறை : ஊறிய பருப்பு, அரிசியை உப்பு, காரம் சேர்த்து அரைக்கவும். ஜவ்வரிசியை குக்கரில் வேகவிடவும். நறுக்கிய வெங்காயம், சோம்பு சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கிள்ளி வைத்து காயவைக்கவும்.

– கே. ராஜேஸ்வரி கண்ணன்,
மணப்பாறை.

தோசைக்காய் வடகம்

தேவையான பொருள்கள் :

தோசைக்காய் – 5, ஜவ்வரிசி – 1 கிலோ, ப. மிளகாய் – 200 கிராம், எலுமிச்சைச் சாறு – 2 பழம். உப்பு – தேவைக்கு.

செய்முறை : ஜவ்வரிசியில் ஐந்து பங்கு தண்ணீர் சேர்த்து வேகவிடவும். சுத்தம் செய்து துருவிய தோசைக்காய், அரைத்து விழுதாக்கிய உப்பு, காரம் இவற்றைச் சேர்த்து, எலுமிச்சைச் சாறையும் கலந்து, வில்லைகளாக ஊற்றிக் காய விடவும்.

– பிரபா டாக்டர்,
ஹைதராபாத்.



உருளை, மிளகு வடாம்

தேவையான பொருள்கள் :

உருளைக்கிழங்கு – ½ கிலோ, மிளகு – 1 டேபிள் ஸ்பூன், உப்பு, காயம், சீரகம் – தலா 1 ஸ்பூன்



செய்முறை : வெந்த கிழங்குடன், இதர அயிட்டங்கள் சேர்த்து அரைத்த விழுதைக் கலந்து வடைகளாகத் தட்டி உலர்த்தவும்.

– ரேணுகா சுரேஷ்,
மைலாப்பூர்.

கொத்தவரங்காய் வத்தல்

தேவையான பொருள்கள் :
பிஞ்சு கொத்தவரங்காய் – 1 கிலோ,
உப்பு – 2 டேபிள் ஸ்பூன்,
மஞ்சள் பொடி – 1 டேபிள் ஸ்பூன்.


செய்முறை : காம்புடன் சுத்தம் செய்த கொத்தவரையைக் கொதிக்கும் வெந்நீரில், உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து ஊறவிடவும். ஆறியபின் வடிய வைத்து, வெயிலில் காய வைக்கவும்.

– மாலதி நாராயணன்,
ஆழ்வார்திருநகர்.



பீட்ரூட் வடாம்

தேவையான பொருள்கள் : பச்சரிசி – 4 தம்ளர், ஜவ்வரிசி – 1 தம்ளர், பீட்ரூட் துருவல் – ½ கிலோ, ப. மிளகாய் – 10, எலுமிச்சைச் சாறு –2 பழம், உப்பு – தேவைக்கு.



செய்முறை : அரிசி, ஜவ்வரிசியை மிஷினில் ஒன்றாக அரைக்கவும். மாவைப் போல் இரு மடங்கு நீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். அதில் பீட்ரூட் துருவல், உப்பு, காரம் சேர்த்து அரைத்த விழுதைப் போடவும். வெந்தவுடன் எலுமிச்சைச்சாறு கலந்து அச்சில் பிழியவும்.

– கலா பாஸ்கர், விருகம்பாக்கம்.

எள்ளு வடாம்

தேவையான பொருள்கள் : பச்சிரிசி –1 கிலோ, எள்ளு – ¼ கிலோ, [கறுப்பு/வெள்ளை] உப்பு, காயம் – தேவைக்கு.

செய்முறை : அரைமணி நேரம் ஊறிய அரிசியை வெயிலில் உலர்த்தி, மிஷினில் மாவாக்கவும். எள்ளை சுத்தம் செய்து [கறுப்பு எள்ளில் தோல் நீக்கவும்] வறுத்து, பொடியாக்கவும். இரண்டு பங்கு நீரில் கொதிக்கும் மாவுடன், உப்பு, காயம், கார விழுதைச் சேர்த்து, ஆறியவுடன் எள்ளுப் பொடி கலந்து கிள்ளிப் போடவும்.

– உமா கிருஷ்ணா,
கரூர்.



கேரட் வடகம்

தேவையான பொருள்கள் :

ஜவ்வரிசி, கேரட் – தலா ½ கிலோ,
ப. மிளகாய் – 20, எலுமிச்சை பழச்சாறு – 1 பழம்,
உப்பு, காயம் – தேவைக்கு.



செய்முறை : சுத்தம் செய்து, மூன்று மணி நேரம் ஊறிய ஜவ்வரிசியை, இரண்டு லிட்டர் தண்ணீரில் வேகவிடவும். சுத்தம் செய்த சிறு கேரட் துண்டுகளை உப்பு, காரம், காயம் சேர்த்து கூழோடு வேகவிடவும். ஆறியபின் சாறு கலந்து, ஸ்பூனால் ஊற்றிக் காயவைக்கவும்.

– அருணா இரத்தினம், மதுரை.

வடாம்

மங்கோடி வடாம்

தேவையான பொருள்கள் :

பயத்தம் பருப்பு – 3 ஆழாக்கு,
மிளகாய்த் தூள், சீரகம் – தலா 1 ஸ்பூன்,
உப்பு – தேவைக்கு.

செய்முறை :

ஊறிய பயத்தம் பருப்பை, வடிய விடவும். அத்துடன் இதர சாமான்களைச் சேர்த்து, விழுதாக அரைக்கவும். சிறு உருண்டைகளாகக் கிள்ளிப் போட்டுக் காயவைக்கவும்.

– கே. ராஜலக்ஷ்மி,
நங்கநல்லூர்.



ரச வடாம்

தேவையான பொருள்கள் : துவரம் பருப்பு – 1 ஆழாக்கு, பச்சரிசி – 1 கரண்டி, ஜவ்வரிசி, தனியா – தலா 2 ஸ்பூன், மிளகு, சீரகம் – தலா 1 ஸ்பூன் , சிவப்பு மிளகாய் – 2, கொத்துமல்லி, கறிவேப்பிலை, உப்பு – தேவைக்கு.

செய்முறை : பருப்பு, ஜவ்வரிசி, பச்சரிசியை தனியாக ஊறவைத்து அரைக்கவும். உப்பு, காரம் அரைத்து எல்லாவற்றையும் கலக்கவும். கொதிக்கும் நீர் விட்டுப் பிசைந்து, சிறு வில்லைகளாகத் தட்டி உலர்த்தவும். இதை நெய்யில் பொரித்து, ரசத்தில் போடவும்.

– செல்லம் நடராஜன், தி. நகர்.



சாம்பார் கருவடாம்

தேவையான பொருள்கள் :

துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு – தலா ½ ஆழாக்கு, சிவப்பு மிளகாய் – 10,

உப்பு, காயம் – சிறிதளவு, துருவிய பூசணி – 1 கப்,

நறுக்கிய மல்லி – சிறிதளவு.

செய்முறை : பருப்புக்களை ஊற வைத்து, உப்பு, காரம், காயம் சேர்த்த ரைத்துக் கொள்ளவும். பூசணி, மல்லி யைக் கலந்து சிறு உருண்டைகளாகக் கிள்ளி காயவைக்கவும்.

– பி. பிரேமா,

மடிப்பாக்கம்.



வடாம்

மாங்காய் வத்தல்

தேவையான பொருள்கள் :

மாங்காய் – 1 டஜன், உப்பு – ¼ ஆழாக்கு.

செய்முறை : சுத்தம் செய்த மாங்காயை துண்டுகளாக நறுக்கவும்.



உள்ளிருக்கும் பருப்பையும் துண்டங்களாக்கி உப்பு கலந்து ஒருநாள் ஊறவிடவும். ஊறிய துண்டங்களை பரவலாக உலர்த்தி எடுத்து வைக்கவும். பருப்பு, துண்டங்கள் இரண்டையுமே உபயோகப்படுத்தலாம்.

– எம். கீதாராணி, சென்னை.

பத்திய வடாம்

தேவையான பொருள்கள் :

புழுங்கலரிசி – 1 கிலோ, இஞ்சி, தனியா – தலா 100 கிராம், மிளகு, சீரகம் – தலா 20 கிராம், ஓமம் – 1 டேபிள் ஸ்பூன்.

செய்முறை : முதல் நாள் ஊறவைத்த அரிசியில் உப்பு சேர்த்து நைசாக அரைக்கவும். மருந்து சாமான்களை அரைத்து, வடிகட்டவும். சாறினை மாவில் கலந்து, இட்லி போல் ஆவியில் வேகவிடவும். ஓமப்பொடி [அகண்ட கண்] அச்சில் போட்டுப் பிழிந்து காய வைக்கவும்.

– எல். உஷா குமாரி,
சென்னை.



பாயச வடாம்

தேவையான பொருள்கள் : ஜவ்வரிசி – 2 தம்ளர், பாதாம் பருப்பு, முந்திரி – தலா 10, ஏலம் – தேவைக்கு.



செய்முறை : இரண்டு மணி நேரம் ஊறிய ஜவ்வரிசியை மெலிதாக சீவிய பருப்புக்களுடன் குக்கரில் வேகவிடவும். ஆறிய பின் ஏலம் கலந்து ஸ்பூனால் ஊற்றிக் காயவைக்கவும். இந்த வடகத்தை நெய்யில் வறுத்து பாயசத்தில் சேர்க்க சுவை அள்ளும்.

–என். ரேவதி, மேற்கு மாம்பலம்.

வடாம்

பரங்கி வத்தல்

தேவையான பொருள்கள் :

அரிசி – 2 தம்ளர், பரங்கி – ½ கிலோ,

சிவப்பு மிளகாய் – 2, தக்காளி – 2,

சீரகம் – 1 டேபிள் ஸ்பூன்,

உப்பு, காயம் – தேவைக்கு.

செய்முறை : ஊறவைத்த அரிசியுடன், சுத்தம் செய்யப்பட்ட பரங்கி, இதர அயிட்டங்களையும் சேர்த்து அரைத்து கூழாகக் காய்ச்சவும். ஆறியபின் ஸ்பூனால் ஊற்றிக் காயவைக்கவும்.

– பி. சுப்புலட்சுமி
செல்வராஜ்,
தேவகோட்டை.



தூதுவளை வடகம்

தேவையான பொருள்கள் : தூதுவளை இலை – 1 கப் (முள் நீக்கியது), பச்சரிசி – 2 ஆழாக்கு, ஜவ்வரிசி – 25 கிராம், சீரகம் – 1 ஸ்பூன், ப. மிளகாய் –6, உப்பு – தேவைக்கு.

செய்முறை : அரிசி, ஜவ்வரி சியை முதல் நாள் ஊறவைத்து, உப்பு, காரம் சேர்த்து, தோசை மாவு பதத்திற்கு கரைத்துக் கொள்ளவும். மறுநாள் ஐந்து தம்ளர் நீரில் கரைத்த மாவையும், அரைத்த உப்பு, கார விழுதையும் சேர்த்து வேகவிடவும். வெந்த மாவில், பொடியாக்கிய இலையைக் கலந்து, ரிப்பன் அச்சில் போட்டுப் பிழிந்து காயவிடவும்.



– பி. ரமாமணி பார்த்தசாரதி,
குரோம்பேட்டை.

மைதா வடாம்

தேவையான பொருள்கள் :

மைதா மாவு – 1 கிலோ,

மிளகாய்ப் பொடி, எள்ளு, சீரகம் – தலா 1 டேபிள் ஸ்பூன்,

உப்பு – தேவைக்கு, எலுமிச்சைச் சாறு –3 பழம்.

செய்முறை : மாவை, துணியில் மூட்டைக் கட்டி ஆவியில் வேகவிட வும். அதில் எ. சாறு தவிர மற்றவற்றைக் கலந்து, தோசை மாவு பதம் வரை நீர் சேர்த்து கூழாகக் காய்ச்சவும். ஆறியபின் சாறு கலந்து சிறு கரண்டியால் ஊற்றிக் காயவைக்கவும்.

– விஜயா ராஜன்,
பெங்களூர்.



தக்காளி, புதினா வடாம்

தேவையான பொருள்கள் :

அரிசி மாவு – ½ கிலோ, தக்காளி – 4, இஞ்சி – 50 கிராம், ஜவ்வரிசி – 100 கிராம், எலுமிச்சைச் சாறு – 2 பழம், புதினா இலை– 1 கப், உப்பு – தேவைக்கு.



செய்முறை : மாவை, தோசை மாவு பதத்துக்கு கரைத்துக் கொள்ளவும். எலுமிச்சைச் சாறு தவிர மற்றவற்றை அரைத்து மாவில் கலந்து, கொதிக்கவிடவும். ஆறியவுடன் எலுமிச்சைச் சாறு கலந்து தேவையான அச்சில் பிழியவும்.

– வசந்தா கோபாலன், மைலாப்பூர்.

வடாம்

முப்பருப்பு வடாம்

தேவையான பொருள்கள் :

உளுத்தம் பருப்பு – 2 கப்,

துவரம் பருப்பு, பயத்தம் பருப்பு – தலா ½ கப்,

மிளகாய் வற்றல் – 10, காயம், உப்பு – தேவைக்கு,

கடுகு – 1 ஸ்பூன்.

செய்முறை : ஒரு மணி நேரம் ஊறிய பருப்புகளை உப்பு, காரம் சேர்த்து அரைத்து கடுகு, காயம் கலக்கவும். இக்கலவையைக் கிள்ளிப் போட்டு காயவிடவும்.

– என்.பி. பத்மாட்சி,
குடியாத்தம்.



பூசணி வத்தல்

தேவையான பொருள்கள் :

உளுத்தம் பருப்பு – 1 ஆழாக்கு, துருவிய பூசணி – 1 கப், மிளகாய்ப் பொடி – 2 ஸ்பூன்,

உப்பு, காயம் – தேவைக்கு.



செய்முறை : ஊறிய பருப்பை, உப்பு, காரம், காயம் சேர்த்து கரகரப்பாக அரைக்கவும். பூசணித் துருவலைப் பிழிந்து கலந்து கிள்ளி வைத்து காயவைக்கவும்.

– எஸ். ரமாமணி, சின்ன காஞ்சிபுரம்.

பால் வடாம்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி – 800 கிராம், ஜவ்வரிசி – 300 கிராம், ப. மிளகாய் – 7, காய்ச்சாத பால் – ¼ லிட்டர், எலுமிச்சைச் சாறு – 2 பழம், உப்பு – 4 ஸ்பூன், காயம் –தேவைக்கு.

செய்முறை : அரிசியையும், ஜவ்வரிசியையும் மிஷினில் அரைக்கவும். ஏழு தம்ளர் நீரில் உப்பு, காயம், காரம் அரைத்த விழுதைக் கலந்து கொதிக்கும் சமயம் மாவைப் போட்டுக் கிளறி, சாறு பிழியவும். மறுநாள் பால் சேர்த்து இழுத்துப் பிசைந்து/மிக்ஸியில் அரைத்து ரிப்பன் அச்சில் பிழியவும்.

– எஸ். லலிதா, மும்பை.

வடாம்



சட்டு, புட்டு வடாம்

தேவையான பொருள்கள் :
காராமணி, உளுத்தம் பருப்பு – தலா 2 கப், மிளகாய் வற்றல் – 15, உப்பு, காயம் – தேவைக்கு.



செய்முறை : பருப்புகளை மிஷினில் ரவையாக அரைத்துக் கொள்ளவும். உப்பு, காரம், காயத்தை விழுதாக்கவும். கலந்து சூடான நீர் விட்டுப் பிசைந்து, உருட்டிப் போட்டு காயவைக்கவும்.

– ஜெயா சம்பத்,
ஆதம்பாக்கம்.

முள்ளு வடகம்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி – 1 கிலோ, ஜவ்வரிசி – 1/4 கிலோ, ப. மிளகாய் – 10, சீரகம் – 1 ஸ்பூன், உப்பு – தேவைக்கு

செய்முறை : அரிசி, ஜவ்வரிசி இரண்டும் இரண்டரை மணி நேரம் ஊறியபின், உப்பு, காரம் சேர்த்து அரைக்கவும். குக்கரில் சாதத்திற்கு வைப்பதை விட கால் பங்கு தண்ணீர் அதிகம் விட்டு வேகவைத்து, ஆறியவுடன் முள்ளு முறுக்கு அச்சில் பிழியவும்.

– ஏ. ஸ்ரீவித்யா, திருச்சி.



நெல்லி வடாம்

தேவையான பொருள்கள் :

நெல்லிக்காய் – 15, சிவப்பு மிளகாய் – 7, பச்சைக் கொத்துமல்லி – 1 படி [சுத்தம் செய்தது], காயம், உப்பு – தேவைக்கு.



செய்முறை : நெல்லிக்காய் மூழ்கும் வரை நீர் விட்டு வேக விடவும். கொட்டை நீக்கியபின் இதர அயிட்டங்களுடன் சேர்த்து அரைத்து, வடைகளாகத் தட்டிக் காயவிடவும்.

– லலிதா, பெங்களூர்.

அவல், வெண்டை வடகம்

தேவையான பொருள்கள் :

கெட்டி அவல் – ¼ கிலோ,

வெண்டைக்காய் – 100 கிராம்,

ப. மிளகாய் – 2, உப்பு – தேவைக்கு.

செய்முறை : சுத்தம் செய்த அவலை, பத்து நிமிடம் ஊறவிடவும். வெண்டைக் காயை மிகவும் பொடியாக நறுக்கி, உப்பு, காரத்தை அரைத்து அவலுடன் நன்கு பிசையவும். சிறிய உருண்டை களாக உருட்டி காயவைக்க வும்.

– ஆர். சுபா, ஈரோடு.



வெஜிடபிள் வடகம்

தேவையான பொருள்கள் : பீன்ஸ், கேரட், பட்டாணி, உருளை, அவரை – தலா 100 கிராம், மிஷின் அவல் – 1 கிலோ,

ப. மிளகாய் – 100 கிராம், உப்பு, காயம் – தேவைக்கு, நறுக்கிய மல்லி – 1 கப் [சுத்தம் செய்தது]



செய்முறை : அரைவேக்காட்டில் வெந்த காய்களோடு உப்பு, காயம், காரம் அரைத்த விழுதைக் கலக்கவும். சுத்தம் செய்து ஊறிய அவலை, இழுத்துப் பிசைந்து காய் கலவை, மல்லி சேர்த்து, வடைகளாகத் தட்டி காயவைக்கவும்.

– ஆர். ராஜலட்சுமி, விழுப்புரம்.

பொரி வடாம்

தேவையான பொருள்கள் :

அரிசிப் பொரி – ¼ கிலோ, தயிர் – 1 தம்ளர், ப. மிளகாய் – 5, உப்பு, காயம் – தேவைக்கு, நறுக்கிய மல்லி – சிறிதளவு.

செய்முறை : பொரியை, தயிரில் அரைமணி நேரம் ஊறவிடவும். உப்பு, காரம், மல்லி சேர்த்து விழுதாக்கி, அத்துடன் பொரியையும் தயிருடன் சேர்த்தரைத்து விழுதாக்கவும். சிறிய வில்லைகளாக ஊற்றிக் காய விடவும்.

– ப்ரவீணா அருண், தர்மபுரி.



வறுத்த வடாம்

தேவையான பொருள்கள் : பச்சரிசி – 1 கிலோ, ப. மிளகாய் – 10. எலுமிச்சைச் சாறு – 2 பழம், உப்பு – தேவைக்கு.

செய்முறை : இரண்டு மணி நேரம் ஊறிய அரிசியை உலர்த்தி மிஷினில் மாவாக்கவும். சலித்த மாவை வெறும் வாணலியில் வறுக்கவும். ஒரு கிலோவிற்கு 1¼ லிட்டர் கொதிக்கும் நீரை ஊற்றி, உப்பு, காரம், சாறு சேர்த்து அடுப்பில் வைக்காமல் கிளறவும். ஓமப்பொடி அச்சில், இட்லித் தட்டில் பிழிந்து ஆவியில் வேகவைத்து காயவைக்கவும்.



– எஸ். நிரஞ்சனி, போரூர்.

கோதுமை வடாம்

தேவையான பொருள்கள் :

வெள்ளை கோதுமை – 1 கிலோ,

ப. மிளகாய் – 100 கிராம், காயம், உப்பு – தேவைக்கு.

செய்முறை : காலையில் ஊற வைத்த கோதுமையை மாலையில் நைசாக அரைக்கவும். மூன்று முறை எடுத்த பாலில் மறு நாள், தெளிவை நீக்கி, வண்டலை கூழாகக் காய்ச்சவும். உப்பு, காயம், காரம் விழுது சேர்த்து கிளறவும். ஆறியவுடன் முள்ளுத் தேன்குழல் அச்சில் பிழியவும்.

– எம். பேபிமுத்துகுமார்,
மதுரை.



சோயா குழம்பு வடாம்

தேவையான பொருள்கள் :

சோயா, கடலைப்பருப்பு – தலா ¼ கிலோ, சோம்பு – 2 ஸ்பூன், சாம்பார் வெங்காயம் – 200 கிராம், மிளகாய் வற்றல், பூண்டு பல் – தலா பத்து, உப்பு – தேவைக்கு.



செய்முறை : இரண்டு மணி நேரம் ஊறிய பருப்புக்களை உப்பு, காரம் சேர்த்து கெட்டியாக அரைக்கவும். சோம்பு, அரிந்த வெங்காயம், பூண்டு சேர்த்து ஒரு சுற்று சுற்றவும். மாவைக் கிள்ளிப் போட்டுக் காய வைக்கவும்.

– ஆர். உமா மகேஸ்வரி,
அம்பிகாபுரம், திருச்சி.

முழு ஜவ்வரிசி முத்துச்சர வடாம்

தேவையான பொருள்கள் :

முழு ஜவ்வரிசி – 4 ஆழாக்கு, எலுமிச்சைச் சாறு – 6 பழம், உப்பு – தேவைக்கு, வடாம் அச்சு – கடைகளில் கிடைக்கும் [மூடி போன்றது]

செய்முறை : எலுமிச்சைச் சாறு, உப்பு கலவையில் தேவையான நீர் சேர்த்து, ஜவ்வரிசியை நான்கு மணி நேரம் ஊறவைக்கவும். ஊறியதை அச்சில் விட்டு இட்லித் தட்டில் வேகவிடவும். வெந்ததை [முழு ஜவ்வரிசி] ஷீட்டில் தட்டி, அப்படியே காயவைக்கவும்.

– லக்ஷ்மி ஸ்ரீநிவாஸ்,
ராமாபுரம்.



மூலிகை வடாம்

தேவையான பொருள்கள் : ஜவ்வரிசி – ½ கிலோ, வெற்றிலை – 10, துளசி இலை – 1 கையளவு, மிளகாய் வற்றல் – 4, இஞ்சி – 1 துண்டு, எலுமிச்சைச் சாறு – ½ மூடி, உப்பு – தேவைக்கு.



செய்முறை : முதல் நாள் இரவே ஊறப்போட்ட ஜவ்வரிசியுடன், இதர சாமான்கள் சேர்த்து அரைக்கவும். விழுதிற்குச் சரியாக தண்ணீர் சேர்த்து கொதிக்கவிட்டு கூழாக்கவும். ஆறிய வுடன் எலுமிச்சைச் சாறு சேர்த்து வில்லைகளாகக் காயவிட வும்.

– கே. கீர்த்தனா சர்மா, பூனே.

அரிசி – மாங்காய் வடாம்

தேவையான பொருள்கள் :

மாங்காய்த் துருவல் –2 கப்,

அரிசி மாவு – 1 கிலோ, ப. மிளகாய் – 10,

உப்பு, காயம் – தேவைக்கு.

செய்முறை : அரிசி மாவை, தோசை மாவு பதத்திற்குக் கரைத்துக் கொதிக்கவிடவும். அரைத்த காரம், உப்பு, காயம் விழுதைச் சேர்த்து இறக்கும் சமயம் மாங்காய்த் துருவலைச் சேர்த்துக் கலக்கவும். சிறியதாகக் கிள்ளிப் போட்டு காய வைக்கவும்.

– லெக்ஷ்மி ஸந்தானம், ஸ்ரீரங்கம்.



மணத்தக்காளிக் கீரை வடாம்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி மாவு – 2 கப், மணத்தக்காளிக் கீரை – 1 கைப்பிடி, சிவப்பு மிளகாய் – 2, உப்பு, காயம் – தேவைக்கு.



செய்முறை : எண்ணெயில் வதக்கிய கீரையுடன் உப்பு, காயம், காரம் சேர்த்து அரைக்கவும். தோசை மாவு பதத்திற்கு கரைத்த அரிசி மாவுடன் சேர்த்து கூழாகக் காய்ச்சவும். ஆறியபின் ஸ்பூனால் ஊற்றவும்.

– எம். ஜெயந்தி, சென்னை.

தயிர் வடாம்

தேவையான பொருள்கள் :

புழுங்கல் அரிசி – 200 கிராம்,
மிளகு, சீரகம் – தலா 10 கிராம்,
கெட்டித் தயிர் – 1கப், காயம், உப்பு – தேவைக்கு.

செய்முறை : சுத்தம் செய்த அரிசியை சாதம் வைப்பது போல் இரண்டு பங்கு நீரில் குக்கரில் வைத்து இரண்டு விசில் விடவும். இதரச் சாமான்களை சாதத்தில் கலந்து, மிக்ஸியில் அரைத்து, கூழ் பதத்திற்கு எடுத்து வில்லைகளாக ஊற்றிக் காயவைக்கவும்.

– ராதா பரிமளம்,
திருச்சி.



வடாம்

வேர்க்கடலை வடாம்

தேவையான பொருள்கள் : பச்சரிசி – ½ கிலோ, ஜவ்வரிசி – 50 கிராம், வேர்க்கடலை – 100 கிராம், ப. மிளகாய் – 4, எலுமிச்சைச் சாறு – 1 பழம், உப்பு – தேவைக்கு.

செய்முறை : மிஷினில் அரைத்த அரிசி, ஜவ்வரிசி மாவுடன் உப்பு, காரம், அரைத்த விழுதைச் சேர்க்கவும். மாவைப் போல் இரு மடங்கு நீரில் போட்டுக் கிளறவும். இறக்கும் சமயம் வறுத்துப் பொடித்த வேர்க் கடலை மாவைத் தூவி, எலுமிச்சைச் சாறு சேர்த்து, ஆறியபின் ஓமப்பொடி அச்சில் பிழியவும்.



– நிர்மலா சுரேந்தர்,
சிட்லபாக்கம்.

சாக்லெட் வடகம்

தேவையான பொருள்கள்:

பச்சரிசி – 1 கிலோ,

சாக்லெட் பவுடர் – 50 கிராம், உப்பு – தேவைக்கு.

செய்முறை : ஊறவைத்த பச்சரிசியை நைசாக அரைக்கவும். ஒரு கிலோ பாத்திரத்தில் பாதியளவு உப்பு + தண்ணீர் விட்டுக் கொதி வரும் சமயத்தில் அரைத்த மாவை தோசை மாவு பதத்திற்குக் கரைத்துக் கிளறவும். வெந்தவுடன் சாக்லெட் பவுடர் கலந்து முறுக்கு அச்சில் பிழியவும்.

– சி. மகாலட்சுமி,
திருச்சி.



தேங்காய் வடாம்

தேவையான பொருள்கள் :

கெட்டி அவல் – 2 ஆழாக்கு, தேங்காய்த் துருவல் – 3 ஆழாக்கு, ப. மிளகாய் – 10, உப்பு, பெருங்காயம் – தேவைக்கு, எலுமிச்சைச் சாறு – 2 பழம்



செய்முறை : ஊறவைத்த அவலையும், தேங்காயத் துருவலையும் நைசாக அரைக்கவும். உப்பு,காரம், காயம் விழுது, சாறு கலந்து, உருண்டைகளாக்கி காய விடவும்.

– பா. பனிமலர், மதுரை.

வெள்ளை எள் வடகம்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி மாவு – 1 தம்ளர், எள் – 2 டேபிள் ஸ்பூன், சிவப்பு மிளகாய் – 2, தக்காளி – 2 பழம், உப்பு – தேவைக்கு.

செய்முறை : ஒன்றரை தம்ளர் நீரில் உப்பு, எள், அரைத்த தக்காளி, மிளகாய் விழுது எல்லாவற்றையும் கலக்கவும். இரண்டு ஸ்பூன் எண்ணெய் விட்டு கடாயில் இட்டு கெட்டியாகும் வரை கிளறி, தேன்குழல் அச்சில் பிழியவும்.

– பி. கீதாவாணி,
கோம்பை.



ஓட்ஸ் வடாம்

தேவையான பொருள்கள் :

ஜவ்வரிசி – 1 கப், ஓட்ஸ் – 1 கப், அரிசி மாவு – 1 கரண்டி, தக்காளி – 2, உப்பு, காயம் – தேவைக்கு.



செய்முறை : ஊறிய ஜவ்வரிசி, கஞ்சியாக்கிய ஓட்ஸ், அரைத்த தக்காளி எல்லாவற்றையும் ஒன்றாக்கி அரைத்து, உப்பு, காயம் சேர்த்து, ஸ்பூனால் வட்டமாக இடவும்.

– லட்சுமி சுந்தரம்,
விருகம்பாக்கம்.

வல்லாரை வடாம்

தேவையான பொருள்கள் :

வல்லாரைக் கீரை – 1 கட்டு,

உளுத்தம் பருப்பு – ½ கிலோ, ப. மிளகாய் – 4,

காயம், உப்பு – தேவைக்கு.

செய்முறை : ஒரு மணி நேரம் ஊறிய பருப்பை கொரகொரவென அரைக்கவும். இதர அயிட்டங்களை நைஸாக அரைத்து அரவையில் சேர்த்து, கலந்து வில்லைகளாகத் தட்டி காயவைக்கவும்.

– காயத்ரி

வெங்கடேஸ்வரன்,

ஆதம்பாக்கம்.



முக்கனி வடாம்

தேவையான பொருள்கள் :

ஜவ்வரிசி – 1 கிலோ,

மாம்பழம் – 2, பலாச்சுளை – 5 [பெரியது],

ரஸ்தாளி பழம் – 2.



செய்முறை : ஊறவைத்த ஜவ்வரிசியைக் குக்கரில் ஆறு பங்கு நீருடன் நன்குவேகவிடவும். சுத்தம் செய்த முக்கனிகளை விழுதாக அரைத்து, கூழுடன் கலந்து வில்லைகளாக இடவும்.

– உமா கிருஷ்ணா, கரூர்.

கத்துக்குட்டி வடகம்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி குருணை – 1 கிலோ, ப. மிளகாய் – 50 கிராம், மல்லித்தழை, காயம், உப்பு – தேவைக்கு, எலுமிச்சைச் சாறு – 2 பழம்

செய்முறை : இரண்டரை பங்கு தண்ணீர் சேர்த்த குருணையில் உப்பு, காரம், காயம் அரைத்த விழுதைச் சேர்க்கவும். குக்கரில் ஐந்து விசில் விட்டு, ஆறியவுடன் சுத்தம் செய்த மல்லித் தழையைக் கலந்து கிள்ளி வைக்கவும்.

– சி. மகாலட்சுமி,
திருச்சி.



தானிய கதம்ப வடாம்

தேவையான பொருள்கள் :

கேழ்வரகு, கொள்ளு, வேர்க்கடலை, பயிறு, சோளம், உளுந்து – முளைகட்டியது தலா 25 கிராம், மிளகாய்த் தூள் –3 ஸ்பூன், இஞ்சி, பூண்டு விழுது – 2 ஸ்பூன், உப்பு, கறிவேப்பிலை, மல்லி – சிறிதளவு, வெங்காயம் – 1 கப்.



செய்முறை : ஊறிய பருப்புக்களை உப்பு சேர்த்து கரகரப்பாக அரைக்கவும். இதர அயிட்டங்கள் கலந்து, உருண்டைகளாக்கி காய வைக்கவும்.

– என். பிரபா, ஸ்ரீரங்கம்.

தட்டைப் பயிறு பரங்கி வடாம்

தேவையான பொருள்கள் :

தட்டைப் பயிறு – ½ கப், உளுத்தம் பருப்பு – 1 கப்,
கடலைப் பருப்பு – ½ கப்,
உப்பு, மிளகாய், காயம் – தேவைக்கு.
பரங்கிக்காய் – பொடியாக நறுக்கியது 1 கப்

செய்முறை : ஊறவைத்த பருப்புக்களை அரைக்கவும். அதில் பரங்கித் துண்டங்களைப் போடவும். மிளகாய், உப்பு, காயம் அரைத்த விழுதையும் சேர்த்து உருட்டிப் போட்டு காய வைக்கவும்.

– சரோஜா ஸ்ரீதர்,
பம்மல்.



ஃப்ளையிங் வேஃபர்ஸ்

தேவையான பொருள்கள் :

பச்சரிசி, புழுங்கல் அரிசி, ஜவ்வரிசி – தலா 2 தம்ளர், ப. மிளகாய் – 50 கிராம், தக்காளி – 3 பழம், காயம், உப்பு – தேவைக்கு.



செய்முறை : அரைத்த மூன்று ரக மாவை பதினான்கு தம்ளர் கொதிக்கும் நீரில் கொட்டி, அடுப்பை அணைத்து விடவும். காயம், காரம், உப்பு, தக்காளி அரைத்த விழுது கலந்து, கிளறவும். ஆறியபின் பட்டை நாடா அச்சில் பிழியவும்.

– ஜெயஸ்ரீ சாய்நாத், பூனா.

மோர் மிளகாய்

தேவையான பொருள்கள் : தஞ்சாவூர் மோர் மிளகாய் – ½ கிலோ, புளித்த தயிர் – 4 ஆழாக்கு, வெந்தயம் – 1 கரண்டி, உப்பு – ½ ஆழாக்கு, காயம் – 2 ஸ்பூன்.

செய்முறை : பாதியளவு காம்பு நீக்கிய மிளகாயை, நீளவாக்கில் இலேசாகக் கீறி, வெயிலில் ஒருநாள் உலர்த்தவும். உப்பு, காயம் கலந்த தயிரில், ஊற வைத்து அரைத்த வெந்தய விழுதையும் போட்டுக் கலந்து, மிளகாயை ஊறவிட்டு உலர்த்தவும். தினமுமே தயிர், மிளகாய் இரண்டையும் வெயிலில் வைத்து, இரவு மீண்டும் ஊறவிட்டு, தயிர் தீர்ந்தபின் நல்ல காய்ச்சல் போடவும்.

– சி. மாலதி, சென்னை.



வடாம்

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka. Supplement to the Mangayar Malar March 2008 issue

பைனாப்பிள் வடாம்

தேவையான பொருள்கள் : ஜவ்வரிசி – 200 கிராம், பைனாப்பிள் – நான்கு பெரிய துண்டங்கள், ப.மிளகாய்–6, உப்பு – தேவைக்கு.

செய்முறை : முதல் நாள் இரவே ஊறப்போட்ட ஜவ்வரிசியுடன் அன்னாசிப் பழத் துண்டங்கள், காரம், உப்பு சேர்த்து அரைத்து சம அளவு தண்ணீர் கலந்து கூழாகக் காய்ச்சவும். ஆறிய பின் ஸ்பூனால் ஊற்றிக் காயவைக்கவும்.



– கே. வத்சலா, பூனா

நன்றி : மங்கையர் மலர் வாசகியர்

தொகுப்பு : மாலதி சந்திரசேகர்

கார்டூன்ஸ் : பிள்ளை

கும்பம்



(அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ஆம் பாதங்கள்)

கும்ப ராசி அன்பர்களே! கணவன் - மனைவி இடையில் கருத்தொற்றுமை தேவை. அவ்வப்போது ஊடலும் கூடலும் உண்டாகும். விளையாட்டாகப் பேசுவது கூட வினையாய் முடியும். கவனம் தேவை. கேட்ட இடத்தில் பணம் மற்றும் உதவிகள் தடையின்றி கிடைக்கும். வீடு, மனை வாங்கத் திட்டமிடலாம். சகோதர வழி உறவுகள் உதவிகரமாக அமைவர்.

பெண்கள் விரும்பியதைத் தடையின்றி வாங்குவர். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சாதனை படைப்பர். கல்விச் சுற்றுலா செல்ல நேரிடும். உத்தியோகஸ்தர்களுக்கு துறைவாரியாக நடந்த விசாரணையில் நல்ல முடிவு கிட்டும். தடைப்பட்ட பதவி உயர்வு கிட்டும். வியாபாரிகள் ஜுவல்லரி, நவரத்தினங்கள், பணம் கொடுக்கல் வாங்கல் போன்றவை மூலம் நல்ல லாபம் பெறுவர். 21.3.08 காலை முதல் 23.3.2008 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்கள் :3, 4, 6, 9.

அதிர்ஷ்ட நிறம் : சாம்பல் நிறம்.

பரிகாரம் : வாரம் ஒருமுறை ஐய்யனாரை வழிபடவும். இயலாதவர்கள் ஐய்யப்பனை வழிபடவும். நல்லது நடக்கும்.

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

மீன ராசி அன்பர்களே! உயர் அதிகாரிகளிடம் ஏற்பட்ட முரண்பாடு விலகும். அரசு பணிநிமித்தம் அவ்வப்போது வெளியூர் பயணம் செல்ல நேரும். கண் சம்பந்தமான சிறு சிறு உபாதைகள் வந்து விலகும். வாக்கினால் ஜீவனம் புரிவோர் மிகுந்த அனுகூலம் பெறுவர். ஏற்றுமதி இறக்குமதி வாணிபம் செய்வோர் அரசு சலுகை பெறுவர். வெளிநாடு செல்லத் திட்டமிட்டவர்கள் மனமகிழ்ச்சி பெறுவர். புதிய முயற்சி எதுவானாலும் அதில் வெற்றி கிட்டும். பெண்களின் நீண்ட கால கனவுகள் நனவாகும். சிவில் இன்ஜினியரிங், ஆர்க்கிடெக், வங்கி இயல் போன்ற பிரிவுகளில் படிப்போர் அதிக நன்மை பெறுவர். உத்தியோகப்பிரிவினர் உயர் அதிகாரிகளின் அன்பைப் பெறுவர். சங்கடம் விலகும். 23.3.2008 முன்னிரவு முதல் 25.3.2008 காலை வரை சந்திராஷ்டமம்.

அதிர்ஷ்ட எண்கள் : 3, 6, 9

அதிர்ஷ்ட நிறம் : பொன்னிறம்.

பரிகாரம் : பிரதி வியாழன் தட்சிணாமூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றி, மஞ்சள் நிற மலர்களால் அர்ச்சித்து வணங்கவும். சிவபுராணம் பாராயணம் செய்க.



மீனம்

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN/CC(S)DN/170/06-08 - Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/06-08 - Registered as a Newspaper in Srilanka

கம்பளக் கோலம்



உஷா வெங்கடேசன். சென்னை-600 020

மேலிருந்து கீழ் 29-27-25
23 புள்ளி-13 வரிசை
25-27-29 (நான்கு புறமும்)
7-5-3 (நேர் புள்ளி)

அட்டைப்படம் :
திருநாவுக்கரசு, ஸ்ரீரங்கம்